# உதயன்

விலை ரூபா 30

பக்கங்கள் 56

34c - 27c

தெளிவான காலநிலை

சுடர் 31 கதிர் 199 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 30, ஞாயிற்றுக்கிழமை 12.06.2016


பேரறிவாளனின் தாயார் தலைமையில் சென்னையில் நேற்று வாகனப் பேரணி

பக்கம் 02

## வெடித்த ஆயுதங்கள் சீனாவுக்கு திருப்பி அனுப்பப்படவிருந்தவை

### கொழும்பு சிங்கள ஊடகம் தகவல்

கொழும்பு, ஜூன் 12
சீனாவுக்குத் திருப்பி அனுப்பப் பட இருந்த வெடிபொருள்களே சலாவ ஆயுதக் கிடங்கு வெடிப் பில் நாசமாகியுள்ளன.
இவ்வாறு, இராணுவ வட்டாரங் களை மேற்கோள்காட்டி, சிங்கள ஊடகமான 'ராவய' செய்தி வெளியிட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:
போரின்போது சீனாவிடம் இருந்து பெருமளவு வெடி பொருள்கள் இறக்குமதிசெய்யப் பட்டன. அதில் ஒரு தொகுதி பயன்படுத்தப்படாமல் இருந்தது. இலங்கை போன்ற சிறிய நாடு களில் இவற்றைக் களஞ்சியப்ப டுத்தி வைத்திருக்கும் வசதிகள் இல்லை. இவற்றைக் கொள் வனவு செய்த நாட் டிடமே திரும்பவும் பக்.53

## இம்முறையும் ஏமாற்றப்பட்டால் வீதியில் இறங்கிப் போராடுவோம்

### இன்னும் மீளக்குடியமராத மக்கள் மைத்திரிக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 12
மயிலிட்டி உள்ளிட்ட எஞ்சிய நிலங்கள் அனைத் தும், 18ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும் ஜனாதி பதியால் விடுவிக்கப்படவேண்டும். அதற்கான உறுதிமொழியையும் அவர் ஜனவரி மாதத்தி லேயே வழங்கியிருந்தார். இம்முறையும் நாம் ஏமாற்றப்பட்டால், வீதியில் இறங்கிப் போராடு வோம்.
இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடம் தெரிவித்துள்ளது மயிலிட்டி மீள்குடியேற் றக் குழு.
இது தொடர்பாக அவருக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது: பக்.53

முச்சந்தி முரளி



இப்பதான் இவை இதைக் கண்டுபிடிச்சிருக்கினம் கண் டியளே......

# இராணுவத்தின் திருப்திக்கே இலங்கையில் முன்னுரிமை

### கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவும் தவறியது என மனித உரிமை ஆர்வலர் யஸ்மின் சூகா குற்றச்சாட்டு



லண்டன், ஜூன் 12
இராணுவத்தைத் திருப்திப்படுத்துவதி லேயே இலங்கை அரசு, முனைப்பாக உள்ளது. ஜெனிவா ஐ.நா. மனித உரி மைகள் சபைக்குக் கொடுத்த வாக்குறு திக்குரிய சூழலை உருவாக்கத் தவறி யுள்ளது. சர்வதேச சமூகம், இலங்கை மீது தனது செல்வாக்கை - அழுத் தத்தை வழங்க வேண்டும்.
இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் மனித உரிமை ஆர்வலர் யஸ்மின் சூகா.
சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட் டம் என்ற அமைப்பினால் இலங்கை குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையை ஊடகங்களுக்கு வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை லண்டனில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய மனித உரிமை ஆர்வலர் யஸ்மின் சூகா தெரிவித்ததாவது:
எங்கள் அமைப்பு இலங்கைப் போரின் இறுதிக் காலப் பகுதியிலும், அதன் பின்னரும் இடம்பெற்ற சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகள் குறித்து, பெருமளவு தகவல் களை ஏற்கனவே பதிவு செய் துள்ளது. இதனால் நாங்கள் இந்தமுறை மேற்படி விடயம் குறித்துத் தீவிரமாக ஆராய வில்லை.

**பாதுகாப்பான சாட்சியம்**

எங்களுடன் உரை யாடிய நபர்கள் பக்.53

## மகிந்த தரப்பின் கோவணமும் பறிபோனது — சஜித்

கொழும்பு, ஜூன் 12
நிதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் மகிந்த தரப்பினர் உடுத்தியிருந்த கோவணமும் இல்லாமல் நாடாளுமன்றத்தை விட்டு ஓடவேண்டிய நிலமை ஏற் பட்டுள்ளது என வீடமைப்புத் துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.
அம்பாந்தோட்டையில் நேற்று வீடமைப்புத் திட்ட மொன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார்.
கூட்டு எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கை யில்லாப் பிரேரணை அமைச் சர் ரவிக்கோ அல்லது பக்.53

## திருமலையின் அபிவிருத்தி சிங்கப்பூரிடம் ஒப்படைப்பு



திருகோணமலை, ஜூன் 12
இந்தியாவின் பெரு நகரங் களைப் போன்று திருகோ ணமலையும் பெரும் அபி விருத்தியைக் காணவுள் ளது. இதற்காக அதன் அபிவிருத்திப் பணிகள் சிங் கப்பூரிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளன என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரி வித்தார்.
திருகோணமலைக்கு நேற்றுமுன்தினம் திடீர் பயணம் மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் மற் றும் அமைச்சின் செயலாளர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பக்.53

## சுமந்திரன் எம்.பி. அமெரிக்கா பயணம்

### ஐ.நா. தீர்மானத்தின் நடைமுறைப்படுத்தல் பற்றி விளக்க

கொழும்பு, ஜூன் 12
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன் தற்போதைய நிலமை தொடர்பில் கருத்துக் கூறுவதற் காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அமெரிக்கா சென்றுள் ளார். இந்தத் தகவலை அவர் தெரிவித்தார்.
"அமெரிக்கக் காங்கி ரஸின் இலங்கை தொடர்பான ஆர்வக் குழு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நியூயோர்க்கில் விசேட கலந்துரையாடலை ஒழுங்கு செய்துள்ளது. இதில் பங்கேற்குமாறு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது'' என்றார் சுமந்திரன்.
இந்தக் கலந்துரையாட லில் பங்கேற்பதற்காக நேற்று இரவு நாடா ளுமன்ற உறுப்பி பக்.53


ஒரு வருட நிலையான வைப்புக்களுக்கு 11% கவர்ச்சிகர வருடாந்த வட்டி

(வ.தே.வ. 11%)

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
011 5 411 411
நிபந்தனைகளுக்குட்பட்டது.

011 5 411 411

SDBL சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி
தேசத்தின் முன்னோடி

Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ

# பேரறிவாளனின் தாயார் தலைமையில் சென்னையில் நேற்று வாகனப் பேரணி

சென்னை, ஜூன் 12

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சாந்தன், முருகன், நளினி, பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரையும் விடுதலை செய்யக் கோரி, சென்னையில் நேற்று மிகப் பிரமாண்டமான வாகனப் பேரணி இடம்பெற்றது. இதில் பல்வேறு அரசியல் தலைவர்கள், நடிகர்கள், சமூக ஆர்வலர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 25 ஆண்டுகளாகச் சிறையில் உள்ள 7 பேரையும் விடுதலை செய்யக் கோரி இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது. சிறையில் உள்ள பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் தலைமையில் சென்னை - எழும்பூரில் தொடங்கிய பேரணி, தமிழக அரசின் தலைமைச் செயலகம் அமைந்துள்ள கோட்டையில் முடிவடைந்தது.

நடிகர் சங்கத் தலைவர் நாசர், இயக்குநர் சங்கத் தலைவர் விக்ரமன், இயக்குநர்கள் ஜனநாதன், கௌதம், ரமேஸ் கண்ணா, நடிகர் சத்தியராஜ், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தமிழர் தேசிய முன்னணி தலைவர் பழ.நெடுமாறன் மற்றும் தன்னார்வலர்கள் என்று ஆயிரக்கணக்கானோர் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர்.

பேரளிவாளன்ின் தாயார் அற்புதம்மாள் தெரிவித்ததாவது:

7 பேரை விடுவிக்கத் தமிழக முதல்வர் ஜெயலலிதா 2 முறை நடவடிக்கை எடுத்தார். அது, தடைப்பட்டு நிற்கிறது. இந்த முறை7 பேர் விடுதலையை விரைந்து முன்னெடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை முதல்வரிடம் வலியுறுத்த இந்தப் பேரணி நடத்துகிறோம்.

வேலூரில் தொடங்கிச் சென்னை கோட்டையில் பேரணியை முடிப்பதாகத்தான் திட்டமிட்டோம். 3 மாவட்டங்கள் சம்பந்தப்பட்டது என்பதால் வேலூரில் பேரணி தொடங்க முடியாது, வேறு ஏதேனும் மாற்றத்துடன் திட்டமிடுங்கள் என்று பொலிஸார் வேண்டுகோள் விடுத்தனர். அதனடிப்படையில் சென்னை எழும்பூரில் இருந்து கோட்டை நோக்கிப் பேரணி நடைபெற்றது.

கடந்த 25 ஆண்டுகளில் பேரறிவாளன் ஒரு முறை கூடப் பிணையில் வெளிவரவில்லை. இளமைக்காலம் முழுவதும் பேரறிவாளனுக்கு சிறையிலேயே போய்விட்டது. இப்போது நோயாளியாக வெளியே வரப் போகிறான். பேரறிவாளன் உள்ளிட்ட 7பேரும் விடுதலையாகி வெளியே வரவேண்டும்.

அவர்களுக்கென்று வாழ்க்கை இருக்கின்றது. உலகம் முழுக்கப் பார்த்தால் 25 ஆண்டுகளில் ஒரு முறைகூட பிணையில் வெளிவராத சிறைவாசிகளே இல்லை. ஆனால், இந்த 7 பேருக்கும் எந்த வாய்ப்பும் வழங்கப்படவில்லை. சாதாரண சிறைவாசிகளுக்குக் கிடைக்கும் சலுகைகள்கூட 7 பேருக்கும் கிடைக்கவில்லை. 7 பேருக்கும் கிடைத்திருக்கும் தண்டனை மிகவும் கொடுமையானது.

இந்த வழக்கை முடிவுக்குக் கொண்டு வர முதல்வரால் மட்டுமே முடியும். எங்கள் கோரிக்கையை ஜெயலலிதாதான் நிறைவேற்றவேண்டும். இது தொடர்பாக முதல்வரையும் சந்திக்க உள்ளோம் - என்றார்.

பின்னர் கோட்டைக்குச் சென்று தலைமைச் செயலகத்தில் 7 பேரையும் விடுதலை செய்ய வலியுறுத்தி அற்புதம்மாள் முதல்வரின் தனிப் பிரிவில் மனு அளித்தார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

என் மகனை விடுவிப்பதாக முதல்வர் அறிவித்தபோது, நான் அவரிடம் கண்ணீர் மல்க நன்றி சொன்னேன். உங்கள் மகன் வரப்போகிறார். ஏன் அழுகிறீர்கள் என்று முதல்வர் என்னை ஆறுதல்படுத்தினார். உயர் நீதிமன்றத்தில் உள்ள வழக்கைப் பற்றியெல்லாம் நாங்கள் பேசவில்லை. மத்திய அரசா, மாநில அரசா என்கிற நிலைதான் உள்ளது. முதல்வரைத்தான் நாங்கள் நம்பியுள்ளோம். 7 தமிழர்களை விடுதலை செய்ய முதல்வர் நிச்சயம் நடவடிக்கை எடுப்பார். ஏனென்றால் அது முதல்வரால் மட்டும்தான் முடியும் - என்றார். (த-5)

# பஸ் விபத்தில் கைதான சாரதிக்கு மறியல் நீடிப்பு

## பிணை மீளாய்வு மனு ஒத்தி வைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்ப்பாணம் திருநெல்வேலிச் சந்தியில் தனியார் பஸ் விபத்தில் பாடசாலை மாணவன் கொல்லப்பட்ட வழக்கில், விளக்கமறியலில் உள்ளவருக்கு, யாழ். நீதிமன்று பிணை வழங்க மறுத்ததையடுத்து, யாழ். மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு 29ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பிணை மீளாய்வு மனு கடந்த வெள்ளிக்கிழமை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வாறு திகதியிடப்பட்டது.

கடந்த பெப்ரவரி 3 ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் பார்த்திபன் சுபஸ்திகன் என்பவர் கொல்லப்பட்டார்.

அவருடைய தாயார் பலத்த காயத்துக்கு உள்ளாகினார். இந்தச் சம்பவத்தில் வாகன விபத்தை ஏற்படுத்திய சாரதி ஜெயபாலச்சந்திரன் பிரகாஷ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவரைப் பிணையில் விடுவிக்குமாறு யாழ். நீதிவான் மன்றில் பிணை மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அதனை நிராகரித்த நீதிவான் சாரதியைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இந்த நிலையில், யாழ்.நீதிவான் மன்றின் இந்தக் கட்டளையை எதிர்த்து சட்டத்தரணிகள் யாழ். மேல் நீதிமன்றத்தில் பிணை மீளாய்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர்.

நீதிவான் மன்றத்தின் பிணை நிராகரிப்புக் கட்டளையை நீக்கி விளக்கமறியல் கைதியான ஜெயபாலச்சந்திரன் பிரகாஷை பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று அதில் கோரப்பட்டது.

குறித்த சம்பவம் ஒரு விபத்தா அல்லது திட்டமிட்ட கொலையா என்ற அடிப்படையில் நீதிவான் மன்றில் விசாரணை நடைபெறுகின்றது. இந்த வழக்குத் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெறுவதற்காக வழக்கு விசாரணைக் கோவை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஆயினும் இதுவரையில் சட்டமா அதிபரிடமிருந்து உரிய அறிவுறுத்தல் எதுவும் வந்து சேரவில்லை. இதனால் கடந்த மூன்றரை மாதங்களாக சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவருடைய மனைவியும், குழந்தைகளும் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாகியுள்ளனர் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பிணை மீளாய்வு மனுவையும், சட்டத்தரணிகளின் விண்ணப்பத்தையும் பரிசீலித்த மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கும் சட்டமா அதிபருக்கும் இந்த பிணை மீளாய்வு மனுவுக்கு பதிலளிக்குமாறு அறிவித்தல் வழங்கி, எதிர்வரும் 29ஆம் திகதிக்கு விசாரணையை ஒத்தி வைத்தார். (ற-ஜ-4)

# பிளாஸ்ரிக் மீள்சுழற்சி மையத்தை நாளை திறக்கிறார் முதலமைச்சர்

## நான்கு மாதங்களில் முடியவேண்டிய கட்டுமானம் 11 மாதங்களில் முடிந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 12

நான்கு மாதங்களில் நிர்மாணிக்கப்படும் என்று ஆரம்பிக்கப்பட்ட காக்கைதீவு பிளாஸ்ரிக் மீள் சுழற்சி மையத்தின் கட்டுமானப் பணிகள் பதினொரு மாதங்களின் பின்னர் நிறைவுக்கு வந்துள்ளன.

பூர்த்தி செய்யப்பட்ட பிளாஸ்ரிக் மீள்சுழற்சி மையத்தை நாளை திங்கட்கிழமை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் திறந்து வைக்கவுள்ளார்.

பிளாஸ்ரிக் பொருள்களால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளை குறைக்கும் வகையில் மீள் சுழற்சி முறையைச் செயற்படுத்துவதற்கு பிளாஸ்ரிக் மீள்சுழற்சி மையத்துக்கான அடிக்கல் காக்கைதீவில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் நடப்பட்டது.

வடமாகாண விவசாய சுற்றாடல் துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டார்.

எட்டு மில்லியன் ரூபா செலவில் இந்த மீள் சுழற்சி மையம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை 5.5 மில்லியன் ரூபாவைக் காசாக வழங்கியது. 1.6 மில்லியன் ரூபா பெறுமதியில் பிளாஸ்ரிக் மீள் சுழற்சிக்கான இயந்திரத் தொகுதிகளையும் கொள்வனவு செய்து வழங்கியிருந்தது. யாழ்.மாநகர சபை 0.79 மில்லியன் ரூபாவை வழங்கியிருந்தது.

இதன் நிர்மாணப் பணிகள் நான்கு மாதத்தில் முடிவுறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் நிர்மாணப் பணிகள் குறித்த காலப் பகுதிக்குள் முடிவுறுத்தப்படவில்லை. நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு பதினொரு மாதங்கள் முடிவுற்றுள்ளன. தற்போது தான் கட்டடம் முழுமையாக அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்படும் நிலைமைக்கு வந்துள்ளது.

இந்த நிகழ்வு நாளை முற்பகல் 10 மணிக்கு காக்கைத்தீவு பிளாஸ்ரிக் மீள்சுழற்சி மையத்தில் இடம்பெறவுள்ளது. (ற-ஜ-5)

### டிராக்ரரிலிருந்து விழுந்தவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

நாகவிகாரைக்குச் சென்று திரும்பியவர் டிராக்ரரிலிருந்து விழுந்து படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

கட்டடப் பணியில் ஈடுபட்டு விட்டுத் திரும்பிக் கொண்டிருந்ததாகவும், அதன் போது நித்திரை தூங்கி விழுந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவைச் சேர்ந்த குறித்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஜ-4,107)

தேசிய போசணை மாதம் - ஜூன் - 2016

காய்கறி தானியம் உடல் எடையைக் குறைக்கும்.
உலர் அவரைப் பருப்பு உடலை வளர்க்கும்.
கனிப் பொருள், விற்றமின் நோயைத் தடுக்கும்
இவை அளவுடன் சேர்ந்திட்டால் இயல்புடன் இயங்கும் இதயமே.

# யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக ஸ்ரனிஸ்லஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக மட்டக்களப்பைச் சேர்ந்த கஸ்ரன் ஸ்ரனிஸ்லஸ் பொலிஸ் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.



அவர் நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்தில் முற்பகல் 9 மணியளவில் அவர் தனது கடமையைப் பொறுப்பேற்று பதிவேட்டில் கையொப்பமிட்டார்.

மத குருமார்களின் ஆசியுரையின் பின்னர், அவர் சம்பிரதாயபூர்வமாகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

1982 ஆம் ஆண்டு, சாவகச்சேரி மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளில் பொலிஸ் பரிசோதகராகக் கடமையாற்றிய இவர், பின்னர் வடக்கிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்தார். யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் சமூக கலாசாரச் சீர்கேடுகள், வாள்வெட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வேன் என்று அவர் தனது பதவியேற்பின்போது கூறினார்.

(த-4-106)

## எண்ணெய்ச் சட்டி விழுந்து குழந்தைக்கு எரிகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

அடுப்பில் இருந்த எண்ணெய் சட்டி தவறுதலாக வீழ்ந்ததில் ஒன்றரை வயதுச் சிறுமி உடல் முழுவதும் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார். அவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் அராலி வடக்கு வட்டுக்கோட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. தாய் றொட்டி தயாரித்துக் கொண்டிருந்த போது, விறகைக் குழந்தை தவறுதலாக இழுத்து விட்டதால் எண்ணெய்ச் சட்டி தவறுதலாக விழுந்து சிறுமியின் உடலில் எண்ணெய் பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-4,107)

**தேவை**

கொப்பறா நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும்.

077 844 9059

**வேலைவாய்ப்பு**

இலங்கையில் பிரசித்தி பெற்ற பிரபல தொழிற்சாலைகளில் ஐஸ்கிறீம், யோகட், ஜேம், சொக்லேட், பால்மா, இந்த அனைத்தும் உற்பத்தி பிரிவுகளுக்கும் வேலை ஆள்கள் தேவை. நாள் சம்பளம் 1300/=. OT 150/= மாதம் 35000/=, நாள் சம்பளம், கிழமைச்சம்பளமும் பெற்றுக் கொள்ளலாம். உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். ஆண், பெண், வயது 18-50

076 980 4237, 075 286 9947

'அன்பு உள்ளங்களே' வேலை செய்து மாதம் முடியும் தருணத்தில் கையில் பணமேதும் இல்லாமல் உள்ளதா? விமான நிலையத்தில் வேலைவாய்ப்பு Basic ரூ.25000- 35000 மூன்று மாத காலங்களின் பின்னர் ரூ.55000 - 75000 மேல் வழங்கப்படும். வயது 18-40. உணவு தங்குமிடம் இலவசம். இன்றே தொடர்புகளுக்கு

077 025 1155, 075 060 6968

ஏமாற வேண்டாம். ஏமாற்றமடைய வேண்டாம். நாள் சம்பளம் 1600 (with OT) தங்குமிடம் இலவசம். உணவு 3 வேளை (116/=) பிரசித்தி பெற்ற தொழிற்சாலைகளில் அனைத்துப் பிரிவுகளுக்கும் வருகை தரும் நாளிலே வேலை, வயது (18-45) இருபாலாரும்

076 860 5072



# ரயிலில் மோதுண்டு நேற்று இணுவிலில் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 12

இணுவில் பகுதியில் நேற்றிரவு ரயில் மோதி ஒருவர் தலை சிதைந்து உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இணுவில் ரயில் நிலையத்தை அண்மித்து வசிக்கும் சிவப்பிரகாசம் சிறிலிங்கன் (வயது-50) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்ற ரயில் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் திடீரென தண்டவாளத்தைக் கடக்க முற்பட்ட போதே ரயில் மோதியதாக ஆரம்ப விசாரணையில் தெரிய வந்ததாகப் பொலிஸார் கூறினர்.

உயிரிழந்தவரின் சடலத்தை ரயில் அதிகாரிகள் சுன்னாகம் ரயில் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

பின்னர் சடலம் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(த-4-101)

# துருக்கி அமைச்சர் செவ்வாயன்று கொழும்புக்கு

கொழும்பு, ஜூன் 12

துருக்கியின் வெளிவிவகார அமைச்சர் மெல்வக் ஹாவசுகுலேக், இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை இலங்கை வருகின்றார் என்று துருக்கி வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

இலங்கைப் பயணத்தின்போது அவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்.

இந்தச் சந்திப்புக்களின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து ஆராயப்படவுள்ளது. அத்துடன் இராஜதந்திர உறவுகள் மற்றும் தகவல் பரிமாற்றம் தொடர்பான உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல் தடவையாகத் துருக்கி வெளிவிவகார அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு மேற்கொள்ளும் பயணம் இது.

(த-வ-5)

**விசேட விலையில்**

ரின்னில் அடைக்கப்பட்ட நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், ஆமணக்கு எண்ணெய், இந்தியன் விபூதி, சந்தனப்பவுடர், குங்குமம் மொத்தமாகவும் சில்லறையாகவும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

(V 47)(10.17)

**இராசையா அன் சன்ஸ்**

No: 209, K.K.S. Road, Jaffna. 0777111831

SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 509

சீட்டிழுப்பு திகதி 2016.06.11

வெற்றி இலக்கங்கள்

48 54 63 73 U

ரூ. 58,859,740/=

**மேல் மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் யாழ்ப்பாணம்.**

**பொதுச் சபைக் கூட்டம்**

காலம்: 02.07.2016 ஆம் திகதி சனிக்கிழமை

நேரம்: பிற்பகல் 2.30 மணி

இடம்: திவ்விய ஜீவன சங்க மண்டபம் - நல்லூர், யாழ்ப்பாணம்.

மேற்படி பொதுச் சபைக் கூட்டமும் நிர்வாகத்தெரிவும் இடம்பெற இருப்பதால் மன்றத்தில் வழிபாடு செய்யும் சக்திகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர். (J.2103)(10.17) செயலாளர்.

# தேவைக்கு அதிகமான குண்டுகளை விற்பனை செய்வதற்கு அரசு முடிவு

## சட்டம், ஒழுங்கு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 12

படைகளின் தேவைக்கு அதிகமாக வெடிபொருள்கள் உள்ளன. அவற்றை விற்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இவ்வாறு சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள் ளார்.

பஹத்கம-ஹன்வெல்ல பிர தேச செயலகத்தில் வைத்து அவர் செய்தியாளர்களைச் சந் தித்தார். அங்கு செய்தியாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் வழங்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

படையினரின் தேவைக்கு அதிகமாக வெடிபொருள்கள் உள்ளன. அவற்றை வெளிநாடுகளுக்கு விற்கவுள்ளோம். காலாவதியான வெடிபொருள்களை அழிக்கவுள்ளோம். இதனை அரசு முடிவு செய்திருக்கின்றது.- என்று அவர் பதிலளித்தார்.

அதேவேளை சலாவ இராணுவ முகாமுக்கு முன்பாக செய்தியாளர்களிடம் இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வா-

பயன்படுத்தப்படாத தேவைக்கதிகமாக உள்ள வெடிபொருள்களை வழங்குநரிடமே திருப்பிக் கையளிக்க முடியும். இது சர்வதேச நடைமுறை. எமக்குத் தேவையானதை வைத்துக் கொண்டு எஞ்சியவற்றைத் திருப்பிக் கொடுக்கலாம். நான் அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர், எம்மிடம் உள்ள மேலதிக வெடி பொருள்களை குறைக்க வேண்டியதன் தேவை குறித்து ஜனாதிபதியிடம் விளக்கமளித்தேன்.

அதனை உடனடியாகச் செய்வதற்கு அவர் அனுமதி அளித்திருந்தார். இங்குள்ள வெடிபொருள்களைக் குறைப்பதற்கான செயல்முறைகளை ஆரம்பித்துள்ளோம் - என்றார்.

(ற-ஜ-5)

**இலங்கையில் முதல் தடவையாக**

**பெண்களுக்கான அழகுக்கலை கல்லூரி**

**BCBS**

**British College of Beauty Studies**

**Oli Alakan Studio**

இணைந்து நடத்தும்

**பாடநெறிகளும் பயிற்சி வகுப்புகளும்**



இலங்கையிலே பெறுமதியான சான்றிதழை வழங்கி முன்நிலையில் நிற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

வெளிநாடு செல்பவர்களுக்காகவும் சுய தொழில் செய்ய விரும்புபவர்களுக்காகவும் விசேடமாக அழகுக் கலை, தையற்கலை, ஐசிங் கேக் வகைகள், அனைத்து பாட நெறிகளையும் ஒன்றிணைத்துள்ளோம். பெண்களுக்கு பொருத்தமான இன்னும் பல கலை அம்சமான பயிற்சி நெறிகளும் அறிமுகப்படுத்தியுள்ளோம். எம்மிடம் பயிற்சி பெற்று சான்றிதழ் பெறுபவர்களுக்கு அவர்கள் விரும்பிய இடங்களில் தொழில் வாய்ப்பினையும் பெற்றுத் தருகின்றோம்.

கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.


பலாலி றோட், திருநெல்வேலி சந்தி, யாழ்ப்பாணம்.

076-7011645

CA
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

german cooperation
DEUTSCHE ZUSAMMENARBEIT

"சிறிய நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம்(SLFRS)"
பற்றிய விழிப்புணர்வு மற்றும் பயிற்சிக் கருத்தரங்கு



CA ஸ்ரீலங்கா ஆனது Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) உடன் இணைந்து சிறிய உரிமங்களுக்கான நிதியறிக்கையிடற் சுமையை மேலும் இலகுபடுத்தும் சிறிய உரிமங்களுக்கான இலங்கைக் கணக்கீட்டு நியமத்தை (சிறிய உரிமங்களுக்கான SLFRS) அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றது. இந்த சிறிய உரிமங்களுக்கான SLFRS ஆனது, பூரணமான SLFRS மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவு உரிமங்களுக்கான SLFRS ஆகியவற்றைவிட கணிசமான அளவில் சிக்கற் தன்மை குறைந்தவையாக உள்ளதுடன், பயன்படுத்துனருக்கு மிகுந்த வசதியானதும், அதிக கிரயவினைவுத்திறன் உடையதுமாகும்.

இந்த சிறிய உரிமங்களுக்கான SLFRS, 2016 ஜனவரி 1ந் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் நிதியறிக்கையிடற் காலங்களுக்கு நடைமுறைக்கு வருகின்றது.

உங்களது வியாபாரத்தின் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் உதவும்பொருட்டும் சிறிய உரிமங்களுக்கான SLFRS இன் முக்கிய விடயங்களையும், இந்த நியமத்தின் கோட்பாடுகள் மற்றும் தத்துவங்களின் பிரயோகம் பற்றிய ஆழமான விளக்கத்தை நீங்கள் பெறுவதற்கும் ஏதுவாக CA ஸ்ரீலங்கா ஆனது GIZ உடன் இணைந்து விபரமான இந்தப் பயிற்சித் திட்டத்தை வடமாகாணம் முழுவதையும் அடக்கும் வகையில் ஒழுங்கு செய்துள்ளது.

| திகதி | நேரம் | நிகழ்த்துபவர் | நிகழ்ச்சித்திட்ட அடக்கம் |
|---|---|---|---|
| 15.06.2016 | பிற்பகல் 2.00 – 5.00<br>பதிவு: பிற்பகல் 1.00 |  | • சிறிய நிறுவனங்களுக்கான SLFRS பற்றிய மேலோட்டம்<br>• நோக்கெல்லை, கோட்பாடுகள் மற்றும் தொடர்தேடற் தத்துவங்கள்<br>• நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்<br>• PPE அடங்கலாக உரிமையாண்மை, தொக்குகள், ஏற்பாடுகள், குத்தகைகள் வருமானம், சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் பற்றிய கலந்துரையாடல் |
| 16.06.2016 | மு.ப 9.00 – பி.ப 4.00<br>பதிவு: காலை 8.30 | K. Elangko (K. இளங்கோ)<br>FCA, MBA, FCMA (SL),CIMA<br>Business / Management Consultant | • முழுமையான கொடுக்கல் வாங்கல்கள் அடிப்படையில் பூரணமான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான விபரமான வழிகாட்டலை வழங்குதல். |

பொருத்தமான பங்குபற்றுனர்கள்:
சிறிய அளவிலான உரிமங்களின் ஒழுங்குபடுத்தனர்கள், உரிமையாளர்கள், கணக்காளர்கள், கணக்காய்வாளர்கள், வர்த்தக சம்மேளனப் பிரதிநிதிகள், வங்கிகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உரிமங்களின் பிரிவுத் தலைவர்கள், நுண்-நிதிவசதி அளிப்போர் மற்றும் ஏனைய நாட்டமுள்ளோர்

தொடர்புகளுக்கு: வானதி
இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்
30A, மலலசேகர மாவத்தை, கொழும்பு 7.
தொலைபேசி: 011 5836027 தொலைநகல்: 011 2352067

Email: technicalseminars@casrilanka.org
www.casrilanka.com

**இடம்**
**Green Grass Hotel**
**No. 33 Aseervathan Road,**
**Hospital Road,**
**Jaffna.**

பதிவுசெய்தல்:
2016 ஜூன் 14ம் திகதிக்கு முன்னர் முதல் வருவோர் முதலில் பதிவு செய்யப்படும் அடிப்படையில்

**அனுமதி இலவசம்**

CA Sri Lanka in association with giz

International Movement Against All Forms of Discrimination and Racism-Asia Committee

CENTER FOR WOMEN & DEVELOPMENT
மகளிர் அபிவிருத்தி நிலையம்

## உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பெண்கள் போட்டியிட ஊக்குவித்தலுக்கான பயிற்சி

பெண்களின் அரசியல் பங்களிப்பின் முக்கியத்துவம் உணரப் பட்டுவரும் இக் காலகட்டத்தில் நெருங்கி வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெண்கள் போட்டியிட வேண்டுமென்பதை முன்னிலைப் படுத்தி இமாடா, மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் மகளிர் அரசியல் செயலணி ஆகியவை இணைந்து தெரிவு செய்யப்படும் பெண்களுக் கான திறன் பயிற்சியை வழங்கவுள்ளது. வட மாகாணத்தில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு,வவுனியா, கிளிநொச்சி, ஆகிய மாவட்டங்களில் இருந்து உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அர்ப்பணிப்புடன் போட்டியிட விரும்பும் பெண்களும் அரசியல் கட்சிகளில் பிரதிநிதித்துவம் உள்ளவர்களும் தங்கள் சுயவிவரத் தகவலுடன் தேர்தலில் போட்டியிட விரும்புவதற்கான காரணத்தையும் குறிப்பிட்டு ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் கீழ் வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். **சரோஜா சிவசந்திரன்,**
**பணிப்பாளர்,**
**மகளிர் அபிவிருத்தி நிலையம்.**

**மகளிர் அபிவிருத்தி நிலையம்,**
**இல. 07, ரட்ணம் லேன்,**
**கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

(2Ⅎ.2040)(2.36)

## மணிவிழா வாழ்த்து




எமது ஆலய
புனருத்தாரண சபை
உறுப்பினர்
திருமதி சாவித்திரிதேவி
குகநேசனின்
மணிவிழா வாழ்த்து

வேழ முகத்தவனின் திருப்பணிகள் சிறப்புற
தோழமையாய் நின்று தொண்டுகள் புரிந்த
மணிவிழா நாயகியாம் சாவித்திரிதேவியைத்
தணியாத அன்புடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: மாவை கொல்லங்கலட்டி
வீரகத்தி விநாயகர் ஆலய
தொண்டர்கள்

(கே.2072)
(13.18)

# அகவை அறுபதில் பிறந்தநாள் வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்




## திருமதி சாவித்திரிதேவி குகநேசன்

(பதில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் -
கமநல சேவைகள் நிலையம் - கீரிமலை)

**சேவைக்காலம் - 18.08.1976 - 12.06.2016**

கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் கடமையாற்றி
இன்று (12.06.2016) ஞாயிற்றுக்கிழமை
அறுபது வயதினிலே ஓய்வு பெற்றுச் செல்லும்
திருமதி கு.சாவித்திரிதேவி அவர்களின் பிறந்தநாளில்
அவர்களை உளமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன்
ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு
காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: உதவி ஆணையாளர் - கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
உத்தியோகத்தர்கள் மற்றும் கமக்கார அமைப்புக்கள்,
கமநல சேவைகள் நிலையம் கீரிமலை.

(கீ.22687)
(13.18)

# அமைச்சர்களின் வாகன கனவில் விழுந்தது தடை

## குறித்த நிதியை வீடு புனரமைப்புக்கு பயன்படுத்துமாறு பிரதமர் பணிப்பு

கொழும்பு, ஜூன் 12

அமைச்சர்களின் வாகனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை, கொஸ்கம – சலாவ இராணுவ முகாம் வெடிப்புச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகள் புனரமைப்பு வேலைகளுக்கு பயன்படுத்துங்கள் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளார்.

சலாவ வெடிப்புச் சம்பவத்தில் பாதிப்படைந்த மக்களின் வீடுகளின் புனரமைப்பு வேலைகள் நிறைவடையும் வரையில் அமைச்சர்களின் வாகனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை வழங்கவேண்டாம் என்றும் பிரதமர் திறைசேரிக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நல்லாட்சியில் பொதுமக்களுக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் பிரதமர் குறித்த தீர்மானத்தை எடுத்துள்ளார் என்று அரசின் மூத்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அமைச்சர்களின் வாகனக் கொள்வனவுக்காக 118 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. அதனால் பெரும் சர்ச்சை ஏற்பட்டிருந்தது. (ூ-ஐ-5)

# கைப்பையில் வைத்திருந்த தாலிக்கொடி திருட்டு

கழுத்தில் அணிந்திருந்த தாலிக் கொடியைக் கழற்றி கைப்பையில் வைத்துவிட்டு, இயற்கை கடன் கழிப்பதற்கு சென்ற பெண்ணின் 8 பவுண் தாலி திருட்டுப் போயுள்ளது. இது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் அரியாலையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. அந்தப் பெண் வாடகைக்குக் கொடுத்திருந்த வீட்டைப் பார்வையிடுவதற்குச் சென்றிருந்த போது அந்த வீட்டில் எவரும் இருக்கவில்லை. இந்த நிலையில் இயற்கை கடன் கழிப்பதற்காக மலசலகூடம் சென்றவர் திரும்பி வந்து பார்த்த போது தாலி திருட்டு போயிருந்தது என்று கூறப்படுகின்றது. வாடகைக்குக் குடியிருந்தவர்களும் அந்த நேரம் வீட்டுக்கு வந்துள்ளனர். இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ூ-ஐ-4,107)

# பணி நயப்பும் மணி விழாவும்

ஜே/78 கிராம சேவையாளராக பணிபுரிந்த நாகலிங்கம் சுந்தரராசாவின் பணி நயப்பு விழாவும், மணி விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அத்தியடி கணபதி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன. ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சரவணபவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக தீவகம் தெற்கு பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரமும், யாழ். பிரதேச செயலர் பொ.தயானந்தாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ூ-ஐ-ரி)

## சுஜித் என்ரபிறைசஸ்

**யாழ்ப்பாணம்- கிளிநொச்சி**

எமது நிறுவனத்திற்கு பட்டா வாகனம் வாடகைக்குத் தேவை. அத்துடன் விற்பனைப் பிரதிநிதிகளும் தேவை. தங்குமிடம். உணவு இலவசம். சம்பளம் நேரில்

(J 2067) (12,18)

**021 227 0586, 076 850 4007, 021 228 0279(பரந்தன்)**

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள பிரபல கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையத்துக்கு சிட்டை எழுதுநர்கள் வேண்டப்படுகின்றார்கள். தகுதியும் அனுபவமும் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது சுயவிவரம் அடங்கிய விண்ணப்பத்தினை **20.06.2016 இற்கு முன் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். பெண்கள் விரும்பத்தக்கது.**

விளம்பர இல- 5102, C/O - உதயன்.
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## SB TRAVELS & TOURS (PVT) LTD

SPECIAL AIR FARES
0% NET FARE

| | | | |
|---|---|---|---|
| CHENNAI | 21,800/- | LONDON | 88,600/- |
| MADURAI | 17,400/- | TORONTO | 148,200/- |
| TRICHI | 27,500/- | MALDIVES | 17,500/- |
| BOMBAY | 32,000/- | PARIS | 86,699/- |
| BENGALURE | 28,900/- | NEWYORK | 107,000/- |
| KOCHI | 26,400/- | MELBOURNE | 99,800/- |
| DELHI | 47,400/- | CANTON | 71,900/- |
| MALAYSIA | 26,600/- | PERTH | 104,200/- |
| SINGAPORE | 27,500/- | NARITA | 77,900/- |
| BANGKOK | 29,900/- | AUCKLAND | 130,900/- |
| ONEWAY: ABUDHABI - 18,800/- | | SYDNEY | 104,600/- |

DUBAI- 16,800/- DOHA-16,800/- SHARJAH - 14,500/-

*Condition Apply

VISA CARD ACCEPTED.

குழுவாக டிக்கட் பெறுபவர்களுக்கு 5% கட்டணக்கழிவு

IATA ACCREDITED AGENT

எதிர்பாராத மிகக்குறைந்த அதிக கட்டணக்கழிவுடன் டிக்கட்டுகளும், வீசா ஏற்பாடு உட்பட அனைத்தும் ஒரே இடத்தில் சிறப்பாக செய்து கொள்ள இன்றே அழையுங்கள்:

0771083480,81,82,83 | 0766911080, 81, 82,83

**0212229555 / 0212228555**

Call us on : 0094 112540540 / Mobile: 0094 771083480/81

e-mail : bookings@sbairfares.com

No324, ALUTHMAWATHA ROAD, COLOMBO-15. TEL-011 2540280
No: 132, SRI KATHERASAN STREET, COLOMBO 13. TEL -011 2333322
NO:216, KASTHURIYAR ROAD, JAFFNA. TEL-021 2229555

E-mail: sbtravels99@yahoo.com Contact for Travel Insurence

## தென்மராட்சி மண் பதிவாகிறது

கனடாவில் இருந்து வெளிவரும் " **பிறந்த மண்ணில் பெற்ற சுகந்தம்** " பாகம் 4 கினை கனடா ஆதவன் பப்பிளிக்கேசன் வெளியிடவுள்ளது. இதில் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள **ஊர்களின் தொன்மை, பெருமை, வாழ்ந்த பெரியார்கள், வரலாறு, கோயில்கள், பாடசாலைகள்** தொடர்பான விவரங்கள் எழுத்துருப் பெற உள்ளன.

ஆக்கங்களோடு படங்களும் சேர்க்கப்பட உள்ளன. இக்கட்டுரைத் தொகுப்பில் உங்கள் கட்டுரைகளும் படங்களும் இடம் பெற செயற்படுங்கள்.

உங்கள் கட்டுரைகளையும், படங்களையும் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**A.K.சபாரத்தினம்**
**"பூம்பொழில்"**
**கச்சாய் வீதி, சாவகச்சேரி.**

(J 2084) (14,17,18)

E-mail: info@tamilguide.com
மேலதிக தொடர்புகளுக்கு : 076 686 5894

## இதயத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்

### இதயநாடிகளில் நோய் அன்ஜைனா - மார்பு அடைப்பு

கொழுப்பு படிவதால் நாளங்கள் சுருங்கி சீரான இரத்த ஓட்டத்தைக் குறைக்கிறது. மேலும் இவை மார்புவலி மற்றும் இதயபாதிப்பு ஏற்படுத்தக் கூடியது.

**நெஞ்சடைப்புக்கான காரணிகள்**
புகைத்தல், உயர்இரத்தஅழுத்தம்,
அதிக கொழுப்புச்சத்து. நீரிழிவு

நெஞ்சுவலி, மார்படைப்பையும் பூரணமாகக் குணப்படுத்தும் எமது ஆயுர் வேதமருத்துவம் உன்னதமானது. நிரூபணமானது



FAIR PHARMA (PVT) LTD

செலிங்கோ ஹவுஸ், 10ஆம் மாடி, கிழக்கு.
இல. 69 ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

Hotline: 077 755 5600 / 077770 8310 / 077 770 8330
Office: 011 438 8200 / 4 388 100 / 4 388 101 / 4 388 102

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA,
ஆயுர்வேத மருத்துவசபை. BIO & ISO 9001:2008
அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிறுவனம்.

**எங்களால் குணப்படுத்தப்படுகிறது**

- இருதயநோய்
- நோய் எதிர்ப்பு சக்தி
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பாதிப்புக்கள்
- மூட்டு வாதம்
- மூட்டுவலி / முதுகு வலி
- புரோஸ்டேற் பிரச்சினைகள்
- ஒற்றைத் தலைவலி
- புழையழற்சி
- மனஅழுத்தம்
- இருமல் / சளி
- படுக்கைப்புண்கள்
- நாட்பட்ட காயங்கள்
- நீரிழிவு நோய்கள்
- வைரஸ் தொற்றுக்கள்
- பாலியல் குறைபாடு
- மண்குஷ்டம்

## வீடு வாடகைக்கு உண்டு

238, கே.கே.எஸ். வீதி, உடுவில் கிழக்கு சுன்னாகத்தில் நான்கு பெரிய அறைகள், ஒரு பெரிய கோல், இணைந்த குளியலறை, சமையலறையுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்கு உண்டு.

(நிறுவனங்களுக்கு மட்டும்)

**021 320 1381**

## வேலை வாய்ப்புகள்

பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

- கணக்காளர் (பகுதி நேரம்)
- கம்பியூட்டர் பதிவாளர்
- விற்பனைப் பிரதி நிதிகள்
- விற்பனை ஆலோசகர்கள்

நேரில் தொடர்பு கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## மன்னாரில்

இலங்கையின் முன்னணி தொலைத் தொடர்பு நிறுவனத்திற்கு 4G LTE விற்பனை முகவர்கள் தற்போது தேவைப்படுகின்றார்கள்.

ஆர்வமுடையவர்கள் எமது காரியாலயத்திற்கு 22.06.2016 ஆம் திகதிக்கு முன்னர் நேரில் வருகை தரவும்.

(கே 2066)(12,18)

**023 222 2231, 071 970 1942**

## அபான்ஸ் சேவை மத்திய நிலையத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு பணியாளர்கள் சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்

**யாழ்ப்பாணம்:**

- மின்னனு தொழில்நுட்பவியலாளர்கள்
- நிறுவல் தொழில்நுட்பவியலாளர்கள்
- சேவை தொழில்நுட்பவியலாளர்கள்
- NAB பயிற்சியாளர்கள்
- நிர்வாக/தரவு பதிவாளர்கள்

**வவுனியா:**

- AC சேவை தொழில்நுட்பவியலாளர்கள்
- AC நிறுவல் தொழில்நுட்பவியலாளர்கள்
- நிர்வாக / தரவு பதிவாளர்கள்
- NAB பயிற்சியாளர்கள்
- உதவி முகாமையாளர்

**மட்டக்களப்பு CSC:**

- சாரதி
- பழுது பார்க்கும் தொழில்நுட்பவியலாளர்
- மின்னனு தொழில்நுட்பவியலாளர்கள்
- வீட்டு உபயோகப் பொருட்கள் தொழில்நுட்பவியலாளர்
- NAB பயிற்சியாளர்கள்

**தேவையான தகுதிகள்:**

**தொழில்நுட்பவியலாளர்கள்**

- குறிப்பிட்ட கல்வித்தகைமையுடன் AC வீட்டு உபகரணங்கள் மற்றும் மின்னனு உபகரணங்கள் பற்றிய அடிப்படை அறிவையும் கொண்டிருக்க வேண்டும்.
- குறிப்பிடப்பட்ட இத்துறையிலான அனுபவம் மேலதிக தகைமையாகக்கொள்ளப்படும்.
- தகுதிவாய்ந்த வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பது மேலதிக தகைமையாகக்கொள்ளப்படும்.
- NAB /பயிற்சியை தொடரவிரும்புவோரும் விண்ணப்பிக்க முடியும்.

**நிர்வாக நிர்வாகிகள் / தரவு பதிவாளர்கள்**

- க.பொ.த. சா/த மற்றும் உ/த
- MS ஒபீஸ் பற்றிய அடிப்படை அறிவு
- ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் சிறந்த ஆற்றல்
- அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது
- நேரத்திற்கு ஏற்ப நெகிழ்வு தன்மைமிக்க வேலைத்திறன்

**உதவி முகாமையாளர்**

- குறைந்த பட்சம் 2 வருட வணிகத்துறையுடன் சம்பந்தப்பட்ட அனுபவமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.
- குழு உறுப்பினர்களுக்கான வழிகாட்டல் மற்றும் அவர்களுடன் இணைந்து பணியாற்றுகின்ற திறன்
- குறிக்கோள்களை அடையும் வகையில் சிறந்த முயற்சிகளை மேற்கொள்ளும் திறன்
- AC, வீட்டு உபகரணங்கள் மற்றும் மின்னனு உபகரணங்கள் பற்றிய அறிவு கட்டாயமானது.
- சிறப்பான ஆங்கில மொழி மற்றும் கணனி அறிவு.

**சாரதிகள்**

- மென்ரக/கனரக வாகனங்கள் அனுமதிப்பத்திரம் அவசியம்.

நேர்காணல்களுக்கு திங்கள் - வெள்ளி வரை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 2.00 மணிக்குள் அருகிலுள்ள சேவை மையத்துக்கு அல்லது வெள்ளவத்தையில் அமைந்துள்ள அபான்ஸ் சேவை மையத்துக்கு வருகைத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மனிதவள முகாமையாளர்
**அபான்ஸ் சேவை மையம்**
506B, காலி வீதி, கொழும்பு-06.
தொடர்புகளுக்கு: 0115921919
ஈமெயில்: recruitment@abanservice.lk

Abans Service Centre
Always there to serve you better!

## 25ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 19.05.2016 வியாழக்கிழமை
இறைபதமடைந்த எமது குடும்ப விளக்கு

அமரர்

**முத்துப்பிள்ளை மயில்வாகனம்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 18.06.2016 சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற வுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 10.01.1930

மறைவு 19.05.2016

**M.லோகநாதன் - மகன் (சுவிஸ்)**
**இரா.அருட்செல்வம் - மருமகன்**
**(ATC Institute)**
**இணுவில் மேற்கு, இணுவில்.**

(Gst/2078) (11.17.18)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 17 . 01 . 1948



விண்ணுலகில் 09 . 06 . 2011

திதி: அட்டமி

### அமரர் கணேசையா ஜெனரட்ணசிங்கம்

(பாடசாலைகள், வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்)

காலனும் தன் கணக்கைக் கணப்பொழுதில் முடித்துவிட
ஆண்டைந்து அவனியிலே கரைந்ததப்பா!
கண்டது கனவென்று தினமும் கண் திறந்து பார்க்கின்றோம்
கண்முன்னே நின்னுருவம் கண்ணீரில் கரைகிறது
காரிருள் சூழ்ந்த பாரினிலே எமைத் தவிக்கவிட்டு பரனடி நாடிச் சென்றீரோ அப்பா!
வாழ்வாங்கு காத்து எமை வாழவைத்த தெய்வமே!
மனைவியொடு மகன் உறவுகளும் கலங்குகின்றோம்
ஈசன் திருவடியில் ஆன்மா சாந்திபெற வேண்டுகின்றோம்....

நித்தம் உங்கள் நினைவில்...

இல.31, சென்மேரிஸ் வீதி,
கொழும்புத்துறை.

(Gst/2076) (11.17.18)

**மனைவி, மகன் குடும்பத்தினர்.**

## சித்திரவதைக்கு உள்ளானோர் சாட்சியங்கள் வழங்கத் தயார்

### சர்வதேச உண்மை மற்றும் நீதியமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 12

இலங்கையில் போர்க் குற்றங்களுக்கும் சித்திரவதைகளுக்கும் உள்ளாகி வெளி நாடுகளில் தஞ்சமடைந்துள்ள தமிழர்கள் வெளிநாட்டு நீதிபதிகள் அடங்கிய விசேட நீதிமன்றின் முன்னிலையில் சாட்சிய மளிக்கத் தயாராகவுள்ளனர்.

-இவ்வாறு இலங்கை குறித்த சர்வதேச உண்மை மற்றும் நீதியமைப்பு நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

ஐரோப்பாவின் நான்கு நாடுகளில் வாழும் 75 பேர் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை அடிப்படையாக வைத்தே இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

ஆய்வு மேற்கொள்ளப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர் கள் முள்ளிவாய்க்காலில் உயிர் தப்பியவர்கள்.

மேலும் 73 வீதமானவர்கள் இலங்கைப் படை யினரால் சித்திரவதை செய் யப்பட்ட வர்கள் - என்று அந்த அறிக்கை கூறுகின்றது.

தங்களுக்கு அநீதி இழைக் கப்பட்ட வேளை தலைமைப் பொறுப்புகள் மற்றும் கட்டளை வழங்கும் நிலை களில் காணப்பட்டவர்களை விசாரிப்பதே மிகவும் அவசி யம் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

விசேட நீதிமன்றங்கள் உட்பட அனைத்து நிலை மாற்றுக்கால நீதிப் பொறி முறைகளிலும் பெரும் பான்மையாக வெளிநாட்டு நீதிபதிகள் இடம்பெற வேண் டும்எனவும்அவர்கள்வேண்டு கோள் விடுத்தனர்.- என்றும் அந்த அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது. .(ந-ஜ-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி திரேசம்மா அந்தோனிப்பிள்ளை



143/1, ஸ்ரான்லி றோட்டை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட திருமதி திரேசம்மா அந் தோனிப் பிள்ளை 06.06.2016 அன்று காலமானார்.


அன்னாரின் பூதவுடல் நல் லடக்க ஆராதனைக்காக இன்று (12.06.2016) ஞாயிற் றுக்கிழமை காலை 9.30 மணிக்கு புனித யுவானி யர் ஆலயத்துக்கு எடுத்துச் செல் லப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**143/1, ஸ்ரான்லி றோட்,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

### நாகலிங்கம் நமசிவாயம்



வீமன்காமம் வடக்கு. வெங் காய சங்கத்தைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நாக லிங்கம் நமசிவாயம் 08.06.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான நாகலிங்கம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும். காலஞ் சென்றவர்களான வேலுப் பிள்ளை - பொன்னு தம்பதிகளின் மருமகனும். நல்லம்மாவின் அன்புக் கணவரும். சூரியபாலாவின் தந்தையும். முருகையா. காசி நாதன். நாகேஸ்வரி. பரமேஸ்வரி (பிரான்ஸ்). திருச்சிற்றம் பலம் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும். விமலேஸ்வரி (ஆசிரியை)யின் மாமனாரும். துவாரகனின் தாத்தாவும். காலஞ்சென்ற பூமணி மற்றும் செல்லம்மா. காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் அப்புத்துரை (பிரான்ஸ்). பாலா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.06.2016 வியாழக் கிழமை பிற்பகல் 3மணியளவில் சுதுமலை தெற்கு. மானிப் பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று கரையம்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(j/2039)
(11,17,18)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

20 இற்கும் மேற்பட்ட கொள்ளை, திருட்டுச் சம்ப வங்களுடன் தொடர்புடை யவர் என்று பொலிஸாரால் குற்றஞ் சாட்டப்படும் சீக்கி யன் என அழைக்கப்படும் நபருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இவர் பல வருடங்கள் கடூழி யச் சிறைத் தண்டனை ஏற் கனவே அனுபவித்தவர்என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபரும், அவருடன் இணைந்து குற்றச் செயல் களில் ஈடுபட்டார் என்று பொலிஸாரால் குற்றஞ்சாட் டப்படும் இன்னொரு சந் தேகநபருக்குமே விளக்க மறியல் நீடித்து உத்தரவிடப் பட்டது.

தன்னைப் பொலிஸார் தேடுகின்றனர் என அறிந்த சீக்கியன் கடந்த வாரம் சட்டத் தரணி மூலமாக பருத்தித் துறை நீதிமன்றில் சரண டைந்தார். (ந-ஜ-4,26,107)

## மரண அறிவித்தல்



### திருமதி புவனேஸ்வரி லோகநாதன்

(சிரேஷ்ட விரிவுரையாளர் உயிரியல்துறை,
பிரயோக விஞ்ஞான பீடம் - வவுனியா வளாகம்)

மானிப்பாய். சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி லோகநாதன் நேற்று முன்தினம் (10.06.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2016) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரின் இல்லமான இல.25. வைத்திய சாலை சுற்றுவட்ட வீதி. வவுனியாவில் நடைபெற்று பூதவுடல் பூந்தோட்டம் பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மலர்வு 16.05.1962

உதிர்வு 10.06.2016

தகவல்:

**இராமநாதன் லோகநாதன் -கணவர்**
(V.V.Ramanathan & Co Pvt Ltd
(Constructions Company)
No.25, Hospital Circular Rd,Vavuniya.

**077 617 4009**

(V/45)
(11,17,18)

## துயர் பகிர்வு



தோற்றம் : 24.01.1923
மறைவு : 09.06.2016

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி நிறுவுநர் **கனகரத்தினம்** முதலியாரின் பேரனும். முகாமையாளர் **செல்லப்பாவின்** மகனுமாகிய காலஞ்சென்ற **இரத்தினசபாபதி** (C.R. மாஸ்ரர்) அவர்களின் அன்புத் துணைவியார்

### திருமதி மகேஸ்வரி இரத்தினசபாபதி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக் கும் உறவினர்களுக்கு விக்டோரியா கல்லூரிச் சமூகத்தினரின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களது துயரிலும் பங்குகொள்கின்றோம்.

(Gs.2064)
(13.16.17)

**பழைய மாணவர் சங்கம்,**
**சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி.**

# போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் சமணங்குளம் பாலம்

## கிராமிய ஆயிரம் பாலம் திட்டத்தின் மூலம் திருத்தப்படும் என அமைச்சர் டெனீஸ்வரன் உறுதி

யாழ்ப்பாணம், ஜூன் 12

வவுனியா சமணங்குளம் பாலம் கடுமையாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. அதனூடான போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.- இவ்வாறு பொதுமக்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் இந்தப் பாலத்தைக் கிராமிய ஆயிரம் பாலம் திட்டத்தில் உள்வாங்கிப் புனரமைப்புச் செய்யுமாறு வவுனியா மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதம பொறியியலாளருக்குப் பணித்துள்ளேன்- என்று தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை அமைச்சர், அதிகாரிகள் உட்பட்ட குழுவினர் உமா மகேஸ்வரன் வீதியில் உள்ள சமணங்குளம் என்ற இடத்துக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை அவதானித்தனர். அதன்பின்னரே அமைச்சர் மேற்கண்டவாறு பணித்துள்ளார்.

மழை காலங்களில் குளத்தில் இருந்து வான் பகுதி வழியாக வழிந்தோடும் நீரால் குறித்த இடத்தில் ஏறக்குறைய மூன்று அடி அளவுக்குத் தண்ணீர் வீதியை குறுக்கறுத்து ஓடுகிறது.

அதனால் இந்த வீதியைப் பயன்படுத்தும் கோவில்குளம், சமணங்குளம், சிதம்பரபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களின் போக்குவரத்துத் தடைப்படுவதுடன் பல்வேறு அசௌகரியங்களுக்கும் ஆளாகின்றனர்.



இது தொடர்பில் அதிகாரிகள் அமைச்சருக்குத் தெரியப்படுத்தியிருந்தனர். குறித்த பகுதியில் தற்பொழுதும் தண்ணீர் வீதியை குறுக்கறுத்து பாய்ந்துகொண்டிருக்கின்றது. எனவே இந்த இடத்தில் பாலம் ஒன்று அமைக்க வேண்டிய அவசியம் காணப்படுகின்றது என்றும் தெரிவித்தனர்.

அதையடுத்து எதிர்வரும் வருடத்தில் முன்னெடுக்க உத்தேசித்துள்ள "கிராமிய ஆயிரம் பாலம்" திட்டத்தின் கீழ் சமணங்குளம் பாலத்தையும் உள்வங்குமாறு வவுனியா மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதம பொறியியலாளருக்கு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பணிப்புரை வழங்கினார்.

குறிப்பிட்ட கிராமிய பாலம் திட்டம் நடைமுறைக்கு வரும் போது இந்தப் பாலமும் புனரமைக்கப்பட்டு, மக்கள் படுகின்ற அசௌ கரியங்கள் விரைவில் நீக்கப்படும் எனவும் தெரிவித்தார். (ற-ஜ-4,21)

### பெருந்திருநாள்

யாழ்ப்பாணம், ஜூன் 12

பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த பெருந் திருநாள் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.45 மணிக்கு "புதுவாழ்வின் ஊற்றும் உச்சமுமான நற்கருணை" என்னும் வாசக அடிப்படையில் நற்கருணை ஆராதனைகளுடன் இடம்பெறவுள்ளன.

நாளை அதிகாலை 5.15 மணிக்கு முதல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். காலை 6.30 மணிக்கு "புதுவாழ்வின் மாதிரி புனித அந்தோனியார்" என்னும் பொருளில் யாழ்.ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில்திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையுடன் திருச்சொரூபப் பவனிநடைபெற்று, இரவு 7.30 மணிக்குச்சொரூப ஆசிர் வழங்கலுடன் திருநாள் நிகழ்வுகள் நிறைவடையும். (ற-ஜ-160)

### காற்றால் கடற்றொழில் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

தற்போது வீசி வரும் பருவப் பெயர்ச்சிக் காற்றால் கடற்றொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

தற்போது பருவப் பெயர்ச்சிக் காற்று கடும் வேகத்துடன் வீசி வருகின்றது. அதனால் ஆழ்கடல் மீன்பிடி மட்டுமல்லாது சிறு கடற்றொழில்களும், இழுவை மீன்பிடியும் பாதிக்கப்பட்டுள்ளன என்று அவர்கள் தெரிவித்தனர்.

அதையடுத்துக் கடலுணவுகளின் விலைகளும் சந்தைகளில் அதிகரித்துக் காணப்படுகின்றன. (ற-ஜ-வ-160)

### கடலட்டை பிடித்த மீனவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 12

சட்டவிரோதமாகக் கடலட்டை பிடித்த மீனவர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த மீனவர் 7 கிலோ நிறையுடைய கடலட்டைகளைப் பிடித்து பதப்படுத்த முற்பட்டிருந்தபோது திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட மீனவர் யாழ்.நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். அதன் போது, அவர் தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டார். பதில் நீதிவான் ரி.சிவலிங்கம் அவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

கைப்பற்றப்பட்ட கடலட்டைகள் பழுதடைந்த நிலையில் காணப்பட்டதை அடுத்து அவற்றை அழிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-த-ஜ-103)

### புறா திருடிய இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 12

புறாக்களைத் திருடினர் என்ற சந்தேகத்தில் இரு இளைஞர்கள் யாழ்.பொலிஸாரால் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த நபர்களிடம் இருந்து 15 புறாக்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். திருடப்பட்ட புறாக்களின் பெறுமதி 25 ஆயிரம் ரூபா எனத்தெரிவிக்கப்படுகின்றது. அரியாலை, நாவலடியைச் சேர்ந்த இரு இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் அவர்கள் யாழ். நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் ரி.சிவலிங்கம் உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்ட இரண்டாவது சந்தேகநபரின் சகோதரரும் இது தொடர்பில் தேடப்பட்டு வருகின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நபர் 7 புறாக்களுடன் தலைமறைவாகியுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-த-ஜ-103)

### ஒன்றுகூடலும் மருத்துவ முகாமும்

யாழ்ப்பாணம், ஜூன் 12

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் ஒன்றுகூடல் நிகழ்வும், இலவச ஆயுள்வேத மருத்துவ முகாமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு முதியோர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ற-ஜ-ரி)

# பழுதடைந்த மின்விளக்குகளை சீர் செய்வதில் அசண்டையீனம்

## சாவகச்சேரி நகர சபையின் மீது பொதுமக்கள் குற்றச்சாட்டு

சாவகச்சேரி, ஜூன் 12

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகள் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன. அவற்றைச் சீர் செய்வதற்கு நியமிக்கப்பட்ட பணியாளர் நகரசபையின் வாகனங்களில் சாரதியாகப் பணிபுரிகிறார். அதனால் மின் விளக்குகள் உரிய காலத்தில் சீர்செய்யப்படுவதில்லை.- இவ்வாறு பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 600க்கும் மேற்பட்ட வீதிவிளக்குகள் காணப்படுகின்றன. அத்துடன் பல இடங்களில் புதிய வீதி விளக்குகள் பொருத்தும் பணிகளும் வாரத்தில் ஒரு நாள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள பல வீதி விளக்குகள் பழுதடைந்து ஒளிராமல் காணப்படுகின்றன என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அவற்றைச் சீர்செய்ய விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்று நகரசபையால் தெரிவிக்கப்பட்டபோதிலும் திருத்தும் பணிக்காக நியமிக்கப்பட்ட மின் தொழிலாளி, சபையின் வாகனங்களில் சாரதியாகச் செயற்படுகின்றார். பழுதடைந்த வீதி விளக்குகளைச் சீர்செய்யும் நடவடிக்கையில் அவர் ஈடுபடுவதில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

வீதி விளக்குகளைச் சீர் செய்வது தொடர்பாக மின்சார சபையிடம் கேட்டால், நகரசபையில் முறையிடுமாறு கூறுகின்றனர். நகர சபையிடம் கேட்டால் மின்சார சபை அலுவலர் வராததால் பழுதடைந்த விளக்குகள் சீர் செய்யப்படுவதில்லை என்று தெரிவிக்கின்றனர்.

மின்சார சபையினர் வீதி விளக்குகள் இணைப்பு வழங்குவது மற்றும் சீர்செய்வது தொடர்பாக எமக்கு அறிவிக்கும்போது, சபை மின்தொழிலாளி அவர்களுடன் சென்று பணியாற்றுவார். ஏனைய தினங்களில் சபையின் வாகனங்களுக்குச் சாரதிகள் வருகை தராத வேளைகளில் சாரதியாக பணியாற்றுகிறார் - என்றார். (ற-ஜ-9)

# மது ஒழிப்பை வலியுறுத்தி மாயவனூரில் நடைபவனி



கிளிநொச்சி, ஜூன் 12

"வன்முறையைத் தூண்டும் மதுவை தடுக்க ஒன்றிணைவோம்"எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி வட்டக்கச்சி மாயவனூர் கிராமத்தில் போதைப்பொருள் பாவனைக்கு எதிராகக் கிராம மக்கள் விழிப்புணர்வு நடை பவனி ஒன்றை நடத்தியுள்ளனர்.

இந்த விழிப்புணர்வு நிகழ்வு கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையில் நேற்றுமுன்தினம் முற்பகல் பத்து மணியளவில் மாயவனூர் குளப்பிட்டியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது.

'திண்டாட கசிப்பைக் கனிபோல் நினைக்கிறாயா?, விதவைகள் போதும் மதுவை நிறுத்து, 'எமது பிள்ளைகளைத்தலை நிமிர்ந்து வாழ வழி விடு' போன்ற கோசங்களை எழுப்பியவாறும், பதாகைகளை தாங்கியவாறும் நடைபவனியாகச் சென்ற மக்கள் மாயவனூர் சிவன் கோவில் வரை சென்றனர்.

ஆலய முன்றிலில் சட்டவிரோத போதைப் பொருள் தொடர்பான கருத்துரையும் நடைபெற்றது. கருத்துரைகளைக் கிளிநொச்சி பொலிஸ் மக்கள் தொடர்பாடல் பிரிவு பொறுப்பதிகாரி குணரோயன், கிராம அலுவலர், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி ஆகியோர் வழங்கினர்.

நடை பவனியில் பொலிஸ் அதிகாரிகள், மாவட்டச் செயலகத்தின் பெண்கள், அபிவிருத்தி அதிகாரிகள், பொது அமைப்புக்களின் அதிகாரிகள், மதகுருமார்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-ஜ-21)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# அரசியல் ஆர்வம் கொண்டோரின் தேவையே 30 ஆண்டுகாலப் போர்

## யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

30 வருடங்களாக போர் மீது இராணுவத்துக்கு தேவையோ ஆர்வமோ இருக்கவில்லை. ஆனால் அடிப்படையில் அரசியல் ஆர்வம் கொண்டவர்களின் தேவையாகவே அது இருந்தது. உண்மையிலேயே அது மிகப் பெரிய தவறாகும். எனினும் தற்போதுள்ள சமாதானத்தை உறுதியாக நீடித்து நிலைக்கச் செய்ய வேண்டியுள்ளது.

இவ்வாறு யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மகேஸ் சேனாநாயக்கா தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் படைகளில் இருந்து விலகியவர்களின் குடும்ப நல திட்டங்களிற்கான ஆரம்ப நிகழ்வு யாழ். கோட்டையில் உள்ள படைமுகாமில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது:

நாட்டின் பொலிஸ் துறை 150 ஆவது வருட நிறைவைக் கொண்டாடவுள்ளது. எதிவரும் ஒக்ரோபர் மாதம் இராணுவம் 87ஆம் ஆண்டு நிறைவையும் கொண்டாட இருக்கின்றது. கடற்படையும் வான் படையும் நாட்டின் வரலாற்றில் 66 வருடங்களை நிறைவு செய்திருக்கின்றன. கடந்த 67 வருடங்களில் நான் 35 வருட காலம் 'அந்த வரலாற்றில் அரைவாசிக்கும் அதிகமான காலம்' சேவை செய்துள்ளேன். அதனால் பல விடயங்களை அறிவேன்.

சமாதானத்தைக் கொண்டு வருவதற்காக நாங்கள் போராடினோம். இராணுவமும், கடற்படையும், விமானப்படையும், பொலிசாரும் இன்று வெற்றியாளர்களாக வலம் வருகின்றார்கள். பலரும் பலவிதமான கதைகளைக் கூறுவார்கள். நாங்கள் அவற்றுக்கு எடுபட்டுப் போய் விடக் கூடாது. முப்பது வருடகால போரால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்குப் பகுதியில் உள்ள எமது சகோதரர்களான மக்களுக்கு உதவி புரியவும் சேவையாற்றவுமே நாங்கள் இங்கு இருக்கின்றோம்.

அடுத்த ஆயிரம் வருடங்களுக்கோ அல்லது நினைவு தெரியாத காலத்திலோ இந்த நாட்டில் ஒரு போர் இனிமேல் ஏற்படக் கூடாது என்பதே ஆயுதப் படைகளின் தளபதி என்ற வகையில் எனது பொறுப்பாகும்.

நாங்கள் எந்தவொரு சமூகத்தினருக்கும் எதிரானவர்களல்லர். முப்பது வருட போராட்டத்தின் மூலம் அடைந்துள்ள சமாதானத்தை நிலைநிறுத்துவதை உறுதிப்படுத்த வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

எங்கள் மத்தியில் கலாசார இடைவெளி, தலைமுறை இடைவெளி எனப் பல இடைவெளிகள் இருக்கின்றன. இந்த இடைவெளிகள் இல்லாமல் செய்யப்பட வேண்டும். நாங்கள் நெருங்கி ஒருங்கிணைந்து செயற்பட்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும் - என்றார்.

படைகளில் இருந்து ஓய்வு பெற்றவர்களின் நலனை மேம்படுத்தும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்டு விறுசற நிகழ்ச்சித் திட்டம் அங்கு ஆரம்பிக்கப்பட்டது. (ற-4,101,106)

## வழித்தட அனுமதிப் பத்திரமின்றி பஸ் சேவை; சாரதிக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

வழித்தட அனுமதிப்பத்திரமின்றி கொழும்புக்குப் பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் சாரதிக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக் கப்பட்டது. குறித்த பஸ்ஸும் நீதிமன்றால் தடுத்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பயணிகள் பஸ் ஒன்றை, யாழ்ப்பாணப் பொலிஸார் சில நாள்களுக்கு முன்னர் மறித்துச் சோதனையிட்ட போது, குறித்த பயணிகள் பஸ் போக்குவரத்தில் ஈடுபடுவதற்குரிய வழித்தட அனுமதிப்பத்திரம் இல்லை எனத் தெரிய வந்தது.

அதையடுத்து யாழ்.பொலிஸார் குறித்த பஸ் சாரதிக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தனர். அந்த வழக்கு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அதன்போது குறித்த பஸ்ஸையும், சாரதியையும் பொலிஸார் நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர். சாரதி குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து அவரை பத்தாயிரம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். குறித்த பயணிகள் பஸ்ஸை நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ற-ஜ-4,103)



## ஏழரை லட்சம் ரூபாவில் மன்னாரில் நிழற் குடை

### நேற்றுமுன்தினம் அடிக்கல் நடப்பட்டது

மன்னார், ஜூன் 12

மன்னார் தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக பயணிகள் நிழற்குடை ஒன்றை அமைப்பதற்கு ஏழரை லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது என்று வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் சட்டத்தரணி பா. டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார். அதற்கான அடிக்கல்லையும் அவர் நட்டார்.

மன்னார் மதவாச்சி வீதியில் அமைந்துள்ள தொழில்நுட்ப கல்லூரிக்கு முன்பாக அமைக்கப்பட உள்ள நிழற்குடைக்கான அடிக்கல்லே நேற்று முன்தினம் அமைச்சரால் நடப்பட்டது.

கல்லூரி நிர்வாகத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்க, அமைச்சரின் நிதி ஒதுக்கீடில் 6 இலட்சம் ரூபா செலவில் குறித்த பயணிகள் நிழற்குடை அமைக்கப்பட உள்ளது என்றும், மாணவர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க அந்த நிழற்குடையை விஸ்தரிக்க மேலும் 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நிகழ்வில் வீதி அபிவிருத்தித் திணைகளத்தின் பிரதம பொறியிலாளர், கல்லூரி அதிபர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர் என்று அமைச்சர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-4,21)

## கடுங்காற்றால் முறிந்தது பனை இரு கிராமங்களுக்கு மின்தடை

சாவகச்சேரி, ஜூன் 12

மட்டுவில் தெற்குப் பிரதேசத்தில் வீசிய கடும் காற்றால் பனை மரம் முறிந்து வீழ்ந்தது. எறிக்ணைத் தாக்குதலில் ஏற்கனவே சேதமடைந்திருந்தது அந்தப் பனை. அதில் இரண்டு மின்கம்பங்கள் சேதமடைந்தன. அதனால் இரண்டு கிராம அலுவலர் பிரிவு களுக்கு மின் விநியோகம் தடைப்பட்டது.

நேற்றுமுன்தினம் பனை முறிந்து வீழ்ந்தது. மட்டுவில் தெற்கு, கைதடி நுணாவில் ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டது. குடியிருப்பற்ற காணியில் காணப்பட்ட பனை மரமே முறிந்ததால் பொதுமக்களுக் குப் பாதிப்பு ஏற்படவில்லை.

சம்பவ இடத்துக்குச் சென்ற மின்சார சபை ஊழியர்கள் தொடர்ச்சியாகப் பணியாற்றி இரவு மின் விநியோகத்தை சீர் செய்தனர்.

தற்போதும் தென்மராட்சி பிரதேசத்தில் கடும் காற்று வீசுவதால் மரங்களில் காணப்படும் மரக்கிளைகள், பனையோலைகள், தென்னோலைகள் போன்றவற்றை வெட்டி அகற்ற வேண்டும் என்று மின்சார சபையினர் அறிவித்துள்ளனர். (ஜ-9)

## வெவ்வேறு விபத்துகளில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஜூன் 12

பஸ்ஸில் ஏற முயன்ற வேளையில் தவறி வீழ்ந்த போது, காலில் வாகனச் சில்லு ஏறியதில் காயமடைந்த மாணவியும், சமிக்ஞை இன்றி திரும்பிய மோட்டார் சைக்கிளுடன் மோதிக் காயமடைந்த இளைஞரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் நேற்று முன்தினம் மீசாலையில் இடம் பெற்றுள்ளன.

மீசாலையில் உள்ள தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்று விட்டு வீடு திரும்பிய மட்டுவிலைச் சேர்ந்த மாணவி மீசாலைச் சந்தியிலிருந்து பஸ்ஸில் ஏற முற்பட்ட வேளையில் கீழே விழுந்தார். அதன்போது வாகனச் சில்லு கால் பாதத்தில் ஏறியதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அதேவேளை முன்னால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் சமிக்ஞையின்றி திடீரென திரும்பியதால், பின் தொடர்ந்து சென்ற மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்தவர் தூக்கி வீசப்பட்டு காயங்களுக்கு இலக்கான நிலையில் சுய நினைவை இழந்தார்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற-ஜ-9)

## வினைத்திறன் தடைகாண் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 12

வருமானப் பரிசோதகர்கள் தரம் 1, 11க்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சைகள் இந்த மாதம் 18 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சைகளில் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான விசேட வகுப்புக்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர்ப் பிரதேச சபை தலைமைச் செயலக மண்டபத்தில் முற்பகல் 10 மணியிலிருந்து 2 மணிவரை நடைபெறவுள்ளன.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. (ற-ஜ-115)

## தாய் சேய் சிகிச்சை நிலையத்துக்கு காணி அன்பளிப்பு

தாய் சேய் சிகிச்சை நிலையம் அமைப்பதற்கு மட்டுவில் வேற்பிள்ளை சனசமூக நிலையத்தினர் இலவசமாகக் காணி வழங்கியுள்ளனர். அதையடுத்து அங்கு தனியான ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

அரச நிதியின் உதவியுடன், மட்டுவில் வேற்பிள்ளை சனசமூக நிலைய வளாகத்தினுள் ஆரம்ப சுகாதார நிலையத்துக்கான கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கான காணி வேற்பிள்ளை சனசமூக நிலையத்தினரால் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மட்டுவில் பிரதேச தாய் சேய் சிகிச்சை நிலையம், மட்டுவில் வேற்பிள்ளை சன சமூக நிலைய மண்டபத்தில் நடத்தப்பட்டு வந்தது. (ற-ஜ-9)

## புலம்பெயர் உறவுகள் தம்மை வருத்தி சிறுகச் சேமித்தே உதவி செய்கின்றனர்

### மாணவர்களுக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் அறிவுரை

முல்லைத்தீவு, ஜூன் 12

கடுங்குளிரிலும், இரவு பகலாகவும் தொடர் பணியிலும் ஈடுபட்டு சிறுகச் சிறுக சேமித்த பணத்தையே ஈழத்து மாணவர்களுடைய கற்றலுக்காக புலம்பெயர் உறவுகள் வழங்குகிறார்கள். அதற்கு கைமாறு போன்று மாணவர்களான நீங்கள் செய்யக்கூடியது உங்கள் கற்றல் நடவடிக்கையில் மேம்பாட்டைக் காட்டுவது தான் -இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன்.

மேற்கு ஆஸ்திரேலியாவின் உதவும் கரங்கள் அமைப்பின் ஊடாக புலம்பெயர் ஈழத்து உறவுகளின் பங்களிப்பின் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பத்து மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை வலுவூட்டும் வகையில் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவில் உள்ள ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் நடைபெற்றது.

அதன்போது கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதற்கான பங்களிப்பைப் புலத்திலே வாழும் எங்கள் சகோதரர்களே வழங்கியுள்ளனர். அவர்கள் உங்களின் முன்னேற்றத்தில் கூடிய கவனத்தைச் செலுத்துபவர்கள். உயர்ந்த நிலைநோக்கிப் பயணியுங்கள். உங்கள் கற்றலுக்கான பின்புலமாக தொடர்ந்தும் இருப்போம்.- என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-ஜ-21)


SET WET™ style
marico
SET WET HAIR GELS
THAT WILL GET YOUR
HAIRSTYLE TO DO ALL
THE TALKING FOR YOU
THE ULTIMATE RANGE
SET WET WET LOOK
SET WET COOL HOLD
SET WET VERTICAL HOLD
WITH ADDED PRO-VITAMIN B5
HAIR GEL FOR RE-STYLABLE LOOK
SET WET ULTIMATE HOLD
WET LOOK | COOL HOLD | VERTICAL HOLD | ULTIMATE HOLD


SINGER
உயர் கல்வி அமைச்சின்
Laptop கணினி செயல் திட்டம்
பல்கலைக்கழக
மாணவர்களுக்கான
விசேட Laptop கொடுப்பனவுகள்
சிங்கரிடமிருந்து
DELL | SINGER X SERIES
6th Gen
6th Gen
DELL Vostro 15 3559-i5 (DELL- VOST-I5W10)
• 6th Gen Core i5 – 6200U (3MB Cache, up to 2.8GHz)
• 4GB DDR3 1600MHz / 1TB Hard Drive / DVD Writer
• Full Size, Spill-resistant Keyboard
• 15.6" Anti-glare, HD, LED Backlit Display
• Integrated Sound Card with MaxxAudio ® by Waves and one combo, Headphone / Microphone Jack
• 2GB seperate VGA, Webcam, 4 Cell Battery
• Dell Power Adapter, Dell Top-load Carrying Case
• Genuine Windows 10 - Home (Single Language)
• Licensed Anti-Virus Software
• 3 Years Warranty (Battery & Power Adapter - 1 year)
விசேட விலை ரூ.74,750/-
மாதாந்தம் ரூ.2,077/-
SINX-i5-6 GEN
• 6th Gen Core i5 – 6200U (3MB Cache, up to 2.8GHz )
• 4GB DDR3 1600MHz / 500GB Hard Drive/ DVD Writer
• 15.6", HD, LED Backlit Display
• USB 3.0 Ports, External VGA port, HDMI™ Output Port, Headphone Jack, Microphone Jack, RJ-45 LAN Port, DC-in Jack, Card Reader
• Full Size, Numeric Keyboard
• Integrated VGA , Webcam, 4 Cell Battery
• Genuine Windows 10 - Home (Single Language)
• Licensed Anti-virus Software, Carrying Case
• 3 Years Warranty (Battery & Power Adapter - 1 year)
விசேட விலை ரூ. 73,000/-
மாதாந்தம் ரூ.2,028/-
4G டொங்கல் இலவசம்
3 வருட உத்தரவாதம் இலவசம்
GENUINE Windows 10 இலவசம்
நாடளாவிய ரீதியில் சிங்கரின் விற்பனையின் பின்னரான அதி உயர் சேவை
மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி மூலமாக வட்டி இல்லா கடன் வசதி.
011 5 400 400
http://www.singersl.com
யாழ்ப்பாணம் (ஸ்டான்லி வீதி) 021-2225408
யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரி வீதி) 021-2216320
நெல்லியடி 021-2264937
பருத்தித்துறை 021-2263411
சங்கானை 021-2251100
சுன்னாகம் 021-2240555
முல்லைத்தீவு 021-2290180
சாவகச்சேரி 021-2270197
மானிப்பாய் 021-2255343
கொடிகாமம் 077-7858232
கிளிநொச்சி 021-2280199
கிடைக்குமிடங்கள்
SINGER Plus
www.masters.lk

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு





## தேவை



### விற்பனைக்கு

அல்சேசன், ஜேர்மன் செப்பேட், ஒரு தடுப்பூசி போடப்பட்ட பொமனேரியன் நாய்க்குட்டிகளும் விற்பனைக்குள்ளன.

தொடர்பு: 077 101 6407

### வீடு விற்பனைக்கு

இல.01, 2ஆம் குறுக்குத்தெரு, குருநகர், யாழ்ப்பாணத்தில் 1½ பரப்புக் காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்குண்டு.

(J 2056) (14,17,18)

077 992 2481 / 077 438 4866

### விற்பனைக்கு

4500 லீற். பௌசர்

ஜெனறேற்றர் -(3F Singer புதியது 5KW)

Landmaster ஜெனறேற்றர் (5Kw)

(J 1978) (14,17,18)

தொடர்பு : 077 830 4553

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொய்லர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகவும் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

1kg சுத்தம் செய்தது 500/=

கூடுதல் கொள்வனவுக்கு 480/= மட்டும்.

U.S.A பாம்

குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை,

077 9493 776, 077 808 9500

### வீடு விற்பனைக்கு

இல.33 பழைய பூங்காவீதி, கொய்யாத் தோட்டம் என்னும் முகவரியில் அமைந்துள்ள 3 அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: ந.சிவகுமார்

021 224 1374, 076 726 6775

### காணி விற்பனைக்கு உண்டு

பெரியவிளான் ¼ kmருக்கு அருகில் உள்ள தெல்லிப்பழை வீதியில் மெயின்றோட் அருகில் வற்றாத வெட்டுக் கிணற்றுடன் 40 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு

ம.அருளப்பு 077 945 9186

### வீடு விற்பனைக்கு

புத்தூர்ச் சந்தியில் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரிக்கு அண்மையில் 4½ பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் அமைந்த 4 அறைகளைக் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

076 696 5124

### வீடு விற்பனைக்கு

இல. 15/1, புதுவீதி, கொய்யாத் தோட்டத்தில் 3¾ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

(J 2031) (12,18)

தொடர்பு : 078 526 4131

### வீடு வாடகைக்குத் தேவை

4பேர் கொண்ட குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை.
இடம் : நல்லூர், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், கந்தர்மடம், கச்சேரி, கொக்குவில்.

தொடர்பு: 077 290 6703

### தேவை

வெல்டிங் வேலைக்கு ஒருவரும், பகுதி நேர வேலை செய்யும் குளிரூட்டி திருத்துநரும் தேவை.

075 795 8720

### தேவை

நாவற்குழி சந்தியில் இருக்கும் Beauty parlour ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.

(J 2053) (14,17,18)

077 623 7747 / 077 381 9378

### வீட்டுப் பணிப் பெண் தேவை

வீட்டில் தங்கி இருக்கவேண்டும். சமையல், சாதாரண வீட்டு வேலைகள் தீவகம், யாழ் நகர் 10 கி.மீற். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இருபகுதியும் பேணப்படல் வேண்டும்.

(J 2031) (12,18)

தொடர்பு : 077 226 2820

### மணமகள் தேவை

யாழ். இந்து 1979 ஆம் ஆண்டு பிறந்த பட்டதாரி மணமகனுக்கு மணமகள் தேவை. தற்போது வெளிநாட்டில் P.Rஉடன் உள்ளார். பெற்றோர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர்.

தொடர்பு: 076 945 5894

### வீடு வாடகைக்குத் தேவை

அரச உத்தியோக குடும்பத்துக்கு இடம் : நல்லூர், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், கந்தர்மடம், கச்சேரி, கொக்குவில்.

தொடர்பு: 077 467 7869

### வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

(J 2067) (12,18)

071 902 5745, 077 651 0696

### தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல கணினி மென்பொருள் வடிவமைப்பு நிறுவனத்திற்கு இணைய வடிவமைப்பாளர்(Web designer), கிராபிக் டிசைனர் மற்றும் விளம்பர உத்தியோகத்தர். ஆகியோர் தேவைப்படுகின்றனர்.

(J 2067) (12,18)

077 842 3911

மின்னஞ்சல் Rajeev@resiliencelk.com

### மணமகன் தேவை

ஆஸ்திரேலியாவில் வதியும் 1982இல் பிறந்த, திருவாதிரை முதலாம் பாதம் உடைய பெண்ணுக்கு ஆஸ்திரேலியாவில் வதியும் மணமகன் தேவை.

077 563 1256

### கணக்காளர் தேவை

சாவகச்சேரி கல்லுடைக்கும் ஆலைக்கு கணக்காளர் தேவை. 50 வயதுக்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது.

077 314 4756

## ஏனையவை

### வாடகைத்தாய் தேவை

கொழும்பிலுள்ள தம்பதியினருக்கு IUF மூலம் செய்வதற்கு 30 வயதுக்குக் குறைவான பெண் வாடகைத் தாயாகத் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

077 906 1406

### வாடகைக்குண்டு

கிளிநொச்சி நகரிற்கு அண்மையில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு சகல வசதிகளுடன் கூடியஅறைகள் வாடகைக்குண்டு.

(J 2031) (14,17,18)

தொடர்பு : 076 545 6609

### வேலையாள்கள் தேவை

Phoenix Book Shop இற்கு பெண் வேலையாள்கள் தேவை

1. Bill clerk
2. Computer Type Writer & Designer
3. Photo copy Operater
4. Sales Girl

* A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது
* 30 வயதுக்கு உட்பட்டோர் மட்டும் விண்ணப்பிக்கவும்.

077 063 3116

### VACANCY

*COOK
*KITCHEN HELPER
*WAITERS/ TRAINEE WAITERS

To work for Tilko Jaffna City Hotel, one of the lading star class hotels in the North.

**Candidate should have 1 year experience in a hotel industry**

Excellent carrier prospect and attractive remuneration package.

Plaese call

077 330 6985

### தவறிவிட்டது

கந்தசாமி புஸ்பநாதன் என்பவருடைய தே.அ. அட்டை (750313272V),சாரதி அனுப்பதிப்பத்திரம் வெளிநாட்டு (கட்டார்)சாரதி அனுமதிப்பத்திரம், வங்கி அட்டைகள் அடங்கிய பேர்ஸ் ஒன்று மட்டுவிலுக்கும் மீசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 724 2534, 077 326 8072

### விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**

388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**

454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### சுப மாங்கல்ய திருமண சேவை

எம்மிடம் கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நிரந்தர வதிவிடம் உள்ள படித்த பட்டதாரி மற்றும் சாதாரண துறையில் படித்து தொழில்புரியும் மணமகள், மணமகன் ஸ்பொன்ஷர் செய்து வெளிநாடுகளுக்கு எடுக்கக் கூடியவர்கள் உள்ளனர்.

தொடர்புகளுக்கு:
Canada - 416 333 3544
Sri Lanka - 077 257 9919
Email -maruthampathi@gmail.com

### பணியாளர் தேவை

மீசாலை, புத்தூர்ச் சந்தி மற்றும் கொடிகாமம் ஆகிய இடங்களில் உள்ள பதிப்பகங்களுக்கு

✓ கணினி வடிவமைப்பாளர்
✓ ஒவ்-செற் இயக்குநர்

தேவை. அனுபவம் உள்ளவர்கள் 15.06.2016 இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு 077 130 1050

### பயிற்சிப் பட்டறை - அழகுகலை

முதல் முறையாக யாழ் நகரில் அழகுக்கலை நிபுணர்களிற்காக முதல் முறையாக ஃபிரெஞ்ச் நெயில், ஹொலிவூட், ஸ்பிறேமேக்-அப் மற்றும் மெகந்தி பயிற்சி பட்டறை. 18, 19, 26 June மாதம் நடைபெற உள்ளது கட்டணம் 2500/- முற்பதிவுகளுக்கும், விபரங்களுக்கும் Missed Call or Whatsapp மட்டும் செய்யவும்.

Foresight's

0750 579 663

### விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

இலங்கையில் இயங்கி வரும் பிரபல தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு விற்பனை பிரதிநிதிகள், சிம் அட்டை விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. நேர்முகத் தேர்வு எதிர்வரும் 13,15, 17 ஆகிய தினங்களில் இடம் பெறும்.

தொடர்புகளுக்கு
62/33, Old post office Road,
Stanly Road, Jaffna.
078 500 0580 / 078 500 0811

### மணமகள் தேவை

யாழ். இந்து நாச்சிமார் கோயிலடி கொக்குவிலைச் சேர்ந்த Electronic Engineer Uk PR உடைய ஆயிலியம் 1975 (5' 4")நற்குணமான மணமகனுக்கு நன்கு ஆங்கில அறிவுடைய நற்குணமான மணமகள் உள்நாட்டிலோ/ வெளிநாட்டிலோ தேவை. Accounter, Computing, Teaching, Nursing தகமையுடையவர்கள் விரும்பத்தக்கது.

Uk 00447438265672
Vijey40@hotmail.com
021 492 5047

### உடனடி வேலைவாய்ப்பு

கதிர் கட்டட ஒப்பந்த நிறுவனத்துக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (N.C.T.(civil)/ N.C.T Q/S குறைந்தது 2 வருட அனுபவம்)
2. மேசன் (45 வயதுக்குட்பட்டவர்)
3. லேபர்

தொடர்பு:
077 241 7103, 021 561 8129
email- kathircons12@gmail.com

### உடனடி வேலை வாய்ப்பு

உள்நாட்டில் பிரசித்தமான கம்பனிகளில்

- வயது 18 -55
- ஆண், பெண்
- சம்பளமுற்பணம்
- மேலதிக OT
- உணவு தங்குமிடம் சகாய விலையில்
- 3 மாதங்களுக்குப் பிறகு வேலையில் நிரந்தரமாக்கப்படுவர்

மாத வருமானம் 35,000/= மேல்

**அனுபவமுள்ள, அனுபவமில்லாதோர் உடனடியாக சேர்த்துக்கொள்ளப்படுவர்.**

தொடர்புக்கு:
077 378 4684　077 654 1151
077 089 1129　075 577 3082

# மக்கள் வங்கி அறிவித்தல்

பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 30.04.2015 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 25.06.2016, 26.06.2016 ஆகிய திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் கீழ்க்குறிப்பிட்ட இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி | திகதி | ஏலம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| காங்கேசன்துறை | மல்லாகம் | 24.06.2016 | 25.06.2016 | யாழ்.ஸ்ரான்லி வீதி கிளை. |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் | | | |
| அச்சுவேலி | புத்தூர் | | | |
| சாங்கானை | பண்டத்தரிப்பு | | | |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | | |
| | கல்வியங்காடு | | | |
| பருத்தித்துறை | புலோலி | | | |
| ஊர்காவற்றுறை | - | 24.06.2016 | 26.06.2016 | |
| சுன்னாகம் | கோப்பாய் | | | |
| | அளவெட்டி | | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | | |
| யாழ்.ஸ்ரான்லி வீதி | நாவலர்வீதி | | | |
| | மானிப்பாய் | | | |
| நெல்லியடி | - | | | |
| சாவகச்சேரி | கொடிகாமம் | | | |
| | கைதடி | | | |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் | | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல.- 021 222 2601 / 021 222 8602**
**தொலை நகல்: 021 222 2602**

(சி/21851)(11,18)

# INVITATION FOR BIDS

## High Commission of India
### Colombo, Sri Lanka

INDIA
India-Sri Lanka Friendship

COL/DC/228/02/2013

கீழ்க் குறிப்பிடப்பட்ட வடமாகாண பாடசாலை திருத்த வேலைகள் குறித்து தகுதிவாய்ந்த ICTAD ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

| Bid No | Bid Title | Estimated Cost (SLR) | ICTAD Grading (Minimum) |
|---|---|---|---|
| Col/Com/228/36/2016-01 | Repair of Jaffna Zone Schools in Northern Province | 20.22M | C6 |
| Col/Com/228/36/2016-02 | Repair of Valikamam Zone Schools in Northern Province | 33.66M | C5 |
| Col/Com/228/36/2016-03 | Repair of Vadamarachchi Zone Schools in Northern Province | 22.37M | C6 |
| Col/Com/228/36/2016-04 | Repair of Thenmarachchi Zone Schools in Northern Province | 25.16M | C5 |
| Col/Com/228/36/2016-05 | Repair of Island Zone Schools in Northern Province | 13.81M | C6 |
| Col/Com/228/36/2016-06 | Repair of Kilinochchi Zone Schools in Northern Province | 15.16M | C6 |
| Col/Com/228/36/2016-07 | Repair of Mullaitivu and Thunukkai Zones Schools in Northern Province | 36.93M | C5 |
| Col/Com/228/36/2016-08 | Repair of Vavuniya North Zone Schools in Northern Province | 13.99M | C6 |
| Col/Com/228/36/2016-09 | Repair of Vavuniya South Zone Schools in Northern Province | 49.96M | C5 |
| Col/Com/228/36/2016-10 | Repair of Mannar and Madhu Zones Schools in Northern Province | 17.33M | C6 |

ஆவணங்களை ஒப்பந்த High Commission of India 36-38, Galle Road, Colombo-03 அல்லது Consulate General of India in Jaffna, 14, Maruthady Lane, Nallur, Jaffna எனும் முகவரியில், பொதியொன்று ரூ.3000/- படி பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்த ஆவணங்களை 13-06-2016 தொடக்கம் 01-07-2016 காலப்பகுதியில் மு.ப 9.30 தொடக்கம் பி.ப 4.00 வரை பெற்றுக் கொள்ளலாம். இந்த ஆவணங்களை www.hcicolombo.org என்னும் முகவரியிலும் பார்வை யிடலாம்.

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த ஆவணங்கள் 04-07-2016 அன்று பி.ப 3.00க்கு முன்னர் கையளிக்கப்படல் வேண்டும். தொழில்நுட்ப ஆவணங்கள் 04-07-2016 அன்று பி.ப 3.30க்கு திறக்கப்படும்.

## பகிரங்க அறிவித்தல்
## சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

**நம்பிக்கைச் சொத்துக்கள் சட்டத்தின் பிரிவு 35 இன் கீழான விண்ணப்பம்**

**வழக்கு எண் TR / 21 / 2016**
**நம்பிக்கைச் சொத்து**

**கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன்**
**மறவன்புலவு அருள்மிகு வள்ளக்குளம்**
**வீரகத்திப்பிள்ளையார் கோயில்**
**விண்ணப்பதாரர்**

மேற்காணும் விண்ணப்பதாரர் இம்மன்றுக்கு விண்ணப்பம், சத்தியக்கூறு மற்றும் **ம1 - ம4** ஆகிய ஆவணங்கள் அனைத்து வழியாகவும், போர்க்காலத்தில் இடிந்து கிடக்கும் மறவன்புலவு அருள்மிகு வள்ளக்குளம் வீரகத்திப் பிள்ளையார் கோயிலுக்குச் சொந்தமானது எனவும் அக்கோயில் திருப்பணிகளைச் செய்து வழமையான வழிபாட்டுக்கு மீளமைக்கும் வகையில் குறித்த திருக்கோயிலுக்குரிய அசையாச்சொத்துக்களில் இவ்விண்ணப் பத்துடன் **ம1அ** எனச் சுட்டி அணைக்கப்பட்டுள்ள பட்டியலில் காட்டப்படும் சொத்துக்களுள் பின்வரும் சொத்துக்களை விற்பதற்கு அனுமதி கோரியும் விண்ணப்பித்து உள்ளார்.

விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துக்கு எவராவது ஆட்சேபனை அல்லது மறுப்புத் தெரிவிக்க விரும்பின் தமது மறுப்பை இந்நாளி லிருந்து ஒருமாத காலத்துள் இம்மன்றுக்குக் கொடுக்குமாறு அறி விக்கின்றோம். விற்பதற்கு அனுமதிகோரி விண்ணப்பதாரர் கொடுத்த சொத்துப்பட்டியல்

1. வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், தென்மராட்சிப் பிரிவு, சாவகச்சேரிப் பிரதேச சபை, மறவன்புலவு சிற்றூர் எல்லைக்குட் பட்ட நாகதம்பிரான் வளவு என அழைக்கப்படுவதும், 2012.03.05 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு க.பிரபாகரனினால் 411ஆம் இலக்கத்தில் நிறைவேறிய குறித்த வெளிப்படுத்தல் உறுதியின் 3 ஆம் பந்தியில் கூறப்பட்டதும், மு.கனகசபை அவர்களால் நிலம் அளந்து விவரிக்கப்பட்ட 2010 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 18ஆம் திகதியிட்ட 4063/10 ஆம் எண்ணிட்ட வரைபடத்தில் முதலாம் துண்டு எனக் குறிக்கப்பட்ட நிலப்பரப்பு ஒன்று, குழி பதினேழு தசம் ஏழு ஒன்பதுக்கு (நி.ப.1 குழி 17.79 அல்லது 20.22 பேர்ச்சு அல்லது 511.34 சமீ) எல்லை வடக்கு அருள்மிகு வீரகத்திப்பிள்ளை யார் கோயில் சொத்தும் பாதையும், கிழக்கு வள்ளக்குளம் வீதி யும், தெற்கு கணபதிப்பிள்ளை கணேசன் சொத்தும் மற்றும் மேற்கு நகுலேசுவரன் நந்தினி சொத்தும், இ.்.தடங்கலும்.
2. வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், தென்மராட்சிப் பிரிவு, சாவகச்சேரிப் பிரதேசசபை, மறவன்புலவு சிற்றூர் எல்லைக்குட் பட்ட 'இணி வளவு' என அழைக்கப்படுவதும், 2012.03.05 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு க.பிரபாகரனினால் 411ஆம் இலக்கத் தில் நிறைவேறிய குறித்த வெளிப்படுத்தல் உறுதியின் 19ஆம் பந்தி யில் கூறப்பட்டதும், மு.கனகசபை அவர்களால் நிலம் அளந்து விவ ரிக்கப்பட்ட 2010ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 18ஆம் திகதியிட்ட 4054/10 ஆம் எண்ணிட்ட வரைபடத்தில் முதலாம் துண்டு எனக் குறிக்கப்பட்ட நிலப்பரப்பு இரண்டு, குழி எட்டு தசம் இரண்டு ஐந் துக்கு (நி.ப.02 குழி 8.25 அல்லது 25.00 பேர்ச்சு அல்லது 632.20 சமீ) எல்லை வடக்குப் பாதையும் அருள்மிகு வீரகத்திப் பிள்ளை யார் கோயில் சொத்தும், கிழக்கு சிறீரங்கநாதன் சொத்தும்,தெற்கு ஒழுங்கையும், மேற்கு பண்டாரி சிதம்பரப்பிள்ளை சொத்தும், இ.்.தடங்கலும்.
3. வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், தென்மராட்சிப் பிரிவு, சாவகச்சேரிப் பிரதேசசபை, மறவன்புலவு சிற்றூர் எல்லைக்குட் பட்ட 'நித்திலபுலம் வளவு' என அழைக்கப்படுவதும், 2012.03.05 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு க.பிரபாகரனினால் 411ஆம் இலக் கத்தில் நிறைவேறிய குறித்த வெளிப்படுத்தல் உறுதியின் 20ஆம் பந்தியில் கூறப்பட்டதும், மு.கனகசபை அவர்களால் நிலம் அளந்து, விவரிக்கப்பட்ட 2010ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 18ஆம் - திகதி யிட்ட 4076/10 ஆம் எண்ணிட்ட வரைபடத்தில் முதலாம் துண்டு எனக் குறிக்கப்பட்ட நிலப்பரப்புப் பன்னிரண்டு, குழி பதினேழு தசம் நான்கு ஐந்துக்கு (நி.ப.12 குழி 17.45 அல்லது 131.85 பேர்ச்சு அல்லது 3334.98 ச.மீ) எல்லை வடக்கு சின்னத்தம்பி மார்க்கண்டு பிள்ளைகளின் சொத்தும், கிழக்கு ஒழுங்கையும், தெற்கு ஒழுங்கை யும் மற்றும் மேற்கு திருக்குமரன் சொத்தும், இ .். தடங்கலும்
4. வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், தென்மராட்சிப் பிரிவு, சாவகச்சேரிப் பிரதேச சபை, மறவன்புலவு சிற்றூர் எல்லைக்குட் பட்ட 'தோப்பு வளவு' என அழைக்கப்படுவதும் 2012.03.05ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு க.பிரபாகரனினால் 411ஆம் இலக்கத் தில் நிறைவேறிய குறித்த வெளிப்படுத்தல் உறுதியின் 21 ஆம் பந்தி யில் கூறப்பட்டதும், மு.கனகசபை அவர்களால் நிலம் அளந்து விவரிக்கப்பட்ட 2010ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 18ஆம் திகதி யிட்ட 4087/10ஆம் எண்ணிட்ட வரைபடத்தில் முதலாம் துண்டு எனக் குறிக்கப்பட்ட நிலப்பரப்பு பதினான்கு, குழி மூன்று தசம் நான்குக்கு (நி.ப.14 குழி 3.40 அல்லது 144.25 பேர்ச்சு அல்லது 3648.59சமீ.) எல்லை வடக்கு பரமானந்தன் கண்ணா சொத்தும், கிழக்கு சின்னத்தம்பி சொத்தும், தெற்கு சின்னத்தம்பி சொத்தும், மேற்கு ஒழுங்கையும், இ .். தட்ங்கலும்.
5. வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், தென்மராட்சிப் பிரிவு, சாவகச்சேரிப் பிரதேசசபை, மறவன்புலவு சிற்றூர் எல்லைக்குட் பட்ட 'அம்மையா வளவு' என அழைக்கப்படுவதும், 2012.03.05 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு க.பிரபாகரனினால் 411ஆம் இலக்கத் தில் நிறைவேறிய குறித்த வெளிப்படுத்தல் உறுதியின் 34ஆம் பந்தியில் கூறப்பட்டதும், மு.கனகசபை அவர்களால் நிலம் அளந்து விவரிக்கப்பட்ட 2010ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 18ஆம் திகதியிட்ட 4077/10ஆம் எண்ணிட்ட வரைபடத்தில் முதலாம் துண்டு எனக் குறிக்கப்பட்ட நிலப்பரப்பு ஒன்பது, குழி ஆறு தசம் ஐந்து ஏழுக்கு (நி.ப.09 குழி 6.57 அல்லது 95.21 பேர்ச்சு அல்லது 2408.14 ச.மீ.) எல்லை வடக்கு கோவிந்தர் நாகலிங்கம் சொத்தும் ஒழுங் கையும், கிழக்கு சங்கரப்பிள்ளை கந்தசாமி மற்றும் செல்லையா கந்தையா சொத்தும், தெற்கு கோபாலு சண்முகம் சொத்தும், மேற்கு ஒழுங்கையும், இ.். தடங்கலும்.

**மன்றின் கட்டளைப்படி**
**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்றம்,சாவகச்சேரி.**

(க/8040)(11,18)

## முன்னைய ஆட்சியில் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் மாயம்

கொழும்பு, ஜூன் 12

முன்னைய ஆட்சியின்போது பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் தொடர்பான விவரங்கள் மாயமாகவே உள்ளன. இது தொடர்பில் உரிய முறையில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் உண்மைத் தகவல்களை விரைவில் வெளிப்படுத்துவோம். –இவ்வாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது:-

முன்னைய ஆட்சியின்போதுஅமைச்சுக்களால்உபயோகித்த வாகனங்கள் இன்னும் உரிய இடங்களில் ஒப்படைக்கவில்லை. ஒருசிலர்வாகனங்களைஒப்படைத்த போதிலும், அவற்றைப் பாவனை செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

புதிதாக பதவியேற்ற அமைச்சர்களுக்கு வாகனங்கள் இல்லாமல் உள்ளன. இதன் காரணமாகவே புதிதாக வாகனங்கள் கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்தோம். தற்போதையசிலஅமைச்சர்கள் வாடகை அடிப்படையிலேயே வாகனங்களைப் பாவனை செய்கின்றனர். வாடகை அடிப்படையில் பாவிக்கும்போது, அரசுக்கு அதிகளவில் பணம் செலவிட வேண்டியுள்ளது. எனவே புதிதாகக் கார்களைக் கொள்வனவுசெய்வதற்கு தீர்மானித்தோம்.

அத்துடன் புதிய கார் கொள்வனவு செய்யப்படும் போது, அரசுக்கு செலுத்த வேண்டிய வரி செலுத்தியே கார் கொள்வனவு செய்துள்ளோம். அதன்காரணமாகவே 118 கோடி ரூபா செலவிடப்படுகின்றது. நாம் எதனையும் மறை முகமாகச் செய்யவில்லை.

இதேவேளை – முன்னைய ஆட்சியின் போது உபயோகிக்கப்பட்ட வாகனங்களை மீள செலுத்தாதவர்கள் தொடர்பில் தீவிரமாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன– என்றார்.

(ஐ–5)

### வெற்றி இல்லம் (கட்டட ஒப்பந்தம்)

✢ வாழ்வில் வசந்தமும்,வியாபாரத்தில் விருத்தியும் அடைய முதலில் உங்கள் இல்லங்கள் சிறப்பாக அமைந்திருத்தல் வேண்டும்.

01.மனையடி சாஸ்திரப்படி (கூவ சாஸ்திரம், சல்லியம், கிரகஸ்தானம், அம்சவாஸ்து,பரவாஸ்த்து, மனைமுகூர்த்தம்) இல்லங்கள் மற்றும் தொழிற்சாலைகள் அமையப் பெற மிக நேர்த்தியாக வாஸ்த்து முறையில் நவீன முறையில் கட்டிக் கொடுக்கப்படும்.

02. வீட்டுத்திட்ட கட்டடங்களும் அமைத்துக் கொடுக்கப்படும்

03. வெளிநாடுகளில் இருப்பவர்கள் அங்கே இருந்து கொண்டு இங்கே வீடுகளையும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் ஏற்பாடு செய்து தரப்படும்.

குறிப்பு: Estimate and consulting முற்றிலும் இலவசம்

தொடர்பு: 076 535 7086
Viber, Whats: 075 544 2850

தற்போது யாழ்ப்பாண நகரிலும்..

### NSoft Academy

புதிதாக எமது கிளை புதன்கிழமை (15.06.2016) திறந்து வைக்கப்படவுள்ளது.

GRAND OPENING

- Spoken English
- IELTS
- Bachelor of Information Technology
- Higher National Diploma in Computing
- Industrial Training

**NSoft Academy - Vavuniya**
Vairavarkovil Road,
Vairavapuliyankulam,
Vavuniya.
0244545061

**NSoft Academy - Jaffna**
320, 1st Floor,
Point Pedro Road,
Anaipanthy, Jaffna.
0777543231

www.nsoftedu.com
www.facebook.com/nsoftacademy

### LNR CONSTRUCTIONS (PVT) LTD.

We, **LNR Constructions (Pvt) ltd** is one of the leading and fast developing Company specialised in Construction of luxury houses and buildings across various sector.

We are hiring an energetic and enthusiastic candidate for our on-going and future projects.

**ENGINEERS & TECHNICAL OFFICERS**

Qualification:

- BSc in Engineering (Civil) with at least **Three years' experience**

Or

- NDT/NCT with at least **5-10 years' experience** in Construction Industry.

Key Roles:

- ✓ Managing and coordinating of project resources including Subcontractors.
- ✓ Supervise other Site Technicians and Subcontractors' personals.
- ✓ Reporting all project progress to Project Manager regularly.
- ✓ Assisting the Project Manager with project preparation and any other technical issues

**QUANTITY SURVEYOR**

Qualification:

- **HND QS/NDQS/NCT QS Or Relevant Qualification**

Key Roles:

- ✓ Preparing tender and contract documents, including bills of quantities.
- ✓ Undertaking cost analysis for repair and maintenance project work.
- ✓ Assisting in establishing a client's requirements and undertaking feasibility studies

Salary:Negotiable

Accommodation: Will be arranged

Your Resume or CV and Covering Letter must be sent to
Email: nishanthrajmohanlnr@gmail.com before 20th June 2016.

**Only eligible candidates will be shortlisted and interviewed.**

T: 021 226 1000 No.37, Vigneshwara College Road, Nelliady, Jaffna

### காணி விற்பனைக்கு



தாச்சை சீமா பெரியவிளான் 12 பரப்பு 5 குளி காணி விற்பனைக்குண்டு.இது மூன்று துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு படத்தில் காட்டப்பட்டவாறு தனித் தனியாகவும் ஒருமித்தும் உங்கள் விருப்பத்தின் படி பிரித்துத்தரப்படும்.

பெரியவிளான் சந்தியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் கீரிமலை இளவாலை வீதியில் அமைந்துள்ளது.

காணி இடம் காட்டுபவர்
செ. றொபின்சன்
மதுசியா வோளான் களஞ்சியம்
கீரிமலை வீதி, பெரியவிளான்
077 575 8601, 021 221 1975

(J 2051)
(12,17,18)

தற்காலிக உரிமையாளர்
நி.நல்லையா
(பணக்கார நல்லையா)
துன்னாலை வடக்கு, கரவெட்டி.
077 322 3171

### விற்பனைக்கு

குறைந்த விலையில் i Pad mini - 16Gb (Sealed Packed). i phone மற்றும் Laptop விற்பனைக்குண்டு. அனைத்து வகையான Computer, Laptops திருத்திக் கொடுக்கப்படும். HD, Blu- Ray, 4K Video களுக்கான Editing செய்து கொடுக்கப்படும்.

நாட வேண்டிய இடம்:

**i Buy Computers**
75/10,பலாலி வீதி, திருநெல்வேலி.
077 707 2092

### அறைகள் வாடகைக்கு உண்டு

இல - 01, 2ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தில் நான்கு மாடிகளுடன் கூடிய புதிய வீடு வாடகைக்கு உண்டு. ஒவ்வொரு தளத்திலும் நான்கு அறைகள், ஒரு சமையல் அறை இரண்டு குளியலறைகள் என்பன உண்டு. மாணவர்களுக்கும் , உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கும் தனிஅறைகளாகவும் நாள், கிழமை, மாத அடிப்படையில் பிரித்துக் கொடுக்கப்படும்.

(J 2022)
(14,17,18)

தொடர்பு : 077 666 4674

### LINK

என்ஜினியரிங் பிறைவேற் லிமிட்டெட்
கிளிநொச்சி
(அறிவியல்நகர், பல்கலைக்கழக வளாகம்,கிளிநொச்சி)

எமது நிறுவனத்துக்கு கட்டட நிர்மாண வேலைக்கான அலுவலர்களும் வேலையாள்களும் தேவை.

*** உத்தியோகத்தர்கள்:**

1. MEP என்ஜினியர்
2. MEP தொழில்நுட்ப உத்தியோகத்தர்
3. Finishing Work தொழில்நுட்ப உத்தியோகத்தர்.

***வேலையாள்களும் ஒப்பந்தகாரர்களும்**

1. மேசன்
2. தச்சுவேலை
3. குழாய் வேலை
4. மின் இணைப்பு
5. பொதுவேலை
6. கம்பி வேலை
7. வர்ணப்பூச்சு
8. அலுமினியம் பொருத்து வேலை
9. பூச்சுவேலை
10. மாபிள் வேலை

தொடர்புகளுக்கு:
"LINK" என்ஜினியரிங்
அறிவியல்நகர், பல்கலைக்கழக வளாகம்,
கிளிநொச்சி.
076 823 1440, 076 826 4711

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# மண்டைதீவு கடலில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 12
மண்டைதீவுக் கடலில் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டவர்களின் 30ஆவது ஆண்டு நினைவு நேற்றுமுன்தினம் குருநகர் பகுதியில் அமைந்துள்ள நினைவுத் தூபிக்கு முன்பாக நடத்தப்பட்டது.

1986ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11ஆம் திகதி மண்டைதீவுக் கடற் பகுதியில் தொழிலுக்குச் சென்ற சமயம் கடற்படையினரால் 31 பேர் படுகொலை செய்யப்பட்டனர். உயிரிழந்தவர்களின் உறவினர்கள் தூபிக்கு முன்பாகத் தீபமேற்றி அஞ்சலி செலுத்தினர்.

அத்துடன் காலையில் புனித யாகப்பர் ஆலயத்திலும் விசேட வழிபாடு நடத்தினர். (ற-வ-101)


## மரண அறிவித்தல்

### சிறிஸ்கந்தராசா இலங்கேஸ்வரன்



இல.15/18, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 3ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சிறிஸ்கந்தராசா இலங்கேஸ்வரன் 10.06.2016 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிறிஸ்கந்தராசா-வேதநாயகி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கிருஷ்ணானந்தன் - விஜயலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் மகாலட்சுமியின் அன்புக் கணவரும் அருணேஸ், ஏமோஸ் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற இலங்கேஸ்வரி, சக்தி, அனுஷியா, கிருஷ்ணா, ஜெயந்தராஜ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சர்வணபவன்(இத்தாலி), சதீஸ்குமார் (கொழும்பு), திருச்செல்வம்(திரு ஸ்ரூடியோ), மேரி றஞ்சி, ஜெயலக்சுமி, சிவலக்சுமி, நாகேந்திரன் (நிதர்ஷன் கூல்பார், அமேஜ் ரெஸ்டோரன்ஸ்), விஜயநாதன் ஆகியோரின் மைத்துனரும் சரண், சரணா, றோய், ஜென்ஸி ஆகியோரின் மாமனாரும் துஷாந்தன், நிதர்ஷன், அக்ஷனா, டிலக்ஷன், டினோஜன், டிஷான், ஒகஸ்ரீனா ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (12.06.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது பருத்தித்துறை இல்லத்தில் நடைபெற்று கோரியடி பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3 ஆம்குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.
(68232) (12.18)
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தெய்வநாயகி வேலாயுதம்



பிறப்பு 06.05.1939 இறப்பு 10.06.2016

யாழ் அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பு, அளவெட்டியை வசிப்பிடங்களாகவும் கொண்ட திருமதி தெய்வநாயகி வேலாயுதம் கடந்த (10.05.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வடலியடைப்பைச் சேர்ந்த முன்னாள் கட்டட ஒப்பந்தகாரர் வேலாயுதத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு- ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வடலியடைப்பு வைத்தியர் இராசநாயகம் - இரத்தினம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான உத்தமிப்பிள்ளை, அன்னம், சேனாதிராஜா, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற திலாகரன், பகீதரன்(U.K.) யெனார்தன்(தாதிய உத்தியோகத்தர் ஆ.வை தெல்லிப்பழை) நாவலன் (U.K) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிஷாந்தினி (U.K.).வசந்தகுமாரி (ஆசிரியை- மாரீசன் கூடல் றோ.க.த.க.பா)ஆகியோரின் அன்பு மாமியாரும் அஸ்மிதா, கவின், கரிஷன், தரணிகா, அஸ்விகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கனகம், செல்லம்,காலஞ்சென்ற அன்னம், காலஞ்சென்ற ஜெகநாதன், மகேஸ்வரி, சறோஜினி தேவி, விக்னேஸ்வரன், விக்னேஸ்வரி, காசிநாதர், நடராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
வேலாயுதம்- 021 790 0358
பகீதரன் -0094776064814
யெனார்தன்- 077 610 9143
நாவலன் -0094765413304

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் சுந்தரலிங்கம்

தோற்றம் 11 . 09 . 1953



மறைவு 31 . 05 . 2016

யாழ். கொக்குவில் பிரம்படியைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சுந்தரலிங்கம் 31.05.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அருளம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - சிவஞானம் தம்பதிகளின் மருமகனும் வதனா அவர்களின் அன்புக் கணவரும் சுவிட்டாகுல்டி(லண்டன்), ரதிஸ்லிங்கம்(லண்டன்), அனிதாலிங்கம்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் ராசலிங்கம்(இலங்கை), புஸ்பராணி(ரதி - இலங்கை), யோகலிங்கம்(சுவிஸ்) காலஞ்சென்ற பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் குல்டியின்(லண்டன்)அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சிவயோகத்தின் அன்பு மைத்துனரும் முனீஸ், சன்ஜய், தனுஷ், டிலன், மிஹிர் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 15.06.2016 புதன்கிழமை பிற்பகல் 1.45 மணியளவில் லண்டனில் நடைபெற்று பூதவுடல் ஹிதேர்கிரின் மயானத்தில்(லண்டன்) தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
புஸ்பராணி(ரதி)
சகோதரி(இலங்கை)

(J 2080),(14,17)

## மரண அறிவித்தல்

### நடராசா தவமனோகரன்

(Radio Wireless Operator இலங்கை வானொலி மாலுமி, 3rd Engineer, Non Formal Education, UNHCR Vavuniya, Diesel Engine Teacher, Member of Jury)



தோற்றம் 15.11.1954 மறைவு 05.06.2016

பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா தவமனோகரன் 05.06.2016 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஜெகதீஸ்வரியின் (புஸ்பா) ஆசைக் கணவரும்,காலஞ்சென்றவர்களான நடராசா - சறோஜினிதேவி தம்பதிகளின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆதிநாராயணசாமி - பங்கயற்செல்வம் (பட்டம்மா) தம்பதிகளின் அன்பு மருமகனும்,மனோரஞ்சிதமலர்,ஜெயந்தி, நந்தினி, வதனி ஆகியோரின் அருமைச் சகோதரரும், கதிரவேற்பிள்ளை, சக்திவேல், மயில்வாகனம், தெய்வேந்திரன் (குட்டி), நாகேஸ்வரி அம்மா, ஜெயச்சந்திரன் (கலிங்), தங்கேஸ்வரி அம்மா, ராஜேஸ்வரி, மங்களேஸ்வரி, சுந்தரேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பத்மநாதன், காலஞ்சென்ற பழனிவேல், இராமச்சந்திரன், சேதுலிங்கம், கவிஞன் ஆகியோரின் அன்புச் சகலனும், கனகேந்திரராணியின் உடன்பிறவாச் சகோதரனும்,செல்வக்குமார், கலைவாணி, காண்டீபன், சர்மிளா, செந்தூரன், ரகுபரன், நிவாசர்,துசாரா, மனோஜா, துஸ்யந்தன், தனந்தன், வத்சலா, இந்துஜா, நிரூபன், சியாமினி, மிதுலா, தர்சினி, பிரகாஸ்,யோகசிறீதரன் ஆகியோரின் மாமனும், கண்ணன், கீதன், கவிதா, சுதன், தனுஜா, பாலராயன்,நகுலன், ரஞ்சித், மது, சுதா, சகி, விஜயகுமார், புருசோத்தமன் ஆகியோரின் சித்தப்பாவும், மனோதீபன் (விஜி),தர்சிகா, சஞ்சீவன், கோகிலன், அனோஜன், அனோதா, அனோசுஜன்,விக்ரோரியா, வினோலியா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு Funeral Hall, Tooting & Mittchan Foorball club, Imperial fields Morden Surrey SM46BF இல் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணிக்கு Lambeth Cemetery (No 12), Blackshaw Road, Tooing, London, Sw 17 OBY இற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: குடும்பத்தினர்.

புஸ்பா (மனைவி -லண்டன் - 074 4577 6530), மனோறஞ்சிதமலர் (சகோதரி - இந்தியா - 009 1805 624600), ஜெயந்தி(இந்தியா - 009 1442 4860 264), நந்தினி (லண்டன் - 078 2830 9791 ), வதனி (லண்டன் - 077 210 8447), கண்ணன் (பெறாமகன் - 074 0197 9787), விஜி (075 7446 7747)

மங்களேஸ்வரி சேதுலிங்கம் (ரத்தினா - மைத்துனி-இலங்கை)
பிரதி அதிபர் - யா/வேலாயுதம் மகா வித்தியாலயம், பருத்தித்துறை.
077 413 8637, 021 226 0283

(C/21870) (11,17,18)

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பவதி பத்மநாதன்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, கொட்டாஞ் சேனையை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி புஸ்பவதி பத்மநாதன் 07.06.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கனகலிங்கம்- பவளம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி -மனோன்மணி தம்பதியரின் பாசமிகு மருமகளும் பத்மநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் செல்வராசா, துரை ராசா(கனடா), தவராசா (ஜேர்மனி), திலகவதி, புனிதவதி, பகவதி (கனடா), உமா ஆகியோரின் அன்புச் சகோதரியும் அரவிந்தன் (கனடா), ஆதவன் (மஸ்கன்ஸ் Ltd) ஆகியோரின் அன்புத் தாயாரும் லாவன்யா (கனடா), ரஞ்சினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அவினாஷின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2016) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் C.C.T.M.S வீதி, கொக்குவில் மேற்கு எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

C.C.T.M பாடசாலை வீதி,
கொக்குவில் மேற்கு.
(j/2026) (12.17.18)
தகவல்: மகன்

077 923 8998


Baby Cheramy
50 years of pure love
அன்புக்கு பரிசுகள்
ஏராராராளம்
தினமும்
தங்கச் சங்கிலி
மாபெரும் பணப்பரிசு
1 மில்லியன்
Certificate of
FIXED DEPOSIT
மாதாந்தம்
ரூ.500,000
பெறுமதியான
நிலையான வைப்பு
வாராந்தம்
ரூ.100,000
பெறுமதியான
புலமைப்பரிசில்
அம்மாவுக்கு குழந்தை மீதான கனவுகள்
ஏராராளம்
அக்கனவுகளை நனவாக்க இப்போது பேபி ஷெரமி வழங்கும்
'அன்புக்கு பரிசுகள் ஏராராளம்'
எந்தவொரு பேபி ஷெரமி சவர்க்கார உறையுடனும்,
உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கத்தை எழுதி
கீழுள்ள முகவரிக்கு அனுப்புங்கள்.
பேபி ஷெரமி அன்புக்கு பரிசுகள் ஏராராராளம்,
த.பெ.இல. 255, கொழும்பு.
மேம்படுத்தல் நடவடிக்கை காலம் ஜூன் 7 - ஆகஸ்ட் 6 வரை. உடனடி அழைப்பு - 0779 859 859

# வடக்குப் பிரச்சினைகளை தீர்க்க அரசு முன்னிற்கும்

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 12

அதிகாரப் பகிர்வு உட்பட வடக்கின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசு முன்னின்று செயற்படும். இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல நேற்றுமுன்தினம் சபையில் தெரிவித்தார்.



வடக்கு - கிழக்கில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடம் அமைக்கப்படவுள்ளது. ஆராய்ச்சி நிறுவனம் விஸ்தரிக்கப்படவுள்ளது. அவற்றுக்கான நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. வடக்கின் ஆயிரத்து 500 கிலோ மீற்றர் வீதி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் வடக்கின் வீதி அபிவிருத்திகள் புறக்கணிக்கப்பட்டிருந்த நிலையில் இன்று வீதி அபிவிருத்திகளை நாங்கள் முன்னெடுக்கின்றோம். போர் காரணமாக வடபகுதி மக்கள் பெரிய நெருக்கடிகளைச் சந்தித்தனர். எனவே, அந்த மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கலை வழங்கி, சமூக தேவைகளை நிறைவேற்றி, அடிப்படை வசதிகளை வழங்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கின்றது. அதேபோல, கிழக்கிலும் பல்கலைக்கழக அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி உட் பட அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகின்றது.- என்று அமைச்சர் அதன்போது குறிப்பிட்டார்.

(ந-ஜ-5)

# குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சலாவவில் தீவிர விசாரணை

கொழும்பு, ஜூன் 12

சலாவ இராணுவ முகாமின் ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட விபத்துத் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

சலாவ இராணுவ முகாமில் சம்பவ நேரம் இருந்த இராணுவத்தினரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வாக்குமூலங்களைப் பெற்று வருகின்றனர். சலாவ இராணுவ முகாமில் இருந்த 30 இராணுவத்தினரிடம் வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ள அதேவேளை, முகாமுக்கு அருகில் இருந்த மக்களிடம் இருந்தும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வாக்கு மூலங்களைப் பதிவு செய்துள்ளனர்.

ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட விபத்துக் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்புக் குழு தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்கள அதிகாரிகளும், அங்கு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ந-ஜ-5)









BAJAJ RE THREE WHEELER

# இன்றைய காலக்கட்டத்தில் சிறந்த முதலீடு

கையில் பணம் கொஞ்சம் கிடைத்தவுடன் அதனை வளமான ஒன்றில் முதலீடு செய்வதாகும்... எவ்வளவுதான் முதலீடுகளில் முதலீடு செய்தாலும் பலன் இல்லை அவை எங்களுக்கு சிறந்த பெறுபேறுகளை தராவிட்டால்...

இரு தடவை யோசிக்காமல் உங்கள் கையில் உள்ள பணத்தினை
பஜாஜ் முச்சக்கரவண்டி ஒன்றிற்கு முதலீடு செய்யுங்கள்...





விலை ரூபா 638,500 /= இவ்விலை முன்னறிவித்தலின்றி மாறுபடலாம். நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்

75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02 | 0114 700 600 | info@dpmco.com | www.dpmco.com



hp




## பல்கலைக்கழக மாணவர்களுக்கு
## சிறந்த மடிக்கணனிகள் - அபான்ஸிடமிருந்து

**பல்கலைக்கழக மாணவர்களுக்கான மடிக்கணனி கொடுப்பனவு**

புதிய அரசின் வரவு செலவுத் திட்டத்துக்கு ஏற்ப உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயற்பாடுகளுக்கு அபான்ஸின் பங்களிப்பு.

- ☑ அபான்ஸ் ஆனது கணனி விற்பனை துறையில் நாட்டிலேயே முதன்மை வகிக்கிறது
- ☑ நாடளாவிய ரீதியில் 400 க்கும் மேற்பட்ட காட்சியறைகள்
- ☑ சிறந்த சேவை, அசல் உதிரிபாகங்கள்
- ☑ நாடளாவிய ரீதியில் விற்பனைக்கு பிறகான சேவை மையங்கள்
- ☑ நாட்டிலேயே மிக சிறந்த விலை
- ☑ உத்தரவாதமிக்க சிறந்த அம்சங்கள்



**HP 15 AC i5 WIN**
- i5-6200 6th Generation
- 4GB RAM
- 1TB Hard Disk
- 15.6" Display
- Windows 10

3 Year Warranty
Virus Guard

ரூ.74,500
மாதாந்தம் 2,070 ரூபாவிலிருந்து



**HP 15 i3 WIN**
- i3-5005 5th Generation
- 4GB RAM
- 1TB Hard Disk
- 15.6" Display
- Windows 10

3 Year Warranty
Virus Guard

ரூ.65,900
மாதாந்தம் 1,831 ரூபாவிலிருந்து

## பெறுமதியான பரிசுகள் இலவசம்




HP
இங்க் ஜெட் பிரிண்டர்
+
Upgradable to
8GB RAM

OR




HP
ஓல் இன் வன்
இங்க் ஜெட்
பிரிண்டர்

* நிபந்தனைகள் உண்டு

0718128888 | 0719 822335 | 0719 822293 | 0719 822550
(உங்கள் மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்)
skype AbansLaptops | AbansLaptops

நாடுபூராகவும் அபான்ஸ் எலைட் மற்றும் அபான்ஸ் காட்சியறைகளில் பெறலாம்.

Abans

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முல்லைத்தீவை தமிழரிடமிருந்து பறிக்கும் போக்கு பச்சையாகத் தெரிகிறதே...!

முல்லைத்தீவு மாவட்டத்தை, ஏதோ ஒரு வகையில் தமிழர் பிராந்தியம் அல்ல, என்ற நிலைக்கு மாற்றிவிட வேண்டும் என்பதில் நல்லாட்சி அரசு, தந்திரமாக உள்ளூர்ந்து செயற்படுகிறது. இது குறித்து இந்தப் பத்தியில் முன்னர் பல தடவைகள் தொட்டுக்காட்டி இருந்தோம்.

அவற்றுக்கெல்லாம் மகுடம் சூட்டுவது போன்று, இனக்கலவரம் தூண்டிவிடப்பட்ட 1958 ஆம் ஆண்டுக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னரே, அதாவது 1956 ஆம் ஆண்டு தொடக்கம்--

முல்லைத்தீவில் சிங்கள மீனவர்களே அதிக அளவில், பாடு தொழிலை மேற்கொண்டதாகவும், தமிழ் மீனவர்கள் அவர்களிடம் கூலித் தொழிலாளர்களாகவே இருந்தனர் என்றும் இராணுவ அதிகாரி ஒருவர் அடாத்தான கருத்து ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்!

வடக்கு மாகாணத்தின் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு, கொழும்பில் மீன்பிடி அமைச்சின் செயலாளரின் தலைமையில் நேற்றுமுன்தினம், பத்தாம் திகதி மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

அங்கு வைத்தே, மேற்போந்த கருத்தை குறித்த இராணுவ அதிகாரி வெளியிட்டிருக்கிறார். அதனைத் தமிழ் மீனவர் பிரதிநிதிகள் மறுத்துரைத்தனர். திட்டமிட்ட வகையில், தமிழ் மீனவர்களின்-தமிழ் மக்களின்-வழி வழிவந்த உரிமைகளை, தட்டிப் பறிக்கும் அராஜகம் மேலெழும் போக்கு, உள்ளங்கை நெல்லிக்கனியாகப் புலப்படுகிறது!

இராணுவ அதிகாரியின் கருத்தை ஏற்க மறுத்த, தமிழ் மீனவர் சங்கப் பிரதிநிதி, தமிழ் மக்களின் தரவுகள் முழு அளவில் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளதாகக் குற்றஞ் சாட்டியதோடு--

தமிழர்களின் முப்பாட்டன் காலத்தில் இருந்தே, தமது சந்ததியினர் தொடர்ந்து முல்லைத்தீவில் கடற்றொழில் புரிவதைத் தொட்டுக் காட்டித் தெளிவுபடுத்தினார் என்பது இங்கு விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டியதே.

1955 ஆம் ஆண்டு தொடக்கம், வடக்கில் 'பாடு' தொழில் நடைபெற்று வருகின்ற போதிலும், அவை முதன் முதலாக 1983 ஆம் ஆண்டிலேயே பதிவு செய்யப்பட்டன என்றும்--

ஆனால், அதே ஆண்டில் உயிர் அச்சம் காரணமாக தமிழ் மீனவர்கள் வெளியேறியதால், குறித்த பதிவு முயற்சி கைகூடவில்லை என்றும் சுட்டிக் காட்டினார் அதிகாரி ஒருவர்.

அத்தோடு, காணிப் பதிவுகளை மேற்கொள்வதற்கு, கொழும்பு செல்ல வேண்டியிருந்த நிலையில், தொடர்ந்து அங்கு தங்கித் தொழில் புரிந்த தமிழ் மீனவர்களின் பதிவு ஆவணங்களுக்கு என்ன நடந்தது என்ற நிலைகூடத் தெரியவில்லை என்றும் அவர் கைவிரித்தார்!

கூட்டிக் கழித்து, பெருக்கிப் பிரித்துப் பார்த்தால், முல்லைத்தீவு மாவட்டம், தமிழ் மக்கள் வசம் இருந்து தட்டிப் பறிக்கப்படும் போக்கே, முழுதார மிஞ்சுமோ என்ற உள்ளார்ந்த அச்சம் மேலெழுகிறது.

அவர்களின் அச்சத்தை நீக்கும் வல்லமை, துணிச்சல் நல்லாட்சி அரசிடம், இருந்து உணர்வு பூர்வமாகவும், நியாய பூர்வமாகவும் வெளிப்படுமா?

அது காலம் தாழ்த்தி, ஆறி அமர்ந்து வெளிப்படும் என்று நம்பிக் காத்திருக்க இயலாதே! ஏனெனில் இது அப்பாவித் தமிழ் மீனவர்களது அன்றாட வாழ்வாதாரத்துடன் தொடர்புபட்ட முக்கிய பிரச்சினை ஒன்றல்லவா?

ஆறிய கஞ்சி பழங்கஞ்சி எனத் தமிழில் முதுமொழியொன்று வழக்கில் உள்ளது.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களது இந்த வாழ்க்கைப் பிரச்சினைக்கான நியாயமான, அதேசமயம் துரிதமான, தீர்வொன்று காணப்பட வேண்டியது மிக மிக வேண்டற்பால தொன்றே.



சுப்பிரமணியம் நிசாந்தன்

அரசியல்கைதிகள் விடயத்தில் இலங்கை அரசு விசுவாசமாகச் செயற்படவில்லையென வலியுறுத்தியுள்ளோம். கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் அதனை இழுத்தடிக்கின்றனர். அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால், அரசு, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியேயாக வேண்டும் என்று வலியுறுத்துகிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். உதயன் பத்திரிகைக்காக அவருடன் பேசினோம்.....

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் கொண்டுவரப்பட்ட இலங்கை குறித்த தீர்மானம் இலங்கை அரசின் இணை அனுசரணையில் நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானத்தை அரசு நிறைவேற்றும் என்ற நம்பிக்கை உள்ளதா?

இலங்கை அரசே அந்தத் தீர்மானத்தை முதலில் முன்மொழிந்திருந்தது. இதன் போது பல பேரங்கள் பேசப்பட்டன. இதில் கூறப்பட்ட அனைத்து விடயங்களையும் முற்று முழுதாக நிறைவேற்றக்கூடிய கடப்பாடு இலங்கை அரசுக்கே உள்ளது.

எங்களைப் பொறுத்தமட்டில், தீர்மானத்தை நிறைவேற்றுவதில் அரசு நீண்ட காலதாமதம் செய்கின்றது. குறிப்பிட்ட சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சில விடயங்கள் செய்யப்பட் டுக்கொண்டிருக்கின்றன. ஆனால் சில விடயங்களை அரசு தொட்டுக்கூடப் பார்க்கவில்லை.

இது குறித்து கடந்த நவம்பர் மாதம் முதல் கூட்டமைப்பு, நாடாளுமன்றில் வலியுறுத்தி வருகின்றது. எதிர்வரும் 29ஆம் திகதி இலங்கை தொடர்பிலான வாய்மூல அறிக்கையை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சமர்ப்பிக்கவுள்ளார். அதற்கு முன்னர் அவரோடு கூட்டமைப்பு நடத்தவுள்ள சந்திப்பில் இந்த விடயங்களை ஆணித்தரமாக வலியுறுத்துவோம். தீர்மானத்தை இலங்கை அரசு நிறைவேற்றுமா? இல்லையா? என்று ஆரூடம் கூற முடியாது. ஆனால், கட்டாயம் நிறைவேற்றியே ஆகவேண்டும். இதுதான் எங்களின் நிலைப்பாடு.

கலப்பு நீதிமன்றம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன?

தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கிய வகையில் கலப்பு நீதிமன்றத்தை நிறுவுவதும் அரசின் பொறுப்பாகும். கட்டாயம் அதனை நிறுவ வேண்டும். நாங்கள் இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர்எனப்பலதரப்பினரிடமும் வலியுறுத்தியுள்ளோம். நாடாளுமன்றத்திலும் சுட்டிக்காட்டி யுள்ளோம்.

கடந்த பெப்ரவரி மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் இலங்கைக்கு வந்திருந்தார். அப்போது இலங்கையின் உள்நாட்டு நீதி பெருமளவு சீர்குலைந்துள்ளதாகக் கூறியிருந்தார். எனவே கலப்பு நீதிமன்றப் பொறிமுறைய அரசு நிறுவுவது கட்டாயம் என்பது எல்லோராலும் ஏற்கப்பட்டது. ஆனால், ஐ.நா. தீர்மானம் தொடர்பில் ஜனாதிபதியும், பிரதமரும் மாறுபட்ட கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர். எனவே, இதன் உண்மைத் தன்மை என்ன?

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் மாறுபட்ட கருத்துகளைத் தெரிவிக்கலாம். அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டியதில்லை.

அவர்கள் சந்தர்ப்பத்திற்கும், அரசியலுக்கும் ஏற்றவாறு மாறி மாறி கருத்துக் கூறுகின்ற னர். அவர்கள் எதனைக் கூறினாலும் ஐ.நாவுக்குக் கொடுத்த வாக்குறுதியை அரசு நிறைவேற்றியே ஆகவேண்டும்.

அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் பப்பலோ டி கிரிப், நல்லிணக்க விடயத்தில் மாத்திரம் கவனம் செலுத்தினார் என்று கூறப்படு கிறது. உண்மையில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கையில் நடைமுறைப் படுத்த ஐ.நா. அழுத்தம் கொடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டும் இருக்கிறதே?

ஐ.நா. இந்த விடயத்தில் அழுத்தம் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. இலங்கை அரசுதான் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியது. ஐ.நாவின் பொறிமுறை இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றவில்லை. இது நாடுகளின் தீர்மானம். எனவே தீர்மானத்தை நிறைவேற்றும் பொறுப்பு அரசுக்கே இருக்கிறது.

> இலகுவாகச் செய்யப்படக் கூடிய பல விடயங்கள்கூட இன்னமும் செய்யப்படவில்லை. தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதில் இலங்கை அரசு காட்டும் வேகம் போதுமானதாக இல்லை. எமது மக்களின் எதிர் பார்ப் புக்கு மாறாகக் காலம் வீணடிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 29ஆம் திகதி இலங்கை தொடர்பிலான வாய்மூல அறிக்கையை மனித உரிமைகள் ஆணையாளர் வெளிப்படுத்துவார். இதற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆணையாளரைச் சந்திக்கவுள்ளதாக நீங்கள் கூறினீர்கள். அவரிடம் எதை வலியுறுத்தப் போகிறீர்கள்?

இலகுவாகச் செய்யப்படக் கூடிய பல விடயங்கள்கூட இன்னமும் செய்யப்படவில்லை. தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதில் இலங்கை அரசு காட்டும் வேகம் போதுமானதாக இல்லை. எமது மக்களின் எதிர்பார்ப்புக்கு மாறாகக் காலம் வீணடிக்கப்படுகின்றது என்கிற கருத்துகளை நாங்கள் தெரிவிக்க உள்ளோம்.

# அரசியல் கைதிகள் விடுவிப்பில் அரசு விசுவாசமாக இல்லை

## நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குற்றச்சாட்டு

**ஆறு மாதங்களில் தமிழ் மக்களின் காணிகள் மீள ஒப்படைக்கப்பட்டு முகாம்களில் வாழும் அனைவரும் மீள் குடியேற்றப்படுவார்கள் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த ஜனவரியில் கூறியிருந்தார். இந்த நிலையில், தமிழர்களின் காணிகளை மீள ஒப்படைப்பதில் இராணுவம் எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறதே?**

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் காலத்தில் காணிகளை ஆக்கிரமித்த இராணுவமே இன்னமும் உள்ளது. நாட்டில் ஜனாதிபதியும் ஆட்சியும்தான் மாறியுள்ளதே தவிர, இராணுவம் மாறவில்லை. அவர்களிடம் மன மாற்றமும் ஏற்படவில்லை. ஜனாதிபதி மாறியுள்ளதால் அதற்கு எதிர்மாறாக இராணுவம் செயற்படாது என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது. நாட்டின் அரசியல் கொள்கைகளை மாற்றியமைக்கும்போது இராணுவத்திற்கும் அரச தரப்புக்குமிடையில் கொள்கை முரண்பாடு ஏற்படுவது வழமைதான்.

நாங்கள் இது தொடர்பிலும் மனித உரிமைகள் ஆணையாளரிடம் கலந்துரையாடினோம். மாற்றங்கள் ஏற்படும் நாடுகளில் பாதுகாப்புத் தரப்புச் சீர்த்திருத்தம் என்பது மிகவும் கடினமான செயற்பாடு என்று அவர் கூறியிருந்தார். அதைத்தான் நாங்கள் தற்போது காணுகின்றோம். இராணுவத்தைப் பகைத்துக்கொண்டு அரசு ஒருபோதும் செயற்பட முடியாது. இதனை ஜனாதிபதி சரியான முறையில் கையாளவேண்டும்.

**வடமாகாணத்தில் இன்னமும் இராணுவத்தினரின் எண்ணிக்கை குறையவில்லை என்று வடமாகாண சபையின் முதலமைச்சர் அவ்வப்போது கூறி வருகின்றார். ஆனால், இந்த விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றத் தரப்பு பேசுவது குறைவாக உள்ளதே! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

அவ்வாறில்லை. இந்த விடயத்தை நாங்கள் வலியுறுத்திய வண்ணம்தான் உள்ளோம். முதலமைச்சர் இந்த விடயத்தை ஊடகங்கள் வாயிலாகத் தெரிவிக்கின்றார். நாங்கள் உரிய பல மட்டங்களிலும் எடுத்துச் சொல்லி தீர்வைக் காண முயற்சிக்கின்றோம்.

**வடக்கு, கிழக்கு இணைப்புத் தொடர்பில் தற்போதைய சூழலில் பேசுவதைக் குறைத்துக் கொள்ளுமாறு கூட்டமைப்புக்கு இந்திய அரசு அறிவுரைகூறியதாக அறியமுடிகிறது. இதன் உண்மைத் தன்மை என்ன? வடக்கு, கிழக்கு இணைப்புக்கு இந்திய அரசு ஆதரவு தெரிவிக் குமா?**

இந்திய அரசு எவ்வித அழுத்தத்தையும் கொடுக்கவில்லை. வடக்கு, கிழக்கு இணைப்புக்கு இந்தியா நிச்சயமாக ஆதரவளிக்கும். வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பில் எங்களிடம் உள்ள முதன்மை ஆவணமே இலங்கை - இந்திய ஒப்பந்தம்தான். அதில் இலங்கை அரசு இந்தியாவுடன்தான் இணைப்புக்கு இணங்கியுள்ளது. வடக்கு, கிழக்கு தமிழர்களின் சரித்திர பூர்வ இடம் என்பதன் அடிப்படையிலேயே 13ஆவது திருத்தச் சட்டம் கைச்சாத்திடப்பட்டது. எனவே, இந்தியா அதற்கு எதிரான நிலைப்பாட்டை ஒருபோதும் தெரிவித்ததில்லை.

> "நாட்டில் ஜனாதிபதியும் ஆட்சி யும்தான் மாறி யுள்ளதே தவிர, இராணுவம் மாற வில்லை. அவர் களிடம் மனமாற் றமும் ஏற்படவில்லை. ஜனாதிபதி மாறி யுள்ளதால் அதற்கு எதிர்மாறாக இராணு வம் செயற்படாது என் பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டி யுள்ளது."

**வடக்கு, கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் தரப்பிலிருந்து ஆதரவும் எதிர்ப்பும் உள்ளதே! வடக்கு, கிழக்கை இணைக்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும்போது எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் எத்தகையவை?**

வடக்கு, கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் தரப்பில் ஒரு நிலைப்பாடுதான் உள்ளது. வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் ஒன்றாக வாழ வேண்டும் என்றால் அதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டோம், ஆனால், வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டால் அது நிபந்தனைகளுடன் கூடிய இணைப்பாக இருக்க வேண்டும். 1980களில் இருந்து இதுவே, முஸ்லிம்களின் நிலைப்பாடாக உள்ளது.

**இலங்கையில் புதிய அரசமைப்புக்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கையை ஆளும் இரு தேசியக் கட்சிகளும் கூட்டாட்சிக் (சமஷ்டி) கோரிக்கைக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. இந்த நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் கூறிய 2016 ஆம் ஆண்டு தமிழர்களுக்குத் தீர்வு என்ற விடயம் சாத்தியமாகுமா?**

கட்டாயம் சாத்தியமாகும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் அறிக் கையில் ஒற்றையாட்சி என்ற சொற் பதம் பயன்படுத்தப்படவில்லை. அந்தச் சொல் தேர்தல் அறிக்கையின் முதல் இரு வரைபுகளிலும் இருந்தது. பின்னர் அது நீக்கப்பட்டது. அதற்குக் காரணம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவருடன் நடத்திய பேச்சுகள். ஒற்றையாட்சி என்ற நிலைப்பாட்டில் இருந்து விலகித்தான் அவர் தேர்தலில் போட்டியிட்டார்.

**கூட்டாட்சிக் கோரிக்கை சாத்தியமாகுமா?**

கூட்டாட்சி என்பது வெறுமனே ஒரு பெயர்ப் பலகை மட்டும்தான். ஒற்றையாட்சி என்ற பதத்தை வைத்துக்கொண்டே கூட்டாட்சியின் அம்சங்களையும் அதில் உள்ளடக்க முடியும். நாங்கள் எதிர்பார்ப்பது கூட்டாட்சி முறையிலான ஓர் அரசமைப்பையேயாகும். அதற்கான அழுத்தங்களைத்தான் கொடுத்து வருகின்றோம்.

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள ஜனநாயக தேசிய முன்னணியினர் கூட்டாட்சிக் கோரிக்கைக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். அத்துடன், இவர்களின் கருத்துகளைப் பெரும்பான்மையின ஊடகங்கள் வெளியிடுகின்றன. இது சிங்கள மக்கள் மத்தியில் மாறுபட்ட நிலைப்பாட்டை உருவாக்காதா?**

அதற்காகத்தான் இந்தக் குழுவே ஆரம்பிக்கப்பட்டது. இவர்களின் இலக்கு ஒரு குழப்ப நிலையைத் தோற்றுவிப்பதுதான். எமது மக்கள் கூட்டாட்சிக் கோரிக்கையை ஆதரிக்கும் சூழலில், மக்களின் ஏகோபித்த தீர்மானத்திற்கு எதிரான நிலைப்பாட்டை முன்னெடுப்பது பெரும்பான்மை அடிப்படைவாதிகளுக்கு ஆதரவாகச் செயற்பட எடுக்கப்பட்ட முயற்சியேயாகும். இதுவரை கூட்டாட்சி என்று கூறிய டக்ளஸும் அந்தக் குழுவில் இணைந்துகொண்டு கூட்டாட்சிக்கு எதிரான நிலைப்பாட்டைத் தெரிவித்து வருகின்றார். இவர்களின் கருத்தை மக்கள் கவனிக்கப் போவதில்லை. தேர்தல் காலத்திலேயே இவர்களைக் கண்டு கணக்கெடுத்துக் கொள்ளாத மக்கள், தற்போது மட்டும் கண்டுகொள்ளவா போகிறார்கள்.

**வடமாகாணசபைநிறைவேற்றிய தீர்வுத்திட்டம் தொடர்பில்?**

வடமாகாண சபையின் தீர்வுத்திட்டம் எங்களின் தேர்தல் அறிக்கையை ஒத்ததாகத்தான் உள்ளது. அப்படியான ஒரு தீர்வுத் திட்டத்தைப் பெற்றுக் கொள்ளத்தான் நாங்கள் அரசமைப்புச் சபையுடன் இணைந்து செயற்படுகின்றோம்.

**தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை சிங்கள மக்களுக்கு எடுத்துக்காட்ட கூட்டமைப்பு ஏதும் முயற்சிகளை எடுத்துள்ளதா?**

முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால், மொழி ஒரு பிரச்சினையாக உள்ளது. சில தரப்பிடம் இது தொடர்பில் நாங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டுள்ளோம். சிங்கள மக்களிடம் உண்மைகளை உணர்த்த வேண்டியது கட்டாயமாகும். அதற்கான முயற்சிகளைக் கூட்டமைப்பு கட்டாயம் முன்னெடுக்கும்.



(38 ஆம் பக்கம் பார்க்க)

# VTA




## மிகச்சிறந்த வழி
## மிகச்சிறந்த இடம்

தொழிற்திறனில் நிபுணத்துவம் பெற ...

**தொழிற்பயிற்சி கற்கை நெறிகளுக்கான பயிலுனர்களை இணைத்துக்கொள்ளல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது...**

## 2016 ஜூலை/டிசம்பர்

www.facebook.com/vtasl
www.vtasl.gov.lk

பாடநெறி ஆரம்பிக்கும் திகதி
2016 ஜூலை 04

## NVQ
கற்கைநெறி துறைகள்

**• மோட்டார் வாகன தொழில்நுட்பவியல் மற்றும் பராமரிப்பு**
01. மோட்டார் வாகன தொழில்நுட்பவியலாளர் - தேசிய சான்றிதழ்
02. இலகுரக வாகன சாரதிப்பயிற்சி
03. மோட்டார் சைக்கிள் திருத்துனர் - தேசிய சான்றிதழ்
04. முச்சக்கர வண்டி திருத்துனர் - தேசிய சான்றிதழ்

**• மின்னியல்,இலத்திரனியல்,தொலைத்தொடர்புகள்**
05. மின்னிணைப்பாளர் (தொழிற்சாலை) - தேசிய சான்றிதழ்
06. மின்னிணைப்பாளர் (வீட்டு) - தேசிய சான்றிதழ்
07. மின் மோட்டர் வைண்டர் - தேசிய சான்றிதழ்

**• தகவல் தொடர்பாடல் மற்றும் மல்டி மீடியா தொழில்நுட்பம்**
08. கணனி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் உடன் CISCO IT Essential + A+ - தேசிய சான்றிதழ்
09. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் - (NVQ Level 4 in ICT)
10. கணனி கிரபிக்ஸ் வடிவமைப்பாளர் - தேசிய சான்றிதழ்

**• ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறை**
11. சமையலாளர் - தேசிய சான்றிதழ்
12. அறை பராமரிப்பாளர் - தேசிய சான்றிதழ்
13. உணவு மற்றும் குடிபான சேவகர் / உபசாரகர் - தேசிய சான்றிதழ்

**• தனிநபர் மற்றும் சமூக அபிவிருத்தி**
14. அழகுக்கலை கைவினைஞர் - தேசிய சான்றிதழ்
15. சிகை அலங்கரிப்பாளர் - தேசிய சான்றிதழ்
16. முன்பள்ளி ஆசிரிய பயிற்சி நெறி - தேசிய சான்றிதழ்

**• உணவு தொழில்நுட்பவியல்**
17. வெதுப்பக உற்பத்தியாளர் - தேசிய சான்றிதழ்

**• மரம் தொடர்பான**
18. மரவேலை கைவினைஞர் (தளபாடம்) - தேசிய சான்றிதழ்

**• புடவை மற்றும் ஆடைகள்**
19. அதிவேக தையல் இயந்திர இயக்குனர் - தேசிய சான்றிதழ்
20. தையல் (பெண்கள் மற்றும் சிறுவர்கள்) - தேசிய சான்றிதழ்
21. நவீன ஆடை தயாரிப்பாளர்
22. தையல் (ஆண்கள்) - தேசிய சான்றிதழ்
23. ஆடைத்தயாரிப்பு தரக்கட்டுப்பாட்டாளர் - தேசிய சான்றிதழ்

**• உலோக மற்றும் மென் பொறியியல்**
24. இயந்திரவியலாளர் (CNC Milling) - தேசிய சான்றிதழ்
25. வெல்டர் - தேசிய சான்றிதழ்

**• கட்டடம் மற்றும் நிர்மாணம்**
26. அலுமினியம் பொருத்துனர் - தேசிய சான்றிதழ்
27. கட்டிட நிர்மாண கைவினைஞர் (மேசன்) - தேசிய சான்றிதழ்
28. கட்டிட நிர்மாண கைவினைஞர் (நீர்க்குழாய் பொருத்துதல்) - தேசிய சான்றிதழ்
29. உதவி கணிய அளவையாளர் (QS) - தேசிய சான்றிதழ்

**• குளிராக்கி மற்றும் வாயுசீராக்கி**
30. குளிரூட்டி மற்றும் வளி சீராக்கி திருத்துனர் - தேசிய சான்றிதழ்

**• கடற்றொழில் மற்றும் நீரியல்வளம்**
31. வெளியிணைப்பு படகு இயந்திர திருத்துனர் - தேசிய சான்றிதழ்

**• தோற் பொருள் மற்றும் காலணி உற்பத்தி**
32. தோற் பொருள் உற்பத்தியாளர் (பாதணி, பைகள்) - தேசிய சான்றிதழ்

**• அலுவலக முகாமைத்துவம்**
33. செயலாண்மை பயிற்சி நெறி

**தகவல்களை பெற்றுக்கொள்ள**

அம்பாறை - 0672251155 0710318729
மட்டக்களப்பு - 0652240159 0710318732
யாழ்ப்பாணம் - 0212227949 0710318737
நுவரெலியா - 0522223216 0710318745
புத்தளம் - 0322254110 0710318747
திருகோணமலை - 0262234517 0710318749
வவுனியா - 0242221617 0710318750
கிளிநொச்சி - 0212285686 0713641507
முல்லைத்தீவு - 021229009 0713956503
மன்னார் - 0710318750

தேசிய தொழிற் பயிற்சி நிலையங்கள்

நாராஹேன்பிட - 0112592233 0710318751
இரத்மலானை - 0112638850 0710318752

| மாவட்டம் | பாடநெறி இலக்கம் | மாவட்டம் | பாடநெறி இலக்கம் | தே.தொ.ப.நி | பாடநெறி இலக்கம் |
|---|---|---|---|---|---|
| அம்பாறை | 02.03,04,06,07,08,09.11,12,13,16.17,18,19. 20,23,25.26.27.28,29,33 | திருகோணமலை | 06,09,18,20,25,27,26;28 | நாராஹேன்பிட | 09 |
| மட்டக்களப்பு | 04,06,09,14,15,18,20,21,22,24,25,26,27,28. 30 | வவுனியா | 06.09,08,10,20.14,15,18,25,27,26.28.32 | இரத்மலானை | 30 |
| யாழ்ப்பாணம் | 03,04,06,08,09,10,11,12,13,14,15,17,18.20, 25.26,27,28 | கிளிநொச்சி | 04,06,08,09,14,15,16,18,20,25,26,27,28,29,31 | | |
| நுவரெலியா | 05,06,09,18,20,23 | முல்லைத்தீவு | 01,04,06,08,09,14,15,17,20,22,26,28 | | |
| புத்தளம் | 06.09.20.26 | மன்னார் | 04,06,17,18,,20 | | |

மேலதிக விபரங்களுக்கு
2016/06/03 திகதி அரச வர்த்தமானியினை பார்க்க..

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு

## இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை, இல.354/2 நிபுணதா பியச, எல்விட்டிகல மாவத்தை,நாராஹேன்பிட, கொழும்பு 05

சூரியகாந்தி

# “பெண்கள் என்றால் எதையாவது சாதிக்க வேண்டும்”



## யாழ்ப்பாணம் வந்த லேடி முகமது அலி சொல்கிறார்

சந்திப்பு எஸ். தர்ஸ்சன்

தலைமுடிகளை கட்டையாக வெட்டிக்கொண்டும் உடம்பில்ஆங்காங்கேபச்சையும் குத்திக் கொண்டும் சற்று வெள்ளையாக இருந்தாலும் பார்ப்பதற்கு குத்துச் சண்டை வீரர் மைக்கல் டைசன் போல இருக்கிறார் அந்த இளம் பெண். ஆனால், அவர் வெறும் காற்றில் கைகளால் விடும் குத்துக்களே அதிர்ச்சியில் உறைய வைக்கின்றன. அவருடைய கைகளும் கால்களும் உடலசைவுகளும் மிகவும் நுட்பத்துடன் நகர்கின்றன. அவரைப் பார்க்கின்றபோது பயிற்சியாளர்களுக்கும் மனத் துணிவு பிறந்து விடுகிறது. இந்தியாவில் இருந்து அவரை அழைத்து வந்திருக்கிறார்கள். பிரபலமான குத்துச்சண்டை வீராங்கனை இறுதிச் சுற்று திரைப்படத்தின் கதாநாயகி போன்ற உண்மையான நாயகி துளசி கெலின். வடபகுதியில் தமிழ்ப் பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் பாலியல் வன் கொடுமைகளில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கான தற்காப்புப் பயிற்சிகளை வழங்குவதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்தார். தீவிரமான பயிற்சிகளை முடித்துக்கொண்டதும் உதயன் பத்திரிகையிடம் உரையாடத் தொடங்கினார்.

“ஓ...! பேட்டியா! வாங்க எடுத்துக்கலாம்” என்று உற்சாகமாக ஆரம்பித்தார். “கேளுங்க சார்... என்ன சொல்லணும்” என்று அவரே அடியெடுத்தும் கொடுத்தார். பிறகென்ன....

"ஒரு நாய் குலைத்து கொண்டிருக்கின்றது என்றால் அதை பார்த்து நாம் பயந்து ஓடிக்கொண்டே இருந்தால் அந்த நாய்க்கு இன்னும் தைரியம் வந்து கொண்டுதான் இருக்கும். நாயை திருப்பி அடித்துப் பாருங்கள். இதை பண்ணாமல் பயந்து பயந்து போனால் அந்த நாய்க்கு நாங்களும் ஆதரவளிக் கிறோம் என்று அர்த்தம். ஒரு தடவை எதிர்த்து பார்த்தால்தான் நாம் யார் என்பது புரியும்.



**"குத்துச் சண்டையில் சாதிப்பதற்கும், சிறந்த சாதனையாளராக வருவதற்கும் உங்களை தீண்டிய காரணங்கள் எவை?"**

"எனது அக்காவை பார்த்து குத்துச்சண்டை கற்றுகொள்ளவேண்டும் என்று விரும்பினேன். உலக புகழ் பெற்ற குத்துச்சண்டை ஜாம்பவான் முகமது அலியினுடைய சண்டைகளைப் பார்த்து அவரைப் போன்று ஒரு சாதனையாளராக வரவேண்டும் என்று ஆசைப்பட்டேன். பயிற்சிகளைப் பெற்று இந்தியாவில் சாதனைகளைப் படைக்கும்போது என்னை எல்லோரும் லேடி முஹமது அலி என்றார்கள். இதுவே என்னை மேலும் வளரத் தூண்டியது. கடந்த 13 வருடங்களாக குத்து சண்டைத்துறையில் இருக்கிறேன். இப்போது 'பைக் ரேசிங்'கில் ஆர்வம் ஏற்பட்டுள்ளது. அதிலும் ஈடுபடுகிறேன். 'பைக் ரேசிங்' மூலம் தேசிய மட்டத்தில் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளேன்."

**"முதன் முதலாக யாழ்ப்பாணம் வந்திருக்கிறீர்கள். எப்படி இருக்கிறது?"**

"பெண்கள் என்றால் இவ்வாறுதான் இருக்க வேண்டும் என்று சொல்லி கொடுத்து வளர்த்தது போல் இருக்கிறார்கள் இங்குள்ள பெண் பிள்ளைகள். பெண்களின் இந்த நிலைக்கு அவர்களுடைய பெற்றோர்கள்தான் காரணமாக இருப்பார்கள் என்று நான் நம்புகின்றேன். அவர்களை பயமுறுத்தியே வளர்க்கின்றனர் பெற்றோர். உண்மையைச் சொல்லப்போனால் 6 மணிக்கு மேல் எந்தப் பெண்ணும் வெளியில் செல்லக்கூடாது என்று கூறியுள்ளார்கள் போலும். இப்படிப் பார்க்கப் போனால் சிறிலங்காவில் ஆண்கள் மட்டும்தான் வாழவேண்டும். பெண்கள் வாழவேகூடாது என்ற விதி வந்துவிடும் போல் உள்ளது. உண்மையாகவே இங்கு இதை நான் அவதானித்தேன். நான் 6 மணிக்குப் பின்னர் வெளியில் செல்லும்போது எல்லா இடங்களிலும் ஆண்கள்தான் உள்ளார்கள். பெண்கள் எங்கும் இல்லை. இதே சென்னையில் நடு இரவிலும் நான் சினிமாவுக்குப் போய் தனியாக வீடு சென்றுள்ளேன். ஆனால் இங்கு அப்படி ஒரு நிலை இல்லை என்பதை இங்குள்ள நிலமைகளைப் பார்க்கும்போது தெளிவாகத் தெரிகின்றது."



**"பெண்கள் என்றால் இவ்வாறுதான் இருக்க வேண்டும் என்று சொல்லி கொடுத்து வளர்த்தது போல் இருக்கிறார்கள் இங்குள்ள பெண் பிள்ளைகள். பெண்களின் இந்த நிலைக்கு அவர்களுடைய பெற்றோர்கள் தான் காரணமாக இருப்பார்கள் என்று நான் நம்புகின்றேன்.**

**"உங்களுடைய அனுபவத்தின் அடிப்படையில் பெண்கள் என்றால் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நினைக்கின்றீர்கள்?"**

"ஒரு நாய் குலைத்து கொண்டிருக்கின்றது என்றால் அதை பார்த்து நாம் பயந்து ஓடிக்கொண்டே இருந்தால் அந்த நாய்க்கு இன்னும் தைரியம் வந்து கொண்டுதான் இருக்கும். நாயை திருப்பி அடித்துப் பாருங்கள். இதை பண்ணாமல் பயந்து பயந்து போனால் அந்த நாய்க்கு நாங்களும் ஆதரவளிக் கிறோம் என்று அர்த்தம். ஒரு தடவை எதிர்த்து பார்த்தால்தான் நாம் யார் என்பது புரியும். எப்போதும் அடுத்தவர்களை நம்பியே செல்லக்கூடாது. நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அந்தத் தைரியத்தைவளர்த்துக்கொள்ளவேண்டும். இன்றுவரை என்னுடைய ஆதரவில் மட்டும்தான் நான் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். அடுத்தவர்களுடைய சொற்களைக் கேட்பேன். ஆனால் நான் தான் முடிவுகளை எடுப்பேன். யார் எதை சொன்னாலும் அவர்கள் கூறுவது நல்லதாக இருந்தாலும் சிந்தித்து நானே முடிவு எடுப்பேன்.

ஏன் என்றால் இது என்னுடைய வாழ்க்கை. இன்னொருத்தர் சொல்லி நான் வாழ்கின்றேன் என்றால் என்னுடைய வாழ்க்கையை நான் வாழவில்லை என்றுதான் அர்த்தம்.

"ஒரு ஆண் பார்த்தாலே அலறி அடித்து கொண்டு ஓடும் பெண்கள் உள்ளார்கள். அவர்கள் முதலில் தைரியமாக இருக்க வேண்டும். ஆண்களிடமோ, அல்லது வேறு தெரியாத எவரிடமோ பேசும் போதுகூட பலத்த குரலில் பேசவேண்டும். நாம் மெதுவாக பேசினோம் என்றால் அதை அவர்கள் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வார்கள். பெண்கள் என்றாலே பொதுவாக அவர்கள் படிக்க வேண்டும், திருமணம் முடிக்க வேண்டும், குழந்தைகள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், இதுதான் பெண்களுடைய வாழ்க்கை என்றும் சொல்லப்பட்டுள்ளது. எல்லோரும் இப்படியே எண்ணுகின்றனர். அப்படி அல்ல. பெண்கள் என்றால் கட்டாயமாகச் சாதிக்க வேண்டும். ஏதாவது ஒரு துறையில் அவர்கள் சாதித்தே காட்டவேண்டும்."

**"எப்படி வடக்கு பெண்களுக்கு இந்த தற்காப்புப் பயிற்சியை வழங்க முன்வந்தீர்கள்?"**

"மாணவி ஒருத்தி டெல்லியில் கூட்டுப் பாலியல் வன்புணர்வு உள்ளாக்கப்பட்ட சம்பவம் என்னை மிகவும் பாதித்தது. அந்த கதைகளை கேட்ட எனக்கு, அதன் பின்னர்தான் பெண்களுக்கு இவ்வாறான பயிற்சிகள் கற்றுகொடுக்கப்பட வேண்டும் என்று தோன்றியது.

அப்போதுதான் அவர்கள் அதிலிருந்து விடுபடுவார்கள் என எண்ணினேன். அதன்படி சென்னையில் உள்ள பெண்களுக்குப் பயிற்சிகள் வழங்கி வருகின்றேன். பெண்ணாகப் பிறந்துவிட்டோம் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற நினைப்புதான் எனக்கு சிறுவயதில் இருந்தே இருந்தது. ஆனால் இப்போது பெண்களுக்கு ஆங்காங்கே நடக்கும் துன்புறுத்தல்களைப் பார்க்கும்போது பெண்களின் சுய பாதுகாப்பையும் தன்னம்பிக்கையையும் வளர்த்து விடவேண்டும் என்று நினைக்கிறேன்.

சிந்தித்து, கராத்தே அல்லது குத்துச்சண்டை எதுவாக இருந்தாலும் ஏதாவது ஒன்றின் மூலம் பெண்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளக்கூடியவர்களாக இருப்பதற்கான பயிற்சிகளை வழங்கத் தீர்மானித்தேன்.

இந்தியாவைவிட இலங்கையில்தான் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர். பெண்களுக்கு இங்கு பாதுகாப்பு இல்லை. அவர்கள் தனியாகச் செல்லவே பயப்படுகின்றனர். மாணவர்கள் பாலியல் துன்புறுத்தல்களின் பின்னர் கொலை செய்யப்படும் செய்திகளை முகநூல் மற்றும் இணையத்தளங்கள் ஊடாக அறிந்தேன். அதனால் எனக்கு இங்கு வர வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. இருந்தாலும் அதற்கான வாய்ப்புக்கள் சரியாக அமையவில்லை. "வசந்தம் விசன் ட்ரஸ்ட்' நிறுவனத்தின் பணிப்பாளரிடம் இருந்து இதற்கான அழைப்புக் கிடைத்தது. மறுகணமே அதற்குச் சம்மதித்து இங்கு வந்தேன்."

**"இறுதிசுற்று திரைப் படத்தினுடைய கதை உங்களுடைய வாழ்வில் நடந்தது என்று கூறப்படுகின்றதே. அது பற்றிக் கூறமுடியுமா?"**

"ஆம்! நிச்சயமாக எனக்கு என்னுடைய அக்காவைப் பார்த்துத்தான் குத்துச் சண்டை பயில்வதில் ஆர்வம் வந்தது. அவரைப் பார்த்துதான் 'பொக்சர்' ஆனேன். தற்போது வெளியான இறுதி சுற்று படத்தினுடைய கதையின் பெரும்பகுதி எங்களுடைய வாழ்க்கையில் நடந்தவைதான். அது உண்மை. படத்தில் வரும் சில சில விடயங்கள் கற்பனையானவை, மற்றும்படி அனைத்தும் உண்மையாக நடந்தவைகளே. எனவே எங்களுடைய வாழ்க்கையில் நடந்த விடயமே அந்த படத்தினுடைய கதை" என்று சிரிக்கிறார்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# இறைவி

ஆண்களின் நிதானமின்மையாலும் பொருளற்ற ஆவேசத்தாலும் பாதிக்கப்படும் பெண்களின் கதைதான் இறைவி. எல்லா ஆண்களும் கட்டாயம் பார்க்க வேண்டிய படம். எப்படியாவது, ஏதாவது ஒரு வடிவத்திலாவது பார்ப்பவர்களின் குணாதிசயங்களைப் பாத்திரங்கள் கொண்டிருப்பதும் தம்மையறியாமலேயே அவை பெண்களைக் கொடுமைப் படுத்துவதை அவர்களுக்கு உணரவைப்பதும் இந்தப் படத்தின் மிகப் பெரும் பலம்.

அருள் (எஸ்.ஜே.சூர்யா) திரைப்பட இயக்குநர். தயாரிப்பாளருடன் ஏற்பட்ட மோதலால் இவரது படம் வெளியாகாமல் இருக்கிறது. இதனால் அவர் பெரும் குடிகாரராக மாறிவிடுகிறார். இவரது மனைவி யாழினி (கமலினி முகர்ஜி) துயரத்தில் மூழ்குகிறார். அருளின் தம்பி ஜெகன் (பாபி சிம்ஹா) அருளுக்கு உறுதுணையாக இருக்கிறார். இந்தக் குடும்பத்துக்கு நெருக்கமானவர் மைக்கேல் (விஜய் சேதுபதி. இவருக்கும் கணவனை இழந்த மலர்விழிக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. மலர்விழியை மைக்கேல் காதலிக்கிறார், திருமணம் செய்துகொள்ள ஆசைப் படுகிறார். ஆனால் மலர்விழிக்கு அவரைத் திருமணம் செய்துகொள்வதில் விரும்பம் இல்லை. திருமணத்துக்குப் பிறகான வாழ்க்கை குறித்த சினிமாத்தனமான கனவுகள் கொண்டவர் பொன்னி (அஞ்சலி). பொன்னிக்கும் மைக்கேலுக்கும் திருமணமாகிறது.

பட வெளியீடு தொடர்பான தகராறு உச்சத்தை எட்ட, பல குளறுபடிகளும் விபரீதங்களும் இந்தக் குடும்பங்களின் வாழ்வைக் கலைத்துப் போடுகின்றன. இவற்றின் முடிவு என்ன என்பதைச் சொல்கிறது இந்த நீண்ட படத்தின் கதை. பெண்களைப் பற்றிய கவலையோ, புரிதலோ அற்ற ஆண்களின் போக்கு பெண்களின் வாழ்வை எப்படியெல்லாம் சிதைக்கும் என்பதைப் படம் அழுத்தமாகக் காட்டுகிறது. விசுவாசத்தின் அதீத எல்லைக்குள் பிரவேசிக்கும் மைக்கேல், அதனால் பெற்ற பாதிப்பைப் பொருட்படுத்தாமல் மீண்டும் அதே எல்லைக்குள் பிரவேசிக்கிறான். மது அடிமையிலிருந்து விடுபடும் மையத்தில் சிகிச்சை பெற்றுத் திரும்பிய அருள் மீண்டும் தடாலடி முடிவை எடுக்கிறான். தன்னுடைய விருப்பத்தை மட்டுமே கணக்கில் எடுத்துக்கொண்டு செயற்படும் ஜகனின் செயற்பாடு. பிறரது வாழ்வுடன் சேர்த்து அவனையும் சிதைக்கிறது. மனைவி மீதான தொடர் அலட்சியம் அருளின் தந்தையின் மீதான பெரும் குற்ற உணர்வாய்க் கவிழ்கிறது. உணர்ச்சி சமநிலையோ, பொறுமையோ, நுண்உணர்வோ அற்ற ஆண்கள் திரும்பத் திரும்பச் சறுக்கிக்கொண்டே இருக்கிறார்கள் தலைமுறை தலைமுறையாக. இதனால் பெண்கள் பாதிக் கப்படுகிறார்கள். இதைத்தான் படம் பேசுகிறது.

வசனங்கள் கூர்மையாகவும் வலுவாகவும் உள்ளன. எனினும், பல்வேறு கதாபாத்திரங்களின் கதைகளை சுவாரஸ்யமாகத் திரைக்கதையில் இணைத்துத் தருவதில் இன்னும்கூட நேர்த்தி காட்டியிருக்கலாம். படத்தின் நீளமும் பொறுமையைச் சோதிக்கிறது. பாடல்கள் சந்தேகமேயில் லாமல் திணிக்கப்பட்டிருக்கின்றன. உணர்ச்சிகளுக்கு அளிக்கும் முக்கியத்துவம் சில இடங்களில் சமநிலை தவறுகிறது. ஆண், பெண் உறவு சார்ந்த சித்திரிப்புகளில் ஆழம் இல்லை. ஆண்கள் அனைவருமே நிதானமற்றவர்கள் என்பதுபோன்ற சித்திரிப்பு யதார்த்தத்துக்குப் புறம்பானது. ஆண்கள் இப்படித்தான், அவர்களை நாம்தான் திருத்தி எம்பக்கம் இழுத்து வைத்துக்கொள்ள வேண்டும் என்றே பெண்கள் நினைக்கிறார்கள் என்பது போன்று காட்ட முயன்றிருப்பதும் படத்தின் பலவீனம்.

கோவலன் கண்ணகி கதையாடலைச் சமகாலத்தில் பொருத்திக்காட்டும் முயற்சி முழுமை பெறவில்லை. சிலைத் திருட்டுக் காட்சிகள் படத்தின் ஆதார நோக்கத்தில் இருந்து கவனத்தை விலக்குகின்றன. இறுதிக் காட்சி உள்ளிட்ட பல காட்சிகளில் நாடகத் தன்மை தூக்கலாக உள்ளது. பாபி சிம்ஹாவின் பாத்திரப் படைப்பு பலவீனம்.

கணவன் இறந்த பின்னாலும் தனது பாலியல் தேவையை நியாயப்படுத்தும் மலர் கதாபாத்திரம் வலுவானது. ஆனால், அந்த நவீன பெண்ணை படத்தின் மையத்தோடு பொருத்திக் கருத்துச் சொல்வதிலும் இயக்குநர் சறுக்கியிருக்கிறார்.

எல்லா நடிகர்களும் தத்தமது கதாபாத்திரங்களை உணர்ந்து இயல்பாக நடித்திருப்பது படத்தின் மிகப் பெரிய பலம். எஸ்.ஜே.சூர்யா, விஜய் சேதுபதி, அஞ்சலி, கமலினி, பூஜா தேவாரியா, ராதா ரவி, பாபி சிம்ஹா, சீனுமோகன் ஆகியோரின் நடிப்பு அவர்களைக் கதாபாத்திரங்களாக மட்டும் காண வைக்கிறது. கிளைமாக்ஸில் உச்சக் கட்டத்தில் நடிப்பு அவரைத் தேர்ந்த நடிகராக அடையாளம் காட்டுகிறது. தன் பாத்திரத்தை உணர்ந்து ஆழமான நடிப்பைத் தந்துள்ளார் அஞ்சலி. மழைக் காட்சியில் தொடங்கி மழைக்காட் சியில் முடியும் படத்தில் சிவகுமார் விஜயனின் ஒளிப்பதிவில் ஒவ்வொரு காட்சிக்குமான ஒளியமைப்பு (லைட்டிங்) கதைக்குப் பெருந்துணை. சந்தோஷ் நாராயணின் இசையில் பாடல்கள் சுமார். பின்னணி இசை கதையோட்டத்தைத் தாங்கிப்பிடிக்கிறது. படத்தொகுப்பில் விவேக் ஹர்சன் கூடுதல் கவனம் செலுத்தியிருக்கலாம். மொத்தப் படமும் உபரிக் காட்சிகளுடன் மூச்சுமுட்ட வைக்கிறது. பெண்களின் வலியையும் பாடுகளையும் அழுத்தமாகச் சொல்ல முயன் றதற்காக கார்த்திக் சுப்புராஜைப் பாராட்டவேண்டும். மொத்தத்தில் இறைவி அருமையான தரிசனம். எல்லோருமே ஒரு தடவை பார்க்க வேண்டும்.

## ஈழக் கொடுமைய ஞாபகப்படுத்திய 'இறைவி' இயக்குநர் ராம் தெரிவிப்பு

'பீட்சா', 'ஜிகர்தண்டா' திரைப்படங்களை இயக்கிய கார்த்திக் சுப்புராஜின் மூன்றாவது படம் 'இறைவி'. அவருடைய 3 படங்களில் இதுதான் சிறந்த படம் என்று நான் நினைக்கிறேன். இந்தப் படத்தில் வரக்கூடிய ஆண்கள், ஒரு சராசரி ஆன ஆண்கள் பெண்களுக்கு விளைவிக்கக்கூடிய எந்த தீங்கையும் விளைவிக்காத ஆண்கள். இன்னும் சொல்லப் போனால், ரொம்ப நல்ல ஆண்கள் என்றுகூடச் சொல்லலாம். ஆனால், அவர்களேகூட எப்படியெல் லாம் பெண்களைச் சித்திரவதை செய்கிறார்கள் என்பதைப் சொல்கிற அருமையான படம் 'இறைவி' என்று தெரிவித்திருக்கிறார் 'கற்றது தமிழ்','தங்க மீன்' திரைப்படங்களின் இயக்குநர் ராம்.

படம் பற்றி அவர் தெரிவித்திருப்பதாவது:

நல்ல ஆண்களே, பெண்களை எப்படி சித்ரவதைக்கு உட்படுத்துகிறார்கள் என்பதை சொல்லக்கூடிய ஒரு படம். அதுவும், ஆணுடைய இயல்பான குணங்களாக பொறாமை, இச்சை, அடுத்தவருடைய பொருள் களைக் கவருக்கூடிய ஆசை, புகழுக்கும் வெற்றிக்குமான பேராசை, பொறுமையின்மை, முன்கோபம், பொறுப் பற்ற உணர்ச்சி, சுயநலம் என்பவற்றை இந்தப் படம் சித்திரிக்கிறது. இந்தக் குணநலன்களே, அவர்கள் மிகவும் நேசிக்கக்கூடிய பெண்களை எப்படிப்பட்ட இடத்துக்கு தள்ளுகிறது என்பதைச் சொல்லக்கூடிய ஒரு படம். இந்த வகையில் தமிழில் வந்த முதல் படம் இது என நினைக்கிறேன். சொல்ல வந்ததை நேரடியாக சொல்லாமல், இறுதிவரைக் கொண்டுபோனது இந்தக் கதையின் சாமர்த்தியம் என நான் நினைக் கிறேன். இதற்காகவும், ஆங்காங்கு தெறிக்கக் கூடிய வசனங்களுக்காகவும், சில இடங்களின் காட்சிய மைப்புக்காகவும் இது ஒரு நல்ல படம் என்று சொல்ல் வைத்தது எனச் சொல்லலாம்.

இந்த படத்தினுடைய நடிப்பு. இயக்குநர் எஸ்.ஜே. சூர்யாவின் நடிப்பு அதிர வைக்கக்கூடிய, படபடப்பான ஒரு நடிப்பு. அதற்கு நேர் எதிராக விஜய் சேதுபதியின் நடிப்பு. மிகவும் தன்மையாக நடித்திருந்தார். பாபி சிம்ஹா இந்தப் படத்தில் ஒரு முழுமையான நடிகராக மாறியிருக்கிறார் என நினைக்கிறேன். அஞ்சலி மிகக் கவித்துவமான, கனக்கச்சிதமான நடிப்பு. நிறைய நடிகர்களை வைத்துக் கொண்டு அவர்களுக்கான பாத்திரங்களுக்கு வலுச்சேர்ப்பது சவாலானது. அதில் கார்த்திக் சுப்புராஜ் வெற்றி பெற்றிருக்கிறார் என நினைக்கிறேன். இந்தப் படத்தில் இயக்குநர் எஸ்.ஜே. சூர்யா, இயக்குநராகவே நடித்திருக்கிறார். இந்தப் படத்துக்கு அவர் எடுத்திருக்கும் படத்தின் பெயர் 'மே 17'. அந்தப் படத்தை எப்படியாவது வெளிக்கொண்டு வந்துவிடவேண்டும் என்று அவர் படும் சிக்கல்கள்தான் இந்தப் படத்தின் திரைக்கதையாக இருக்கிறது.

'மே 17' ஈழத்தில் ஒன்றேகால் லட்சம் மக்கள் படுகொலை செய்யப்பட்ட அந்த இறுதிப் போரின் கடைசி நாள். அந்தப் போரின் மிக முக்கியமான நாள் என்றும் சொல்லலாம். தமிழ் சினிமாவில் அந்தப் போரை, இனப் படுகொலையை ஞாபகப்படுத்தக்கூடிய முதல் பதிவாக இது இந்தப் படத்தில் இடம்பெற்றிருக்கிறது. அந்த விதத்தில் மிகத்தைரியமான முயற்சி என நினைக்கிறேன். 'மே 17' என்று பார்த்தவுடன் அப்படத்தைத் தாண்டி ஈழத்தில் நடந்த விடயங்கள் ஞாபகத்துக்கு வந்தன - என்று தெரிவித்திருக்கிறார் இயக்குநர் ராம்.

## அருமையான தரிசனம்



# தண்டனை

## தவறுகளுக்குத் தீர்வாகுமா...?

க.துஷ்யந்தன்

வடபுலத்துக்கல்விச்சூழலில்மாணவர்களின் நெறிபிறழ்வு நடத்தைகள் அதிகரித்த வண்ணம் உள்ளன என்பது பலராலும் முன்வைக்கப்படும் வாதமாகும். போருக்குப் பின்னரான எமது வாழ்வியலில் பிறழ்வு நடவடிக்கைக்குரியதான ஏதுநிலைகள் பல காணப்படுகின்றன. அத்துடன் மாணவர்களை மட்டும் பிரச்சினைக்குரியவர்களாகக் குற்றம் சுமத்தி விட்டுத் தப்பிவிட முடியாது. பெரியவர்கள், படித்தவர்கள் எனப் பலதரப்பட்டோரின் செயற்பாடுகளும் மாற்றத்துக்குட்பட்டதாகவே காணப்படுகின்றன. இன்றைய மாணவரின் உலகம் பரந்து விரிந்து கிடக்கின்றது. அனைத்து விடயங்களையும் இலகுவாக அறிய முடிகிறது. சுதந்திர தகவல் பரிமாற்ற ஒழுங்கில் யாவுமே சாத்தியமாகின்றன. இன்றைய சமூக அமைப்பு, பழக்க வழக்கங்கள், விழுமியங்கள், தகவல்தொடர்பு சாதனங்கள் என்பவை மாணவர்களின் நடத்தையில் சவாலான விடயங்களை ஏற்படுத்துகின்றன.



இந்த நிலைமை பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், ஏனைய உயர் கல்வி நிறுவனங்கள் என அனைத்திலும் மாணவர்களிடையே மோசமான நடத்தை நிலைமைகளை உருவாக்கியுள்ளன. ஆசிரியர்களுக்கு எதிரான சுவரொட்டிகள், ஆர்ப்பாட்டங்கள், வகுப்புப் புறக்கணிப்பு, முகப்புத்தகத் தாக்குதல்கள் எனப் போராட்டங்கள் விரிவடைந்துள்ளன. ஆசிரியர்கள் மீது வெளிப்படையாகத் தாக்குதல்கள் மேற்கொள்ளும் அளவுக்கு வளர்ச்சியும் கண்டுள்ளன.

மறுபுறத்தே ஆசிரியர்களில் பலர் தொழிலில் திருப்தி அற்றவர்களாக உள்ளனர். இன்றைய அதிகரித்த கடமைகள், பொறுப்புக்களுக்கு அப்பால்மாணவர்களின் ஒழுங்கீனமான நடத்தைகளே இதற்குப் பிரதான காரணமாக விளங்குகின்றது. ஆசிரியர்கள் மாணவரின் நடத்தைத் தவறுகளை சீர்செய்யத் தவறுகின்றனர் எனப் பலமான குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. ஆசிரியர்கள் அச்சப்படும் சூழலே இதற்கு முக்கியமான காரணமாக உள்ளது. ஆசிரியர்களில் சிலர் தண்டனை வழங்குவதற்கான சட்ட ரீதியான உரிமை தேவை என்று கூறுகின்றனர். இதன் மூலம் முன்னைய கால மாணவ சமுதாயம் ஒன்றை உருவாக்க முடியும் என்பது இவர்களின் கருத்தாக உள்ளது. இன்றைய கல்வி முறையை இவர்கள் கடுமையாக விமர்சனம் செய்கின்றனர். உலக நாடுகளைப் பின்பற்றி உடல் ரீதியான தண்டனையை இலங்கையின் கல்வி அமைச்சும் தடை செய்துள்ளது. மனித உரிமைகள், சிறுவர் உரிமைகள், ஜனநாயகம் எனத் தொடரான பல சட்டதிட்டங்கள் பாடசாலைகளில் மாணவர்களின் ஆதிக்கத்தை நிலை நிறுத்தி ஆசிரியர்களின் அதிகாரத்தைக் குறைத்துள்ளன. ஆசிரியர்களின் இத்தகைய கருத்தை சிறுவர் உரிமை குறித்துச் சிந்திப்பவர்கள் ஏற்க மறுக்கின்றர். தண்டனை வழங்கியே பழக்கப்பட்ட ஆசிரியர்கள், அந்த அணுகுமுறையில் இருந்து விலகி மாணவரை நெறிப்படுத்தும் ஏனைய வழிமுறைகள் குறித்து அறியாதவர்களாகவும் அவற்றில் ஆர்வம் இல்லாதவர்களாகவும் உள்ளனர் என்பது இவர்களின் குற்றச்சாட்டாக உள்ளது.

இந்தக் கூற்றுக்களிலுள்ள உண்மைத் தன்மை தொடர்பாகவும் நாம் கவனம் செலுத்தவேண்டிய தேவை உள்ளது. ஏனெனில், வழங்கப்படுகின்ற தண்டனை, வாழ்நாளில் மீண்டும் அந்தத் தவறை மேற்கொள்ள முனையக் கூடாத நிலைமையை உருவாக்க வேண்டும். அவ்வாறு செய்ய முடிந்ததா?

ஒப்பீட்டு ரீதியில் அன்றைய மாணவர்கள் ஒழுக்க சீலராக விளங்கினர். வகுப்பறையில் ஆசிரியரின் ஆதிக்கம் ஓங்கியிருந்தது. ஆசிரியர் தமது பிள்ளைகளுக்கு வழங்கும் கடுமையான தண்டனைகளைப் பெற்றோரும் ஏற்றிருந்தனர். தற்காலத்தில் ஆசிரியரின் சமுதாய நலன் சார்ந்த அக்கறை குறைவடைந்துள்ளதாகக் குற்றம் சுமத்தப் படுகின்றது. ஆசிரியர் தமது பணியிலிருந்து ஒதுங்க முடியாது. நீங்கள் மிகப்பெரிய சமூகப் பொறுப்புடையவர்கள் என்று யார் வந்து தைரியம் கூறினாலும் இன்றைய சமூகச் சூழல் குறித்த அச்சம் ஆசிரியர்களிடையே உள்ளதென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இது ஒருபுறமிருக்க மாணவர்களின் தவறுகளை எங்ஙனம் தீர்ப்பது? அவர்களின் தவறுகளை எவ்வாறு சீர்செய்வது? என்ற வினாக்களுக்கு மேற்குலகப் பாடசாலைகள் உதாரணம் காட்டப்படுகின்றன. அங்கு மாணவர்களுக்குத் தண்டனை வழங்கும் நடைமுறைகள் இல்லை. மனித உரிமைகளை உச்ச அளவில் பேணும் அத்தகைய நாடுகளில் தண்டனை என்ற பேச்சுக்கே இடமில்லை.

மேலும் கடுந்தண்டனைகளுக்குட்பட்ட மாணவர்கள் பிற்காலத்தில் மோசமான நடத்தைகளைக் கொண்டிருப்பர். தண்டனைகள் அவர்களின் நடத்தையில் நீண்ட காலத்துக்கான மாற்றத்தை ஏற்படுத்தி விடமுடியாது. அது ஒரு தற்காலிகத் தீர்வாகவே அமையும் என்பது தண்டனைகளை எதிர்ப்போரின் வாதங்களாக உள்ளன.

> இன்றைய மாணவரின் உலகம் பரந்து விரிந்து கிடக்கின்றது. அனைத்து விடயங்களையும் இலகுவாக அறிய முடிகிறது. சுதந்திர தகவல் பரிமாற்ற ஒழுங்கில் யாவுமே சாத்தியமாகின்றன. இன்றைய சமூக அமைப்பு, பழக்க வழக்கங்கள், விழுமியங்கள், தகவல் தொடர்பு சாதனங்கள் என்பவை மாணவரின் நடத் தையில் சவாலான விடயங்களை ஏற்படுத்துகின்றன.

அன்பு காட்டுதல், பொறுமை கொள்ளுதல், கண்ணியப்படுத்தல் என்பனவற்றின் மூலம் மாணவரிடத்தே சுய ஒழுங்கையும் சுய ஒழுக்கத்தையும் ஏற்படுத்த வேண்டும். தனது நடத்தைக்கான முக்கிய பொறுப்பை மாணவனையே ஏற்கச் செய்தல் மேலும் பிள்ளை களின் வாழ்வுரிமை, பாதுகாப்புரிமை போன்ற உரிமைகள் தொடர்பான அணுகுமுறைக்கு முக்கியத்துவம் அளித்துச் செயற்படல் வேண்டும் என்றும் கூறப்படுகின்றது. அண்மைக்கால ஆய்வுகளில் ஆசிரியர் தமது நேரத்தின் 80 வீதத்தை மாணவர்களைக் கட்டுப்படுத்தவும் 20 வீத நேரத்தைக் கற்பிக்கவும் செலவிடுகின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

பழைமை வாத சிந்தனையிலிருந்து ஆசிரியர்கள் மீண்டெழுந்து புதிய அணுகுமுறைகளையும் நுட்பங்களையும் பயன்படுத்த வேண்டும். மாணவர்களின் நடத்தையை சீர் செய்வதற்கும் அவர்களின் ஒழுங்கீனத்தை வெற்றி கொள்ளத் தேவையான திறன்களையும் ஆசிரியர்கள் வளர்த்துக் கொள்ளல் அவசியம் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.



கட்டுரையாளர் : ஆசிரியர்
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

# தலையின் இழிந்த மயிர்...!



செ.மகேஷ்

“என்னைப் பார்த்துத் தலையின் இழிந்த மயிர்; என்கிறார்களே!” என்று அங்கலாய்த்தார் சிவபாதத்தார். அந்த வார்த்தை குறித்த விளக்கம் அவருக்குப் பெரிதாகத் தெரியவில்லை. பெரியதொரு கேள்விக் குறியைக் கண்ணிலே வருவித்துக் கொண்டு செல்லத்தம்பியரை அவர் உற்றுப் பார்த்தார். சிவபாதத்தார் சொன்ன அந்த வார்த்தை வள்ளுவர் சொன்ன ஒரு குறளின் வரி என்பதைச் செல்லத்தம்பியர் தெரிந்திருந்தார். அதை ஏன் பலரும் சிவபாதத்தாரைக் குறித்து முன்னிலைப்படுத்திச் சொன்னார்கள் என்பதை அவரால் உடனடியாக ஊகிக்க முடிந்தது. ஏனெனில் முன்னர் சிவபாதத்தாரைத் தேடி வந்த பலரையும் அவரிருந்த பதவிப் பெருமிதத்துக்குள் நெருங்க அனுமதிக்காமல் தற்பெருமை கொண்டிருந்த காலத்தை செல்லத்தம்பியர் மீட்டுப் பார்த்தார். “தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர் நிலையின் இழிந்தக் கடை” இதுதான் அந்தக் குறள்.

> “தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர் நிலையின் இழிந்தக் கடை” முன்னர் பதவியோடும் பட்டத்தோடும் உயர்ந்திருந்தவர், இன்று தனது நிலையின் நின்றும் கீழிறங்கியதும் எவரும் இவரைக் கணக்கிலெடுக்காமல் தனித்து நிற்கவிட்டு ஒதுங்கிவிட்டனர்.

முன்னர் பதவியோடும் பட்டத்தோடும் உயர்ந்திருந்தவர், இன்று தனது நிலையின் நின்றும் கீழிறங்கியதும் எவரும் இவரைக் கணக்கிலெடுக்காமல் தனித்து நிற்கவிட்டு ஒதுங்கிவிட்டனர். அத்துடன் அவரை அலட்சியம் செய்து, தம்மிடம் இருந்து புறந்தள்ளியும் வைத்தனர். இத்தகைய சம்பவங்களே, சிவபாதத்தாரையும் கேலி செய்யும் வகையில் குறள்வரி சொல்லிக் குதூகலித்தது. இதனாலேயே சிவபாதத்தார் அந்தத் தலையின் இழிந்த மயிர் பெற்ற இழி நிலைக்கு உள்ளான வலியை உணர்ந்தார். செல்லத்தம்பியருக்குச் சிவபாதத்தார் முன்னர் இருந்த பதவிநிலை தெரியும். பலரும் மதித்துத் தலைதாழ்த்தும் வகையிலே இருந்த உயர்ந்த பதவியும் அந்தப் பதவியால் குவிந்த பெருமைகளும் தெரிந்தே இருந்தன. ஆனால், அவர் அந்தப்பதவியில் இருந்த நாள்களில் உறவுகளுக்கோ அயலவருக்கோ செய்ய வேண்டிய உதவிகளையோ கடமைகளையோ செய்து மற்றையோரை மதித்து வாழ்ந்தவரல்லர். பதவியால் தன்னை அலங்கரித்துக் கொண்டு பெருமை பேசி வாழ்ந்தவர்.

தன்னையொத்த உயர் பதவி வகுத்தோரின் கைகளையே கோர்த்துத் தனது தரம் உயர்த்தி, மிடுக்காக நடந்தவர். ஆனால், அன்று அவரை சுயநல நோக்கோடு, சிவபாதத்தாரைச் சூழ்ந்து போற்றி மதித்து நின்றவர் பலரும் இப்பொழுது அவரை விட்டு விலகித் தூர நடந்தார்கள். அவர்களே இன்று சிவபாதத் தாரைத் தலையின் இழிந்த மயிர் எனக் கேலியும் செய்தனர்.

இப்படி தரக்குறைவாகித், தலையின் இழிந்த மயிரெனத் தாழ்வு நிலைக்குச் சிவபாதத்தார் உள்ளாகியுள்ளார் என்பதைச் செல்லத்தம்பியர் கண்ட போது மனம் வருந்தினார். செல்லத்தம்பியரும் சிவபாதத்தாரைப் போன்று உயர் பதவியில் இருந்தவர்தான். ஆனால் அன்று செல்லத்தம்பியாரை நாடிவந்த எவரையும் - எந்த வேலையையும் அவரிருந்த எந்தப் பதவியின் வசதிகளையும் பயன்படுத்தி அயலவருக்கு உதவியவர். ஆனால் சிவபாதத்தாரோ ஊரவரால் உழைக்கத் தெரிந்த மனிசன் என்ற பெயர் பெற்றவர். பொருளாய்ப் பணமாய் வாங்க வேண்டிய இடத்தில் வாங்கி எடுக்கவேண்டிய எல்லாவற்றையும் எடுத்தவர்தான் சிவபாதம். இவர் செய்தவைதாம் ஊரவரெல்லோராலும் ஊழல் என்று சொல்லப்பட்டன. அன்று அவற்றைச் சுயநல விருப்போடு செய்த சிவபாதத்தார், அத்தகைய செய்கைகளின் எதிர் விளைவாய். இன்று பலராலும் தலையின் இழிந்த மயிரெனக் கேலிக்குரியவரானார். அந்த அழியும் பொருளுக்கும் பணத்துக்கும் ஆசைப்பட்டதால் இன்று அவமானமாகி நிற்கிறார்.

தனது நிலையை எண்ணிச் செல்லத்தம்பியர் பெருமைப்பட்டுக் கொண்டார் அன்று. இழிந்த மயிராகிப்போன சிவபாத்தாரிடம் அதனைச் சொல்லி மேலும் அவரை இழிவுபடுத்தச் செல்லத்தம்பியருக்குத் துணிவு வரவில்லை.

தலைவர் ஆனாலென்ன! தந்திரி ஆனாலென்ன! மனேச்சர் ஆனாலென்ன! மந்திரி ஆனாலென்ன! செயலாளர் ஆனாலென்ன! பணிப்பாளர் ஆனாலென்ன! எந்தப் பதவியில் இருந்தாலும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே மக்களையும் மண்ணையும் மதிக்காமல் ஆடிய ஆட்டம் இன்று அடங்கிப் போய்விட்டது. பதவியிலிருந்து கீழிறங்கியதும் எல்லாத் தலைக்கனமும் கீழிறங்க, புலிபோன்று நிமிர்ந்த நிலை குறுகிப் பதுங்கி ஒரு மூலையில் ஒதுங்கும் பூனை போலான சிவபாதத்தாரின் நிலை பரிதாபமானதுதான். கேலிக்குள்ளாகி மதிப்பிறங்கிய சிவபாதத்தைப் போல வேறு பலரும் இன்று பதவியில் இருப்பது தெரிகின்றது. இப்பொழுது பதவி பட்டத்தோடு இருப்பவர்கள் சற்றே சிந்தித்துச் செயற்பட்டால் நல்லது. இதையெல்லாம் செல்லத்தம்பியர் நினைத்தார் சொல்லவில்லை.






# தலைமைத்துவத்தின் பண்பு!

தெல்லியூர்த் தேவி

இந்த உலகையே வெல்ல வேண்டும் என்ற இலட்சியத்துடன் படை எடுத்துச் சென்றவர் அலெக்ஸாண்டர். அவர் பாரசீகத்தை வென்ற பின்னர் ஹிர்கேனியா நாட்டின் மீது படையெடுத்துச் சென்றார். காடு மலைகளையும் இடையிடையே நதிகளையும் கடந்து செல்ல வேண்டிய கடுமையான பயணம் அது.

வழியில் குறுக்கிட்ட நதியிலிருந்து கிரேக்க வீரர்கள் தங்கள் தோள் பைகளில் நீரை நிரப்பிக் கொண்டனர். அவர்கள் சென்ற காலம் கடுமையான கோடை காலமாகையால் வெப்பமும் வறட்சியும் அவர்களைச் சோர்வடையச் செய்தன.

ஒருநாள் அலெக்ஸாண்டருக்கு வெயில் கொடுமையால் நாவறட்சி ஏற்படவே அவர் கடுமையாகச் சோர்ந்து போயிருந்தார். அப்பொழுது குதிரை வீரர்களின் தோள்பட்டைப் பைகளில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட இருக்கவில்லை. ஒரே ஒரு வீரனிடம் மட்டும் சிறிதளவு தண்ணீர் இருந்தது. அவன் அந்தத் தண்ணீரை தங்களது தலைவன் அலெக்ஸாண்டரிடம் கொடுத்தான். அதை வாங்கிக் கொண்ட அலெக்ஸாண்டர் தண்ணீர்த் தாகத்தால் தவிக்கும் மற்ற வீரர்களைப் பார்த்தார். அவர்களும் தாகத்துடன் அவரையே பார்த்தார்கள். “எனது உயிரைவிட மேலான என் அன்புக்குரிய படைவீரர்களாகிய நீங்கள் எல்லோரும் தாகத்தால் வதங்கிக் கொண்டிருக்கும் வேளையில் எனக்கு மட்டும் எதற்குத் தண்ணீர்?” என்றார் அலெக்ஸாண்டர்.

''எங்கள் பிள்ளைகளுக்காக'' என்றார் ஒருவீரன். “என்ன உங்கள் பிள்ளைகளுக்காகவா?”

''ஆமாம் மன்னரே! தண்ணீர்த் தாகத்தால் நாங்கள் நாவறண்டு இறந்து போனாலும்கூட நீங்கள் மட்டும் பிழைத்திருந்தால் எங்கள் பிள்ளைகளைக் காப்பாற்றிவிடுவீர்கள் அல்லவா?” என்றான் இன்னொரு வீரன்

“எங்கள் பிள்ளைகள் இறந்துவிட்டால்கூட நாங்கள் வேறு பிள்ளைகளைப்பெற்றுக்கொள்வோம். ஆனால் எங்கள் அரசன் இறந்து விட்டால் நாங்கள் அநாதைகளாகி விடுவோம்” என்றான் மற்றொரு வீரன்.

இதனைக் கேட்ட அரசனது உளம் நெகிழ்ந்தது. “வீரர்களே உங்களுக்கு உங்களது அரசன் உயிர் முக்கியம் என்றால் எனக்கு என் வீரர்களாகிய உங்கள் உயிர்தான் முக்கியம், நான் மட்டும் எப்படி இந்தத் தண்ணீரைக் குடிக்கமுடியும்?” என்றான்.

அலெக்ஸாண்டரின் அன்பை உணர்ந்த படைவீரர்கள் உளம் நெகிழ்ந்தார்கள்.

தலைவரின் தகுதி - வெற்றியின் இரகசியம் - தலைமைப்பண்பு இவையே வாழ்வின் முத்துக்கள்.



# ஹலோ! கடன் குடுங்கோ!

சிறுகதை

தி.சுதர்மன்

ஹலோ! ஆ! சொல்லு மச்சான். ஏன் திடீரென எடுக்கின்றாய்? நீ சும்மா எடுக்கமாட்டாய். மிஸ்கோல் பார்ட்டி நீ, என்ன விசயம் சொல்லு?" அவனது குரலில் எகத்தாளம் மிகுந்திருந்தது. அதில் ஒன்றும் தவறில்லை. நான் அப்படித்தான். நான் யாருக்கும் கோல் எடுக்க மாட்டேன். காசு செலவு செய்து யாராவது அழைப்பு எடுத்தால் அவர்களைப் பேசவிடாமல் கிடைத்த நேரத்தில் உச்சப்பயனடைவேன். எனவே அந்தாள் அப்படிச் சொன்னதில் ஒன்றும் தவறில்லை.

"ஐயா! எனக்கொரு உதவி. நண்பன் ஒருவனுக்கு அவசரமாகப் பத்து லட்சம் வேணும். ஆனால்..." என்று இழுத்தேன்.

"லோன்தானே! பிரச்சினை இல்லை. நான் செஞ்சு தாறன்" என்றான் நண்பன். என்னடா இது பொசுக்குன்னு போச்சே! நான் கொஞ்சம் மினக்கிட வேண்டுமெண்டல்லோ நினைச்சன். இவ்வளவு ஈசியாக முடியுதே என்று நினைத்துக் கொண்டிருக்க! அடுத்ததாக அவன் சொன்ன வார்த்தை இன்னும் அவன்மேல் மரியாதையைக் கூட்டியது.

"மச்சான்! வேற பாங் ஒன்றுக்கும் போயிடாதை. எல்லாம் நான் செஞ்சு தாறன்" என்றான். இந்தப் பாசம்தான் எனக்கு அவனிட்ட பிடித்த விடயம்.

ஐயா என்கிற ஆனந்த சுதசர்மா எனது பால்ய சினேகிதன். சிறுவயது முதலே பள்ளிக்கூடத்தில் ஒன்றாகப் படித்தனாங்கள். நானும் அவனுரும் நல்ல நண்பர்கள். என்ன இருந்தாலும் அவன் ஒரு பிராமணன், அதனால்தான் அந்த "ரு"ஐ அடைப்புக்குள் போட்டனான். கோயில்ல பூசை செய்கிற ஐயாவை அவன் என்று சொல்ல ஒரு மாதிரிக் கிடக்கு. காதலிச்சு கல்யாணம் செய்த மனிசிமார், வெளிஆள்களைக் கண்டால் மட்டும் புருசன்மாரை "இஞ்சேப்பா", "அப்பா" என்று கூப்பிடுறது மாதிரி நானும் அவனை ஆள்களுக்கு முன்னால "ஐயா" என்றுதான் மரியாதையாக் கூப்பிடுறனான்.

"அதொன்றும் பிரச்சினை இல்லை. நான் கணக்குப் பார்த்துவிட்டுக் கறக்கிறன்" என்றான் ஐயா.

"என்ன ஐயா கறக்கப்போறியளோ...."

"இல்ல, இல்லை! நான் இப்ப வீட்டில நிற்கிறன். மனிசி மாட்டில பால் கறக்கப் போனவ. அதுதான் நான் கதைக்கிறன்...."

"இல்லை ஐயா! அவருக்கு ரெண்டு நாளில காசு வேணுமாம். இண்டைக்கு ஞாயிற்றுக் கிழமை வேற...." நான் இழுத்தேன்.

"பாங்காரர் மாக்கெற்றிங் தெரியாத ஆக்கள். இப்பிடித்தான் ஞாயிறில பூட்டுவாங்கள். அதை விடு... உன்ரை ஆளின்ரை முகவரியைச் சொல்லு. நான் இப்ப ஒரு மணிபோல போய் எல்லா டொக்குமென்ஸ்ஸிலயும் கையெழுத்து வேண்டி திங்கட்கிழமை அவற்றை எக்கவுண்டுக்கு காசைப் போட்டு விடுறன். நீ அவற்றை சம்பளத்தைச் சொல்லு.....?"

அடப்பாவி கடன் எடுக்க வாறவனை "அவர்" என்கின்றான். என்னை 'நீ' என்கின்றான். அப்ப எனக்கும் மாக்கெற்றிங் தெரியாது என நினைக்கிறான் போல. காரியம் நடந்தால் சரிதானென்று எண்ணிக்கொண்டு எனது நண்பனின் முகவரியைச் சொன்னன். "அட உந்த ஏரியாவே? அங்க நான் கனபேருக்கு கடற்றொழில் செய்ய என்று நிறையக் கடன் குடுத்து இருக்கிறன். எனக்கு அங்க கனபேரைத் தெரியும். நான் போய் விசயத்தை முடிக்கிறன். நீ அவரின்ரை போன் நம்பரைத்தா, நான் கதைக்கிறன்."

"இல்லை ஐயா! கடன் எடுக்கிறவன் கதைக்கிறதுதானே சரி! நான் அவரைக் கதைக்கச் சொல்லுறன்."

"டேய் அவரைக் கதைக்கச் சொன்னால், அவர் கதைக்கிறத்துக்கிடையில வேற பாங்காரர் நுழைஞ்சிடுவாங்கள். நான் கதைக்கிறன். முதலில் நம்பரைத் தா?"

நாமாத்தான் சிக்கிக்கிட்டோமோ என்ற நினைப்பு சின்னதாக மனதில் தோன்ற, "அப்ப பிணை, சம்பளப் பட்டியல்..." என்று இழுத்தேன்.

"அதொன்றும் இப்ப தேவையில்லை. சம்பளப் பட்டியலை திங்கள் காலைமை எடுத்து பக்ஸ் பண்ணச் சொல்லு. அல்லது வைபரில அனுப்பச் சொல்லு. சரி நான் அதை போனில் சொல்லுறன். சரி நீ எங்க தலைமயிர் வெட்டுறனீ?"

ஏன் ஐயா? பாங் வேலையோட அந்த வேலையையும் செய்யுறீங்களோ? (செய்தாலும் செய்வீங்கள்) ஆனா ஞாயிறில லோன் குடுக்கிற மார்திரி அதுவும் வீட்டில வந்து லோன் குடுக்கிற மாதிரியெண்டா பறவாயிலை என்று சொல்ல நினைத்துவிட்டு எதுக்கும் நண்பனுக்கு கையில காசு கிடைக்கட்டும் பிறகு பார்ப்பம் என்று மனதுக்குள் எண்ணியபடி, "நான் இப்படியே பார்த்துக்கொண்டு போவன். கொஞ்சம் சுத்தமா, ஆள்கள் குறைவாக இருக்கின்ற சலூனில நுழைய வேண்டியதுதான்" என்றேன்.

"முன்பு சோட் லீவில தலைமயிர் வெட்டினனான். இப்ப டையும் அடிப்பதால் அரைநாள் லீவு வேணும். எதுக்கும் ஐயா உங்களுக்கு மாக்கெற்றிங் படிப்பிக்கிறவங்களிட்டைச் சொல்லி சலூன் கடை அண்ணைமாருக்கும் ஞாயிற்றுக்கிழமையும் திறக்கச் சொல்லிப் படிப்பிக்கவேணும். என்ன சொல்லுறீங்க?"

"அடேய்! உனக்கு ஞாயிற்றுக்கிழமை தலைமயிர் வெட்ட ஏலாமக் கிடக்கு என்றதுக்காக என்னை வறுத்தெடுக்காதை."

"சரி ஐயா! நீங்க அவனுக்கு லோனைப்பார்த்துக்குடுங்கோ? நான் பிறகு எடுக்கிறன். வேற யாருக்கும் லோன் தேவையெண்டால் மிஸ்கோல் போடுறன். நீங்க எடுங்கோ. நான் வைக்கிறன்."

(27ஆம் பக்கம் பார்க்க)

அடப்பாவி கடன் எடுக்க வாறவனை "அவர்" என்கின்றான். என்னை 'நீ' என்கின்றான். அப்ப எனக்கும் மாக்கெற்றிங் தெரியாது என நினைக் கிறான் போல. காரியம் நடந்தால் சரிதானென்று எண்ணிக் கொண்டு எனது நண்பனின் முகவரியைச் சொன்னன். "அட உந்த ஏரியாவே? அங்க நான் கன பேருக்கு கடற்றொழில் செய்ய என்று நிறையக் கடன் குடுத்து இருக்கிறன்.






# ராசி இல்லாத ராசா

மிருசுவில் தமிழ்தாசன்

கௌரி கொண்டு வந்த மூன்று லட்சமும் காற்றாகப் பறந்துவிட்டது. போதாதென்று கழுத்தில் கையில் கிடந்த பவுண் சமாச்சாரங்களும் அடகுக் கடையில் அடைபட்டும் கொண்டுவிட்டன. இனிக் கையில் மடியில் சல்லிக் காசும் கிடையாது. மனைவி ஈஸ்வரியோ நாளும் பொழுதும் தேய்பிறையாகத் தேய்ந்து கொண்டிருக்கும் சோகத்தையும் என்னால் தாங்க முடியவில்லை.

என்ன செய்யலாம்? இரண்டு மூன்று தடவைகள் லொத்தர் சீட்டுக்களும் வாங்கிப் பார்த்தாயிற்று. மிகக் குறைந்த வித்தியாசத்திலே அதிர்ஷ்ட இலக்கங்கள் என்னை விட்டு விலகிச் சென்றுவிட்டன. எவ்வளவு வித்தியாசமிருக்கின்றதோ அவ்வளவைக் கழித்துக் கொண்டு தருவார்களென்றாலும் சற்று ஆறுதலாயிருக்கும். ஆனால் அப்படியெல்லாம் செய்யமாட்டார்களாம். இதேபோல ஏற்கனவே தருமிப் புலவரும் ஆசைப்பட்டுக் கடைசியில் அவமானப்பட்டதைத் திருவிளையாடல் படத்திலே பார்த்தவன் நான். எனவே அப்படி ஓர் ஆசையை வளர்க்காது அடக்கிக் கொண்டு காசு தேடுவதற்கு ஏதாவது வழி பார்க்கவேண்டும். யாரிடமும் கடன்படமுடியாது. திருடத் தெரியாது. அந்தளவுக்குத் துணிவோ மூளையோ கிடையாது. என்ன செய்யலாம் என்று தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கையில்தான் பொறிதட்டியதுபோல ஓர் 'ஐடியா' உதயமாகியது. இதைவிட்டால் வேறு வழியில்லை. விடவும்கூடாது.

"டேய் ராசா! நீ என்னை வெருட்டாதை கண்டியோ! உன்னை நம்பிக் கிடக்கிற காணியையும் வித்துப்போட்டு எல்லாரும் என்னடா நடத்தெருவிலையே நிக்கிறது! இவ்வளவு காலமும் உன்ரை கெட்டித்தனங்களைப் பாத்துக்கொண்டு தானேயிருக்கிறன். உருப்படியாய் என்ன செய்திருக்கிறாயெண்டு சொல்லு பாப்பம். எல்லாம் முடிச்சுப் போட்டு இப்ப ஆசையருமையாய்க் கிடக்கிற காணியையும் வித்துத்தரச் சொல்லுறியோ"

"எணை! முழுக்காணியும் விக்கவேண்டாம். அரைவாசிக் காணியை வித்துப் போட்டுக் காசைத்தா. நான் ஏதேன் கடை கண்ணியைப் போட்டு உழைக்கப் போறன். நீ தராட்டில் உந்த ஆலடி அம்மாளாச்சியாணைத் தூக்குப் போட்டுச் செத்துப் போடுவன்." ஏதோ ஓர் ஆத்திரத்தில் நானும் பொய்ச் சத்தியத்தைப் பண்ணித் தொலைத்து விட்டேன். "அம்மாளாச்சி தாயே! நான் சும்மா அம்மாவை வெருட்டுறதுக்குத்தான் சொன்னனான். இதை உண்மையெண்டு நம்பி என்னிலை கோவிச்சிடாதை தாயே அம்மாளாச்சி."

மனதுக்குள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டேன். உள்ளதைச் சொல்லப் போனால் சாகின்ற கதையைக் கேட்டாலே எனக்குக் குலை நடுங்கும். அப்படிப்பட்ட பயந்தாங்கொள்ளியான நானா! சாகின்றதாவது! இருந்தாலும் அம்மாவைச் சற்று மிரட்டி வைத்திருந்தால்தான் என்னுடைய திட்டங்கள் சரி வரும். அதற்காக அம்மாவை வழிக்கெடுக்க வேண்டும். எடுத்தேயாக வேண்டும். இரவு ஏழரை மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. பௌர்ணமி நிலவில் அம்மா மாமரத்துக்குக் கீழேயிருந்து கிடுகு பின்னிக் கொண்டிருந்தாள். ஏற்கனவே அதே மாமரத்தில் தூக்குக் கயிறு கட்டி விட்டேன். இனி அம்மாவுக்குத் தெரியத்தக்கதாக அதற்குள் கழுத்தை நுழைத்துச் சாகப்போவதுபோல நடிக்க வேண்டும். அம்மா இதை அனுமதிக்கவே மாட்டாள். உடனடியாகக் காணியை விற்றுக் காசு தருவதற்குச் சம்மதித்து விடுவாள். இதுதான் எனது மனக்கணிப்பு.

"அம்மா! நான் சாகப்போறன்! சாகட்டோ! செத்தால் நான் ஆவியாய் வந்து பிறகும் உனக்குத்தான் கரைச்சல் குடுப்பன். சொல்லணை! நான் சாகப்போறன்." "எடே! நீ ஆவியாய் வந்தாலென்ன சாவியாய் வந்தாலென்ன! என்னை மட்டும் வெருட்டாதை கண்டியே! சாகிறதெண்டாற் சா. காணி விற்கமாட்டன். உனக்கு இனியும் செம்பாச்சல்லி தரவும் மாட்டன்." என்றைக்குமே இல்லாதவாறு விடாப்பிடியாக நின்றாள் அம்மா. இனியும் கதைத்துக் கொண்டிருக்க முடியாது. கடைசி விளையாட்டைக் காட்டியே ஆக வேண்டும். தூக்குக் கயிறு தயாராகவிருந்தது. கயிற்றுக்குள் மெல்லத் தலையை நுழைப்பது போலப் பாசாங்கு செய்தேன். அடக்கடவுளே கயிற்று முடிச்சு எதிர்பாராது என்னுடைய தொண்டையை இறுக்க ஐ...ய்...யோ.... அம்மா... மூச்...சு...விட முடியவில்லை. அம்மா அலட்சியமாகவேயிருந்தாள். இப்போதும் இந்த நிலைமையிலும் நான் பயமுறுத்துவதாகத்தான் நினைத்துக் கொண்டிருந்தாள். "ஆரடா அது! எருமை மாட்டிலை வந்து நிண்டு என்னைப் பயப்படுத்திக் கொண்டிருக்கிறான். கையிலை பாசக்கயிறு மாதிரி எதையோ வைச்சுக்கொண்டு நிண்டு என்னை வெருட்டுறான். டேய் விடடா! விடடா! விடுங்கோடா!"

நான் கத்திக் கொண்டிருக்க யாரோ ஒருவன் ஓடிவந்து உண்மையிலேயே எனது கழுத்தை இறுக்கிய கயிற்றை அறுத்துவிட நிலத்தில் தொப்பென விழுந்தேன். ஐயோ வாழவும் முடியவில்லை. சாகவும் முடியவில்லை. எதையெடுத்தாலும் தோல்விக்கு மேல் தோல்வியாகவே வந்து கொண்டிருக்கின்றது.

காரணங்கள் சில இருந்தாலும் என்னுடைய அலட்சியப் போக்குகளும், அவசர புத்தியுமே எனது வாழ்வின் முன்னேற்றத்துக்குத் தடைக் கற்களாகவிருந்து இந்தக் கேவலமான நிலைக்காளாகியிருக்கின்றேன். சோம்பேறித்தனமும், எழுந்தமானமாக முடிவுகளை எடுக்கும் விவேகமற்ற நடவடிக்கைகளும் என்னை இப்படியொரு பரிதாபகரமான மனிதனாக ஆக்கிவிட்டது. நான் நினைப்பது போல நான் ராசியில்லாதவனல்ல வாழத்தெரியாதவன் என்பதே உண்மை. இருந்தும் மற்றவர்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெறுவதற்காக நான் எப்போதுமே சொல்லிக்கொண்டிருக்கின்றேன். நான் ஒரு ராசியில்லாத ராசா என்று.



(முற்றும்)

## ஹலோ...

(26 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வேலையை ஒரு வழியா முடிச்சாச்சு. நாளைக்குக் காலமை ஓர் அரை நாள் லீவு வேண்டும் என்று ஒப்பீஸ் தலைமைக்கு ஒருக்கா போன் பண்ண வேணும். "ஹலோ சேர்! நான் ரவி கதைக்கிறன். மன்னியுங்கோ சேர் ஞாயிறில போன் கதைக்கிறத்துக்கு! நாளைக்கு விடிய ஒரு அரை நாள் லீவு வேணும் சேர் தலைமயிர் வெட்டுவதற்கு." "ஆ! சரி சரி! 2 மணிக்குச் சரியா வந்திடவேணும், பிறகு வேற காரணம் ஒண்டும் சொல்லக்கூடாது?" அனுமதி கிடைத்துவிட்டது. இனி நிம்மதிதான். "ஓ.கே.சேர்! நன்றி சேர்!" அலைபேசியை அணைத்து காற்சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டே வீட்டை நோக்கி நடந்தேன். திங்கட்கிழமை ஒரு மாதிரி தலைமயிர் வெட்டியாச்சு இனி 'டை' அடித்து முழுக வேணும் 2 மணிக்கு பிந்தினால் ஒப்பீஸில் மனிசன் கத்தும் என்று நினைத்துக் கொண்டிருக்க.....! சாவு மணி அடித்த மாதிரி ரெலிபோன் மணியடித்தது.

ஒப்பீஸில இருந்தோ! என நடுங்கியபடி போனை எடுத்தன். அட நம்மட ஐயா! "ஓ! சொல்லுங்கோ ஐயா! இப்பத்தான் மயிர் வெட்டிப் போட்டு நிக்கிறன். இனி முழுக வேணும். என்ன விசயம்?""உன்ரை நண்பனுக்கு லோன் காசு போட்டாச்சு. மற்றது உன்ர வீட்டு போன் நம்பரைத்தான் விண்ணப்பத்தில போட்டு இருக்கிறன். அவன்ர லோன் போமில பிரச்சினை இல்லைத்தானே?" 'போட்டாப் பிறகு இது என்ன கேள்வி?" "பயப்பிடாத சும்மா ஒரு செக்கிங்குக்குத்தான், பயப்பிட வேண்டாம்!" ஐயா போன் தொடர்பைத் துண்டித்து விட்டார். ம்ம்ம்..... வேலியில போன ஓணானை மடியில தூக்கி வைத்து விட்டேனோ! மனதில் ஒரு பக்கமாக வலித்தது. விதி வலியதுதான்.

ஐயாவுடன் போன்னை கதைத்து முடிந்த பிறகுதான் யோசித்தன், கடன் கொடுத்தவன் எடுத்துச் சொல்லுறான். ஆனால் கடன் வேணும் எண்டு கேட்டவன் இன்னும் அதைப் பற்றி மூச்சு விடக்கூடக் காணம். இதுவும் உலக வழமைதான்.திரும்பவும் போன் மணியடித்தது. எடுப்பம்! ஐயோ! நம்மட ஒப்பிஸில இருந்து... "சேர் குட்மோனிங்! சொறி சேர்! தலைமயிர் வெட்டிப் போட்டன். முழுக வேணும். நண்பனுக்கு லோன் எடுத்தனான்....""என்ன உளறுறீர்?"அந்தப் பக்கத்தில் இருந்து குரல் தடித்தது."அது சேர்... நண்பன் ஒருத்தனுக்கு லோன் ஏற்பாடு செய்ய பாங்குக்கு போய்... அதுதான் லேட்" சரளமாக பொய் வந்தது வாயில். "சரி சரி! எனக்கும் ஒரு லோன் வேணும். அந்த பாங்கில எடுக்கலாமோ?"'எலி பொறிக்குள் மாட்டிக் கொண்டுவிட்டது. "ஓம்! ஓம் சேர்! தலைமயிர் வெட்டிற மாதிரி வேலை இல்லை சேர் அது. ஒரு 'மிஸ் கோல்' போட்டால் போதும். லோன் கிடைக்கும் இருந்த இடத்தில.'."சரி சரி நீர் கெதியா ஆபிஸ் வாரும். பாங்குக்கு ஒரு மிஸ் கோல் போடும்.""ஓம் சேர்! "
அப்பாடா சிக்கின்டாண்ட ஓர் அடிமை. ஆனா இந்த முறை என்ரை வீட்டு போன் நம்பரை மாத்தவேணும்!



# மனித வாழ்க்கைக்கு செவ்வாயை பயன்படுத்தலாம்

என்.ராமதுரை

சூரிய மண்டலத்துக்கு அப்பால், அண்ட வெளியில் பூமி மாதிரியான கிரகம் எங்கேனும் உள்ளதா என்று விஞ்ஞானிகள் தேடி வருகிறார்கள்.

இந்தத் தேடல் ஒருபுறம் இருக்க, நமது அண்டை வீடு என்று சொல்லத்தக்க செவ்வாய்க்கிரகத்தில் உள்ள நிலமைகளை மாற்றி, அதை மனிதர்கள் வாழத்தக்க கிரகமாக ஆக்கினால் என்ன? என்றும் ஆராய்ந்து வருகிறார்கள். இது ஒன்றும் புதிய யோசனை அல்ல. இது குறித்து கடந்த காலத்தில் பல்வேறு வல்லுநர்களும் பல யோசனைகளைக் கூறியுள்ளனர். செவ்வாய்க் கிரகம் எந்தெந்த வகைகளில் பூமி மாதிரி இல்லை என்று நாம் முதலில் கவனித்தால், எவ்வித மாற்றங்கள் தேவை என்று புரிந்து கொள்ள முடியும்.

## உயிர்வாயு (ஒட்சிசன்) குறைவு

செவ்வாய்க்கிரகம் அளவில் சிறியது. அதை நாம் எதுவும் செய்ய இயலாது. செவ்வாய் வடிவில் சிறியது என்பதால், அதன் ஈர்ப்புச் சக்தி குறைவு. எனவே, அது தொடர்ந்து காற்று மண்டலத்தை இழந்து வருகிறது. ஆகவேதான் செவ்வாயின் காற்று மண்டலம் அடர்த்தி குறைந்ததாக உள்ளது. எனினும், செவ்வாயின் காற்று மண்டலத்தைச் சற்று அடர்த்தி கொண்டதாக மாற்ற முடி யும். செவ்வாயின் காற்று மண்டலம் பெரிதும் கரியமில வாயுவினால் ஆனது. உயிர் வாயு அற்ப அளவே உள்ளது. ஆனால், வாழ்க்கைக்கு உயிர் வாயு அவசியம். செவ்வாயின் காற்று மண்டலத் தில் உள்ள உயிர் வாயுவின் அளவை அதிகரிக்க முடியும்.

## எப்படிச் சூடேற்றலாம்?

செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இல்லை. ஆனால், பல கோடி ஆண்டுகளுக்கு முன்னால் செவ்வாயின் நிலப் பரப்பில் பெரிய ஆறுகள் பெருக்கெடுத்து ஓடியதற்கான தடயங்கள் காணப்படுகின்றன. இதிலிருந்து கடந்த காலத்தில் செவ்வாயில் தண்ணீர் திரவ வடிவில் இருந்திருக்கிறது என்பது தெரிகிறது. எனவே, அக்கால கட்டத்தில் செவ்வாயில் காற்று மண்டலம் அடர்த்தியாக இருந்ததாக ஊகிக்கலாம். காற்று மண்டலம் அடர்த்தியாக இருந்தால்தான் தண்ணீர் திரவ வடிவில் இருக்க முடியும்.

இப்போது செவ்வாயின் வட, மற்றும் தென் துருவப் பகுதிகளில் ஐஸ்கட்டி வடிவில் தண்ணீர் இருக்கிறது. செவ்வாயை மாற்றி அமைப்பதா னால் முதலில் அங்கு காற்று மண்டல அடர்த்தியை அதிகரிக்க வேண்டும். இது எளிதான வேலை அல்ல. ஆனாலும் நீண்ட கால அளவில் சாத்தியமே. செவ்வாயின் தென் பகுதியில் கரியமில வாயு உறைந்த ஐஸ் கட்டிபோல உள்ளது. இதை வாயுவாக மாற்றினால், செவ்வாயின் காற்று மண்டலத்தின் அடர்த்தி ஓரளவுக்கு அதிகரிக்கும். கரியமில வாயுவுக்கு ஒரு குணம் உண்டு. அது செவ்வாய் பெறும்வெப்பம் ஒரேயடியாக அண்ட வெளிக்குப் போய்விடாதபடி தடுக்கும். வேறு சில வாயுக்களுக்கும் இத்தன்மை உண்டு. இந்த வகை வாயுக்களுக்குப் பசுமைக் குடில் வாயுக்கள் என்று பெயர். பூமியிலிருந்து இந்த வகை வாயுக்களைக் குப்பிகளில் அடைத்து பூமியிலிருந்து ரொக்கெட் மூலம் செவ்வாய்க்கு அனுப்பலாம். இது நடைமுறையில் சாத்தியமா என்று ஆராய வேண்டியுள்ளது. செவ்வாயின் காற்று மண்டலத்தின் மேற்புறத்தில் இந்த வகை வாயுக்களின் சேர்மானம் அதிகரித்தால், செவ்வாயின் நிலப்பரப்பில் இப்போது நிலவும் கடும் குளிர் இராது. செவ்வாயின் வெப்பம் உயரும்போது, துருவப் பகுதிகளில் நிலத்துக்கு அடியில் உறைந்த நிலையில் உள்ள ஐஸ் கட்டிகள் உருகி நீராக ஓட ஆரம்பிக்கும்.

செவ்வாயில் குறிப்பிட்ட பகுதிகளில் கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளில் பாசிகள் வளரும்படி செய்யலாம். இவை உயிர் வாயுவை வெளிவிடும். இதன் மூலம் செவ்வாயின் காற்று மண்டலத்தில் உயிர் வாயு அளவையும் அதிகரிக்கலாம். இது நடைமுறையில் சாத்தியமே என்று கண்டறியப்பட்டுள்ளது.

சூரியனிடமிருந்து பெறும் வெப்பத்தை செவ்வாய்க் கிரகம் நன்கு இருத்திக் கொள்ளும்படி செய்தாலும், செவ்வாயில் வெப்பத்தை அதிகரிக்கலாம். செவ்வாய்க்கிரகத்தின் மேற்புறத்தில் கருப்பான பொருளைப் பரப்பினால் இது சாத்தியம். கருப்பு நிறமானது வெப்பத்தை நன்கு ஈர்த்துக்கொள்ளக்கூடியதாகும்.

## தண்ணீர் உருவாக்கலாம்

பூமியின் காற்று மண்டலத்தில் நைட்ரஜன் வாயு நிறையவே உள்ளது. நமது காற்று மண்டலத்தில் நைட்ரஜன் 78% உள்ளது. செவ்வாயில் இந்த வாயு மிக அற்ப அளவில்தான் உள்ளது. பூமியிலிருந்து இந்த வாயுக்களை செவ்வாய்க்கு சிலிண்டர்கள் மூலம் அனுப்பலாம். விண்வெளியில் உலவும் அஸ்டிராய்டுகள் எனப்படும் பறக்கும் பாறைகளில் இந்த வாயு அமோனியா வடிவில் உள்ளது. சிறிய சைஸ் அஸ்டிராய்டுகளைக் கட்டி இழுத்துக்கொண்டு போய், செவ்வாயில் மோதும்படி செய்தால் அந்த வகையிலும் செவ்வாயின் காற்று மண்டல அடர்த்தியை அதிகரிக்க முடியும். அஸ்டிராய்டுகளை இப்படிக் கயிறு கட்டி இழுத்துச் செல்ல இயலுமா என்று கேட்கலாம்.



இதுவரை இந்த மாதிரியான முயற்சி மேற்கொள்ளப்பட்டது கிடையாது. ஆனால், இது நடைமுறையில் சாத்தியமே.நாஸா இப்போது ஓரையன் என்னும் விண்கலத்தை உருவாக்கி வருகிறது. 2020களில் ஓரையன் விண்கலத்தில் ஏறிச் செல்லும் அமெரிக்க விஞ்ஞானிகள், தகுந்த அளவு கொண்ட அஸ்டிராய்டு ஒன்றைக் கைப்பற்றி, அதைக் கயிறு கட்டி இழுத்து வந்து சந்திரனைச் சுற்றும்படி செய்வதற்குத் திட்டம் உள்ளது. இது சாத்தியமாவதாக வைத்துக் கொண்டால், எதிர்காலத்தில் இதேபோல அஸ்டிராய்டுகளை இழுத்து வந்து செவ்வாயில் மோதும்படி செய்யலாம். செவ்வாயின் காற்று மண்டலத்தை அடர்த்தி கொண்டதாக மாற்ற முடியுமானால், பின்னர் இயற்கையும் கைகொடுக்கும். காற்று மண்டல அடர்த்தி அதிகரித்தால் செவ்வாயில் நீர் ஓடும்படி செய்ய முடியும்.

"செவ்வாயில் குறிப்பிட்ட பகுதிகளில் கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளில் பாசிகள் வளரும்படி செய்யலாம். இவை உயிர் வாயுவை வெளிவிடும். இதன் மூலம் செவ்வாயின் காற்று மண்டலத்தில் உயிர் வாயு அளவையும் அதிகரிக்கலாம். இது நடைமுறையில் சாத்தியமே என்று கண்டறியப்பட்டுள்ளது.

## யார் பொறுப்பு?

செவ்வாய்க்கிரக நிலமைகளைப் பெரிய அளவில் மாற்றுவதற்கு அமெரிக்காவுக்கு அல்லது ரஷ்யாவுக்கு யார் அதிகாரம் அளித்தார்கள்? இந்த விதத்தில் மாற்றுவது சரிதானா? என்ற கேள்வி எழுகிறது. உள்ளபடி சந்திரன் மீதும் மற்றும் செவ்வாய், வெள்ளி முதலான கிரகங்கள் மீதும் இஷ்டப்படி யாரும் கைவைக்கக்கூடாது என்று உலக அளவில் 1979இல் சர்வதேச அளவில் தடை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு அது 1984இல் நடைமுறைக்கு வந்தது. ஆனால் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, சில ஐரோப்பிய நாடுகள், ஜப்பான் ஆகியவை அந்த உடன்பாட்டில் கையெழுத்திடவில்லை. இந்த நாடுகள் அனைத்துமே பிற கிரகங்களுக்கு விண்கலங்களைச் செலுத்தும் திறன் படைத்தவை.இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத நாடுகள் செவ்வாயில் ஏதோ செய்யப் போக, அதன் ஒரு விளைவாக இதுவரை அறியப்படாத கிருமிகள் விண்கலங்கள் மூலம் செவ்வாயிலிருந்து பூமிக்குப் பரவினால் என்ன செய்வது? நியாயமான கேள்வி. இத்தகைய கேள்விகளுக்கான பதில்களையும் விஞ்ஞானிகள் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.


# பெண்ணின் வாழ்வில் மாற்றம் தரும் திருமணம்

திருமணமான பெண்கள் புதிய இடம், புதிய சூழல், கணவர் வீட்டில் அறிமுகம் இல்லாத மனிதர்கள் என்று பலருக்கும் நீங்கள் ஆரம்பத்தில் காட்சிப் பொருளாகத்தான் தெரிவீர்கள். உங்கள் சொல், செயல் எல்லாமே ஆரம்பத்தில் அவர்கள் பார்வைக்குபோகும். நீங்கள் அறிந்திராத நேரத்தில் உங்களைப் பற்றி அவர்கள் தெரிந்து கொள்ள முயற்சித்துக் கொண்டிருப்பார்கள்.

இந்த இடத்தில் தான் உங்கள் புத்திசாலித்தனம் வெளிப்பட வேண்டும். புகுந்த வீட்டில் உங்கள் விடயமாய் எந்த செய்தி உங்கள் காதுக்கு வந்தாலும் அதைப்பற்றி நீங்கள் தெரிந்ததாகவே காட்டிக் கொள்ளக் கூடாது. இதெல்லாமே நீங்கள் குடும்பத்தை அனுசரித்துப் போகிற பெண்ணா என்பதற்கான இரகசிய தேர்வாகக்கூட இருக்கும்.

உங்களை தங்கள் வீட்டுப் பெண்ணாக தேர்ந்தெடுத்தவர்கள் எடுத்த எடுப்பிலேயே வந்து திருமணத்துக்கு நாள் நட்சத்திரம் குறித்து விடவில்லையே..! உங்கள் குடும்பம் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்ட பிறகு தான் உங்களைப் பெண் பார்க்கவே வந்தார்கள். பார்த்தார்கள். அவர்கள் எதிர்பார்த்த எல்லா அம்சங்களும் உங்களிலும் உங்கள் குடும்பத்திலும் இருப்பதாக உணர்ந்ததால் மட்டுமே தங்கள் வீட்டுப் பெண்ணாக ஏற்றுக் கொண்டார்கள். தங்களைத் தாண்டிய ஒரு வெளிவட்டம், இன்னொரு உலகத்தை அவர்களிடம் அறிமுகப்படுத்தி விடுகிறது. இதனால் பலர் அல்ல, சிலராவது தங்கள் குடும்பத்தின் பாரம்பரியத்தில் இருந்து விலகிப் போகும் வாய்ப்பும் இருக்கிறது.

இதனால் தான் குடும்பம் பார்த்து பெண் எடுத்தாலும் புது மருமகளின் வெளிநட்பு எந்த அளவுக்கு அவளை பற்றிப் பிடித்திருக்கிறது என்பதை தெரிந்து கொள்ளும் விதமாய் அந்த புது மருமகள் கவனிக்கப்படுகிறாள். இதுபற்றித் தெரிந்தாலும் புது மருமகள் அதைப்பற்றிக் கண்டு கொள்ளாமல் தனது புதிய குடும்பத்தின் மீது தனது அக்கறையையும் ஆர்வத்தையும் ஏற்படுத்திக் கொண்டாலே இந்த மாதிரியான சந்தேகச் சாயல்கள் தோன்றிய வேகத்திலேயே மறைந்து போகும் மின்னல் போல் ஓடிவிடும் என்பது நிச்சயம்.



# வன்முறையை ஒடுக்குவோம்

■ இணையவள்

வன்முறை என்பது பெண்களுக்கான ஓர் அச்சுறுத்தல் ஆகும். இன்றைய பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் டிஜிட்டல் வன்முறை ஒரு புதிய பரிமாணம் ஆகும். அலைபேசி மற்றும் இன்டர்நெட் போன்ற தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் ஊடாக இழைக்கப்படும் வன்முறை டிஜிட்டல் அல்லது சைபர் வன்முறை எனப்படும். ஆபாச ஒளிப்படம், பெண்களின் அனுமதியின்றி அவர்களின் பொருத்தமற்ற படங்களையும், வீடியோக்களையும் சமூக வலைத்தளங்களில் மேலேற்றுதல், அதனைக்காட்டி பெண்ணை அச்சுறுத்தி பணம் பறித்தல் என்பனவும் இதிலடங்கும். ஆண்களின் அதிகாரம் நிறைந்த உலகில் முன்னேறுவதற்கான வாய்ப்புகள் கண் முன்னே நிறைந்து இருந்தாலும் அதைவிட அதிகமான தடைகளும், அவமானங்களும் பெண்களுக்கு உள்ளன.

கூடுதலாக ஆண்களின் பெண்ணுரிமை மீறல் ஜனநாயகப் பின்னடைவுக்கு காரணமாவதோடு, சமூக அவலங்களுக்கும் பெண்களை இட்டுச் செல்கின்றது. இந்த அவலங்களுக்கு எதிராக பெண்களுடன் சேர்ந்து போராட வேண்டும். பெண்களையும் குழந்தைகளையும் பாதுகாப்பதன் மூலமே பெண்களுக்கு எதிரான அடக்கு முறைகளை இல்லாது ஒழிக்க முடியும்.

பெண்களுக்குத் தேவையான சமச்சீரான கல்வியை அளிக்க முன்வர வேண்டும். பெண்களுக்கு எதிரான குற்றங்களை சகித்துக் கொள்ளும் மனப்பான்மையை சமுதாயம் மாற்றிக்கொள்ள வேண்டும். பெண்களுக்கு எதிரான தடைகளை யெல்லாம் தாண்டிப் பெண்கள் சமுதாயத்தில் முன்னுக்கு வரவேண்டும். மனித வளத்துக்காக பெண்கள் செய்யும் தியாகங்களையும் எதிர்காலப் பயன்களையும் கருத்தில் கொண்டு பெண்கள் மீதான வன்முறையை ஒடுக்கப் போராட வேண்டும்.



# முடிவு உங்கள் கையில்!

உடல் நன்றாக இருக்க வேண்டும் என்றால், மனம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். ஆனால், இன்றைய சூழ்நிலையில், வேலைக்குச்செல்லாத பெண்களுக்கு ஒரு வகை பிரச்சினை என்றால், வேலைக்கு செல்லும் பெண்களுக்கு மற்றொரு வகை பிரச்சினை. வாழ்க்கையில் பிரச்சினைகள் வந்து கொண்டும், போய்க் கொண்டும் தான் இருக்கும். இதை எளிதாக எடுத்துக் கொள்ளாமல், அதிலே மனதை மூழ்கவிட்டால், பின், அதிலிருந்து மீள முடியாது. அதற்கு பதில், பிரச்சினைகளை ஏற்றுக் கொண்டு, அவற்றை சமாளிக்கும் செயல்களில் ஈடுபட்டால், மனம் பலப்படுவதுடன், நம்மால் எதையும் சமாளிக்க முடியும் என்ற, தன்னம்பிக்கையும் ஏற்படும். இன்று நிறைய பெண்களுக்கு, தங்கள் மீதான நம்பிக்கை குறைவாக உள்ளது. ஒரு செயலை செய்து முடித்த பின்பும் கூட, அதில் மனதிருப்தி அடையாமல் உள்ளனர். வேலையைச் செய்யும் முன், மட்டுமல்லாமல், செய்து முடித்த பின்னும், படபடப்பாகவே இருக்கின்றனர். இது கூடாது. ஒரு செயலை செய்யும்போது, அதில், மனதை முழுமையாக செலுத்துவதுடன், அதில் திருப்தி அடைய வேண்டும்.

கடையில், வெகுநேரம் ஒரு புடைவையைப் புரட்டிப் பார்த்து வாங்கி, பின், வீட்டுக்கு வந்தவுடன் பிரித்துப் பார்க்கும் போது, உங்கள் எண்ணமே வேறாகி விடுகிறது. இதைப் போய் எடுத்து விட்டோமே... இதை விட, அந்த புடைவை நன்றாக இருந்தது. அதை எடுத்திருக்கலாம்... என்று, மனம் நினைக்கிறது; எரிச்சல் வருகிறது.

இதனால், அன்று முழுவதும் செய்யும் செயல்கள் எதுவும், ஒழுங்காக இருப்பதில்லை.

இதைப் போன்று பல சந்தர்ப்பங்களில் முடிவு எடுப்பதும், பின், அது சரியில்லை என்ற எண்ணமும் உங்களுக்கு ஏற்படுகிறது என்றால், நீங்கள் உறுதியான முடிவு எடுக்கவில்லை என்று அர்த்தம்.

ஒரு முடிவு செய்து, புடைவை எடுத்து விட்டீர்கள். இதைப் பற்றி, பிறர் என்ன அபிப்பிராயம் கூறினாலும், அதைப் பொருட்படுத்தக் கூடாது என்று தீர்மானம் செய்து கொள்ள வேண்டும்.

# இந்த வாரம் 12.06.2016 முதல் 18.06.2016 வரை

# உங்களுக்கு எப்படி?

## மேடம்

சுக்கிரன், குரு, கேது நன்மை தருவர். மதி நுட்பத்தால் பணிகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களுக்கு, உங்கள் மீதான பாசம் வளரும். பயணங்கள் இனிய அனுபவம் தரும். புத்திரர்கள் எதிர்கால நன்மையை கவனத்தில் கொண்டு, உங்களுடன் ஒத்துழைப்பர். உடல் நிலைக்குச் சிகிச்சை தேவைப்படும். தொழில், வியாபாரம் வளர்ச்சிபெற, புதிய திட்டம் தீட்டுவீர்கள். பணியாளர்களுக்கு கூடுதல் சலுகை கிடைக்கும். பெண்களுக்கு தாய்வீட்டு உதவியும், வாழ்க்கைத் துணைவரின் ஒத்துழைப்பும் கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் அடைவர்.

## இடபம்

சுக்கிரன், சந்திரன் செல்வ வளம் தருவர். உங்களைப் பற்றி தெரியாதவர்களிடம், குடும்ப பெருமை பற்றி பேச வேண்டாம். உறவினர்கள் தரும் ஆதரவு மனதுக்கு ஊக்கம் தரும். வாகனம் இயக்கும்போது கவனம் வேண்டும். புத்திரர்களின் உடல்நலம் பாதிக்கப்படலாம். உணவு வகையில் கவனம். எதிரிகளால் வருகிற சிரமங்களைச் சரி செய்ய முயற்சிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு வேலைப்பளு காரணமாக பணிகள் பின்தங்கலாம். வாழ்க்கைத் துணைவர் சொல்லும் ஆலோசனை, குடும்ப நலனுக்கு உதவும். மாணவர்கள் சுமாராகப் படிப்பர்.

## மிதுனம்

சுக்கிரன், ராகு, சனி, செவ்வாய் வியத்தகு அளவில் நற்பயன் தருவர். புதிய திட்டங்களைச் செயற்படுத்த வாய்ப்பு வரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். வாகனப் பராமரிப்புச் செலவு உயரும். புத்திரர்கள் அறிவாற்றல் சிறந்து படிப்பு வேலையில் மேம்படுவர். விவகாரம் அணுகாத சுமுக வாழ்வு உருவாகும். வாழ்க்கைத் துணைவர் கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். உறவினர்களின் வருகையால், வீட்டில் மகிழ்ச்சி இருக்கும். பணியாளர்கள், உற்சாகத்துடன் பணி புரிந்து, அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர். மாணவர்கள் விரும்பிய படிப்பில் இடம் கிடைக்கும்.

## கடகம்

குரு, சூரியன், புதன், சுக்கிரன் நற்பயன் தருவர். முக்கியமான பணி சிறப்பாக நிறைவேறும். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சிகூடும். பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்கள், பெற்றோரின் கருத்துகளை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வர். மனைவி குடும்ப நலனில் அக்கறை கொள்வார். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் நிறைந்த சலுகை பெறுவர். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும். நகை, புத்தாடை வாங்கலாம். மாணவர்கள் நன்றாகப் படிப்பர். விரும்பிய கல்லூரியில் இடம் கிடைக்கும்.

## சிங்கம்

சூரியன், புதன், சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டாகும். எதிர்பாராத ஒரு நிகழ்வு மனதுக்கு வருத்தம் தரலாம். பணிகளை நிறைவேற்ற ஆர்வமுடன் செயற்படுவீர்கள். இதற்கு குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும். வீடு, வாகனத்தில் மாற்றம் செய்வீர்கள். புத்திரர்களின் செயல்களில் குளறுபடி ஏற்படலாம். பூர்வீகச் சொத்தில் ஓரளவு வருமானம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஓரளவு இலாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு ஓரளவே சலுகை கிடைக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவுக்கு தட்டுப்பாடு வரலாம். மாணவர்களுக்கு விரும்பிய பாடம் கிடைக்க சிரமப்பட வேண்டி வரும்.

## கன்னி

சனி, சுக்கிரன், செவ்வாய், கேது அளப்பரிய நன்மை தருவர். சுய திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். முக்கியமான செயல் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் அன்புடன் நடந்து கொள்வர். வாகன பராமரிப்பு செலவு கட்டுக்குள் வரும். புத்திரர்கள் நல்ல பழக்க, வழக்கங்களைப் பின்பற்றி, பெற்றோருக்குப் பெருமை சேர்ப்பர். நோய் தொந்தரவு விலகி, உடல் ஆரோக்கியம் பலம்பெறும். மனைவி விரும்பிக்கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து நல்ல இலாபம் வரும். பணியாளர்களுக்கு அலுவலகத்தில் கேட்ட சலுகை கிடைக்கும். மாணவர்கள் ஆசிரியரின் அறிவுரையை ஏற்று நடக்கவும்.

## துலாம்

ராகு, குரு, சுக்கிரன், புதன் அதிக நன்மை தருவர். பணிகளை குறித்த காலத்தில் நிறைவேற்றுவீர்கள். மனதில் பலநாள் இருந்த கவலை மறையும். உடன்பிறந்தவர்களுக்கு மங்கள வைபவங்களை நடத்துவீர்கள். புத்திரர்கள், உங்கள் வழி காட்டுதலை ஏற்றுச் செயற்படுவர். எதிரிகளால் ஏற்பட்ட தொந்தரவு விலகும். கடன்களைச் செலுத்தி நிம்மதி பெறுவீர்கள். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தரவும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி நிறைவேறும். பணவரவில் திருப்திகரமான நிலை உண்டு. பணியாளர்களுக்கு எளிதில் சலுகை கிடைக்கும். பெண்கள், உறவினர்களை உபசரித்து நற்பெயர் பெறுவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## விருச்சிகம்

சந்திரன் ஓரளவு நன்மை தருவார். பேச்சில் சாந்தம் இருப்பது நல்லது. அதிக உழைப்பு இருந்தாலும் அதிர்ஷ்டகரமான பலன்கள் வரும். தாய்வழி உறவினர்கள், உங்களுடன் அன்புடன் இருப்பர். வாகனங்களை மெதுவாக இயக்கவும். புத்திரர்கள், உங்கள் திட்டங்களை ஏற்றுக்கொள்ள தயங்குவர். சேமிப்புப் பணம் செலவாகும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் போட வேண்டாம். உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். பெண்களுக்கு வீட்டுச்செலவுக்கு போதுமான பணம் இருக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

## தனுசு

சூரியன், புதன், குரு, கேது நல்ல பயன்களைத் தருவர். நல்லவர்களின் உதவி கிடைக்கும். புதிய திட்டங்களை செயற்படுத்துவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி அதிகரிக்கும். சிலர் வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரர்களின் தேவையை நிறைவேற்ற செலவு அதிகரிக்கும். வழக்கு, விவகாரங்களில் இதமான அணுகுமுறை வேண்டும். மனைவியின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தருவதால், குடும்பத்தில் ஒற்றுமை வளரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி கூடும். பணியாளர்களுக்கு பாராட்டு, சம்பள உயர்வு கிடைக்கும். பெண்கள் கணவரின் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு தந்து குடும்பம் சிறக்க உதவுவர். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

## மகரம்

சுக்கிரன், சனி, செவ்வாய், சந்திரன் நன்மை தருவர். கடந்த காலத்தில் உருவான சிரமம் பெருமளவில் குறையும். தம்பி, தங்கைகளின் கருத்தில் உள்ள நியாயத்தை உணர்வீர்கள். பயணங்கள் இனிதாக அமையும். புத்திரர்கள் தங்கள் தேவை நிறைவேறிய சந்தோசத்தில் மனம் நெகிழ்வர். உடல்நிலை சுமாராக இருக்கும். மனைவி பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரம் செழித்து, ஆதாய பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு சலுகை எளிய முயற்சியால் வந்து சேரும். மாணவர்கள் நண்பர்களின் உதவியால் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## கும்பம்

குரு, சுக்கிரன், புதன் சந்திரனால் நன்மை கிடைக்கும். சிறு பணிகளில் கூட மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். வசீகர வார்த்தை புதியவர்களின் உதவியைப் பெற்றுத்தரும். தம்பி, தங்கை உங்கள் ஆலோசனையை ஏற்க தயங்குவர். சிலர் வசதியான இடத்துக்கு வீடு மாறும் சூழல் ஏற்படலாம். புத்திரர்களின் அறிவாற்றல் நிறைந்த செயல்கள் வியப்பும், மகிழ்ச்சியும் தரும். பகைவரால் உருவான கெடு செயல் பலமிழக்கும். மனைவியுடன் கலந்து பேசி திட்டங்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். பணியாளர்கள் பாதுகாப்பில் அதிக கவனம் பின்பற்றவும். பயணங்களால் பலன் இருக்காது. மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

## மீனம்

ராகு, சூரியன், சுக்கிரன் அளப்பரிய நற்பயன் தருவர். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பொது இடங்களில் நடக்கும் விவகாரங்களில் பங்கேற்காதீர்கள். அறிமுகமில்லாதவர்களுக்கு வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரர்களின் நற்செயலால் மனம் மகிழ்ச்சியாக இருக்கும். தொழில், வியாபராத்தில் உற்பத்தி, விற்பனை செழித்து நல்ல இலாபம் வரும். பணியாளர் கள் நிர்வாகத்தின் சட்ட திட்டத்தை மதித்து நிறைந்த சலுகை பெறுவர். பெண்கள் பண வசதிக்கேற்ப வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் நண்பர்கள் விடயத்தில் கவனமாக இருக்கவும்.

# முட்டாள் கரடிகள்

ஓர் ஓக் மரத்தின் பொந்தில் ஒரு சிறிய அணில் வாழ்ந்து வந்தது. மரத்துக்கு அடியில் மூன்று கரடிகள் மரத்தின் பெரிய துவாரத்தில் வாழ்ந்தன. அவை அணிலுக்கு நண்பர்களாகத் திகழ்ந்தன.

ஒரு நாள் அணில் பழக்கொட்டைகளை வேட்டையாடி விட்டுத் திரும்பி வந்தது. மரத்தின் அடியில் கரடிகள் அழுது கொண்டிருந்தன.

அங்கே ஒரு மரக்கிளை விழுந்து கிடக்கிறதே. நாங்கள் துவாரத்திலிருக்கும்போது அது அடைத்துக் கொண்டால் எங்களால் வெளியே வர முடியாது. நாங்கள் வெளியே இருக்கும்போது துவாரத்தை மூடி விட்டால் நாங்கள் உள்ளே போகமுடியாது என்று அவை கூறின.



உடனே அணில் கூறியது 'அட முட்டாள்களே! உங்கள் கதவுக்கு அருகில் வராமல் அந்த மரக்கிளையைப் பல்லால் கடித்துத் தூரத்தில் போட்டு விட்டால் இந்தச் சிரமம் ஏற்படாது.

“அப்படியா! அந்த எண்ணம் எங்களுக்குத் தோன்றவில்லையே!” என்று சொல்லி விட்டு மரக்கிளையை இழுத்துப் போய்த் தூரத்தில் போட்டு விட்டன.

அணில் அவற்றிடம் “நான் இங்கிருந்து வெளியேறுகிறேன். உங்களைப்போல மூன்று முட்டாள்களைப் பார்த்தா லொழிய இந்த இடத்துக்கு மறுபடியும் திரும்பமாட்டேன் என்றது. பாதையில் அணில் சென்று கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு சிறிய ஓசை கேட்டது. ஓர் ஆமை பாறையின் செங்குத்தான பகுதியில் ஏற முயன்று கொண்டிருந்தது. அணில் அந்த ஆமையிடம் “நண்பன் ஆமையே! நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?” என்று கேட்டது.

“எனது ஒன்று விட்ட சகோதரன் ஆமை உடல் சுகவீன முற்றுப் படுத்த படுக்கையாக இருக்கிறான். அவனைப் போய்ப்பார்க்க வேண்டும். நான் இந்தப் பாறையில் ஏறி அவன் இருப்பிடம் செல்ல முடியவில்லை,” என்று வருந்தியது ஆமை.

அணில் கேட்டது. “அப்படியானால் அந்தப் பாறையைச் சுற்றிப்போய் நடந்து உன் ஒன்று விட்ட சகோதரனைப் பார்க்கலாமே.”

“அடடா! அந்த யோசனை எனக்குப்படாமல்போய் விட்டதே”என்றது ஆமை.

“முட்டாள்களில் இதுவும் ஒன்று” என்று சொல்லி நகர்ந்த அணில் போகும் வழியில் ஒரு சிறிய ஓடையைக் கடந்து மேலே செல்லும்போது ஒரு முயலைச் சந்தித்தது. அந்த முயல் வானத்தைப் பார்த்துக் கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தது.

“காலை வணக்கம் முயலாரே! எதை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?”

“அதோ வானத்தில் மேகங்கள். மழை பெய்யக் காத்திருக்கின்றேன். எனக்குத் தாகமாய் இருக்கிறது” என்றது முயல்.

“நீ எதற்காக மேகங்களுக்குக் காத்திருக்கவேண்டும். சிறிது தூரத்தில் ஓர் ஓடை இருக்கிறது. அங்கே போய் உன் தாகத்தைத் தணித்துக் கொள்ளலாமே,” என்றது அணில். “அட! அதைப் பற்றிச் சிந்திக்கவே இல்லையே” என்று முயல் சொல்லிக் கொண்டது.

இரண்டாவது முட்டாளையும் சந்தித்து விட்டேன் என்று எண்ணிக் கொண்டது அணில்.

கொஞ்சத் தூரம் சென்றதும் அத்திப்பழத் தோட்டம் வழியாக அணில் சென்றது. தரையிலும் அத்திப் பழங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. அங்கே ஒரு பெரிய கரடி அமர்ந்து தோட்டத்துக் கொடியை அண்ணாந்து பார்த்துக் கொண்டு இருந்தது.

“என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய்” என்று அணில் கரடியிடம் கேட்டது.

“தோட்டத்து உச்சியில் அத்திப் பழங்கள் காய்த்துத் தொங்குகின்றன. அவை கீழே விழுவதற்குக் காத்திருக்கிறேன்” என்று பெருமூச்சு விட்டது பெரிய கரடி.

“ஏன் கொடிகளிலிருந்துதான் பழங்கள் வேண்டுமா? அங்கே தரையில் அத்திப் பழங்கள் வீழ்ந்துள்ளனவே” என்றது அணில்.

கரடி தலையை ஆட்டியபடியே எனக்கு “அது என் புத்தியில் படவில்லையே” என்றது.

மூன்று முட்டாள்களைப் பார்த்துவிட்ட பிறகு மறுபடியும் பயணத்தைத் தொடர அணிலுக்கு விருப்பமில்லை. முன்பு இருந்த மரத்துக்குத் திரும்பி அங்குள்ள கரடிகளுடன் நட்புடன் வாழத் தொடங்கியது.

# வரலாற்றில் இன்றைய தினம்



1889 - தற்போது வட அயர்லாந்து என அழைக்கப்படும் ஆர்மா அருகே நிகழ்ந்த புகையிரத இடரில் 80 பேர் உயிரிழந்தனர்.

1898 - ஸ்பெயினிலிருந்து இந்தோனேஷியா சுதந்திரம் பெற்றதாக ஜெனரல் எமியோ அகியூனால்டோ பிரகடனம் செய்தார்.

1899 - அமெரிக்க வரலாற்றில் 8ஆவது மோசமான சுழல் காற்றினால் 117 பேர் உயிரிழப்பு; 200 பேர் வரை காயம்.

1935 - சாகோ போரை முடிவுக்குக் கொண்டு வரும் போர் நிறுத்தப் பேச்சு வார்த்தை பொலிவியா மற்றும் பராகுவே இடையே இடம்பெற்றது.

1964 - தென் ஆபிரிக்காவில் நாசங்கள் விளைவித்தாகத் தெரிவிக்கப்பட்டு நிறபாகுபாட்டுக்கு எதிரான செயற்பாட்டாளரும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவருமான நெல்சன் மண்டேலாவுக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

1967 - வேறொரு கிரக வளிமண்டலத்துள் பிரவேசித்து தகவல்களை அனுப்பிய முதலாவது விண்வெளி ஆய்வு வெனீரா - 4 தொடங்கப்பட்டது.

1978 - நியூயோர்க் நகரில் ஆறு கொலைகளை மேற்கொண்ட சாவின் மைந்தன் எனப்படும் பிரயன் பேர்கோவிற்சிற்கு 365 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

1987 - மத்திய ஆபிரிக்கக் குடியரசின் முன்னாள் பேரரசர் ஜீன் பெடல் பொக்காஸாவுக்கு அவரது 13 ஆண்டுகள் ஆட்சிக் காலத்தில் மேற்கொண்ட குற்றச் செயல்களுக்காக சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது.

1990 - ரஷ்யன் பெடரேஷனின் இறையாண்மை நாடாளுமன்றினால் முறைப்படி பிரகடனப்படுத்தப்பட்டது.
- அமைச்சர் ஹமீத் - புலிகள் சந்திப்பில் போர் நிறுத்தத்துக்கு இணக்கம்.
- கிழக்கு மாகாணத்தில் அகோர ஷெல் மற்றும் ஹெலித் தாக்குதலில் 40 பொது மக்கள் சாவு.
- யாழ்.கோட்டையினுள் தரையிறங்க முடியாது திரும்பியது ஹெலி.
- நிறவேற்றுமை ஒழிப்பு முன்னேற்றத்தை மதிப்பீடு செய்ய ஐக்கிய நாடுகள் உயர் நிலைக்குழு தென்னாபிரிக்கா பயணம்.
- தாயகத்தை மீட்கும் பலஸ்தீனியரின் போராட்டம் நசுக்கப்படும் என இஸ்ரேலிய புதிய அரசு அறிவிப்பு.
- மொழிச் சட்டத்தை மீறினால் 3 மாத கால சிறைத் தண்டனையென அரசகரும மொழித்திணைக்கள ஆணையாளர் நிமல் சமரசுந்தர தெரிவிப்பு.
- வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்புத் தொடர்பான சர்வசன வாக்கெடுப்பு ஜனவரிக்கு ஒத்தி வைப்பு.

1991 - கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலை கிராமத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் 152 தமிழ் மக்கள் படுகாலை செய்யப்பட்டனர்.

1992 - தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் மீதான தாக்குதலுக்கு இந்து மாமன்றம் கண்டனம்.
- 18 கோடி டொலர் பெறுமதியான 354 கிலோ நிறையான ஹெரோயின் மும்பாயில் பிடிபட்டது.

1997 - லண்டன் குளோப் தியேட்டர் இரண்டாம் எலிசபெத் மகாராணியால் மீளத் திறக்கப்பட்டது.

1999 - கொசோவா போர்; யூகோஸ்லேவியா குடியரசின் கொசோவா மாகாணத்தினுள் நேட்டோ தலைமையிலான ஐக்கிய நாடுகள் சமாதானப் படை பிரவேசித்தது.

# பாப்பாவும் கிளியும்



பாப்பா :

கூண்டில் இருக்கும் கிளியக்கா
குறையென்ன உனக்கு இனியக்கா
பால் கொண்டு தருவேன் உனக்கக்கா!
பாட்டொன்று சொல்லேன் நீயக்கா!

கிளி :

தங்கச்சிப் பாப்பா கேட்பாயே
தவிக்கிறேன் சிறையில் பார்ப்பாயே!
விடுதலை வேண்டும் தருவாயே!
விளையாட நானும் வருவேனே!

பாப்பா :

அடைத்து உன்னை வைத்திடுவேன்!
அன்பாய்த் தினமும் நடத்திடுவேன்!
சிரித்து நீயும் மகிழ்ந்திடவே
சிறப்பாய்க் கூண்டில் இருந்திடுவாய்!

கிளி :


சுதந்திரம் உலகில் இல்லாமல்
சுகமாய் இருக்க முடிந்திடுமா?
அடைத்து வைத்தால் நீ என்னை
அன்றே நானும் மடிந்திடுவேன்!

பாப்பா :

வேண்டாம் அக்கா விடுதலையை
விரும்பும் உனக்குத் தருகின்றேன்
தூண்டா விளக்காய் இருவருமே
தொடர்ந்து நடப்பாய் இருந்திடுவோம்



ச.அமலினி,
தரம் - 6A
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



ந.யோகப்பிரியா,
தரம் - 5C
யா/சென்.பெனடிற் றோ.க.த.க. வித்தி



# வீட்டிலேயே அழகு நிலையம்

தேங்காய் எண்ணெயில் மஞ்சள்தூளை போட்டுக்குழைத்து உடம்புக்கும் தடவி, பயத்தமாவை தேய்த்துக் குளித்தால் தோல் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும்.
தோடம்பழத்தை இரண்டாக வெட்டி முகத்தில் தேய்த்து, பத்து நிமிடம் கழித்து சோப்பு போட்டு கழுவ வேண்டும். தினம் இவ்வாறு செய்து வந்தால் முகம் பளபளப்பாகவும், இளமையுடனும் இருக்கும். முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க அடிக்கடி எலுமிச்சைச் சாற்றைத் தடவ வேண்டும். தினமும் இவ்வாறு செய்வதால் முடி வளர்ச்சி குறைந்து முகம் அழ்கு பெறும்.
பருமனாக இருப்பவர்கள் எடையைக் குறைக்கத் தினமும் காலையில் ஒரு கோப்பை வெதுவெதுப்பான வெந்நீரில் ஒரு மூடி எலுமிச்சம் பழச்சாற்றை பிழிந்து அதனுடன் அரைக் கரண்டி தேன் கலந்து சாப்பிட்டால் எடை குறையும்.
நகங்களை வெட்டும் முன் எண்ணெயை தடவிவிட்டு, சிறிது நேரம் கழித்து நகத்தை வெட்டினால், விரும்பும் வடிவத்திலும், அழகாகவும் வெட்ட இயலும்.
கூந்தலில் எண்ணெய் பசை அதிகமாக இருந்தால், கோழி முட்டையில் கொஞ்சம் சீனியைக் கலந்து தலையில் லேசாக தடவிக்கொண்டு, பிறகு தலைக்கு ஊற்ற வேண்டும். இதனால் எண்ணெய் பசை நீங்கி முடி அழகு பெறும்.

தேநீரில் வடிகட்டிய பின், மிஞ்சும் தேயிலைத் தூளில் எலுமிச்சம் பழச்சாறை பிழிந்து, தலையில் தேய்த்துக் குளித்தால், தலை முடி பளபளப்பாகும்.
வேப்பிலை, சிறிது மருதாணி மற்றும் குப்பைமேனி இலைகளை காயவைத்து, தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் சிறிது எடுத்து, பாலில் குழைத்து, முகத்தில் பூசி, 20 நிமிடம் ஊற வைத்து குளித்தால், முகம் வேர்க் குரு வராமல், வெளியில் கறுத்துப் போகாமல் இருக்கும். இளம் சூடான ஒரு லீற்றர் நீரில், இரண்டு கரண்டி உப்பைப் போட்டு,கண்களைகழுவினால்கண்கள் பிரகாசமாக இருக்கும்.
கை, கால் முட்டிகளில் கறுப்பு நிறம் அதிகமாக இருந்தால், தொடர்ந்து அந்த இடத்தில் எலுமிச்சம்பழச் சாற்றைத் தேய்த்து சோப்பு போட்டு குளிக்க வேண்டும் நாளடைவில் கறுப்பு நிறம் போய்விடும். தோல் வறண்டும், சுருக்கமும் இருந்தால் ஓலிவ் ஆயிலைப் பூசி, சிறிது நேரம் ஊற வைத்து, சோப்பு போட்டு குளிக்க வேண்டும். அப்பிள் பழத்தை சின்னச் சின்ன துண்டுகளாக வெட்டி முகத்தில் தடவினால் சருமத் தில் உள்ள எண்ணெய்ப் பசை குறையும்.



## சீப்புச் சீடை

**தேவையான பொருள்கள்**
அரிசி மா - 1 கோப்பை
உளுத்தம் மா - கால் கோப்பை
மா - கால் கோப்பை
கெட்டியான தேங்காய் பால் கால் கோப்பை
வெண்ணெய் - ¼ கரண்டி
உப்பு தேவையான அளவு
எண்ணெய் தேவையான அளவு
சுடுநீர் தேவையான அளவு

**செய்முறை**
முதலில் ஒரு கோப்பையில் அரிசி மா, உளுத்தம் மா மற்றும் கடலை மா சேர்த்து, அத்துடன் உப்பு, வெண்ணெய் சேர்த்து கையால் பிசைய வேண்டும்.
பின்னர் அதில் தேங்காய் பாலை வெதுவெதுப்பாக சூடேற்றி கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றி மென்மையாக பிசைந்து கொள்ள வேண்டும்.
தேங்காய் பால் போதாமல் இருந்தால், சுடுநீரைக் கொஞ்சம் ஊற்றிப் பிசைந்து கொள்ளலாம்.
பின்பு முறுக்கு உலக்கை எடுத்துக்கொண்டு, தட்டையாக சீப்புப் போன்று இருக்கும் அச்சை எடுத்துப் பொருத்தி, பின் அதில் மாவை வைத்து, ஒரு தட்டில் நேராக ஒரு கோடு போன்று பிழிய வேண்டும்.
பின் கத்தியால் சிறு துண்டுகளாக வெட்டி, பின் அதனை உருட்டிக் கொள்ள வேண்டும். பிறகு ஒரு சட்டியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், உருட்டி வைத்துள் ளதைப் போட்டுப் பொரித்து எடுத்தால், சீப்புச் சீடை தயார்.

## இனி எப்பவும் அழகுதான்



**உப்புநீர் :**
உங்கள் பற்களை விளக்கியவுடன் வெதுவெதுப்பான உப்பு நீரில் கொப்பளியுங்கள். இது உங்கள் ஈறு பலம் பெறவும், வாயிலுள்ள மோசமான கிருமிகள் அழியவும் உதவும். இது பற்கள் சொத்தை மற்றும் சிதைவிலிருந்து காப்பாற்றும். பற்களும் ஆரோக்கியமாக இருக்கும். அடுத்தது 2 ரம்ளர் தண்ணீர் குடியுங்கள். இது உங்க தோலில் தங்கியிருக்கும் கழிவுகளை வெளியேற்றும். இந்த கழிவுகள் தான் சருமத்தின் மினுமினுப்பைக் குறைக்கும். ஆகவே அவற்றை வெளியேற்ற வெறும் வயிற்றில் தண்ணீர் குடிக்க வேண்டும்.

**உடற்பயிற்சி :**
அடுத்து நீங்க செய்ய வேண்டியது உடற்பயிற்சி. நிறைய நேரம் எடுத்துக் கொள்ள வேண்டியது இல்ல. குறைந்த பட்சம் 20 நிமிடங்களாவது நீங்கள் உடற்பயிற்சி செய்து பாருங்கள். உங்கள் ஹார்மோன் எல்லாம் நன்றாகத் தூண்டப்படும். சுறுசுறுப்பாக இருப்பீர்கள்.

**சத்துள்ள உணவு :**
மற்ற இரு வேளைகளை விடவும், காலையிலேயே நீங்கள் அதிகமாக உணவு சாப்பிட வேண்டும். அது நார்சத்துக்களைக்கொண்டுள்ளதால், கொலஸ்ரோல் அளவைக் கட்டுப் படுத்தி, உடலை ஆரோக்கியமாக வைக்க உதவுகிறது.

## தேவையற்ற முடிகளை நீக்க...

தேவையற்ற முடிகளை நீக்குவதற்கு உடலிலுள்ள முடிகளை நீக்குவதற்கு ஷேவிங் செய்வதை விட உடலிலுள்ள முடிகளை நீக்குவதற்கு வேறொரு மாற்று வழி இருக்கிறது என்பது தான் ஆறுதலான விடயம்.
பல்வேறு காரணங்களுக்காகவும், பல்வேறு நபர்களுக்கும் ஷேவிங் கைவிட வேக்சிங் செய்தல் தான் (மெழுகு பயன்படுத்துதல்) சிறந்த வழிமுறையாக உள்ளது.
ஷேவிங் செய்யும் போது நீங்கள் கூர்மையான பிளேடுகள் பயன்படுத்தும்போது, உங்களுடைய உடலில் சில இடங்களில் காயங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடிவதில்லை. இதனைப் பயன்படுத்தும்போது முடியானது அதிக அடர்த்தியாக வளர்ந்து விடுவதை தடுத்திட முடியாது. ஷேவிங் செய்வதால் ஏற்படும் எரிச்சல், மெழுகு வேக்சிங் செய்யும் போது வராது.
வேக்சிங் என்பது சூடான மெழுகை உங்களுடைய தோலின் மேல் போட்டு, அதில் ஒட்டிக் கொண்டிருக்கும் முடிகளை ரேப்பர்களை பயன்படுத்தி அதன் மேல் ஒட்டி, முடிக்கு நேரெதிர் திசையில் பிய்த்து எடுப்பதுதான் வேக்சிங் முறையாகும். மெழுகின் அளவை கொஞ்சம் தாரளமாய் பயன்படுத்தினால், வலியின் அளவை குறைத்திட முடியும். இப்போது மாய்ஸ்சுரைசர்களை கொண்ட மெழுகுகள் விற்கப்படுகின்றன. முடியை நீக்கத் தொடங்கும் முன்னதாக இதை தடவிக் கொண் டால், அந்த பகுதிகள் மென்மையாக விடுகின்றன. எனவே, மாய்ஸ்சுரைஸர்களை மெழுகில் சேர்த்து தடவுவதன் மூலம் அந்த பகுதியிலுள்ள சருமம் மென்மையாகி விடுவதால், முடியை முழுமையாக வெளியே உருவி எடுத்துவிட முடியும். நிரந்தமான முடி நீக்கம் செய்ய வேக்சிங் மிக சிறந்ததாகக் கருதப்படுகிறது. வேக்சிங் பயன்படுத்தி, முழுமையான அழகைப் பெற்றுபயனடைவோம்.



# யானைக்குள் அணையுமா தீப்பந்தம்?

ஸூடோ ஸ்வாமி

2008ஆம் ஆண்டு இடம்பெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான ஹிலாரி கிளின்ரன், அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அதே ஜனநாயகக் கட்சியில் மீண்டும் வேட்பாளராகத் தேர்வு செய்யப்படுவது உறுதியாகிவிட்டது. எதிர்வரும் கார்த்திகை மாதம் எட்டாம் திகதி இடம்பெறவுள்ள அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதித் தேர்தலில் இவர் பெரும் எதிர்பார்ப்புக்குரிய வேட்பாளராக அமையப்போகிறார். அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதியாக விளங்கும் பராக் ஒபாமாவும் ஹிலாரி கிளின்ரனின் அதே ஜனநாயகக் கட்சியை சேர்ந்தவர்தான்.

அமெரிக்காவில் உள்ள இரு பெரும் கட்சிகளில் ஒன்றான ஜனநாயகக் கட்சியின் நிலவரம் இவ்வாறிருக்க, இலங்கையில் உள்ள ஜனநாயக கட்சி தனது கடைசி அத்தியாயங்களை எழுதி வருவதாகத் தெரிய வருகிறது.

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்விகண்ட பீல்ட்மார்ஷல்சரத்பொன்சேகாவினால் கட்டியெழுப்பப்பட்ட ஜனநாயகக் கட்சிக்கு மூடுவிழா நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான கலந்துரையாடல் கடந்த நான்காம் திகதி சனிக்கிழமை அந்தக் கட்சியின் பத்தரமுல்ல அலுவலகத்தில் இடம்பெற்ற நிறைவேற்றக்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டிருக்கிறது.

2010ஆம் ஆண்டில் நடைபெற்ற பரபரப்பான ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு 40.15 வீத வாக்குகளை பெற்று தோல்வியடைந்த சரத் பொன்சேகா, அதே ஆண்டில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயக தேசிய முன்னணி என்ற கூட்டை ஏற்படுத்தி ஜே.வி.பி. மற்றும் நவ சிஹல உறுமய போன்ற கட்சிகளின் சங்கமமாகப் போட்டியிட்டிருந்தார். 2013ஆம் ஆண்டு தமக்கென்று ஒரு கட்சியையும் தோற்றுவித்திருந்தார். ஜனநாயகக் கட்சி என்று நாமகரணம் சூட்டப்பட்ட அந்தக் கட்சி, தேர்தல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக அடையாளமிடப்பட்டிருந்தது. கட்சிச் சின்னமாக தீப்பந்தம் அறிவிக்கப்பட்டது.

> போர்க் குற்றச்சாட்டுக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய நிலையில் இருக்கக்கூடிய பொன்சேகா வையும் அவரது கட்சியையும் தனக்குள் ஈர்த்துக்கொள்வதை எப்படிப் புரிந்துகொள்வது என்பதிலேயே தமிழர்களின் அரசியல் எதிர்கால இருப்புக்கான பங்கு இருக்கிறது.

முன்னைய தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க, ஜனநாயகக் கட்சியைப் பதிவு செய்வதற்கான பொன்சேகாவின் விண்ணப்பத்தை நிராகரித்திருந்தார். அதனையடுத்து, அது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தார் பொன்சேகா. பின்னர், புதிதாகத் தேர்தல்கள் ஆணையாளராகப் பொறுப்பேற்றுக்கொண்ட மகிந்த தேசப்பிரியவினால் கட்சி பதிவு செய்யப்பட்டது.

கட்சி, 2013ஆம் ஆண்டில் நடந்த வடக்கு, வடமத்திய மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் போட்டியிட்டு முறையே வடமத்திய மாகாணத்தில் மூன்றும் மத்திய மாகாணத்தில் இரண்டுமாக ஐந்து ஆசனங்களை தனதாக்கிக் கொண்டது. அதேவேளை வடமாகாணத்தில் 170 வாக்குகளையும் பெற்றது. 2014ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் நடந்த, தென் மற்றும் மேல் மாகாணங்களுக்கான தேர்தலில் ஜே.வி.பியையும் முந்திக்கொண்டு பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி 12 ஆசனங்களைப் பெற்றிருந்தது.

எனினும் அந்த ஆண்டு புரட்டாதி மாதத்தில் இடம் பெற்ற ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஆசனங்கள் எதனையும் ஜனநாயகக்கட்சியால் வெல்ல முடியவில்லை.

2015ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், தனது ஆதரவை எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளரான மைத்திரிபாலவுக்கு வழங்கியிருந்த ஜனநாயகக் கட்சி, அதே வருடத்தில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டபோதும் ஓர் ஆசனத்தையேனும் நாடாளுமன்றில் வெல்ல முடியவில்லை.

கடந்த மாசி மாதம் 3ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திட்டுக் கொண்டார் பொன்சேகா. எம்.கே. ஏ.டி. எஸ். குணவர்த்தனவின் இறப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்தின் ஊடாக தேசியப் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டு மாசி மாதம் 9ஆம் திகதி பதவியேற்றுக்கொண்டார். தற்போது அமைச்சரவை மதிப்புள்ள பிராந்திய அபிவிருத்திக்கான அமைச்சராகப் பதவி வகிக்கும் பொன்சேகாவுக்கு, ஐக்கிய தேசிய கட்சியுடனேயே ஐக்கியமாகும் போக்கு இருப்பதாக நம்பப்படுகிறது. குறிப்பாக அவர் களனிப் பிரதேசத்திற்கான ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக நியமிக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

தேசிய பட்டியலூடாகப் பொன்சேகா நாடாளுமன்றிற்கு உள்ளீர்க்கப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்து, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு கடந்த மாத இறுதியில்தான் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. குறித்த வழக்கில், பொன்சேகா ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டுள்ளமை தொடர்பில் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

கட்சிக் கலைப்புத் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் எதுவும் விடுக்கப்படாதபோதிலும், இனிவரும் தேர்தல்களில் ஜனநாயகக் கட்சியின் அங்கத்தவர்கள் யானைச் சின்னத்தின் கீழேயே போட்டியிடுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அதிகரித்த அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் காரணமாக வாக்குச்சீட்டு நீளம் அதிகரிப்பு உட்பட்ட பல தொல்லைகளைத் தேர்தல்கள் திணைக்களம் எதிர்கொள்வ தாக வும் வாக்காளர்கள் மத்தியில் குழப்பம் நிலவு வதாகவும் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் ஜனநாயகக் கட்சியின் கலைவு விவகாரம் சந்திக்கு வந்திருக்கிறது.

இன்னுமொரு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் எண்ணம் பொன்சேகாவிற்கு இல்லாதவிடத்து, ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயகக் கட்சிக்குச் சிறந்ததொரு புகலிடமாக அமையக்கூடும். ஆனால், தமிழர்களுடனான பிரச்சினைக்கு நீதியான - நியாயமான தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதற்கு முயல்வதாகக் காட்டிக்கொள்ளும் ஐக்கிய தேசியக் கட்சி, போர்க் குற்றச்சாட்டுக்களுக்குப் பொறுப்புக்கூறவேண்டிய நிலையில் இருக்கக்கூடிய பொன் சேகாவையும் அவரது கட்சியையும் தனக்குள் ஈர்த்துக்கொள்வதை எப்படிப் புரிந்துகொள்வது என்பதிலேயே தமிழர்களின் அரசியல் எதிர்கால இருப்புக்கான பங்கு இருக்கிறது.



# நாமிருக்கும் நாடு நமதென்பதறிவோம்

அன்றனி பீற்றர்

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனிசிறந்தனவே பெற்றதாயையும் பிறந்த பொன்னாட்டையும் எம்மிரு கண்ணாக நாம் போற்றி நடக்க வேண்டும். பிறந்தோம் வளர்ந்தோம் உண்டோம், உடுத்தோம் சென்றோம் என்றில்லாமல், நமக்குச் சான்றாக, அல்லது நம் வாழ்வைப் பின்பற்ற என்ன செயற்கரிய காரியம்செய்துள்ளோம்?, நாட்டுக்கு நலமென்ன புரிந்தோம்? என்று எண்ணி வாழ்பவர்கள் எத்தனை பேர்?

பெறுவதிலும் கொடுப்பதே மேல் என்பார்கள். இயற்கை முழுவதையும் நாம் நோக்குவோமாக இருந்தால் கொடுப்பதே அவற்றின் பிறவிப் பயனாக இருக்கின்றது.

இந்தச் செயற்பாட்டை எம்மில் எத்தனைபேர் உணர்ந்தவர்களாக இருக்கின்றோம். மனிதன் மட்டுமே கொடுப்பதைவிட பெற்றுக்கொள்வதிலே இன்பங் காண்பவனாக இருக்கின்றான். மனிதன் பயன் பெற வளர்க்கின்ற மிருகங்கள், பயிர்வகைகள் எல்லாம் தாம் பெற்றுக் கொள்வதில்லை. மனிதனுக்குக் கொடுக்கின்றன. அவை களஞ்சியங்களில் சேர்த்து வைப்பதில்லை சொத்துக்களுக்கு ஆசைப்படுவதில்லை, தமக்குள்ளே சண்டையிட்டு நாடுபிடிப்பதில்லை. இவற்றையெல்லாம் நாம் அவைகளிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

ஆறறிவு படைத்த மனிதர்களாகிய நாம் நமக்குள்ளே எத்தனையோ பேதங்களை, குரோதங்களை வளர்த்து வருகின்றோம். பெரும்பான்மையோர் சிறுபான்மையோரை அடக்கி, ஒடுக்கி தமக்குகீழ்ப்பட்டவர்களாக, இரண்டாம் தரப் பிரஜைகளாக இருக்க வேண்டும் என்ற நிலையிலே, இராஜ தந்திரமுடையவர்களாக மற்றவர்களை அடிமைப்படுத்தி, கீழ்மைப்படுத்தி வாழு (ஆளு) கின்றோம். மற்றவர்களுடையதைக் கொடுப்பதற்கு பதிலாகத் தட்டிப் பறித்து அவர்களை அநாதைகள், அகதிகளாக அலைந்து திரிய வைத்திருக்கின்றமையையும் உணர்கின்றவர்களாகவோ, புரிகின்றவர்களாகவோ இன்னும் நாம் சரிவர வாழவில்லை என்றுதான் எண்ண வேண்டியுள்ளது.



காலங்காலமாக ஏமாற்றப்பட்டவர்களாகவே எம் காலம் கடந்து செல்கின்றது. கறைபடிந்த எம் வரலாற்று ஆதாரங்கள் எம் கண்களை இன்னும் திறக்கவில்லை? அல்லது திறந்தும் திராணியற்றவர்களாக எமது கொடுக்கல் வாங்கல்கள் திறனற்றவைகளாக இருக்கின்றனவா? சாணேறமுளம்சறுக்கும் எமது சுயநலக் காய்நகர்த்தல்கள், எமக்குள்ளே ஒற்றுமையீனத்தையே மறைமுகமாக உருவாக்கச் செய்கின்றன.

விட்டுக்கொடுக்கும் மனம் என்பது இல்லாமல் வடலிவளர்த்தே கள்ளுக் குடிக்க வேண்டும் என்றது போல சிறுபிள்ளைத்தனமான செயல்களைச் செய்து தாழியை உடைக்கும் விண்ணர்களாகவே எம் மண்ணுக்குத் துரோகம் இழைக்கின்றோம்.

சாதாரணமாக எம் ஒவ்வொருவரின் தனிப்பட்ட வாழ்விலும் கூட, எத்தனை நன்மைகளைச் சமூகத்துக்காக ஆற்றியுள்ளோம்? உதாரணமாக தண்ணீர்க் குழாய் நீர் நிறைந்து வீணாக ஓடிக் கொண்டிருந்தாலும் அதனைக் கண்டும் காணாதவர்களாகச் செல்கின்றோம்? வீதி விளக்குகள் பகலாகியும் எரிந்து கொண்டே இருந்தாலும் எத்தனை பேர் அவ்விளக்குகளை அணைத்து விட்டுச் செல்கின்றோம். இவையெல்லாம் சிறிய சிறிய விடயங்களாக இருந்தாலும் எம் மண்ணின் சொத்துக்கள் தான். எம் எல்லோருக்கும் உரியவைகள் தான். எமது பெற்றுக்கொள்ளும் குணம் தண்ணீர் வராவிட்டாலோ, மின்சாரம் ஒளிராவிட்டாலோ, முறைப்பாடுகள் செய்து பெற்றுக் கொள்கின்ற அளவு, அவற்றைப் பராமரிப்பதிலோ, பாது காப்பதிலோ அக்கறை அற்றவர்களாக வாழா இருக்கிறோம்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந் தொழுதுண்டு பின்செல்பவர் என்றவள்ளுவன் வாக்கு எமக்கு சிந்தனையைத் தரவில்லை? நுகர்வுக் கலாசாரத்துக் குள்ளே எம்மவர்களின் வாழ்வு மூழ்கடிக்கப் பட்டுள்ளது. யாரோ வைத்து விட்டுச் சென்ற மரங்களின் பயன்களை அனுபவிக்கும் நாம், எத்தனை மரங்களை ஒவ்வொரு வருடமும் நட்டு வளர்க்கின்றோம். எமது தேவைக்காக வெட்டப் படும் மரங்களுக்கு ஈடாக நாம் மீள் நடுகை செய்தது எத்தனை? இவையெல்லாம் மண்வளத் தைப் பாதுகாக்காமல் மழை வளத்தைப் பெருக்காமல் எம்மண்ணுக்கு இழைக்கப்படும் தீங் காகும் என்பதை பெரிதும் உணராமலே வாழ் கின்றோம்.

குடிவெறி, புகைத்தல், போதை வஸ்து எம்மக்களை அழிக்கும் கொடுஞ் செயல்கள். பலர் இவற்றை ஆதரிக்கின்றார்கள். குடித்து வெறித்து புகைத்து, போதையிலே தாம் புரளுவது மட்டுமல்லாமல், வருங்கால சந்ததியையும் வம் புக்கு இழுத்து விடுகின்றவர்க ாகச் செயல்படுகின்றார்கள். எல்லோரும் இந்த நாட்டின் மன்னர்கள் என்ற உணர்வு எம்மிடம் இருக்கவேண்டும். அணை உடைத்து, ஊரை அழிக்கும்போது இடர் முகாமைத்துவப் பகுதியினர் செய்வார்கள் என்று பார்த்துக் கொண்டிருந்தால் எல்லோரும் அள்ளுண்டு அடித்துச் செல்லப்படுவோம். அரசியல் வாழ்விலும், சமூகவாழ்விலும், பொருளாதார வாழ்விலும் பொறுப்பற்று இருக்காமல் எம் கடமைகளை உணர்ந்து செயற்படுவோமானால் எம் நாட்டின் மீதும் எம் மொழி, பண்பாடு கலாசாரத்தின் மீதும் எமது பற்று குறைவுபடாது இன்னும் உறுதி உள்ளதாகவே இருக்கும்

> மற்றவர்களுடையதைக் கொடுப்பதற்கு பதிலாகத் தட்டிப் பறித்து அவர்களை அநாதை கள், அகதிகளாக அலைந்து திரிய வைத்திருக்கின்றமையையும் உணர் கின்றவர்களாகவோ, புரிகின்றவர் களாகவோ இன்னும் நாம் சரிவர வாழவில்லை என்று தான் எண்ண வேண்டியுள்ளது.

## சிரிக்க சிந்திக்க சில வரிகள்

கலாபூஷணம் மு.மாசிலாமணி



செல்லப்பாவும் மாரிமுத்துவும் இணை பிரியாத கூட்டாளிகளாக இருப்பினும் இடையில் சிலகாலம் பிரிய நேரிட்டது. காரணம் மாரிமுத்துவுக்கு வெளிநாடு போய் பணம் சம்பாதிக்க வேணும் எண்ட ஆசை அடிமனதில் அடித்தளம் போட்டிருந்ததுதான். இந்த ஆசையை இடைக்கிடை செல்லப்பாவுக்குச் சொல்லியிருக்கிறார். இதைவிட சர்ச்சைக்குரிய கூட்டாளி ஊத்தைக் குமாரும் மாரிமுத்துவின் ஆசைக்கு இடைக்கிடை தூபமிட்டுக் கொண்டிருந்தான்.

சவூதிக்குப் போய் கைநிறைய சம்பாதிக்க வேண்டுமெண்டால் ஒரு லட்சம் தா உனக்கு விசா வாங்கித் தாறன் எண்டு ஆசை காட்டி வந்துள்ளான். விசா ஏதோ கடையில் விற்பது போல எண்ணி மாரிமுத்துவும் ஏமாந்து போனார். அதனால் செல்லப்பாவுக்கு தெரியாமலே ஊத்தைக் குமாருடன் கொழும்புக்குப்போய் அலைந்துவிட்டு வந்த கையுடன் செல்லப்பாவின் வீட்டுக்குப் போய் விசயத்தை அவிட்டு விட்டார். செல்லப்பாவும் அவரது மனைவி பூமணியும் மாரிமுத்துமேல் பரிதாபம் கொண்டு ஆறுதல்சொல்லினர். செல்லப்பா, "வெண்ணெய்யை கையில் வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்த மாதிரியெல்லோ உன்ரை கதையிருக்கு' எண்டார். அதற்கு மாரிமுத்து "என்னண்ணை! விளக்கமாய்ச் சொல்லண்ணை" எண்டார். "உனக்கு சமையல் தெரியுமோ?" எண்டார் செல்லப்பா. "என்ன புதிசாய் கேக்கிறாய் அண்ணை! வீட்டிலை நான்தான் சமையல் எண்டு தெரியாதோ!" எண்டார். "அதுஇல்லை வெளிநாட்டு தனியார் தொண்டு நிறுவனம் ஒண்டுக்கு பெரியவர் வெள்ளக்காரர் தனக்கு சமைக்க ஆள் தேவை எண்டு அண்டைக்குச் சொல்லி வைத்தவர். உன்னை சேர்த்து விடலாம் ஆனால் ஒரு சிக்கல் இருக்கு" எண்டார். "என்ன சிக்கல்?" எண்டு மாரி முத்து ஆவலாய்கேட்க "மொழிப் பிரச்சினை. உனக்கு வடிவாய் இங்கிலீசு வராது. பிறகு என்னெண்டு சமாளிப்பாய்?" என்று கேட்டார் செல்லப்பா. "அது நானெல்லோ சமாளிக்கிறது. வெளிக்கிட்டு வாருங்கோ அண்ணை! போய்க் கதைச்சுப் பாப்பம்" என அவசரப்பட்டார். பூமணியும் "பாவம் மாரிமுத்து. போய் ஒருக்கா கதைச்சு வேலையை 'அரேஞ்' பண்ணி விடுங்கோ" எனத் தனக்குத் தெரிஞ்ச இங்கிலீசிலை சொன்னா?

செல்லப்பா மாரிமுத்துவைக் கூட்டிக்கொண்டுபோய் வெள்ளைக்காரருக்கு அறிமுகப்படுத்தினார். "குட்மோனிங் ஹீ இஸ் மிஸ்ரர் மாரிமுத்து. ஏ பிரண்ட் ஓஃ ப் மைன்" (காலை வணக்கம். இவர் மாரிமுத்து. என்னுடைய நண்பர்) என அறிமுகப்படுத்த "ஹலோ மிஸ்ரர் மாறிகுத்து!" எனச் சுருக்கமாக வரவேற்றார் அந்த வெள்ளைக்காரர். பதிலுக்கு மாரிமுத்து. "ஐ ஆம் மாரிமுத்து. நொற் மாறி குத்து' எனத் திருத்தினார். உடனே பாய்ந்த செல்லப்பா, "வாயைப் பொத்து. அவர் என்ன மாதிரியும் கூப்பிடட்டும். சும்மா இரு" என அடக்கினார். "ஹீ இஸ் ஏ குக். ஹீ வில் குக் ரேஸ்ரி கறி" (இவர் ஒரு சமையல்காரர். நன்றாகக் கறி சமைப்பார்) எனத் தொடர்ந்தார். மாரிமுத்து "யெஸ் சேர்! ஐ ஆம் ஏ குட் குக்கர்" எண்டார். பொறுத்துக்கொண்ட வெள்ளைக்காரர் "ஐ லைக் சீ பூட்" (கடலுணவில் எனக்கு விருப்பம்) எனச் சொல்ல மாரிமுத்து "ஐ குக் ஏ பூஃட்" (நான் உணவு சமைப்பேன்) எண்டார்.

செல்லப்பா குறுக்கிட்டு எட மடையா அவர் தனக்கு கடல் உணவு. அதுதான் மீன், இறால், நண்டு, கணவாய் பிடிக்கும் எண்டு சொல்லுறார் எண்டார். அந்த கறியில் அசலாய்ச் சமைப்பார் எண்டு சொல்லண்ணை எண்டார் மாரிமுத்து. செல்லப்பாவும் சொன்னார். ஒத்துக்கொண்ட வெள்ளைக்காரர் மாதம் 100 டொலர் சம்பளம் தரலாம் எண்டு சொல்லுங்கோ. நாளையில இருந்து சமையலுக்கு வரலாம் எண்டார். உடனே மாரிமுத்து "100 டொலர் என்றால் காணாது அண்ணை. குறைஞ்சது 7 ஆயிரம் 8ஆயிரம் ரூபாய் எண்டாலும் தரச்சொல்லுங்கோ, இல்லையெண்டால் வேண்டாம் எண்டார்." செல்லப்பாவுக்குத் தன் தலையை எங்கே கொண்டு சென்று அடிப்பது என்று தெரியாமல் திணறினார். " 100 டொலர் எண்டால் எங்கடை காசுக்கு எவ்வளவு?" எண்டு மாரிமுத்து செல்லப்பாவிடம் கேட்டார். "அதென்னண்ண, எங்கட 100 ரூபாய் மாதிரித் தானே!" என்றார் மாரிமுத்து. "கிட்டத்தட்ட 20,000 ரூபா வரும்" என்றார் செல்லப்பா. வாயைப்பிளந்த மாரிமுத்து வாயை மூட மறந்து நின்றபோது கேட்டார், "இதே தெரியுதில்லை பின்ன என்னத்தை உழைச்சுக் கிழிக்கவெண்டு சவூதிக்கு வெளிக்கிட்டனீ?"



# கண்ணுக்குத் தெரியாமல் கண்ணீர் வடிக்கும் மரம்

தமிழில்: சாரி

## 1992

ஜூலை மாதம் ஆயுள் தண்டனையை அனுபவிக்கத் தொடங்கிய ஏழாவது ஆண்டில் டாம் ஷன் னானுக்கு முதன்முதலாக ஒரு கடிதம் வந்தது.

அன்புள்ள ஷன்னான், உங்களுடன் கடிதம் எழுதுவதற்கு ஒருவரைத் தேர்ந்தெடுக்கலாம் என்பதாக சிறை சீர்திருத்த அறக்கட்டளை அளித்த வாய்ப்பின் அடிப்படையில், என்னுடைய பெயரைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். என் பெயர் கிறிஸ்டோபர் மார்கன் என்றுரைத்தது அந்தக் கடிதம். கிறிஸ்டோபர் மார்கன் பெரிய பணக்கார விவசாயி. ஈடனில் படித்தவர். ஷன்னானோ அரைகுறையாக வாசிக்கத் தெரிந்த அநாதை. சிறையில் தரும் உணவை உண்டு உயிர் வாழ்பவர். இருவருக்கும் இடையில் பேனா (வழி) நட்பு ஏற்பட்டது. சிறைக்கம்பிகளுக்கு உள்ளே என்ன நடக்கிறது என்று ஷன்னான் மிகத் துல்லியமாக வர்ணிப்பது கிறிஸ்டோபரை மிகவும் ஈர்த்தது.

ஷன்னான் தனக்கு எழுதிய கடிதங்கள் அனைத்தையும் தொகுத்து 1995இல் ஒரு புத்தகமாக வெளியிட்டார் மார்கன். கண்ணுக்குத் தெரியாமல் கண்ணீர் வடிக்கும் மரம் (Invisible Crying Tree) என்பது புத்தகத்தின் தலைப்பு. புத்தகம் அமோகமாக விற்பனை செய்யப்பட்டது. நிறையப் பணமும் கிடைத்தது. மார்கனுக்கு அந்தப் பணம் தேவைப்படவில்லை. அதேபோன்று ஷன்னானும் அந்தப் பணத்தைச் சிறையில் வைத்திருக்க முடியவில்லை.

> தன்னுடைய பெயரில் அறக்கட்டளை ஏற்படுவதற்கு முன்னால், நேரடியாகவே சில கைதிகளுக்கு எழுத, படிக்கக் கற்றுத் தந்தார் ஷன்னான். ஆனால், மார்கனுடனான கடித நட்பையே தன் வாழ்நாளின் முக்கிய அம்சமாகக் கருதுகிறார். அதைப் பாராட் டினால்கூட, நான் ஏதோ சிலவற்றை எழுதினேன் என்று அடக்கமாக மறுத்துவிடுகிறார்.

### கைதிகளுக்குக் கல்வி

சிறையில் உள்ள கைதிகளின் எழுத்தறிவு வீதம் மிகவும் குறைவாக இருப்பது தொடர்பிலும் ஷன்னான் அடிக்கடி குறிப்பிட்டிருந்தார். அவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் படிக்கத் தெரியாதவர்கள். எழுத, படிக்கத் தெரிந்த கைதிகளின் உதவியுடன் மற்றவர்களுக்கு எழுத்தறிவைப் புகட்டினால் என்ன என்ற எண்ணம் மார்கனுக்கு ஏற்பட்டது. சிறைச் சேவைகள் துறைத் தலைவர் ரிச்சர்ட் டில்ட் என்பவரைச் சந்தித்தார். அவர் வேண்ட்ஸ்வொர்த் சிறையில் இந்தத் திட்டத்தை முன்னோடியாகச் செயல்படுத்தத் துவங்கினார். நீல் லாட்ஜ் என்ற சிறை அதிகாரியும் இது தொடர்பில் ஆர்வம் காட்டினார். 1997இல் ஷன்னான் பெயரில் இதற்கென அறக்கட்டளையும் உருவாக்கப்பட்டது. இங்கிலாந்திலும் வேல்ஸிலும் உள்ள சிறைகளில் அடைக்கப்பட்ட கைதிகளில் எழுத, படிக்கத் தெரியாதவர்கள் அனைவருக்கும் இந்த அறக்கட்டளை உதவியுடன் எழுத்தறிவு புகட்டப்பட் டது. 50,000-க்கும் மேற்பட்டோர் கல்வி கற்றனர். மார்கன் 2011இல் இயற்கை எய்தினார். அறக்கட்டளைக்குக் காரணமாக இருந்த கைதி என்னவானார்? 1985இல் குடிபோதையில் நண்பருடன் இடம்பெற்ற கைகலப்பின் காரணமாகத் தன்னுடைய நண்பரைக் கொன்றுவிட்டார். ஏற்கெனவே 30 ஆண்டுகளைச் சிறையில் கழித்த அவருக்கு மேலதிகமாக 8 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. சிறு வயது முதலே, மற்றவர்கள் சீண்டினால் திருப்பி அடிப்பதைத் தவிர வேறு எதையும் சிந்திக்க தலைப்படாத சுபாவம் கொண்டவர். சிறு வயதில் இவர் எதிர்கொண்ட கொடுமையான சம்பவங்களே அவரை அப்படி மாற்றியிருந்தன. இந்த நிலையில், சிறைத் துறை ஆலோசனை சேவை மையம் அவருக்கான மேன் முறையீட்டை மேற்கொண்டது. முறையிட்டு, லாங்லி இல்ல அறக்கட்டளை நடத்தும் ஒரு பராமரிப்பு இல்லத்துக்கு அவரை மாற்றிவிட்டது. ஓக்வூட் சிறையிலிருந்து கடந்த ஜனவரி மாதமே அங்கு மாற்றப்பட்டார்.

தன்னுடைய பெயரில் அறக்கட்டளை ஏற்படுவதற்கு முன்னால், நேரடியாகவே சில கைதிகளுக்கு எழுத, படிக்கக் கற்றுத் தந்தார் ஷன்னான். ஆனால், மார்கனுடனான கடித நட்பையே தன் வாழ்நாளின் முக்கிய அம்சமாகக் கருதினார். அதைப் பாராட்டினால்கூட, நான் ஏதோ சிலவற்றை எழுதினேன் என்று அடக்கமாக மறுத்துவிடுகிறார்.

### ரகசியக் கண்ணீர்

மார்கன் ஒருமுறை ஷன்னானைப் பார்க்க நேரில் வந்தார். ஆனாலும், அந்தச் சந்திப்பு நன்றாக அமையவில்லை. நேரில் பேசுவதற்குக் கூச்சப்பட்டார் ஷன்னான். எழுதும்போது வந்துவிழும் வார்த்தைகள், பேசும்போது ஏனோ வருவதில்லை என்றார்.

அவரை ஒரு முறை நேரில் சந்தித்தேன். உங்கள் அறக்கட்டளை மூலம் எத்தனை கைதிகள் இப்போது எழுத, படிக்கக் கற்றுக் கொண்டுள்ளார்கள் தெரியுமா? என்று கேட்டபோது, சில ஆயிரம் பேர் இருக்கலாம் என்றார் அடக்கமாக. மொத்தம் 50,000 க்கும் மேல் என்றபோது, அப்படியா! என்று ஆச்சரியப்பட்டார்.

அவருடைய எதிர்காலம் நிச்சயமற்று இருக்கிறது. இந்த அறக்கட்டளை அவரை எத்தனை காலம் பராமரிக்கும் என்று தெரியவில்லை. என்னிடமிருந்த காலமும் நேரமும் போன இடம் தெரியவில்லை. எஞ்சிய காலத்தை அமைதியாகக் கழிக்க விரும்புகிறேன் என்றார். புத்தகத்துக்கான தலைப்பை எங்கே பிடித்தீர்கள்? என்று கேட்டேன்.. அதற்கு அவரும் கண்ணுக்குத் தெரியாத மரத்திலிருந்துகொண்டு நான் கதறியதை இத்தனைநாள்களாகக் கேட்டதற்கு நன்றி என்று மார்கனுக்கு அனுப்பிய ஒரு கடிதத்தில் எழுதியிருந்தேன். அதுவே புத்தகத்தின் தலைப்பானது என்று விழித்தார்!

*- நன்றி தி கார்டியன்*

# நீரின்றி அமையாது உலகு

மல்லாவிக் கஜன்

புவியைச் சூழ்ந்து காணப்படும் வளி மண்டலப் பகுதியில் உள்ள உயிருள்ள, உயிரற்ற கூறுகள் , நீர், வளி மற்றும் நிலப்பகுதியுடன் ஏற்படுத்தவல்ல இடைத்தாக்கத்தின் காரணமாகப் புவித் தொகுதி இயங்குகின்றது.
இவ்வாறு காணப்படும் புவித் தொகுதியின் நான்கு உப பிரிவுகளில் நீர்க் கோளத் தொகுதியும் ஒன்றாகும். உலகின் முதலாவது உயிரினமான அல்காவின் தோற்றமும் நீர்ப்பரப்பிலேயே ஏற்பட்டதாக தேளிஸ் என்ற அறிஞர் தெரிவித்துள்ளார், உயிரினங்களின் இயக்கச் செயற்பாட்டுக்கு இன்றியமையா அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக நீர் முதன்மை பெறுகிறது.
உலகளாவிய ரீதியில் 71 சதவீதம் நீரால் சூழப் பட்டே விளங்குகின்றது. இவ்வகையில் உலக நீர்ப் பரம்பலானது பிரதானமாக நன்னீர்ப் பரம்பல், உவர் நீர்ப் பரம்பல் எனப் பாகுபாடு செய்யப்படுவதையும் காணலாம்.
சமுத்திரங்களே பிரதான உவர் நீர்ப் பரப்பாக விளங்குகின்றன. ஒரு பரந்த உவர் நீர்ப் பரப்பைக் கொண்ட பகுதிகள் சமுத்திரங்கள் என வரையறை செய்யப்படுகின்றன. உலகில் பிரதானமாக ஐந்து சமுத்திரங்கள் வகையிட்டுக் காட்டப்படும் நிலையில் பசுபிக் சமுத்திரம் மிகப் பெரியதாகவும் , மிகச் சிறிய ஆழமற்றதுமான சமுத்திரமாக அந்தாட்டிக் சமுத்திரமும் குறிப்பிடப்படுகின்றன. எமது நாடான இலங்கை அமையப் பெற்றுள்ள இந்து சமுத்திரமானது மொத்த சமுத்திர நீரில் ஐந்தில் ஒரு பங்கு நீரைத் தன்னகத்தே கொண்டு மூன்றாவது மிகப் பெரிய சமுத்திரமாக விளங்குவதைக் காணலாம்.

### சமுத்திரங்களின் வேறுபாடு

சமுத்திரங்களில் சிறியனவே கடல்களாகும். அதாவது உப்பின் செறிவுத்தன்மை சற்றுக் குறைந்த பகுதிகளாகக் கடல்கள் விளங்குகின்றன. உலகில் பிரதானமாக ஐந்து சமுத்திரங்கள் உள்ளதாக ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் ஒவ்வொரு சமுத்திரமும் உவர்த் தன்மை, வெப்பம், நிறம், அடர்த்தி போன்ற காரணிகளால் வேறுபடுத்தப் படுகின்றமை குறிப்பிடத் தக்கது. சமுத்திர நீரின் சராசரியான உவரின் அளவு 35 கிராம் ஆகும். இந்த நிலையில் சமுத்திர நீரில் சோடியம் குளோரைட்,மக்னீசியம் குளோரைட் , மக்னீசியம் சல்பைட், கல்சியம் சல்பைட், பொட்டாசியம் சல்பைட், கல்சியம் காபனேற், மக்னீசியம் புரோமைற் முதலான ஏழுவித கனியுப்புக்கள் உவர்த் தன்மையின் அளவைத் தீர்மானிக்கின்றன. அத்துடன் சமுத்திர நீரானது அடர்த்தி, உவரின் அளவு, வெப்ப நிலை, அமுக்கம் என்பவற்றால் வேறுபட்டு அமைகின்றது.
சமுத்திர மேற் பரப்பிற்கு சூரியனில் இருந்து நேரடியாக 85 வீதமான வெப்பமும் , முகில்கள் முதலான தடைகளில் சூரிய ஒளி பட்டுத் தெறிப்பதால் 15 வீதமான வெப்பமும் கிடைக்கப் பெறுகின்றது. சமுத்திரங்களின் நிறத்தை நோக்கும் போது விளிம்புப் பகுதிகளில் இள நீல நிறமும் ,ஆழ் பகுதிகளில் கரு நீல நிறமும் காணப்படுவதுடன் , செங்கடல் செந்நிறமாகவும் விளங்குகிறது. இதற்கு டிரைகோ டெஸ்மியம் எனப்படும் அல்கா காரணமாகிறது என கண்டறியப்பட்டுள்ளது.

### சமுத்திரங்களின் பயன்பாடு

உலக நாடுகளை, நகரங்களை ஒன்றிணைக்கும் மிக முக்கிய விடயமாக போக்குவரத்து வலைப் பின்னல் விளங்கு கின்றது. இதனடிப்படையில் குறைந்த செலவில் கூடியளவான பொருள்கள், பயணிகளைக் குறைந்த நேரத்தில் கொண்டு செல்வதற்கு தற்காலத்தில் உலக நாடுகள் பின்பற்றும் போக்குவரத்து மார்க்கமாக கடல் வழி போக்குவரத்து விளங்குகிறது. ஆரம்ப காலங்களில் வாஸ்கொடகாமா, அமெரிக்கோ வெஸ்புசி முதலான நாடுகாண் பயணிகளின் கண்டுபிடிப்புகளுக்கும் , சர்வதேச பண்டமாற்று வர்த்தகச் செயற்பாடுகளுக்கும் சமுத்திரப் பிரதேசம் பெரிதும் ஊன்று கோலாக விளங்கியதைக் காணலாம். அத்துடன் உலகில் கண்டறியப்படும் மூலங்களில் பெரும்பாலானவை நீர்க் களத்திலேயே கணடு பிடிக்கப்பட்டமையும் சிறப் பானதாகும்.
அளவிடற்கரிய மீன் வளத் தையும் ,தரும் பகுதியாகவும் சமுத்திரங்களே காணப்படுகின்றன. (கடலலையை பயன் படுத்தி மின்சாரம் கூட இன்று உற்பத்தி செய்யப்படுகின்றது. ஜப்பான் உள்ளிட்ட நாடுகளும் இதில் ஈடுபட்டுள்ளதையும் அவ தானிக்க முடிகிறது.

### நீர்க் கோளத்தில் ஏற்படும் மாற்றங்கள்

அண்மைக் காலமாக அரிய நீர்க் கோளமானது மனித செயற்பாடுகளின் உச்சத் தாக்கங்களால் பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டு வருவதைக் காணலாம். குறிப்பாக, சமுத்திரப் பிராந்தியங்களில் கொட்டப்படும் அணு மற்றும் இலத்திரனியல் கழிவுகள் , எண்ணெய்க் கழிவுகள் கடலில் சேர்தல், போர்ச் செயற்பாடுகள் என்பவற்றால் சமுத்திரப் பரப்பு மாசடைதலுக்கு உட் படுவதுடன், கால நிலை மாற்றம் காரணமாக உண்டாகும் பூகோள வெப்ப உயர்வு பெரும் சவாலாக மாறி விட்டது. துருவப் பிரதேசத்தில் உள்ள பனிப் பாறைகள் மிக வேகமாக உருகி வருவதால் எதிர்வரும் 2050 ஆம் ஆண்டளவில் கடல் நீர் மட்டம் உயர்வடையுமென்பதால் பல்வேறு சிறிய தீவுகள் நீரில் மூழ்கலாம் எனவும் ஆய்வுகள் எச்சரிக்கை செய்கின்றன. நன்னீரின் அளவு வேகமாகத் தீர்ந்து போய்க் கொண்டிருப்பதால் உலக நாடுகளிடையே நீர்த்தட்டுப்பாடு என்பது தவிர்க்க முடியாத தொன்றாக மாறி விட்டது. மூன்றாம் உலக நாடுகளிடையே இதன் தாக்கம் மோச மாகிச் செல்வதுடன் ,மூன்றாம் உலக போர் நீர்த்தட்டுப்பாடு கார ணமாகவே ஏற்படுமென ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதனால் உடனடியாக உலக மக்கள் அனைவரும் அருகி வரும் நீர் வளத்தைப் பாதுகாக்க இனி யேனும் முயற்சிக்கா விடின் போத்தல் குடிதண்ணீருக்குக் கூட பஞ்சம் ஏற்படுவதுடன் சமுத்திரப் பகுதியில் உள்ள உவர் நீரையும் கழிவு நீரையும் அருந்தி மடிய வேண்டிய துர்ப் பாக்கியம் ஏற்படுவதை தவிர்க்க முடியாது.

### சமுத்திர தினம்

இதனடிப்படையில் எமது சமுத்திரங்களும் எமது பொறுப்புக்களும் (our0ceans, our responsibility) எனும் கோட்பாட்டின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் சபையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம்

> துருவப் பிரதேசத்தில் உள்ள பனிப் பாறைகள் மிக வேகமாக உருகலடைந்து வருவதால் எதிர்வரும் 2050 ஆம் ஆண்டளவில் கடல் நீர் மட்டம் உயர்வடைவதால் பல்வேறு சிறிய தீவுகள் நீரில் மூழ்கலாம் எனவும் ஆய்வுகள் எச்சரிக்கை செய்கின்றன. நன்னீரின் அளவு வேகமாக தீர்ந்து போய்க் கொண்டிருப்பதால் உலக நாடுகளிடையே நீர்த்தட்டுப்பாடு என்பது தவிர்க்க முடியாததொன்றாக மாறிவிட்டது.

08 ஆம் நாள் உலக சமுத்திரதினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. சமுத்திர விவகாரங்கள் மற்றும் சமுத்திர நீதிக்குப் பொறுப்பான திணைக்களம் , செய்தித் திணைக்களத்துடன் ஒன்றுபட்டு பல நிகழ்வுகளையும் செயற்பாடுகளையும் இத் தினத்தில் நடத்தி வருகின்றது. அருகி வரும் நீர் வளத்தைப் பாதுகாக்க அக்கறையுடன் நாம் ஒவ்வொருவரின் செயற்பாடும் அமையாது விடின் முதல் உயிர் எவ்வாறு நீரில் தோன்றிற்றோ , அது போல் இவ் உலகின் இறுதி உயிரும் வெகு விரைவில் நீரில் மூழ்கிப் போவது திண்ணம்.

*கட்டுரையாளர்
துணுக்காய் வலயக் கல்வி
அலுவலகத்தில் பணியில் உள்ளார்.*



# யாழ்.குடா நாட்டில் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவமும்

## பொதுமக்களின் பொறுப்பற்ற செயல்களும்

க.கனகசபை

இலங்கைத் திருநாட்டின் வடபால் உள்ள யாழ். மண் புனித பூமி, செல்வந்த பூமி எனப் பலராலும் போற்றப்பட்டு வருகின்றது. இயற்கை எழில் கொஞ்சும் இந்த மண் இன்று திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத்தில் உள்ள குறைபாடுகளால் மாநகர, நகர, கிராம தெரு வீதிகள் பல நரகமாகக் காணப்படுவதை ஒவ்வொரு பொதுமகனும் கண்கூடாகக் காணலாம். இதற்கு சில பொதுமக்களின் ஒத்து ழைப்பு இன்மையே முக்கிய காரணமாக உள்ளது. யாழ்.மாவட்டம் இன்று சுற்றுச் சூழலியல் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத்தில்பெரியநெருக்கடிகளையும், சவால்களையும் எதிர்நோக்கிவருகின்றது. முறையற்ற திண்ம, திரவ கழிவகற்றலாலும், விவசாய நடவடிக்கைகளில் கட்டுப்பாடற்ற வகையில் பயன்படுத்தப்புடும் இரசாயனப் பசளை மற்றும் கிருமி நாசினிகளாலும் சுற்றுச்சூழல் மாசடைந்து விடுகிறது.

யாழ்.குடாநாட்டு மக்கள் அனைவரும் வெட்கித் தலைகுனிய வேண்டிய அளவுக்கு யாழ்.மாநகர, பட்டின, கிராம வீதிகளின் பெரும்பாலான வீதிகளின் இருமருங்கிலும், பிரதான சந்திகளிலும், மூலை முடுக்குகளிலும் வீட்டில் சேகரிக்கும் கழிவுகள் தொகை வகையின்றி வீசப்படுகின்றன.

இந்தச் செயல் பொறுப்பற்ற ஒருசில பொதுமக்களால் தான் செய்யப்படுகின்றது. கடந்த முப்பது வருட போர்க்காலத்துக்கு முன் இப்பேர்ப்பட்ட செயல்கள் காணப்படவில்லை. மக்கள் பொறுப்புடன் நடந்து கொண்டார்கள். வீட்டிலே சேரும் கழிவுகளைப் பொதுவளவில் போட்டு எரித்தோ அல்லது புதைத்தோ அன்றிப் பசளைக்கோ பாவித்தார்கள். தற்சமயம் அப்படிச் செய்வதில்லை. வீட்டிலே உள்ள கழிவுப் பொருள்கள் வெளியில் போனால் சரி, என்ற குறுகிய நோக்கத்தில் அது மற்றவர்களுடைய வீட்டு வாசலாக இருந்தாலும் சரி, பொதுச் சந்தியாக இருந்தாலும் சரி, வீதிகளாக இருந்தாலும் சரி எனக் கண்ட கண்ட இடங்களிலும் ஆள் அரவம் இல்லாத இடங்களிலும் மூடைகளாகவும், சொப்பிங் பைகளிலும் கட்டி சுலபமாக வீசி விடுகின்றார்கள். இது ஒரு பொறுப்புள்ள மனிதன் செய்யக்கூடிய செயல் அல்ல. பொது மக்கள் பாவிக்கும் இடம்தானே என்று அனைவரும் யோசிக்க வேண்டும். தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என ஒரு பழமொழி உண்டு.

எனவே சிறுவயதிலே பழகிய பழக்கம் தான் பெரியோர் ஆன பின்பும் வரும். இந்தக் கழிவகற்றலுக்காக உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கும் மாநகர, நகர, பட்டின, கிராம சபைகளால் நிறுவப்பட்டுள்ள வகைப்படுத்தப் பட்டுள்ள கழிவு சேகரிக்கும் கொள்கலன்களில் கழிவுகளை இடுவதற்கு சமூக அக்கறையோடு நாம் முன்வர வேண்டும்.

சிறுவர் முதல் பெரியோர் வரை தங்கள் பங்களிப்பை மிகவும் பொறுப்புணர்வுடன் செய்ய வேண்டும். ஆனால் சிலர் அப்படிச் செய்வதில்லை. கொள்கலன்கள் இருந்தும் அருகில் வீசிவிட்டுச் செல்கின்றார்கள். யாழ்.குடாநாட்டிலே உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் செயற்படும் மாநகர, பட்டின, பிரதேச சபை மற்றும் உப அலுவலகங்களில் திண்மக் கழிவகற்றலுக்கான போதிய வசதிகள் உள்ள வாகனங்களும் இல்லை. மற்றும் ஆளணிப் பற்றாக்குறையும் உண்டு. பணியாற்றும் ஊழியர்கள் கழிவகற்றலில் திறமையாகத் தமது செயற்பாடுகளைச் செய்கின்ற போதிலும் பொதுமக்கள் சிலரது ஒத்துழைப்பு இன்மை காரணமாக இந்தச் செயல் குடாநாட்டிலே வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது.

வியாபாரத் தலங்களிலே சேரும் கழிவுகளையும் அதற்கு என்று ஒதுக்கப்பட்ட இடங்களில் போடுவதில்லை. வியாபாரத் தலங்களுக்கு வெளியே கழிவுகள் போனால் சரி, அது மற்றவர்களுடைய கடையாக இருந்தாலும் சரி, வீதியாக இருந்தாலும் சரி என்று வீசி விடுகின்றார்கள். பொலித்தீன் பைகள் காற்றுக்கு அங்குமிங்குமாக அடிபட்டுச் செல்கின்றன.

இந்தத் திண்மக் கழிவகற்றல் திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்த ஒவ்வொரு வர்த்தக நிலைய உரிமையாளர்களும், ஊழியர்களும் தங்களுடைய பங்களிப்பை முழுமனதோடு செய்ய வேண்டும். ஒருசிலர் திறம்படச் செய்வதில் எந்தவித பயனும் ஏற்படப் போவதில்லை. மாறாக திறம்படச் செய்பவர் மனதில் வெறுப்பு ஏற்பட்டு அவர்களும் மற்றவர்களின் பாணியில் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். எமது நாட்டிலே ஏற்பட்ட முப்பது வருட காலப் போர், நாம் நல்ல வாழ்வை வாழ நல்ல பாடத்தைக் கற்றுத் தந்துள்ளது. போரினால் ஏற்பட்ட வடுக்கள் இன்னமும் ம்மாறவில்லை. எத்தனையோ விலை மதிப்புள்ள உயிர்களை, சொத்துக்களை இழந்து எமது குடாநாடு அபிவிருத்தியில் முப்பது வருடங்கள் பின்னோக்கிச் சென்றுள்ளது. இதனை ஒவ்வொரு பொதுமகனும் உணர வேண்டும். திண்மக் கழிவுகளை பசளைப் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் உரிய நிறுவனங்களின் பங்களிப்புடன் செயற்படுத்த பொதுமக்கள் தூண்டப்படல் வேண்டும்.

திண்மக் கழிவகற்றல் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்த குடாநாட்டில் இருந்து புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வசிக்கும் தமிழ் மக்களிடத்தில் இருந்து உதவிகள் பெறப்பட வேண்டும். அவர்கள் தாமாக முன் வந்து பிறந்த மண்ணுக்காக உதவிகள் செய்ய வேண்டும்.

பொதுஇடமாக இருந்தாலும் சரி, எமது வாழ்விடமாக இருந்தாலும் சரி. இது எமது வாழ்விடங்கள், இந்த இடங்களை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டம் என்று சிறுவயதில் இருந்தே கற்றுக் கொள்ளல் வேண்டும். இந்தச் செயற்பாடானது எதிர்கால சந்ததிக்காக சுகாதாரமிக்க நல்லதொரு சந்ததியினரைக் கட்டி எழுப்புகின்றோம் என்ற சிந்தனையை மனதில் வளர்க்கும் ஒவ்வொரு தனிமனிதனும் இந்தச் சமூகத்தின் அங்கத்தினர்கள்.

அவர்கள் விடும் தவறுகள் எமது சமூகத்தையே ஒட்டு மொத்தமாகப் பாதித்துவிடும். எனவே எமது யாழ்.குடாநாட்டை சுற்றுச் சூழல் மாசடைவதிலிருந்து காத்து சுகாதாரத்தைப் பேண வெற்றிகரமான திண்மக் கழிவகற்றலுக்கு பொதுமக்கள் ஒவ்வொருவரும் தம்மால் ஆன முழுப்பங்களிப்பையும் வழங்கி எமது நாட்டைச் சுத்தம், சுகாதாரம் உள்ள நாடாகக் கட்டிஎழுப்புவோமாக!

*கட்டுரையாளர்:*
*முன்னாள் எழுதுநர்,*
*பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்.*

> "யாழ்.குடாநாட்டு மக்கள் அனைவரும் வெட்கித் தலைகுனிய வேண்டிய அளவுக்கு யாழ். மாநகர, பட்டின, கிராம வீதிகளின் பெரும்பாலான வீதிகளின் இருமருங்கிலும், பிரதான சந்திகளிலும், மூலை முடுக்கு களிலும் வீட்டில் சேகரிக்கும் கழிவுகள் தொகை வகையின்றி வீசப்படுகின்றன. இந்தச் செயல் பொறுப்பற்ற ஒருசில பொதுமக்களால் தான் செய்யப்படுகின்றது."



சினிமா

# ஒரு நாள் கூத்து

'விசாரணை' படத்துக்குப் பிறகு தினேஷ் நடிப்பில் வெளியாகியுள்ள படம், பெண்களை மையப்படுத்திய மற்றொரு படம், 'ஒரு நாள் கூத்து'. மூன்று பெண்கள் திருமணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். அந்த காத்திருப்பில் சங்கடம், பிரச்சினை, குழப்பம், தயக்கம், தாமதம் என்ற பல்வேறு சூழல்கள் எட்டிப்பார்க்கின்றன. அதற்குப் பிறகு அந்த மூவரும் என்ன ஆகிறார்கள்? திருமணம் ஆகிறதா? யாருக்கு எப்படி ஆகிறது? என்பது மீதிக் கதை.

திருமணம் என்பது ஒரு நாள் கூத்து என்று சொல்லப்படுவதுண்டு. ஆனால், அந்த ஒரு நாள் கூத்துக்கு முன்னதாக நடைபெறும் பரபரப்புகள், நடைமுறைச் சிக்கல்கள், அதனால் ஏற்படும் அழுத் தங்களை, வலிகளை காட்சிப்படுத்திய விதத்தில் இயக்குநர் நெல்சன் வெங்கடேசன் தமிழ் சினிமாவிற்குப் புது வரவு.

கூச்ச சுபாவத்தை குத்தகைக்கு எடுத்துக் கொண்ட குணம் படைத்த கதாபாத்திரத்துக்கு தினேஷ் சரியாகப் பொருந்துகிறார். "கோவணம் கூடக் கட்டத் தெரியாத என் அப்பாவை உன் அப்பா, மாமா முன்னாடி நிற்க வெச்சு அசிங்கப்பட சொல்றியா? நான் பேசுனாலும், பேசலைன்னாலும் அதோட அர்த்தம் உனக்கு தெரியாதா?" எனக் காதலியிடம் தன்னிலை விளக்கம் கொடுக்கும்போது தினேஷின் நடிப்பு சிறப்பு.

காதல், அழுகை, ஏமாற்றம், துயரம் என எல்லா உணர்வுகளையும் சரியாக பிரதிபலிக்கிறார் அறிமுக நடிகை நிவேதா பெத்துராஜ். இயல்பான நடிப்பில் ஈர்க்கும் இவருக்கு தமிழ் சினிமாவில் வாய்ப்புகள் வரிசை கட்டலாம்.

மைக் முன்னால் பேசும் ரித்விகா, அதற்குப் பிறகு நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளையுடன் கெஞ்சும் தொனியில் முதிர்ச்சியான நடிப்பை வழங்கியிருக்கிறார். தொண்டையை அடைக்கும் துயரத்திலும், தத்துவம் சொல்லி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் ரித்விகாவின் நடிப்பு மெச்சத்தக்கது.

வசனங்கள் அதிகம் இல்லாவிட்டாலும், பார்வையால் தன் பிரச்சினையை, சோகத்தை வெளிப்படுத்தும் மியா ஜார்ஜின் நடிப்பு கவனிக்கத்தக்கது. அவரின் கதாபாத்திரம் சில உண்மைகளை இடித்துச் சொல்கிறது.

வானொலித் தொகுப்பாளராக ரமேஷ் திலக்கும், பொறுப்பான அண்ணனாக கருணாகரனும், திருமணம் ஆகாத பேச்சுலர் கதாபாத்திரத்தில் சார்லியும் தேர்ந்த நடிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இனி கருணாகரனை காமெடி நடிகராக மட்டும் பார்க்காமல் தொடர்ச்சியாக உறுதுணை நடிகராகவும் பார்க்கும் அளவுக்கு நிறைவான நடிப்பை நல்கியிருக்கிறார்.

பாலசரவணனின் நகைச்சுவைக்கு சில இடங்களில் ரசிகர்கள் கரவொலி எழுப்பினர். கோகுல் பினோய் தன் கேமராவால் எல்லா அழகையும் அள்ளி வந்திருக்கிறார். ஐடி உலகம், பண்பலை அலுவலக சூழல், கிராமத்துப் பின்புலம், நகர்ப்புற வாழ்க்கை என எல்லாவற்றையும் அசலாகப் பதிவு செய்திருக்கிறார்.

ஜஸ்டின் பிரபாகரனின் இசை படத்துக்கு கூடுதல் பலம். அடியே அழகே, எப்போ வருவாரோ பாடல்களில் மனதை அள்ளுகிறார். பின்னணி இசையில் எந்தக் குறையும் வைக்கவில்லை.

எல்லோருடைய வாழ்வும் திருமணத்தை நோக்கியே நகர்கிறது என்ற ஒற்றைப்புள்ளியை வைத்துக்கொண்டு இயக்குநர் வடிவமைத்த திரைக்கதை புத்திசாலித்தனமாகப் பின்னப்பட்டுள்ளது. அதில் இருக்கும் சிக்கல்கள், கேள்விகள், பிரச்சினைகள் எல்லாவற்றையும் அடுக்கடுக்காக அலசியும் இருக்கிறார். அதில்தான் சில முன் பின் நகர்த்தல்கள் தேவையாக உள்ளது.

தினேஷ் ஏன் தன் குடும்ப சூழல் விவரம் உள்ளிட்ட தன்னிலை விளக்கத்தை மிக மிகத் தாமதமாக காதலியிடம் தெரிவிக்கவேண்டும்? அந்த மழை நாளை ஏன் கண்ணியமாகக் காட்டாமல், இச்சையைக் கூட்டுவது மாதிரியான தோற்றத்தை ஏற்படுத்தவேண்டும்? இதுக்குதானே இவ்வளவும் என அலட்சியமாகப் பேசும் ரித்விகா ஏன் மீண்டும் மனம் வெதும்பி, ""நாம எடுக்கிற முடிவு எல்லா நேரத்திலும் சரியாக இருக்காது" எனத் தத்துவம் பேசித் தன்னைத்தானே சமாதானம் செய்துகொள்ள வேண்டும்? சம்பந்தமே இல்லாமல் ஏன் அந்தத் திருமணப் பொறி? அது இடைச் செருகலாகவே தெரிகிறதே? இப்படிச் சில கேள்விகள் எழுகின்றன. இவற்றை எல்லாம் தவிர்த்துப் பார்த்தால், திருமணத்தை எதிர்நோக்கும் பெண்களின் வலிகளைச் சொல்லி ஆண்களுக்கு ஆலோசனை சொல்லிய விதத்தில் 'ஒரு நாள் கூத்து' மதிப்புக்குரிய முயற்சி என்பதால் வரவேற்கலாம்.





# அரசியல் கைதிகள்....

(18-19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டாச்சிக் கோரிக்கை, புதிய அரசமைப்பு இந்த இரண்டு விடயங்கள் தொடர்பிலும் கூட்டமைப்பு மக்களுக்கு சொல்வது என்ன?

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இது தொடர்பில் வலியுறுத்தவேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஆகையால் இவை பற்றி ஆணையாளருடன் கலந்துரையாட நாங்கள் திகதி கேட்டுள்ளோம். அவர் வாய்மூல அறிக்கையை வெளிப்படுத்துவதற்கு முன்னர் எங்களைச் சந்திப்பார் என்று உறுதி கூறியுள்ளார். அப்போது இவை தொடர்பில் வலியுறுத்துவோம்.

கடந்த பல பத்தாண்டுகளாக அரசியல் தீர்வு தொடர்பில் தமிழர் தரப்பில் ஒரே நிலைப்பாடே உள்ளது. அது சாத்தியமடையும்போதுதான் இந்த நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட்டதாகக் கருத முடியும். மனித உரிமைகள் ஆணையாளர் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும் என்று உறுதியாகக் கூறியிருந்தார். சர்வதேசத்தின் எதிர்பார்ப்பும் அதுவாகத்தான் உள்ளது.

அரசு இந்தத் தருணத்தில் நழுவிப்போகக்கூடாது; நழுவிப் போகவிடப்போவதும் இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தை முழுமையாகப் பயன்படுத்தி நிலையான அரசியல் தீர்வுக்கு அரசு வழிவகுக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

மீள்குடியேற்றம் மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரங்களின் தற்போதைய நிலை என்ன?

அரசியல் கைதிகள் விடயத்தில் இலங்கை அரசு விசுவாசமாகச் செயற்படவில்லையென வலியுறுத்தியுள்ளோம். கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் அதனை இழுத்தடிக்கின்றனர். அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால், அரசு, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியேயாக வேண்டும்.

மீள்குடியேற்ற விடயம் தொடர்பில் கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்தில் உறுதி மொழியை வழங்கினார். ஆனால், அது தொடர்பிலும் ஆக்கபூர்வமாக எதுவும் நடைபெறவில்லை. இந்த இரண்டையுமே அரசு நிறைவேற்றத் தவறியுள்ளது. இவை ஐ.நா. தீர்மானத்திலும் அடங்கியுள்ளன. இதனை நிறைவேற்றாதுபோனால் எதிர் விளைவுகளை அரசு நிச்சயமாகச் சந்திக்க நேரிடும்.

புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமான உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டுள்ளதாக கருத்துகள் வலுவடைந்துள்ளனவே?

இன்னமும் அவர்களுடன் நாங்கள் இணங்கித்தான் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம். அநேகமாக முக்கிய நாடுகளில் உள்ள புலம்பெயர் அமைப்புகளுடனான தொடர்பு பேணப்பட்டுத்தான் வருகின்றது– என்றார்.

# ஆபத்தான கடற் பயணத்தால் அநியாயமாகும்



# மனித உயிர்கள்

அதிரன்

மத்திய தரைக்கடல் பகுதியில் மூழ்கி உயிரிழக்கும் அகதிகளின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது. ஆசிய, வடக்கு ஆபிரிக்க நாடுகளில் உச்சமடைந்துள்ள உள்நாட்டுப் போர் காரணமாகத் தமது உயிரைப் பாதுகாத்துக்கொள்ள அங்கிருந்து தப்பி ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் அகதிகளே இவ்வாறு கடலில் மூழ்கி உயிரிழக்கும் பரிதாப நிலை தொடர்கிறது. உயிரிழப்பவர்களில் குழந்தைகளும் உள்ளமைதான் பெரும் வேதனையளிக்கும் விடயமாகவுள்ளது.

இவ்வாறு தொடர் கதையாகும் அகதிகளின் உயிரிழப்பை ஐ.நாவும் உலக நாடுகளும் கவனத்தில் கொள்ளாது கண்களை மூடிக்கொண்டிருப்பது குறித்து இப்போது பலத்த விமர்சனங்கள் எழுந்தவண்ணமுள்ளன. கடல் பயணத்துக்குத் தகுதியற்ற படகுகளில் செல்வது உயிருக்கு ஆபத்தானது என்று தெரிந்தும், ஆயிரக்கணக்கான மக்கள் பெண்கள், குழந்தைகளுடன் இவ்வாறு கடற் பயணம் மேற்கொள்கின்றார்கள். இடைத் தரகர்களை நம்பித் தங்கள் உயிரைப் பணயம் வைக்கிறார்கள்.

மிகக்கடுமையாக போர் நடைபெறும் சிரியா, ஈராக் ஆகிய நாடுகளிலிருந்தும் ஆபிரிக்க நாடுகளான லிபியா, நைஜீரியா, கம்பியா, சோமாலியா, ஐவரிகோஸ்ட், எரித்திரியா ஆகிய நாடுகளிலிருந்து கடந்த வாரத்தில் மட்டும் 15ஆயிரம் அகதிகள் எகிப்து ஊடாக இத்தாலியைச் சென்றடைந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் தெரிவித்திருக்கிறது. அதேபோன்று துருக்கி ஊடாக ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா நாட்டு அகதிகள் கிரேக்கத்தைச் சென்றடைந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இலங்கை, மற்றும் ஈராக் சிரிய நாட்டு அகதிகளுக்கு துருக்கியே மையமாக திகழ்கிறது. துருக்கியை சென்றடைபவர்களில் அங்குள்ள முகவர்கள் ஊடாகப் படகுகள் மூலமும் விமானம் மூலமும் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

அவர்கள் கொடுக்கும் பணத்தைப் பொறுத்தே பயண வழி தீர்மானிக்கப்படுகிறது. அதிக பணம் கொடுத்தால் விமான மூலம் சுவிஸ் போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். ஏனையவர்கள் கப்பல் மற்றும் படகுகள் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

படகுகள் மூலம் அனுப்பி வைக்கப்படுபவர்கள் துருக்கியிலிருந்து கிரேக்கத்துக்கு அனுப்பபட்டு அங்கிருந்து மகிடோனியா, கங்கேரி ஊடாக இத்தாலி, ஒஸ்ரியா, ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றனர். ஆபிரிக்க நாடுகளிலிருந்து வருபவர்கள் லிபியாவிலிருந்து படகுகளில் மத்திய தரைக் கடல் ஊடாக இத்தாலிக்கு அனுப்பபடுகின்றனர்.

கோடை காலம் ஆரம்பமானால் ஐரோப்பிய நாடுகளை நோக்கி அகதிகளின் வருகை அதிகரிப்பது வழமையாகும். கோடை காலங்களில் படகுகளில் இலகுவாகப் பயணம் செய்ய முடியும் என்பதும் ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளை கால்நடையாக நடந்து சென்று கடக்க முடியும் என்பதாலும் கோடை காலத்தை ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகளிலிருந்து வரும் அகதிகள் பயன்படுத்திக் கொள்வர்.

கடந்த ஆண்டு மட்டும் 3,700 அகதிகள் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இந்த ஆண்டு இதுவரை 2,000 பேருக்கு மேல் உயிரிழந்துள்ளனர். மேற்கு ஆசிய, வடக்கு ஆபிரிக்க நாடுகளில் நிலவும் உள்நாட்டுப் பூசலும், பக்கத்து நாட்டுடனான போரும்தான் அகதிகள் ஆயிரக்கணக்கில் வெளியேறக் காரணங்களாக இருக்கின்றன. ஐரோப்பாவை அடைய இரண்டு பாதைகளை அகதிகள் தெரிந்தெடுத்துள்ளனர். முதலாவது, துருக்கியிலிருந்து கிரேக்கத் தீவுகளுக்குச் செல்கின்றனர் அல்லது லிபியாவிலிருந்து இத்தாலிக்குச் செல்கின்றனர்.

ஒருவரை அனுமதித்தால் ஒருவரை வெளியேற்றுவது என்று ஐரோப்பிய நாடுகளும் துருக்கியும் செய்துகொண்ட ஒப்பந்தம் முக்கிய விளைவை ஏற்படுத்தியிருக்கிறது. கிரேக்கத் தீவுகளிலிருந்து துருக்கிக்கு ஒரு சிரிய அகதி திரும்பினால், இன்னொரு சிரிய அகதியை ஐரோப்பிய நாடுகள் தங்களுடைய நாடொன்றில் தங்க அனுமதிக்கும். இதையடுத்து, துருக்கி வழியாக அகதிகள் செல்வது குறைவடைந்துள்ளது. ஒரு பாதை அடைபட்டுவிட்டதால், அகதிகளைக் கடத்தும் இடைத்தரகர்கள், அவர்களை இப்போது லிபியாவுக்குக் கடத்திச் செல்கின்றனர். இதனால் இத்தாலிக் கடற்கரையில் அகதிகள் வருகை அதிகரித்துள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

அகதிகள் பிரச்சினை தொடர்பில் ஒரு நிலையான திட்டத்தை ஐரோப்பிய நாடுகள் வகுப்பது அவசியம். முதலில், அதிக எண்ணிக்கையில் அகதிகளை வரவேற்கவேண்டும். ஜேர்மனி, சுவீடன் ஆகிய நாடுகளைத் தவிர ஏனைய நாடுகள், அகதிகளை வரவேற்பதில் ஆர்வமாக இல்லை. இரண்டாவதாக, ஆபத்தில் சிக்கும் அகதிகளை அடையாளம் கண்டு மீட்கப் போதிய நடவடிக்கைகளை ஐரோப்பிய நாடுகள் எடுக்க வேண்டும்.

கடலில் அகதிகள் மூழ்காமலிருக்கவேண்டுமானால், மீட்புக் குழுக்களுக்குத் தேவைப்படும் உதவிகள் செய்யப்படவேண்டும். அதற்கு அதிக நிதி தேவைப்படுகின்றது. மூன்றாவதாக, அகதிகள் ஐரோப்பாவைக் குறிவைத்து வருவதை ஆரம்பத்திலேயே தடுத்துவிட வேண்டும் என்றே ஐரோப்பிய நாடுகள் விரும்புகின்றன. அகதிகள் வெளியேறக் காரணமாக இருக்கும் நாடுகளில் செயல்படுகின்ற, உலக சமூகத்துடன் ஒத்துழைக்கக்கூடிய அரசுகள் இருந்தால் மட்டுமே இது சாத்தியம். இது தொடர்பாக துருக்கியுடன் ஐரோப்பிய ஒன்றியம் ஒரு உடன்பாட்டைச் செய்துகொள்ளவேண்டும்.

ஐரோப்பிய நாடுகள் முற்பகல் செய்த அரசியல் வினைகளின் பயன்தான் இப்போது அகதிகள் பிரச்சினையாக அவர்கள் மீது வீழ்ந்திருக்கிறது. இப்பிரச்சினையில் தீவிர அக்கறை செலுத்தாமல் இனியும் ஐரோப்பிய நாடுகளால் தள்ளிப்போட முடியாது. அவ்வாறு செய்வார்களேயானால் அதன் பயனை அவர்களே விரைவில் அனுபவிக்கவேண்டிய நிலை ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

# நகைச்சுவை நாயகியாக சாக்ஷி



'இம்சை அரசன் 23ஆம் புலிகேசி' படத்தில் வடிவேலு பேசிய 'க க க போ' வசனத்தை படத்தில் தலைப்பாக்கி இருக்கிறார் புது இயக்குநர் பி.எஸ்.விஜய்.
'கவிதாவும் கண்ணதாசனும் காதலிக்கப்போறாங்க' இதுதான்படத்தின் விளக்கம். இதன்பாடல்களை ஜெஅன்பழகன் எம். எல். ஏ வெளியிட்டார். இந்தப் படத்தில் கருணாஸ், பவர் ஸ்டார் சீனிவாசன், சுப்பு பஞ்சு, சிங்கம் புலி, மதன்பாப், மயில்சாமி, எம். எஸ்.பாஸ்கர், ரோபோ சங்கர், ஆத வன், நிரோ என 10 இற்கும் மேற்பட்ட நகைச்சுவை நட்சத்திரங்களுடன், நாயகியாக நடிக்கிறார் சாக்ஷி அகர்வாலும்இணைகிறார்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** சுயநல நோக்கத்துடன் சிலர் உங்களைப் புகழ்ந்து பேசுவர். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனமாக இருப்பது நல்லது. வாகனப் பயணத்தில் கவனம் தேவை.

**இடபம்:** பிடிவாத குணத்தால், குடும்பத்தினர் அதிருப்திக்கு ஆளாவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். நிலுவைப் பணம் வசூலிப்பதில் தாமதம் உண்டாகும். நண்பர்களால் உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** உங்கள் செயற்திறன் கண்டு அனைவரும் வியப்பர். தொழில், வியாபார வளர்ச்சியால், தாராள வருமானம் கிடைக்கும். உறவினர் வருகையால், மகிழ்ச்சி காண்பீர்கள். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கடகம்:** சமூக நிகழ்வுகள் மனதில் பாதிப்பைத் தரலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். இஷ்டதெய்வ வழிபாடு அமைதிக்கு வழிவகுக்கும். இயந்திரப் பிரிவு பணியாளர்கள், பாதுகாப்பில் கவனம் செலுத்தவும்.

**சிங்கம்:** உறவினர்கள் பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் எதிர் பார்த்த ஆதாயம் கிடைக்கும். பூர்வீகச் சொத்து மூலம்வருமானம்கிடைக்கும்.குடும்பத்தேவையை, தாராள பணச்செலவில் நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** நேர்மை எண்ணத்துடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். இலாபம் மிதமான அளவில் கிடைக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**துலாம்:** குடும்பத்தினரின் ஒத்துழைப்புக் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் தாராள பண வரவு வந்து சேரும். உறவினருக்கு இயன்ற அளவில் உதவி புரிவீர்கள். மாணவர்கள் கண்ணும், கருத்துமாகப் படிப்பர்.

**விருச்சிகம்:** வாழ்வில் குறுக்கிடும் சிரமத்தைச் சரி செய்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிப் பணி இனிதாக நிறைவேறும். உபரி வருமானம் கிடைக்கும். உறவினர் வழியில் உபசரிப்பதோடு, பரிசுப் பொருளையும் அளிப்பர்.

**தனுசு:** உங்களுக்கு உதவுவதுபோல, சிலர் பாசாங்கு செய்வர். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள், கணவரின் அன்பைப் பெற்று மகிழ்வர். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**மகரம்:** அவசரப் பணியால் அவதிக்கு ஆளாகலாம். தொழில், வியாபார விடயமாக வெளியூர் செல்ல நேரிடலாம். இலாபம் மிதமாக இருக்கும். ஆரோக்கிய விடயத்தில் அக்கறை கொள்வது நல்லது.

**கும்பம்:** மனதில் புத்துணர்ச்சி மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் ஆசிரியர்களின் ஆதரவுடன் படிப்பர்.

**மீனம்:** சமூகத்தி செல்வாக்கு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள், உறவினர்களுடன் சுற்றுலா செல்லத் திட்டமிடுவர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 6 | 1 | 9 | 5 | 4 | 2 | 7 |
| 5 | 9 | 2 | 8 | 7 | 4 | 6 | 1 | 3 |
| 1 | 7 | 4 | 2 | 3 | 6 | 9 | 8 | 5 |
| 3 | 8 | 7 | 4 | 2 | 9 | 5 | 6 | 1 |
| 4 | 5 | 1 | 7 | 6 | 3 | 2 | 9 | 8 |
| 2 | 6 | 9 | 5 | 8 | 1 | 3 | 7 | 4 |
| 6 | 4 | 8 | 3 | 1 | 2 | 7 | 5 | 9 |
| 7 | 2 | 3 | 9 | 5 | 8 | 1 | 4 | 6 |
| 9 | 1 | 5 | 6 | 4 | 7 | 8 | 3 | 2 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | | | 5 | | | |
| 5 | 9 | | | | 4 | | | 3 |
| | | | 2 | 3 | | | | |
| | 8 | | | | | 5 | | |
| 4 | | 1 | 7 | 6 | 3 | 2 | | 8 |
| | | 9 | | | | | 7 | |
| | | | | 1 | 2 | | | |
| 7 | | | 9 | | | | 4 | 6 |
| | | | 6 | | | | | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப் படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனைஅறிமுகப்படுத்திவெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**பெண்:** (செல்போனில்) ஹலோ.. இது கஸ்ரமர் கேர் தானே?
**குரல்:** ஆமாம். சொல்லுங்க சார் என்ன ப்ராப்ளம்?
**பெண்:** என்ர 5 வயது பையன் சிம்கார்டை முழுங்கிட்டான்.
**குரல்:** சரி?
**பெண்:** அவன் பேசும்போது, காசு போகுமா?



படித்ததில் பிடித்தது

உங்களில் ஒருத்தி:
வாழ்க்கையில்
திரும்பப் பெற
முடியாதவை...!
உயிரும், நேரமும்
அடுத்தவர் மனதை நோகடித்த
சொற்களும்தான்...!

நீ ஒதுக்கப்படும் சபைகளில்
நிமிர்ந்து நில்
நீ புகழப்படும் சபைகளில்
அடக்கமாய் நில்
நீ விமர்சிக்கப்படும் இடங்களில்
கோபமாக இரு
நீ நேசிக்கப்படும் இடங்களில்
அன்புடன் இரு
நீ ஜெயிக்கும் தருவாயில்
வேகமாகு
நீ ஜெயித்த பிறகோ
அதி வேகமாகு!



# வீட்டுக் குறிப்புகள்

- கத்தியின் கூரிய பகுதியை உப்பில் அழுத்தி எடுத்தால் மீன், மாமிசம் இவற்றைச் சுலபமாக நறுக்கலாம்.
- வாழைப்பூ, வாழைத்தண்டு இவற்றை மோர் கலந்த நீரில் போட்டு வைத்தால் நிறம் மாறாது. இவற்றை வேக வைக்கும் போதும், வெண்டைக்காய் வதக்கும் போதும் ஒரு கரண்டி தயிர் அல்லது மோர் ஊற்றினால் நிறம் வெண்மையாக இருக்கும். வெண்டைக்காய் பிசு பிசுக்காமல் இருக்கும்.
- வெல்லப்பாகு, சீனிப்பாகுடன் பதம் வந்தவுடன் எலுமிச்சம் பழச்சாறு பிழிந்து விட்டால் பாகு முற்றாது.
- வெங்காயம், பூண்டு இவற்றை இலகுவாக உரிக்க தண்ணீரில் போட்டு உரிக்கவும். கண்ணும் கறுக்காது.
- புளித்த தயிரைத் தலையில் தேய்த்துக் கொண்டு சுத்தம் செய்தால் தலைமுடி மிருதுவாக இருக்கும்.
- தேங்காயைச் சிறு துண்டுகளாக்கி தயிரில் போட்டு வைக்க தயிர் புளிக்காமல் இரண்டு மூன்று நாள்கள் இருக்கும்.
- தயிர் கொண்டு கை அலம்ப மண்ணெண்ணெய் வாசம் போய்விடும்.
- வெண்ணெய் காய்ச்சி இறக்கும் முன்னர் சிறிது தயிர் சேர்த்தால் நெய் வாசமாக இருக்கும்.
- சமையலுக்குப் பின் எஞ்சியிருக்கும் இஞ்சியை மண்ணில் புதைத்து வைத்தால் தேவைப்படும் போது எடுத்துக் கொள்ளலாம்.



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | – | 800 | 900 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | – | 450 | 200 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | – | 700 | 700 | 600 |
| பாரை | 550 | 600 | 500 | – | 650 | 500 | 450 |
| சுறா | 500 | 700 | 600 | – | 1000 | – | – |
| சீலா | 300 | 500 | 400 | – | 550 | 300 | 400 |
| விளை | 650 | 600 | 400 | – | 400 | 600 | 450 |
| முரல் | 300 | 500 | 350 | – | 400 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | – | 500 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 350 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | 700 | – |
| திரளி | 300 | 300 | 200 | – | 300 | 200 | 400 |
| நகரை | 250 | 300 | – | – | 400 | 200 | 400 |
| சூடை | 150 | 200 | 100 | – | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 300 | 150 | – | 400 | – | 300 |
| திருக்கை | 150 | 400 | 200 | – | 400 | 400 | 200 |
| மதனம் | 150 | 300 | 180 | – | 300 | – | 300 |
| கொய் | 100 | 200 | 60 | – | 100 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | – | 600 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 400 | 300 | – |



## மூங்கில் திரை மறைப்புக்கள்

### இது புதுசு

மூங்கில் திரைமறைப்புக்கள் அறிமுகமாகியுள்ளன. இவை விசேடமாக வெளிமறைப்புக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இயற்கைப் பொருள்களான மூங்கில், பாய் பொருள்களால் உருவாக்கப்பட்ட இவை நெடுநாள் பாவிக்கக் கூடியவையாகும். இவற்றைப் பல வண்ணங்கள் கொண்ட வடிவமைப்புகளில் பெற்றுக் கொள்ள முடியும். இவற்றின் விலை 1 சதுர அடி 500 ரூபாவிலிருந்து 600 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 150 | – | 120 | 160 | 100 | – | – | 80 |
| கத்தரி | 240 | 200 | 200 | 220 | 240 | 200 | – | 180 |
| கரட் | 250 | 240 | 200–300 | 220 | 240 | 250 | – | 140 |
| மரவள்ளி | 80 | 70 | 70 | 60 | 60 | 80 | – | 50 |
| பயிற்றை | 200 | 200 | 200 | 180 | 180 | 240 | – | 160 |
| பாகல் | 250 | 220 | 280 | 240 | 200 | 120 | – | 160 |
| கருணைக்கிழங்கு | 120 | 110 | 120 | 160 | 120 | – | – | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 90 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 140 | 190 | 110 | 180 | 140 | 200 | – | 140 |
| பூசணி | 70 | 70 | 70 | 80 | 80 | 60 | – | 80 |
| தக்காளி | 200 | – | 240 | 260 | 200 | 240 | – | 160 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 60 | 60 | 80 | – | 40 |
| கீரை | 40 | 50 | 50 | 20 | 40 | 40 | – | 50 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 45 | 30 | – | – | 12 |
| பச்சை மிளகாய் | 800 | 700 | 700 | 700 | 400 | 600 | – | 550 |
| புடோல் | 80 | 120 | 80 | 120 | 120 | 120 | – | 100 |
| கோவா | 200 | 160 | 200 | 180 | 180 | 240 | – | 140 |
| வெண்டி | 150 | 140 | 100 | 140 | 180 | 160 | – | 60 |
| போஞ்சி | 180 | 240 | 240 | 200 | 220 | 300 | – | 240 |
| லீக்ஸ் | 200 | 240 | 200 | 240 | 200 | 240 | – | 180 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 30 | 30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 120 | 110 | 110 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 350 | 300 | 250 | 300 | 200 | 200 | – | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | – | 15 |
| கறிமிளகாய் | 250 | 240 | 300 | 240 | 300 | 240 | – | 200 |
| இராசவள்ளி | 160 | 160 | – | 160 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 400 | 250 | 300 | 240 | 240 | 200 | – | 200 |

## செய்முறை

மிளகாயை நன்கு அலசி, ஒரு துணியில் 2 மணி நேரம் காய வைத்து நறுக்கிக் கொள்ளவும். அதனுடன் புளி, உப்புச் சேர்த்து அரைக்கவும். காற்றுப் புகாத இடத்தில் வைத்து 2 நாள்கள் கழித்து எடுத்து மீண்டும் இதை மிக்ஸியில் ஒரு சுற்றுச் சுற்றி எடுக்கவும். சட்டியில் எண்ணெய் விட்டுக் காய்ந்ததும் கடுகு, வெந்தயத்தூள், நசுக்கிய பூண்டு, பெருங்காயத்தூள் சேர்த்துத் தாளித்து மிளகாய் விழுதைக் கொட்டவும். அத்துடன் வெல்லத் துருவல் போட்டு கிளறி இறக்கவும்.

## நாளை வைகாசி-31

திங்கட்கிழமை - 13.06.2016
திதி: நவமி முழுவதும்
நட்சத்திரம்: உத்தரம் பி.ப.05.03 வரை
ராகுகாலம்: 07.22-08.52 வரை
சுபநேரம்: 11.52-01.22 வரை



## மிளகாய்ப்பழ பச்சடி

## தேவையானவை

- பழுத்த சிவப்பு மிளகாய் - கால் கிலோ
- புளி - 150 கிராம்
- உப்பு, எண்ணெய் - சிறி
- கடுகு - 1 கரண்டி
- வெந்தயத் தூள் - 1 கரண்டி
- வெல்லத் துருவல் - 1 கரண்டி
- நசுக்கிய பூண்டு - 6 ப
- பெருங்காயத் தூள் - 1 சிட்டிகை


பிரகாஸ்

# ஓய்ந்தன குத்துச்சண்டையின் கைகள்

குத்துச் சண்டையால் பலர் பிரபலம் ஆகியிருக்கலாம். ஆனால் குத்துச் சண்டையைப் பிரபலம் ஆக்கியவர் என்றால் அது மொகமட் அலியாகத்தான் இருக்க முடியும். ஆனால் இன்று அந்த ஜாம்பவானை குத்துச்சண்டை உலகம் இழந்துள்ளது.

அமெரிக்காவின் கென்டகி மாநிலத்தில் 1942ஆம் ஆண்டு பிறந்த மொகமட் அலியின் இயற்பெயர் காசியஸ் கிளே. தனது 18 வயதில் குத்துச்சண்டை களத்தில் இறங்கிய மொகமட் அலி 1960இல் ஒலிம்பிக்கில் தங்கம் வென்றார். இதுவே அவரது வாழ்க்கையின் திருப்புமுனையாக அமைந்தது. இதைத் தொடர்ந்து குத்துச்சண்டை என்றாலே மொகமட் அலி என்று சொல்லும் அளவுக்கு புகழ்பெற்றார்.

1960ஆம் ஆண்டிலிருந்து 1981 ஆம் ஆண்டு வரை மொகமட் அலி குத்துச் சண்டை உலகின் முடிசூடா மன்னனாக இருந்தார். 61 தொழில்முறை குத்துச் சண்டைப் போட்டிகளில் 56 போட்டிகளில் வெற்றிபெற்று அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். ஒரு தேனீயைப் போல களத்தில் வேகமாக செயலாற்றி கண்ணிமைக்கும் நேரத்தில் சரமாரியான குத்துகளை விட்டு எதிரிகளை நிலைகுலையச் செய்வது அவரது தனித்துவம்.



குத்துச் சண்டையில் இருந்து அலி விலகுவதற்கு பிரதான காரணம் அவரைத் தாக்கிய பாரிசவாத நோய். போட்டிகளுக்காக கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டதால் அவருக்கு இந்த நோய் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. 35 ஆண்டுகளுக்கும் மேலாக குறித்த நோயுடன் போராடி வந்த அவர், கடந்த ஆண்டு மூச்சுத்திணறல் மற்றும் சிறுநீரகத் தொற்று உள்ளிட்ட உபாதைகளாலும் பாதிக்கப்பட்டார். இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை (4ஆம் திகதி வைத்தியசாலையிலேயே சாவடைந்தார்.

பட்டாம்பூச்சியைப் போல மிதந்திடுங்கள், தேனீயைப் போல கொட்டிடுங்கள் என்ற வார்த்தைகள் மொகமட் அலியால் ஒவ்வொரு வெற்றியின் பின்பும் உச்சரிக்கப்பட்ட வார்த்தைகளாகக் கருதப்படுகின்றன.

குத்துச்சண்டைக் களத்தில் மட்டுமன்றி அமெரிக்காவில் அக்காலத்தில் தீவிரமாக பரவியிருந்த இனவெறிக்கு எதிராகவும் அவர் போராடினார். போராட்டத்தையே வாழ்வாகக் கொண்டிருந்தார். பலர் மொகமட் அலியை தமது நாயகனாக ஏற்றுக்கொள்ள மொகமட் அலி தனது நாயகனாக நெல்சன் மண்டேலாவைக் கொண்டிருந்தார். அவருடன் இணைந்து கறுப்பினத்தவர்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தார். அவர் குவிக்கும் வெற்றிகள் அத்தகைய மக்களிடையே புதிய எழுச்சியை ஏற்படுத்தின. அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றுமாறு அந்த அரசால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அலி நிராகரித்தார். இதனால் சில தடவைகள் தடையும் செய்யப்பட்டார். ரசிகர்கள் என்னை நேசிப்பதைப்போல ஒருவர் மற்றவரை நேசியுங்கள் என்பது மக்களின் விடுதலைக்காக அவரது அறைகூவல்களில் ஒன்றாக இருந்தன. இவ்வாறு களத்திலும் வெளியிலும் போராட்ட குணம் கொண்ட ஒரு நிஜ வீரனை இந்த உலகம் தவற விட்டுள்ளது.



## பிரான்ஸ் கிண்ணத்துடன் முன்னேறினார் முகுருசா

சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் நேற்றுமுன்தினம் பெண்கள் பிரிவுக்கான புதிய தரப்படுத்தலை வெளியிட்டுள்ளது. இதில் செரினா முதலிடம் பிடித்துள்ளார். ஆனால் முகுருசாவின் முன்னேற்றமே கவனிக்க வைப்பதாக அமைந்துள்ளது.

முதலிடத்தில் உள்ள செரினா வில்லியம்ஸ் 8 ஆயிரத்து 330 புள்ளிகளைப் பெற்றுள்ளார். அவருக்கு அடுத்த இடத்தில் முகுருசா உள்ளார். அவர் 6 ஆயிரத்து 766 புள்ளிகளைப் பெற்றுள்ளார். கிராண்டஸ்லாம் கிண்ணமான பிரான்ஸ் கிண்ணத்தைக் கைப்பற்றியமையாலேயே முகுருசா இத்தகைய முன்னேற்றம் கண்டுள்ளார். பிரான்ஸ் தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னைய தரப்படுத்தலில் முகுருசா 7ஆவது இடத்திலிருந்தார். கிராண்டஸ்லாம் கிண்ணத்துக்கான 2ஆயிரத்து 500 புள்ளிகளின் உதவியுடன் அவர் இந்த அடைவை எட்டியுள்ளார். ரட்வன்ஸ்கா 6ஆயிரத்து 80 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், கெர்பர் 5ஆயிரத்து 620 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், கேலெப் 4ஆயிரத்து 471 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

ஆறு முதல் பத்து வரையான இடங்களுக்குள் அசெரென்கா, வின்சி, பென்சிச், வினஸ் வில்லியம்ஸ், ரிமா ஆகியோர் உள்ளனர். ஊக்கமருந்து பாவனையால் தடை செய்யப்பட்டுள்ள செரபோவா 10ஆவது இடத்துக்கு அப்பால் தூக்கி வீசப்பட்டுள்ளார். செரபோவா இரண்டு வருடங்கள் தடை செய்யப்பட்டுள்ள நிலையில் இந்தக் காலப்பகுதியில் அவர் தரப்படுத்தலில் காணாமலும் போகலாம்.

## ரியோ ஒலிம்பிக் தொடர்: சிகா சிக்கலுக்குத் தீர்வு

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ள நிலையில் அந்த நாட்டில்பரவும்சிகாவைரஸின்பாதிப்பு வீரர், வீராங்கனைகளுக்கு ஏற்படாமல் இருக்க உத்தரவாதம் தருவதாக பிரேஸிலின் விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஒலிம்பிக் தொடருக்கான கட்டுமானங்கள் ஒரு முனையில் துரிதமாக நடைபெற மறுமுனையில் பிரேஸிலில் பரவும் சிகா வைரஸ், குறித்த தொடரில் ஏனைய நாட்டு வீரர், வீராங்கனைகளின் பங்குபற்றலை சந்தேகமாக்கியுள்ளது. அவுஸ்திரேலியா, இத்தாலி போன்ற நாடுகள் ஒலிம்பிக் தொடரை பிற்போடவேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தன. இந்த நிலையிலேயே குறித்த உத்தரவாதம் பிரேஸிலிடமிருந்து கிடைத்துள்ளது.

சிகா தொடர்பாக பிரேஸில் விளையாட்டுத்துறை அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில், ரியோ நகரில் ஏப்ரல் மாதம் சிகாவால் பாதிக்கப்பட்டிருந்தவர்கள் எண்ணிக்கை 2ஆயிரத்து 400ஆக இருந்தது. இது மே மாதம் 700ஆகக் குறைந்துள்ளது. எதிர்வரும் மாதங்களில் இன்னும் குறைவடைந்து ஒலிம்பிக் தொடர் நடைபெறும் ஓகஸ்ட் மாதம் சிகா இல்லாத நகராக ரியோ மாறிவிடும். எனவே ஒலிம்பிக் தொடரில் பங்குபற்றும் வீரர், வீராங்கனைகளுக்கு நூறு சதவீதம் உத்தரவாதம் தரமுடியும். என்றுள்ளது. நடப்பு வருட ஒலிம்பிக் தொடருக்கு ஒன்றன்பின் ஒன்றாக பல தடைகள் வந்துகொண்டிருந்தாலும் பிரேஸிலும் விடுவதாயில்லை.

மதுரகவி காரை
எம்.பி.அருளானந்தன்

# இன்று மணிபல்லவத்தில் கைலைக்காட்சி

நயினை ஸ்ரீநாகபூணி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற துர்முகி வருட மகோற்சவப் பெருவிழாவில் இன்று ஏழாம் திருவிழா இரவு கைலைக் காட்சி விழாவாக அமைகின்றது. அதேபோல பத்தாம் திருவிழாவும் சிவ பூசைக் கைலைக் காட்சியாகவும், பதின் மூன்றாம் திருவிழா பகலில் கைலைக் காட்சியாகவும் மூன்று பெருந் திருவிழாக்களில் அம்பிகை சிவனோடு கைலையில் எழுந்தருளும் திருக்காட்சி நயினையில் அமைகிறது.

சைவத்தமிழ் மக்களின் வரலாற்று மரபு இறைவனை மலையின் மீது ஆரோகணிக்கச் செய்து வழிபடுகின்ற மரபு நீண்ட வரலாறாக இருந்து வருகின்றது. கைலாய மலையில் சிவபெருமானையும் வேங்கட மலையில் கண்ணபிரானையும் குன்றுகள் தோறும் முருகப் பெருமானை யும் வழிபடுகின்றவர்கள் சைவப் பெருமக்கள்.

கைலைமலையானது கைலாய வாகனமாக சிவபக்தன் இராவணனின் வரலாற்றை சித்திரிப்பதாக அமைகின்றது. நயினை நாகபூசணி அம்பாள் ஆலயத்திலுள்ள கைலாய வாகனமே இலங்கையில் உள்ள ஆலயங்களில் முதலாவது கைலாய வாகனம் என்ற சிறப்பைக் கொண்டுள்ளது. கைலாச வாகனம் இராவணேசுவர வாகனமாக காட்சியளிக்கின்றது. இராவணன் இலங்கை மன்னனாக விளங்கி ஆட்சி செய்த வேளை ஒரு தடவை வடதிசையிலுள்ள குபேரனின் ஆட்சிக்குரிய அழகாபுரியின் மீது படையெடுத்தான். குபேரனை வென்று அவனது நவநிதிகளையும் அவனது புஷ்பக விமானத்தையும் தன்னுடைமையாக்கிக் கொண்டான்.

குபேரனின் புஷ்பக விமானத்தில் ஏறிக் கொண்டான். தன் இலங்காபுரியை நோக்கி திரும்புகையில் இமயமலையை தாண்டிச் செல்ல வேண்டிய நிலை சிவபெருமான் எழுந்தருளியுள்ள மலையல்லவா! இந்த மலையின் மீது பறந்து செல்வது நல்லதல்ல என அங்கு காவல் செய்து நின்ற நந்தியம்பெருமான் இராவணனிடம் கூறினார். விலகிச் செல் என்றார். இந்த வார்த்தைகளைக் கேட்ட இராவணனுக்கு கோபம் பொங்கியது. நந்தியெம் பெருமானைப் பார்த்து ஏ! குரங்கு முகமுடையவனே என்னை அறியாமல் என்னுடன் இப்படி பேசுகின்றாயோ? நான் எதற்காக விலகிச் செல்ல வேண்டும். எனது வழியிலே தடுத்து நிற்கும் இந்த மலையை வேரோடு பறித்துவிட்டு எனது பயணத்தை தொடர்கிறேன் என்று சீறினான்.

இதைக் கேட்ட நந்திதேவர் இராவணனைப் பார்த்து என்னைக் குரங்கு முகமென்று இழந்து பேசினாயே பார். உன் நாடும் அரசுகளும் குரங்குகளாலேயே அழியப் போகிறது என்று கூறினார். இந்த வேளையில் இராவணன் சிவனை எண்ணினான், எனக்கு பல வரங்களைத் தந்தவன் இவனல்லவா அவனது இந்த மலை மீது செல்வது நல்லதல்ல என்றாலும் நான் மகா சக்கரவர்த்தியல்லவா நான் எனது பாதையை மாற்றுவதோ? வேண்டாம்? இந்த மலையை வேரோடு பிடுங்கி வைத்துவிட்டு செல்வேன் என எண்ணினான். உடனே புஷ்பக விமானத்தைவிட்டு கீழே இறங்கினான். பலம் மிகுந்த இருபது கரங்களினாலும் கைலை மலையைப் பறித்து அகற்ற முனைந்தான்.

அவனுடைய இந்த செயலால் கைலாயம் குலுங்கியது. அங்குள்ள தேவர்கள் பூதகணங்கள் செய்வதறியாது தடுமாறி ஒருவர் மேல் ஒருவர் விழுந்தனர். பார்வதி தேவியும் அச்சமுற்றார் அருகிலிருந்த தன் நாயகன் சிவனை அணைத்துக் கொண்டாள். இந்த நிலையறிந்த சிவன் இராவணனின் ஆணவத்தை அடக்க தனது வலது கால் கட்டை விரலை மலையின் மீது ஊன்றினார். அந்த அழுத்தம் அளவற்ற யானைகளின் பலத்தையொத்ததாக இருந்தது. மலையின் கீழ் அகப்பட்டுக் கொண்ட இராவணனால் அந்த பளுவைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவனது இருபது கண்களும் பிதுங்கின, தோள்கள் நெருங்கி நெருங்கி அசைந்தன. குழறினான். செய்வதறியாது திகைத்துப்போனான். இந்த நிலையில் அங்கு வாகீசர் என்ற முனிவர் காட்சி கொடுத்தார். இராவணா நீ புலம்பி எதுவித பயனும் இல்லை. உடனடியாக சிவனுடைய கோபம் தணிய நீ சாமகானம் பாடுவாய் என்றார்.

இராவணன் தன் தவறை உணர்ந்து தனது பத்துத் தலைகளில் ஒன்றைப் பறித்து அதனைக் குடமாக்கி கை யொன்றை தண்டாகவும் நரம்புகளைத் தந்தியாகவும் அமைத்து அவசரமாக ஒரு வீணையைத் தயாரித்து அதனை மீட்டிச் சாமகானம் பாடினான்.

அந்த இனிய மதுரமான இசை எங்கும் ஒலித்தது. தேவர்கள் முனிவர்கள் எல்லோரும் அந்த இசையில் மூழ்கிப் போயினர். சிவபெருமானும் அந்த இசையோடு நெகிழ்ந்து போனார். தான் விரல் ஊன்றுவதைச் சற்று விலத்தினார். இந்த நிலையறிந்த இராவணன் கைலை மலையை கீழே வைத்துவிட்டு தனது இசையை நிறுத்தினான்.

அவனுடைய இசையால் மகிழ்ந்த இறைவன் இராவணனுக்கு சந்திரகாசம் எனும் வாளையும் முப்பத்து முக்கோடி வாழ் நாள் ஆயுளையும் அளித்து மகிழ்ந்தார். இராவணன் சிவனுடைய எல்லையில் அருள் பெற்று இலங்கைக்குத் திரும்பினான். இந்தக் காட்சியை சித்திரிக்கும் வண்ணமாகவே ஆலயங்களில் கைலாசவாகனம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறாக இன்று ஏழாம் திருவிழா இரவுக்காட்சி நயினையில் கைலைக்காட்சி தரிசனம் கண்கொள்ளாக் காட்சியாக அமைகிறது. இதுதான் கைலாசவாகன தரிசன தத்துவம். சைவப் பெருமக்கள் இந்தப் புராணவரலாறுகளை அறிந்து எமது இளையவர்களும் தெரிந்து கொள்ள ஆவன செய்ய வேண்டும். கைலைக் காட்சி கண்டு மகிழ்வோம். வாரீர்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 424

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | ■ | 10 | | | |
| 11 | | | 12 | | | ■ | |
| | ■ | 13 | | | ■ | 14 | |
| ■ | 15 | | | ■ | 16 | | ■ |
| 17 | | ■ | 18 | | | ■ | 19 |
| 20 | | | ■ | 21 | | | |

அனுப்புபவர் பெயர்:......................................

பூரணமான தபால் விலாசம்: ..............................

..........................................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. குழந்தைப் பேறு
4. எந்நேரமும்
6. மேரு
7. பாதுகாப்புக்காக அமைப்பது
8. பெண்கள்
10. விசாலமான
11. மிடி
13. விளைச்சலற்ற நிலம்
14. சம்மதச் சொல்
15. இதுவே இன்ப ஊற்று
16. இது ஓயாது
17. முகத்தில் அதிகம் வரும்
18. இசையுடன் தொடர்புடையது
20. பல்லக்கு
21. வானில் பறக்கப் பயன்படுவது

### மேலிருந்து கீழ்

1. உயர்ந்த செயற்பாடு
2. சாமர்த்தியசாலி
3. சிக்க வைக்க உதவும்
4. தஞ்சம்
5. சிவ நடனம்
7. வதிவிடம்
9. அணி
10. ஆட்சியில் இருப்பது
12. ஓர் இந்திய மாநிலம்
14. உற்பத்தி மையமொன்று
15. மலையிலிருந்து கொட்டுவது
16. அன்னை
17. இது வரப் பத்தும் பறந்திடும்
19. இத்தாலியின் [illegible]

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக் கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 422 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

**இடமிருந்து வலம்**

(1) ஓபாமா (4) சந்ததி (7) சாவித்திரி (9) கசை (10) மாத்தறை (11) கன (12) தளை (13) வரம்பு (15) நில் (16) உளம் (17) கடம் (18) ஏர் (19) மகுடம் (21) மாந்த (22) திரு (23)புணர்தல்

**மேலிருந்து கீழ்**

(1) ஒசாமா (2) பாவித்தல் (3) மாத்தளை (4) சரி (5) தகனம் (6) திசை (8) திறை (11) கரம் (13) வளம் (14) புலர்தல் (15) நிம்மதி (16) உடம்பு (17) கட (18) ஏந்த (20)குரு (21)மார்

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 422 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
ஜெ.யுதாஜித்,
மே/பா.வே.ஜெயகாந்தன்,
தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.

**2 ஆம் பரிசு**
லி.ஜோதி,
"கோபால கிரி"
மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.

**3 ஆம் பரிசு**
க.மு.கரீம்,
மெயின் வீதி, நாச்சிக்குடா,
விநாயகபுரம், முழங்காவில்.

**4 ஆம் பரிசு**
அ.கற்பகம்,
விக்கினமாகுளம் ,
பிள்ளையார் கோயிலடி
மாசேரி, வரணி.

**5 ஆம் பரிசு**
ச.சந்திரமோகன்,
இல.17/3 மன்னார் வீதி,
வவுனியா.

**பாராட்டுப் பெறுவோர்**

பிரதீகா ஜெயகுமார்,
தம்பாட்டி, நாரந்தனை வடமேற்கு,
ஊர்காவற்றுறை.

ர.சோபன்,
இல.735 மானிப்பாய் வீதி,
ஆலடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

எம்.ஜி.தில்லைநாயகம்
இல.70/12 மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

## போட்டி விதிகள்

1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.424 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (22.06.2016 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.424இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 26.06.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சொற்சிலம்பம் போட்டி 422இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

# உயர வளர்ச்சிக் குறைபாடு

## ஆலோசனைகளும் தீர்வுகளும்



> உயர வளர்ச்சிக் குறைபாடு வேறு நோய்க்கான அறிகுறியாகவும் இருக்கலாம். அவ்வாறிருப்பின் விரைவான சிகிச்சையை பெறுவதன் மூலம் சாதாரண உயரத்துக்கு வர முடியும்.

*01. உயர வளர்ச்சி குன்றிய பிள்ளைகள் அவ்வாறு இருப்பதற்கான காரணங்கள் யாவை?*

பிள்ளையொருவரின் உயரம் குறைவாக இருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. முதலாவதாக, நீண்டகாலமாகப் போதுமானளவு சத்தான உணவுகளை உள்ளெடுக்காதவிடத்து (chronic malnutrition) உயரம் மற்றும் உடல் நிறை என்பன சீரற்ற விதத்தில் அதிகரிக்காது விடுகின்றன. இதேபோல எந்தவொரு நீண்டகால நோய் (உ+ம் சிறுநீரக பிரச்சினைகள், சமிபாட்டுத் தொகுதி நோய்கள், இருதய நோய்கள்) இருக்கும்போதும் சிறுவர்களின் உயரவளர்ச்சி பாதிப்படைய நேரிடுகின்றது. பெற்றோர் உயரம் குன்றி இருக்கும்போது பிள்ளைகளின் உயரமும் குறைவாகவே இருக்கும். சில சிறுவர்கள் ஆரம்பத்தில் உயரம் குறைவானவர்களாகக் காணப்பட்டுக் காலப்போக்கில் சாதாரண உயரத்தை அடைவார்கள். (constitiutomal delay) இறுதியாக, அகஞ்சுரக்கும் தொகுதிப் பிரச்சினைகளும் (ஹோர்மோன்கள்) மிக அரிதாக இதற்குக் காரணமாக இருக்கலாம்.

*02. உயர வளர்ச்சி குறைவாக இருக்கின்றதா என்பதை எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்?*

சிறுபிள்ளையொருவரின் உயர வளர்ச்சியானது அவரது ஆரோக்கிய பதிவேட்டு வரைவில் (Child health record) குறைவாகக் காணப்படும்போது வைத்திய ஆலேசனையைப் பெறுவது அவசியமாகும்.
சிறுபிள்ளையொருவரின் உயரமானது அவரது வகுப்பு மாணவர்களின் சராசரி உயரத்துடன் ஒப்பிடும்போது குறைவாகக் காணப்படும்போது அதனைக் கண்டறிந்து கொள்வது மிக அவசியமாகும். ஏனெனில் எவ்வளவு விரைவாக உயர வளர்ச்சிக் குறைபாட்டைக் (Short Staure) கண்டறிகின்றோமோ அதற்கேற்ப சிகிச்சை வழிமுறைகளை வழங்குவதன் மூலம் சிறுவர்கள் சாதாரண உயரத்தை அடைவதற்கு நாம் உதவ முடியும். எனவே பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் பிள்ளைகளில் உயர வளர்ச்சிக் குறைபாடு இருக்கின்றதா என்பதை அவதானித்து தேவையேற்படின் அவர்கள் வைத்திய ஆலோசனை பெற உதவுதல் மிகவும் இன்றியமையாததாகும்.

*03. உயர வளர்ச்சிக் குறைபாடு இருக்கின்றதா என்பதை எவ்வாறு பரிசோதித்து அறிந்து கொள்ள முடியும்?*

உயர வளர்ச்சி குன்றிய சிறுவர்களை மேலதிகப் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகளுக்காக குழந்தை நல மருத்துவ நிபுணர் (Paediatrician) ஒருவரிடமோ அல்லது அகஞ்சுரக்கும் தொகுதி நிபுணர் (Endo crinologist)ஒருவரிடமோ அனுப்பி வைத்தல் அவசியமாகும். தேவைப்படுகின்ற வினாக்களை வினவுவதன் மூலமாக உடற் பரிசோதனைகள் மூலமும் (History taking / Examination) காரணத்தை ஓரளவுக்கு ஊகித்துக் கொள்ள முடியும். பெற்றோர்களின் உயரத்தை அளவிடுவதன் மூலம் (Mid parental height) பிள்ளையொருவரின் உயர வளர்ச்சி தொடர்பாக முடிவெடுத்துக் கொள்ள முடியும். இதேபோல தேவையான இரத்த மற்றும் ஹோர்மோன் பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலம் உயரம் குன்றி இருப்பதற்கான காரணத்தைக் கண்டறிந்துகொள்ள முடியும் பிள்ளையொருவரின் எலும்பு வயதை (Bone age) கையில் மேற்கொள்ளப்படும்X - ray (Non - Dominant Hand X- ray) அறிந்து கொள்வதும் மிக அவசியமாகும்.



*04. உயர வளர்ச்சிக் குறைபாட்டுக்கான தீர்வுகள் மற்றும் சிகிச்சை வழிமுறைகள் பற்றிக் கூறுங்கள்?*

உயர வளர்ச்சி குன்றியிருப்பதற்கான காரணத்துக்கேற்ப சிகிச்சை வழிமுறைகளும் வேறுபடுகின்றன. ஹோர்மோன்களில் ஏற்படும் குறைபாடுகளும் இதற்கு மிக அரிதாகக் காரணமாக அமைகின்றன. உதாரணமாக: உயர வளர்ச்சி ஹோர்மோன் (Growth Hormone) குறைபாடு இருப்பது உறுதி செய்யப்பட்டால் அதற்கான சிகிச்சையாக உயர வளர்ச்சி ஹோர்மோனை வழங்குவது அவசியமாகும். இதனை ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட வேளையில் ஊசி மூலம் வழங்குவதனால் உயர வளர்ச்சி அதிகரிப்பதற்கு உதவிட முடியும்.

*05. இறுதியாக, எமது மக்களுக்கு இது தொடர்பாக என்ன கூற விரும்புகிறீர்கள்?*

எமது மக்கள் மத்தியில் உயர வளர்ச்சிக் குறைபாடு என்பது பற்றிய விழிப்புணர்வொன்றை ஏற்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும். குறிப்பாக பெற்றோர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்களுக்கு இது சம்பந்தமான அறிவூட்டல் மிக அவசியமானதாகும். பிள்ளையொருவரின் உயர வளர்ச்சி குறைவாக இருப்பதை எவ்வளவு ஆரம் பத்தில் கண்டறிந்து கொள்கின்றோமோ அதற்கேற்பத் தகுந்த சிகிச்சையை வழங்குவதன் மூலம் அந்தப் பிள்ளையானது சாதாரண உயர வளர்ச்சியை எதிர்காலத்தில் அடைந்திட உதவ முடியும்.

**மருத்துவர் எம் அரவிந்தன்**
நீரிழிவு, அகஞ்சுரக்கும் தொகுதியியல்
விசேட மருத்துவ நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை

# மக்களை மதபேதமின்றி ஈர்த்துக் கொண்ட பாசையூர் புனித அந்தோனியார் பதி

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக வருகை விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்

நாளைய தினம் 13 ஆம் திகதி திங்கட்கிழமை வட பகுதியின் மிகப் பிரசித்தி பெற்ற பாசையூர் புனித அந்தோனியார் ஆயலத் திருவிழாவானது யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரீன் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெறுவதை ஒட்டி இந்தக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது. யாழ். ஆயராக மேதகு கலாநிதி ஜஸ்ரீன் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பொறுப்பேற்ற பின்னர் நடைபெறும் முதற் திருவிழா என்கின்ற வகையில் இது சிறப்பு முக்கியத்துவம் பெறுகிறது. இந்த ஆக்கத்துக்கான தகவல்கள் பாசையூர் பங்குத்தந்தை லியோ ஆம்ஸ்றோங் அடிகளார் மற்றும் பாசையூர் பங்கு மகன் எட்மன் றெக்ஸ் ஆகியோரால் வழங்கப் பட்டது.



### தேவஅன்னைக்கு அடுத்து புனித அந்தோனியாருக்கே அதிக ஆலயங்கள்

தேவ அன்னைக்கு அடுத்ததாக புனித அந்தோனியார் பெயரிலேயே அதிக ஆலயங்களும், யாத்திரைத் தலங்களும், நிறுவனங்களும் உலகளாவிய ரீதியில் கட்டி எழுப்பப்பட்டுள்ளன. இலங்கையில் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேசிய யாத்திரைத்தலம், யாழ்ப்பாணம் பாசையூர் புனித அந்தோனியார் யாத்திரைத்தலம், மான்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலம் என்பன பெயர் போன புனித அந்தோனியாரின் தலங்கள் ஆகும். இவற்றை விட யாழ். மறை மாவட்டத்தில் பருத்தித்துறை, மணற்காடு, தாளையடி, வெற்றிலைக்கேணி, கரவெட்டி, மாதகல்,சுன்னாகம், அச்சுவேலி , நீர்வேலி, பண்டத்தரிப்பு , பெரியவிளான், நாவற்குழி, அளம்பில், பரந்தன், மல்லாவி, குமிழமுனை, நாவல்நகர், ஜெயந்தி நகர், ஸ்கந்தபுரம் ,கிளாலி, கிராஞ்சி, 155 ஆம் கட்டை கிளிநொச்சி, யூனியன் குளம், 13 ஆம் கட்டை பாரதிபுரம், பல்லவராயன்கட்டு, வவுனிக்குளம் வடகாடு, பாலையடி, கீரிக்குடா, ஜெயபுரம், கள்ளப்பாடு, செல்வபுரம், கேப்பாபிலவு, பள்ளிக்குடா, கௌதாரிமுனை, அல்லைப்பிட்டி , ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, மண்டைக்கல்லாறு, கச்சதீவு, பாலைதீவு, கற்கடகதீவு, குருசடித்தீவு என புனித அந்தோனியார் ஆலயங்கள் நிறைந்துள்ளன.

### பாசையூர் கத்தோலிக்க விசுவாசத்தோடு, கலை வளமும், கடல் வளமும் கொண்டது

அழகிய கருநீலக் கடல், கடற்கரையோடு ஒட்டிய நெருங்கிய வீடுகள் என்பவற்றின் மத்தியில் கம்பீரமாக தலை நிமிர்ந்து நிற்கும் புனித அந்தோனியார் ஆலயம், பாசையூரின் ஆழ்ந்த கத்தோலிக்க விசுவாசத்துக்கும், கலை வளத்துக்கும், கடல் வளத்துக்கும் சான்று பகர்ந்து நிற்கிறது. கலைமாமணி அரு. இயேசுதாசன் 2012ஆம் ஆண்டு வெளியிட்ட மணற்றி என்ற நூலில் பாசையூர் என்ற பெயரை பாசெய்யும் ஊர் என்ற கருத்தில் பாசெய்யூர் என்று குறிப்பிடுகிறார். மேலும் ஒரு கண் குருடனான யாழ். மீட்டு இசை பாடும் யாழ்பாணன் என்ற யாழ். பாடி தென் இந்தியாவில் இருந்து ஏலேலசிங்கம் மன்னன் கலைஞர்களில் வைத்திருக்கும் அபரிமித அன்பைக் கேள்விப்பட்டு வந்து பாடியமையால் மணற்றி என அழைக்கப்படும் இடத்தை பரிசாகப் பெற்றான். இதுவே பாசையூர் என விளக்குகிறார் அரு.இயேசுதாசன். பாசையூர் பங்கில் புனித அந்தோனியார் ஆலயக் கொடியேற்றத்துக்கு முன்பதாக பாசையூர் கடற்துறைமுக வாயிலில் கடலில் அமைந்துள்ள கடல் அந்தோனியார் என்று அழைக்கப்படும் புனித அந்தோனியாரின் திருச் சொரூபத்துக்கு முன் சென்று வழிபாடு நடத்துவது இங்கு நடைபெறுகின்ற ஒரு தனிச்சிறப்பு நிகழ்வாகும். மறைந்து போன யோண் பிரான்சிஸ் அடிகளாரும் அவருக்கு உதவியாக பணியாற்றிய மறைந்து போன கிளி கருணாரட்ணம் அடிகளாரும் பாசையூரில் பணியாற்றிய காலத்தில் இந்தக் கடல் அந்தோனியாரிடம் சென்று வழிபாடு நடத்தும் வழக்கம் தொடங்கப்பட்டு இவ்வாண்டு 26 ஆண்டுகள் நிறைவுறுவது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

### பாசையூர் புனித அந்தோனியார் ஆலயம் ஒரு சிற்றாலயமாக

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் கத்தோலிக்க மதம் பல சவால்களுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருந்த வேளையில் 1775 ஆம் ஆண்டு பாசையூர் புனித அந்தோனியார் ஆலயம் ஒரு சிற்றாலயமாக அமைக்கப்பட்டதாகச் சரித்திர ஏடுகள் சான்று பகருகின்றன. 1844 - 1845 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒறற்ரோறியன் தியான சபை குருவான கபிரியேல் யோகின் அடிகளார் காலத்தில் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயம் கல்லால் கட்டப்பட்டதாக அறிய வருகின்றது. 1850 இல் கசினிலி அடிகளார் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயம் பற்றிய குறிப்பேட்டில் இது விசாலமானதாகவும் அழகானதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு இரண்டு குருக்கள் தங்கியிருந்து பணியாற்றுவதற்கு வசதியான பணிமனை அமைக்கப்பட்டுள்ளது எனத்தெரிவித்துள்ளார். 1906 இல் ஆலயம் சேதமடைந்தமையால் ஏற்கனவே இருந்த ஆலய அத்திபாரம் முற்றாக மாற்றியமைக்கப்பட்டு புதிய ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. 165 ஆண்டு கால பழைமை மிக்க பாசையூர் புனித அந்தோனியார் ஆலயம் 1850 ஆம் ஆண்டில் இருந்து தனிப் பங்காக இயங்கி வருவதாக அறியவருகிறது.

### பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்ட விக்ரர் டெஸ்லன்ஸ் அடிகளார்

பாசையூர் புனித அந்தோனியார் ஆலய வரலாற்றை நோக்கும் போது பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அமல மரித்தியாகிய விக்ரர் டெஸ்லன்ஸ் அடிகளாரைப் பற்றிக் குறிப்பிடாமல் விடமுடியாது. இன்றைய இளைய சமுதாயத்தினர் இவரைப்பற்றி அறியாவிட்டாலும் மூத்தவர்கள் இவரைப்பற்றி அறிந்திருக்கிறார்கள். இவர் முதற் தடவை (1907 - 1918) 11 ஆண்டுகளும் இரண்டாம் தடவை (1928 - 1932) 5 ஆண்டுகளுமாக மொத்தம் 16 ஆண்டுகள் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயப் பங்குத் தந்தையாகப் பணியாற்றியுள்ளார். மார்ச் மாதம் 5ஆம் திகதி 1932ஆம் ஆண்டு இவர் யாழ்ப்பாண வைத்தியசாலையில் இறந்த போது பாசையூர் மக்கள் இவரது பூதவுடலைக் கண்ணீர் மல்ல பாசையூர் புனித அந் தோனியார் ஆலயத்தில் அஞ்சலிக்காக வைத்து மறுநாள் ஆறாம் திகதி ஆலயத்தில் அடக்கம் செய்தனர். இவரது கல்லறையை பாடகர் குழாம் இருந்து பாட்டிசைக்கின்ற பகுதியில் இன்றும் காணலாம். தற்போதைய பங்குத் தந்தை லியோ ஆம்ஸ்றோங் அடிகளாரின் திட்டமிடலில் விக்ரா டெஸ்லன்ஸ் அடிகளாருடைய சிலையானது 2016ஆம் ஆண்டு அவரின் இறந்த தினமான பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி பாசையூர் கடற்றொழிலாளர் சங்கத்தின் ஒத்துழைப்பில் மின்னல் கோஸ்ரியினரால் பாசையூர்க் கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அன்றைய தினம் விக்ரர் டெஸ்லன்ஸ் அடிகளாரின் பெயரில் ஏற்கனவே இருந்த கோவிலுக்குப் பின்புற வீதியின் பெயர்ப் பலகையையும் கடற்கரையில் புதிதாக அமைக்கப்பட்ட விக்ரர் டெஸ்லன்ஸ் அடிகளாரின் சிலையையும் அமலமரித்தியாகிகளின் வட மாகாண முதல்வர் எட்வின் வசந்தராஜா அடிகளார் திறந்து வைத்தார்.

> கோடி அற்புதர் புனித அந்தோனியார் இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள நல்லிணக்க அரசு நீதியோடும் நேர்மையோடும் பணியாற்றி எல்லோர் வாழ்விலும் மகிழ்வும் சுதந்திரமும் சுபீட்சமும் நிறைய தம் அருள் வளங்களை அள்ளிப் பொழிவாராக.

### விக்ரர் டெஸ்லன்ஸ் அடிகளாரின் அர்ப்பணிப்பான பணி

1907ஆம் ஆண்டு விக்ரர் டெஸ்லன்ஸ் அடிகளார் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயப் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டார். அன்றைய காலத்தில் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் பங்குத் தந்தையாகப் பணியாற்றுவது மிகவும் கடினமான ஒரு பணியாக இருந்தது என அமலமரித் தியாகிகளின் மரணித்த குருக்களின் வரலாற்றை ஆங்கில மொழியில் எழுதிய பிலிப்ஸ் இயேசுதாசன் அடிகளார் தெரிவிக்கிறார். விக்ரர் டெஸ்லன்ஸ் அடிகளார் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தை அமைக்கும் போது தமது திட்டங்களைச் செயற்படுத்த பங்கு மக்கள் மத்தியில் தோன்றிய சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டி இருந்தது என சுவாமி ஞானப்பிரகாசர் தெரிவித்துள்ளார். பாசையூர் புனித அந்தோனியார் ஆலயப் பங்குமக்கள் தமது ஆலயம் கோவா ஆலயங்களின் அமைப்பு முறையை கொண்டு இருமருங்கும் பாலை மரத்திலான தூண்கள் அமைக்கப்பட வேண்டும் என்று பெருங்காடுகளுக்குச் சென்று அவற்றைத் தாமே வெட்டி வந்தனர். ஆனால் விக்ரர் டெஸ்லன்ஸ் அடிகளார் நவீன முறையிலான நடுவிற் தூண்கள் அற்ற ஆலயத்தை அமைக்கும் மாற்றுத் திட்டத்தைக் கொண்டிருந்தார். பெரும் சிரமத்தின் மத்தியில் விக்ரர் டெஸ்லன்ஸ் அடிகளார் மக்களைத் தம் திட்டத்துக்கு இணங்க வைத்தார் என சுவாமி ஞானப்பிரகாசர் தெரிவித்துள்ளார். 1907ஆம் ஆண்டு ஆலயப் பணிகளை முடித்து குருக்களுக்கான பங்குப்பணி மனையையும், புதிய காணியை வாங்கிக் கட்டினார். இன்று பாவிக்கப்பட்டு வரும் பங்குப்பணிமனை அதுவேயாகும். இன்னுமொரு அரிய பணியையும் டெஸ்லன்ஸ் அடிகளார் ஆற்றியுள்ளார். பாசையூர் மக்களின் கடற்றொழில் முறையை சில மாதங்கள் அவர் கற்று அவர்களைவிட வல்லவராகி சிறகுவலை என்ற ஒரு புதியவகை மீன்பிடி வலையை அறிமுகப்படுத்தி கடற்றொழின் மூலம் முன்னேறும் வழியைக் கற்றுக் கொடுத்தார். யாழ்ப்பாணக் கடற்பரப்பில் மீன் பிடிப்பை நெறிப்படுத்தும் குழுவின் அங்கத்தவராகவும் பலகாலம் பணியாற்றினார் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

### அழியாத நாக்கு இன்றும் பதுவை நகரில்

இவரின் கல்லறை 336 ஆண்டுகளின் பின்னர் தோண்டப்பட்ட போது அவரது நாக்கு அழியாமல் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு இன்றும் பதுவை நகரக் கோவிலில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. எனவே தான் இவர் நாவழியாப் புனிதர் என அழைக்கப்படுகிறார். புனித அந்தோனியார் இறந்து ஓராண்டு நிறைவடைவதற்கு முன்னரே கத்தோலிக்க திருச்சபையால் புனிதராகப் பிரகடனப்படுத்தப்பட்டார் என்பது இங்கு குறிப்படப்பட வேண்டிய தகவலாகும். 36 ஆண்டுகள் மட்டுமே இவ்வுலகில் வாழ்ந்து இறந்த ஒருவர், இன்றும் மக்கள் மனதில் அசைக்கப்பட முடியாத ஒரு புனிதராக, ஒரு கோடி அற்புதராக, கத்தோலிக்க மக்கள் மனதுகளில் மட் டுமல்ல, இந்து சமய மக்கள் மத்தியிலும் வாழ்ந்து வருவது ஒரு பெரும் புதுமையாகும்.

கோடி அற்புதர் புனித அந்தோனியார் இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள நல்லிணக்க அரசு நீதியோடும் நேர்மையோடும் பணியாற்றி எல்லோர் வாழ்விலும் மகிழ்வும் சுதந்திரமும் சுபீட்சமும் நிறைய தம் அருள் வளங்களை அள்ளிப் பொழிவாராக.

# சிறுவர் தொழிலாளர்களை ஒழிக்கப் பாடுபடுவோம்!

கந்தையா சுகுந்தன்

ஐக்கிய நாடுகள் சபையின் நாடுகளுக்கு இடையிலான தொழிலாளர் அமைப்பினால் ஜூன் 12ஆம் திகதி உலக சிறுவர் தொழிலாளர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் ஜூன் மாதம் சிறுவர் பாதுகாப்பு மாதமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர் தொழிலாளர் என்பது 14 வயதுக் குட்பட்டவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதைக் குறிக்கும். இந்தச் சிறுவர் தொழிலாளர்கள் எவ்வாறு உருவாகினர்? வழமைக்கு மாறான சூழ்நிலைகளினால் பெற்றோரை இழந்த பிள்ளைகள், வறுமைக் கோட்டுக்குட்படுவோர், பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் உள்ள பிள்ளைகள்தான் அதிகம் சிறுவர் தொழிலாளர்களாகின்றனர். நேரடியாகவோ மறைமுகமாகவோ இவர்கள் தொழில் செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இவர்களே குடும்பத்தை கவனிக்க வேண்டியவர்ளாகவும்; சிறுவயதிலேயே குடும்பப் பொறுப்பைச் சுமக்கின்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

பெற்றோரின் பொறுப்பற்ற தன்மையினாலும் எதிர்காலம் பற்றிய நிச்சயமற்ற போக்குகளாலும் சிறுவர்கள் வேலைக்குச் செல்கின்றனர். தாய், தந்தையரின் மறுதிருமணம், பெற்றோரின் கல்வியறிவின்மை என்பனவும் சிறுவர் தொழில்ார்களின் பெருக்கத்தில் முக்கிய செல்வாக்குச் செலுத்துகின்றன. கல்வியின் எதிர்காலப் பெறுமதியினைத் தெரியாமல் படிக்கும் வயதில் நாளாந்தம் கூலி வேலைக்குச் செல்வதன் மூலம் உடனடிப் பணத் தேவையினை நிறைவு செய்வதே இவர்களது வாடிக்கையாக உள்ளது. அடிப்படைத் தேவைகளுக்காக மட்டுமன்றி, ஆடம்பரத் தேவைகளுக்காகவும் சிறுவர்களைத் தொழிலுக்கு அனுப்பும் பெற்றோரும் உள்ளனர். தொலைக்காட்சி விளம்பரங்கள், செல்பேசிப் பாவனைகள், சுவரொட்டிகள் போன்றவற்றின் ஆதிக்கத்தால் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என வாழும் பெற்றோர்களில் சிலர் இவ்வாறு தமது பிள்ளைகளைச் சிறுவர் தொழிலாளர்களாக்கி விடுகின்றனர்.

பெரும்பாலும் சிறுவர்கள், தொழிலாளர்கள், முதலாளி வர்க்கத்தினால் சுரண்டப்படுவதே உலகம் முழுவதும் நடக்கிறது. குறைந்த கூலி கொடுக்கலாம் என்பதற்காகத் தான் முதலாளிகள் இவர்களை வேலைக்கே வைத்துக் கொள்கிறார்கள். அதிக வேலை குறைந்த கூலி என்ற வகையில் சுரண்டப்படுவது மட்டுமல்லாமல் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் வன்முறைக்கும் சிறுவர் தொழிலாளர்கள் முகங்கொடுக்க வேண்டியவர்களாக உள்ளார்கள்.

1981ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் திகதி சிறுவர் உரிமைகள் தொடர்பான சாசனத்தில் 18 வயதுக்குக் குறைந்தவர்கள் சிறுவராக வாழ்வதற்கும் தகாத பயன்பாட்டிற்கு உட்படுவதிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கும் கல்வி மற்றும் சுதந்திர கலாசார பயிற்சியில் ஈடுபடுவதற்கும் சுகாதார முறையில் தமது வாழ்க்கைத் தரத்தைப் பேணுவதற்கும் உரிமை உள்ளவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கட்டாயக் கல்வியின் வயதில் இருக்கின்ற, 14 வயதுக்குக் குறைந்த பிள்ளை ஒன்றைத் தொழிலில் ஈடுபடுத்துவது தவறானதாகும். அத்தோடு 14–18 வயதுக்கு இடைப்பட்ட இள வயதினரை ஆபத்தான தொழில்களில் ஈடுபடுத்துவதும் தவறாகும். அதன் பிரகாரம் 14 வயதிற்குக் குறைந்த சிறுவர்களைப் பணிக்கு அமர்த்தினால் அல்லது 14 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகளின் பாதுகாப்பு, சுகாதாரம் போன்றவற்றிற்குக் கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களில் அவர்களை ஈடுபடுத்தினால் குற்றவாளிகளுக்கு எதிராக ஒரு வருட சிறைத் தண்டனை அல்லது பத்தாயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்தப்படவேண்டும் என்கிறது இலங்கையின் சட்டங்கள்.

சர்வதேச சிறுவர் சாசனத்தின்படியும், இலங்கை சிறுவர் உரிமைச் சட்டங்களின்படியும் சிறுவர்கள் உழைப்பில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டியதோடு பிள்ளைகள் சிறுபராயத்தைக் கல்விக்கும் அவர்களது ஏனைய அபிலாசைகளை விருத்தி செய்து கொள்வதற்குமாக ஒதுக்க வேண்டும். சமூக பொருளாதாரக் காரணிகளால் பிள்ளைகள் கல்வியிலிருந்து இடைவிலகலைத் தவிர்ப்பதும் அனைவரினதும் தலையாய கடமையாகும்.

பாடசாலையில் கல்வியினை ஒழுங்காகக் கற்பதனால் பெற்றுக்கொள்ளக் கூடிய நன்மையினை ஏற்றுக்கொள்ளக்கூடிய பாடசாலையில் இருந்து இடைவிலகும் பிள்ளைகள் நெறிப்படுத்தப்படவேண்டும். அப்போதுதான் சிறுவர் தொழிலாளர்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும். சிறுவயதில் வேலைக்குச் செல்வதானால் உழைப்பாளி வர்க்கத்தினால் சுரண்டப்படுகின்றீர்கள் என்பதனையும் அப்போது பாலியல் முறைகேடுகளுக்கு நீங்கள் உட்படுத்தப்படலாம் என்பதையும் உடல், உளப் பாதிப்புகளுக்கு உட்படுத்தப்பட்டு சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டுவிடுவீர்கள் என்பதனையும் அவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

குழந்தைத் தொழிலாளர்கள் ஆகக் கூடிய பாடசாலை இடைவிலகல் மாணவர்களிடம் ஆற்றல் வெளிப்பாடுகள் நிறையவே இருக்கும். அவற்றைக் கண்டுபிடித்து வெளிக்கொண்டு வருவதற்கு ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் அர்ப்பணிப்புடன் முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் சிறுவர் தொழிலாளர் உருவாக்கத்தை நாம் முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும். ஒவ்வொரு குழந்தையும் மண்ணிற் பிறக்கையில் நல்ல குழந்தைகளே அவர்களை நல்ல சமூகத்திற்குரிய பிள்ளைகளாக வழிகாட்ட வேண்டிய பொறுப்பு குடும்பம், பாடசாலை, சமூகம் போன்றவற்றின் கைகளிலேயே உள்ளது.

(கட்டுரையாளர் நாவாந்துறை றோ.க. வித்தியாலய ஆசிரியர்)

# அழிவுப் பாதையில் இஸ்ரேல்!

தமிழில்: வெ.சந்திரமோகன்

சமீபகாலமாக உலக நாடுகளின் பலத்த கண்டனங்களைச் சம்பாதித்திருக்கிறது இஸ்ரேல். அதன் மீதான 'புறக்கணிப்பு, முதலீடு மறுப்பு, பொருளாதாரத் தடையை வலியுறுத்தும் பரப்புரை' என்ற விடயத்தை நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளன உலக நாடுகள். ஆனால், தன்னைத்தானே அழித்துக்கொள்ளும் நோக்கமே இஸ்ரேலுக்கு அதிகம் இருப்பதாகத் தெரிகிறது. மேற்குக் கரையில் உள்ள பலஸ்தீனர்களிடமிருந்து விலகி நிற்பதற்கான எல்லா சாத்தியங்களையும் தகர்த்துக்கொண்டே வரும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாஹு இந்த நிலைமைக்கு ஒரு முக்கிய காரணம். நெதன்யாஹுவைப் பொறுத்தவரை எதையும் செய்து முடிப்பதில் அவர் தீவிரம் காட்டுவதில்லை. எந்த இடத்தில் இருக்கிறாரோ அதே இடத்தில் இருந்துகொண்டு, தனது எதிரிகளைச் சமாளித்துக்கொண்டு, தான் தப்பித்துக் கொள்வதை மட்டும் பார்க்கும் நபர் அவர். அவர் நடந்துகொள்வதை வைத்து, இஸ்ரேல்–பலஸ்தீனத்தின் பிரதமர் என்று நெதன்யாஹுவை 'தி நியூயோர்க் டைம்ஸ்' நாளிதழே குறிப்பிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதை நான் சொல்வதற்குக் காரணம், நெதன்யாஹு தலைமையில் இஸ்ரேல் மோசமான நிலையிலிருந்து படுமோசமான நிலையை அடைந்திருக்கிறது.

### அபத்தமான நடவடிக்கை

சமீபத்தில், பாதுகாப்புத் துறை அமைச்சர் மோசே யாலோனைப் பதவி நீக்கம் செய்திருக்கிறார் நெதன்யாஹு. இராணுவத் தலைமைத் தளபதியாக இருந்த யாலோன் நாகரிகமான மனிதர். ஆபத்துமிக்க சூழலில், ஒற்றுமையை நிலைநிறுத்தும் விதமாக இஸ்ரேல் இராணுவத்தை மக்கள் இராணுவமாக வைத்திருக்கும் உறுதியுடன் செயற்பட்டவர். அவருக்குப் பதிலாக அவிக்டார் லீபர்மேன் என்பவரைப் பாதுகாப்புத் துறை அமைச்சராக்கியிருக்கிறார், நெதன்யாஹு.

லீபர்மேன் ஒரு தீவிர வலதுசாரி. இஸ்ரேலின் நடவடிக்கைகளைப் பற்றி அமெரிக்க யூதர்கள் கொண்டிருக்கும் அக்கறைகூட இல்லாதவர். ஹாரெட்ஸ் இதழில் வெளியான செய்தியின்படி உளறிக் கொட்டுபவர் என்று நெதன்யாஹுவின் குழுவால் சமீபத்தில் நிராகரிக்கப்பட்டவர். இராணுவ ஆய்வாளராவதற்குக்கூடத் தகுதியில்லாதவர். மேற்குக் கரையிலிருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும் என்று சொல்லும் இஸ்ரேலியர்களைத் தேசத்துரோகிகள் என்று அறிவித்தவர். காயமடைந்து, மருத்துவ உதவி வேண்டி சாலையில் கிடந்த பலஸ்தீன இளைஞனைத் தலையில் சுட்டுக்கொன்ற இஸ்ரேல் சிப்பாய் எலோர் அஸாரியாவைப் புகழ்ந்து தள்ளியவர்.

யாலோனுக்குப் பதிலாக லீபர்மேனைக் கொண்டுவரும் நெதன்யாஹுவின் நடவடிக்கையைப் பற்றி எடியோத் அரோனோட் (இஸ்ரேலிய நாளிதழ்) கட்டுரையாளர் நாஹும் பார்னி இப்படிக் குறிப்பிடுகிறார், "அரசியல் ரீதியான பகை மோசமடைந்திருக்கும் நிலையில், மிதமான போக்குக் கொண்ட நிர்வாகத்தை உலகுக்கு முன்வைப்பதற்குப் பதிலாக, இஸ்ரேல் வரலாற்றிலேயே இதுவரை இல்லாத அளவுக்குத் தீவிரத்தன்மை கொண்ட அரசையே நெதன்யாஹு முன்வைக்கிறார்."

இஸ்ரேலையும் நெதன்யாஹு தலைமையிலான வலதுசாரிக் கட்சியான 'லிகுட்'டையும் கைவசப்படுத்திக்கொண்ட தீவிரவாதிகளும் ஆபத்தான சக்திகளும் எமது நாட்டுக்கு ஆபத்தானவர்களாக இருக்கிறார்கள் என்று யாலோனே எச்சரித்திருக்கிறார். இஸ்ரேலின் முன்னாள் பிரதமரும், நெதன்யாஹு அமைச்சரவையில் பாதுகாப்புத்துறை அமைச்சராகப் பணிபுரிந்தவருமான எஹுத் பராக், இஸ்ரேல் அரசை ஆபத்தான சக்திகள் கைப்பற்றிக் கொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்.

நெதன்யாஹுவும், தீவிர வலதுசாரிகளான அவரது ஆதரவாளர்களும் யாலோனை மட்டுமல்ல, இஸ்ரேலிய இராணுவத்தையே அவமதித்துவிட்டனர். அது மக்களின் இராணுவம் என்று 'ஹாரெட்ஸ்' இதழில் முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சர் மோசே ஆரென்ஸ் எழுதியிருக்கிறார்.

### கொலைகாரச் சிப்பாய்

இதெல்லாம் ஆரம்பமானது மார்ச் 24இல் நடந்த அந்தச் சம்பவத்திலிருந்துதான். அன்றுதான், காயமடைந்த பலஸ்தீன இளைஞனை அஸாரியா சுட்டுக்கொன்றார். அந்தச் சம்பவம் காணொளிக் காட்சியாக வெளியானது. இஸ்ரேலியப் படையினர் மீது கத்தியால் தாக்குதல் நடத்திய இரண்டு பலஸ்தீனர்களில் ஒருவர், அந்த இளைஞர். தாக்குதலில் ஒரு இஸ்ரேல் படையினருக்கு லேசான காயம் ஏற்பட்டது. அந்த நிலையில், தன்னிச்சையாக முடிவெடுத்து பலஸ்தீன இளைஞனைச் சுட்டுக்கொன்றார் அஸாரியா. யாலோனிடமிருந்தும், இராணுவத் தலைமைத் தளபதி லெப்டினென்ட் ஜெனரல் காடி எய்ஸென்கோட்டிடமிருந்தும் உடனடியாக இதற்கு எதிர்வினை வந்தது. இஸ்ரேல் இராணுவத்தினர் நடந்துகொள்ளும் முறையல்ல இது என்றனர் இருவரும்.

அஸாரியா மீது கொலைக்குற்றம் மற்றும் மோசமான இராணுவ நடத்தைக் குற்றச்சாட்டு பதிவுசெய்யப்பட்டது. நெதன்யாஹு கூட அஸாரியா இராணுவ விதிகளை மீறிவிட்டார் என்றே ஆரம்பத்தில் கூறினார். ஆனால், மேற்குக் கரையின் யூதக் குடியிருப்புப் பகுதியிலிருந்து அஸாரியாவுக்கு ஆதரவு பெருகவே, தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டார். இந்த விவகாரத்தில் நடுநிலையுடன் நடந்துகொள்ளவேண்டும் என்று நீதிமன்றத்தை வலியுறுத்தினார். லீபர்மேனோ ஒருபடி மேலேபோய் அஸாரியாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நீதிமன்றத்துக்குச் சென்றார்.

இந்தச் சம்பவங்கள் யாலோனையும் இராணுவத் தலைமையையும் மோசமாகப் பாதித்தன. இஸ்ரேலின் ஹோலோகாஸ்ட் நினைவு தினம் அன்று இந்த விவகாரம் வெடித்தது. நாட்டு மக்களிடம் உரையாற்றிய இராணுவத் துணைத் தளபதி மேஜர் ஜெனரல் யாயிர் கோலான், ஐரோப்பாவில் நடந்தது போன்ற பயங்கரமான சம்பவங்கள் இங்கும் நடக்கத் தொடங்கி விட்டன என்று கூறினார். அவரைக் கடுமையாக விமர்சித்தார் நெதன்யாஹு. ஆனால், இராணுவ உயரதிகாரிகள் மத்தியில் பேசிய யாலோன், உங்கள் மனச் சாட்சிப்படியும், தார்மிக அடிப்படையிலும் நடந்துகொள்ளுங்கள். காற்றின் திசைக்கு ஏற்றவாறு உங்கள் நடவடிக் கைகளை மாற்றிக் கொள்ளாதீர்கள் என்று குறிப்பிட்டார்.

### ஆபத்தான மாற்றம்

ஆனால், காற்றின் திசைக்கேற்ப நடந்துகொள்ளக் கூடியவரான நெதன்யாஹு, யாலோனை வெளியேற்றிவிட்டார். இவற்றையெல்லாம் பார்க்கும்போது ஒன்று புரிகிறது, தீவிரமான போக்குக் கொண்டது என்றாலும் மனிதாபிமானம் மற்றும் ஜனநாயக அடிப்படையிலான கொள்கையையும் கொண்டிருந்த இஸ்ரேலின் ஆளுங்கட்சியான 'லிகுட்' கட்சி, இன்றைக்கு அதிதீவிரமான தேசியக் கட்சியாக உருமாறியிருக்கிறது. (50 ஆம் பக்கம் பார்க்க)

# பரிந்துரைக்கப்பட்ட காணி ஆணைக்குழு பிரச்சினைகளைத் தீர்க்க அவசியம்

## அமைச்சர் ஹக்கீம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 12

13 ஆவது திருத்தச் சட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள காணி, ஆணைக்குழு நிறுவப்பட வேண்டும். அவ்வாறு நிறுவப்படாமல் காணிப்பிரச்சினைகளுக்கான தீர்வை ஒரு போதும் எட்ட முடியாது. நல்லாட்சி அரசு காணி ஆணைக் குழுவை நிறுவ வேண்டும். வடக்கு - கிழக்கில் நிலவுகின்ற காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

- இவ்வாறு அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பானசபைஒத்திவைப்பு வேளை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது:-

தற்போதைய நிலையில், பிரயோக ரீதியாக பொது மக்களிடத்தில் எவ்வளவு காணிகள் கையளிக்கப்பட்டுள்ளன?. இது தொடர்பில் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது. வடக்கு - கிழக்கில் காணப்படும் இராணுவப் பிரசன்னம் குறித்தும் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் சிலாபத்துறையில் முஸ்லிம்கள் பூர்வீகமாக பரம்பரையாக வாழ்ந்து வந்தனர். அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்தனர். இந்தத் தருணத்தில் பெரிய கடற்படை முகாம் அங்கு அமைக்கப்பட்டுள்ளது. இந்த முகாமை அகற்றி காணிகளை பொது மக்களிடத்தில் கையளிக்க வேண் டும். இது குறித்து பிரதமருடன் பேச்சு நடத்தியுள்ளோம்.

இதேபோன்று, கிழக்கு மாகாணத்தில் புல்மோட்டை, மண்கிண்டி, அரிசிமலை பகுதிகளில் பொதுமக்களின் விசேடமாக முஸ்லிம் மக்களின் காணிகளை இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளனர். அங்கு முகாம்களை அமைத்துள்ளனர்.

பொத்துவில் பகுதியில் கடற்படையினரும், திருகோணமலை வெள்ளைமலை பகுதியில் விமானப்படையினர் காணிகளை சுவீகரித்து விடுதிகளை அமைத்துள்ளனர். இவ்வாறான நிலைமைகள் காணப்படும் போது இனங்களுக்கு இடையில் எவ்வாறு நல்லிணக்கம் ஏற்படும் ?

அதிகாரப்பகிர்வு தொடர்பாக பேசப்படுகின்றது. நாடாளுமன்றம் அரசியல் நிர்ணய சபையாக மாற்றப்பட்டுள்ளது. கற்றுக் கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளில் காணிகள் தொடர்பாகப் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் காணி ஆணைக் குழு நிறுவப்பட வேண்டும். இதனை நிறுவாமல் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது. இந்த ஆணைக் குழுவை நிறுவுவதற்கான சரியான நேரம் தற்போது கனிந்துள்ளது. எனவே, இது தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ஐ-5)




## மகிந்த ஜப்பான் பயணம்



கொழும்பு, ஜூன் 12

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12.30 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து அவர் புறப்பட்டார். ஜப்பானின் நரிடா விமான நிலையத்தை நேற்றுச் சென்றடைந்தார்.

இவர் ஜப்பானில் தங்கியிருக்கும் போது பல்வேறு அரசியல் மற்றும் மத நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளார்.

இவருடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான, விமல் வீரவன்ச, ரோகித போகொல்லாகம, ஜனக வக்கும்புர, தனசிறி அமரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு அணியினர் 10 பேர், அவரது உதவியாளர்கள் மற்றும் அதிகாரிகளும் ஜப்பான் சென்றுள்ளனர்.

எதிர்வரும் 22 ஆம் திகதி வரை மகிந்த ராஜபக்ச ஜப்பானில் தங்கியிருப்பார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ-5)








லக்ஸ்டோ மீடியா நெட்வேர்க் சிறிலங்கா அமைப்பின் ஒற்றுமைக்கான உறவுப்பாலம் நிகழ்வு அண்மையில் காரைதீவு சண்முகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கிழக்கு மாகாண மூத்த ஊடகவியலாளர் ஏ.எல்.எம். சலீமுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (ஐ-30)



அண்மையில் வட்டுக்கோட்டை நண்பர்கள் என்ற அமைப்பின் ஊடாக வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேயுடன் பொது நோக்கு விடயங்கள் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அந்தக் கலந்துரையாடலில் பனை அபிவிருத்தி சபையின் விரிவாக்கல் திட்ட முகாமையாளர் கோபாலகிருஷ்ணன், முன்னாள் தேசிய மொழிகள் ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் மோகன், மறவன்புலோ சச்சிதானந்தம், பேராசிரியர் எஸ்.சிவராசா, கலைஞர் தியாகராசா சிவநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ரி)



உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு வலி.மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட சங்கானை கரைச்சி மயான-சேமக்காலைப் பிரதேசத்தில் பொது மக்களின் பங்களிப்புடன் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.(ஐ-50



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு அனலைதீவு கிராம அலுவலரின் ஏற்பாட்டில் அனலைதீவு கிராம மக்களால் தேசிய சுற்றாடல் வார நிகழ்வுகள் கடந்த வாரம் அனுஷ்டிக்கப்பட்டது. கடலால் சூழப்பட்ட அனலைதீவு கிராமத்தின் கடற்கரையோரங்களில் காணப்பட்ட கழிவுப் பொருள்களை அகற்றும் பணியில் 300 இற்கும் அதிகமான மக்கள் ஈடுபட்டனர். (ஐ-9)



இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் வாழ்வின் எழுச்சி வங்கியின் உத்தியோகத்தர்களால் உதவிப்பொருள்கள் திரட்டப்பட்டன. (ஐ)



திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியில் ‘விளையாடுவோம் கற்போம்’ எனும் தொனிப்பொருளில் சிறார்களுக்கான களப்பயிற்சி அண்மையில் இடம் பெற்றது. (ஐ-29)





சர்வதேச நோத்-ஈஸ்ற் லங்கா பல்கலைக்கழகத்தில் அண்மையில் கலாநிதிப்பட்ட ஆய்வு கற்கை நெறி, நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக வ்டமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, நிபுணத்துவ ஆலோசகர் த.கலாமணி ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-29)

# ஆயுத களஞ்சியங்களுக்கு வட மாகாணமே பொருத்தம்

## உதய கம்மன்பிலவின் கண்டுபிடிப்பு இது

கொழும்பு, ஜூன் 12

இலங்கையில் சன அடர்த்தி குறைந்த மாகாணமாக வடக்கு இருக்கின்றது. எனவே அங்குதான் இராணுவ முகாம்கள், ஆயுதக் களஞ்சியசாலைகள் அமைக்கப்பட முடியும். அதனால் வடக்கிலிருந்து ஒரு இராணுவ முகாமையோ, இராணுவச் சிப்பாயையோ அகற்றக்கூடாது.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் மகிந்த ஆதரவு அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில.

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் நிலவும் பிரச்சினை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை, பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில் அவர் தெரிவித்ததாவது :-

வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றக் கூடாது. அதற்கு நான் பத்துக் காரணங்களை முன்வைக்கின்றேன்.

முதலாவது காரணம்: இறுதிப் போரில் சரணடைந்த 12 ஆயிரம் புலிகளுக்கு மிகக் குறுகிய காலத்துக்குள் 3 வருடத்துக்குள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு என்ன தான் புனர்வாழ்வளிக்கப்பட்டாலும், ஆயுத மனப்பாங்கு அவர்களிடம் இன்னும் உள்ளது.

இரண்டாவது காரணம்: போரின் இறுதியில் படையினரிடம் சரணடையாது தப்பியோடிய புலிகள், மக்கள் மத்தியிலேயே இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆயுதத் தீர்வையே இவர்கள் இன்னும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

மூன்றாவது காரணம்: வடக்கில் தற்போதும் வெடிகுண்டுகள், தற்கொலை அங்கிகள் என்பன மீட்கப்படுகின்றன.

நான்காவது காரணம்: இலங்கையின் 2 ஆயிரத்து 600 வருட வரலாற்றில் வடக்கிலிருந்தே ஆக்கிரமிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. தெற்கிலிருந்து ஓர் ஆக்கிரமிப்பு மட்டுமே வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. ஏனைய அனைத்து ஆக்கிரமிப்புக்களும் வடக்கின் ஊடாக வந்துள்ளன.

ஐந்தாவது காரணம்: வடக்கிலிருந்து கடல் மார்க்கமாக இந்தியா மிகவும் அருகில் உள்ளது. ஆயுதம், போதைவஸ்து கடத்தல்கள் கடந்த காலத்தில் இடம்பெற்றுள்ளன. எதிர்காலத்திலும் இடம்பெறுவதற்காக சாத்தியங்கள் உள்ளன. இந்தக் கடல் மார்க்கம் இன்னும் அதி உச்ச பாதுகாப்பு வலயமாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லை.

ஆறாவது காரணம்: வடக்கில் போரால் வீழ்ந்துபோன அரசு பொறிமுறை மீண்டும் வலுப்பெறவில்லை.

ஏழாவது காரணம்: சனத்தொகை அடர்த்தி குறைந்த இடங்களிலேயே இராணுவ முகாம்கள், ஆயுதக் களஞ்சியசாலைகள் அமைக்கப்படவேண்டும். அந்த வகையில் இலங்கையில் சனத்தொகை அடர்த்தி குறைந்த மாகாணமாக வடக்கு மாகாணம் உள்ளது. அங்குதான் பயன்படுத்தப்படாத நிலையில் பெருமளவிலான காணிகள் உள்ளன. தெற்கில் சனநெருக்கடியான இடங்களே உள்ளன.

எட்டாவது காரணம்: வடக்கில் இராணுவ முகாம்கள், படைத்தளங்கள், ஆயுதக் களஞ்சியசாலைகளை அமைக்கக் கோடிக்கணக்கான பணம் செலவிடப்பட்டுள்ளது.

ஒன்பதாவது காரணம்: பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டுள்ள போதும், பிரிவினைவாதம் தோற்கடிக்கப்படவில்லை. புலம்பெயர்ந்த நாடுகளில் அவர்களது செயற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

பத்தாவது காரணம்: நாடு கடந்த தமிழீழ அரசு உருவாக்கப்பட்டுள்ள நிலையில் அதற்குப் பல நாடுகள் ஆதரவளித்துள்ளன.

இவ்வாறாக 10 காரணங்கள் உள்ள நிலையில் வடக்கிலிருந்து ஒரு இராணுவ முகாமையோ, ஒரு இராணுவ சிப்பாயையோ அகற்றக்கூடாது – என்றார். (ற-ஐ-5)




நமது மக்கள் மற்றும் நமது நிறுவனத்திற்காக, நாம் தேசத்தின் எல்லைகளை விரிவாக்குகிறோம்

எமது உலகத்துடன் இன்றே இணைந்திடுங்கள்!

ஹேலீஸ் குழுமம்

2015 ஆண்டு நடந்த LMD 100 விருது வழங்கும் விழாவில் இலங்கையின் 1ல் தர நிறுவனமாக திகழ்ந்தது ஹேலிஸ் குழுமமாகும். உலகச் சந்தைகளில் திடமாக தடம் பதித்துள்ள ஹேலிஸ் உற்பத்தி, விவசாயம், பெருந்தோட்டங்கள் மற்றும் தேயிலை ஏற்றுமதி, போக்குவரத்து மற்றும் தளவாடங்கள், நுகர்வோர் உற்பத்திகள், மின்வலு உற்பத்திகள், ஹோட்டல் மற்றும் விமானப் போக்குவரத்து மற்றும் முதலீடுகள் போன்ற துறைகளில் தனது ஆதிக்கத்தை செலுத்தி வருகிறது. இலங்கை ஏற்றுமதியின் வருமான கணக்கில் 2.51% பங்கினை தனதாக்கியுள்ளது. அதேபோல் ஹேலீஸ் நிறுவனம் பல தடவைகள் இலங்கையின் மிகச்சிறந்த கூட்டாண்மை நிறுவனமாக பட்டியலிடப்பட்டுள்ளதோடு சமீபத்தில் தேசிய எண்ணம் கொண்ட பெருநிறுவன பிரஜையாகவும் தெரிவுசெய்யப்பட்டது.

அலுமெக்ஸ் பிஎல்சி

இலங்கையில் அலுமினியம் வியாபாரத்துறையில் முன்னணி நிறுவனமாக திகழும் அலுமெக்ஸ் பிஎல்சி நிறுவனம் ஹேலீஸ் பிஎல்சி நிறுவனத்தின் துணை நிறுவனமாகும். உலகளாவிய ரீதியில் சர்வதேச தரத்திலான அலுமினிய மென்தகடுகளை உற்பத்தி செய்துவரும் அலுக் மற்றும் பிளெட்சர் ஆகிய சர்வதேச நிறுவனங்களின் சான்றிதழ் உரிமம் பெற்றுள்ள அலுமெக்ஸ் நிறுவனம் ISO 9001:2008 மற்றும் SLS ஆகிய தரச்சான்றிதழ்களையும் பெற்றுள்ளது: இலங்கையில் மிகவும் விரைவாக வளர்ந்துவரும் கட்டுமானத்துறை பணிகளுக்கு தேவையான அலுமினிய தகடுகள் மற்றும் அலுமினிய உபகரணங்களை விற்பனை சந்தைகளுக்கு வழங்குவதில் முன்நிலை வகிக்கும் எமது நிறுவனம் எதிர்காலத்தில் தெற்காசிய வலையத்திலும் தமது வியாபார நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளது.

பின்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்பக்கூடிய தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நிறைவேற்று அதிகாரி - களஞ்சியசாலை (யாழ்ப்பாணம்)

விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனமொன்றில் களஞ்சியசாலை / தளவாடங்கள் (warehousing / logistics) தொடர்பான பட்டம் அல்லது டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும். களஞ்சியசாலை நிர்வாக மேற்பார்வையாளராக குறைந்தபட்சம் 1 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகள் சரளமாக தெரிந்திருக்க வேண்டும். நாட்டின் எப்பாகத்திலும் பணியாற்றக்கூடிய திறன் இருக்க வேண்டும். மேலும் அவரிடம் இரட்டை பயன்பாட்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் இருக்க வேண்டும் / மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் அனுமதிப்பத்திரம். விண்ணப்பதாரர் 35 வயதிற்கு குறைந்தவராக இருக்க வேண்டும். களஞ்சியசாலைக்கு அண்மையில் வசிப்பவராக இருப்பின் அவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

நாங்கள் எதிர்பார்க்கும் தகைமைகள் உங்களிடம் இருப்பின், சவால்மிக்க இத் தொழிலுக்கு நீங்கள் பொருத்தமானவராக இருப்பின் இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 10 நாட்களுக்குள் உங்கள் விண்ணப்பத்தை hrd@alumexgroup.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள், அல்லது குழும முகாமையாளர், மனிதவளம், அலுமெக்ஸ் குழுமம், பட்டிவல வீதி, சபுகஸ்கந்த, மாகோல என்ற முகவரிக்கு உங்கள் விண்ணப்பத்தை தபால் மூலம் அனுப்புங்கள். பதவியை மின்னஞ்ஜலில் சப்ஜக்ட் என்னும் இடத்திலும், தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையிலும் குறிப்பிடவும்.

**பரிந்துறைகள் மூலம் இத்தொழிலை பெற்றுக்கொள்ள முயற்சிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு, தகுதி அடிப்படையிலேயே விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.**

எமது தொழில் வாய்ப்புக்கள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிய பிரவேசியுங்கள்:

www.linkedin.com/company/hayleys-group www.facebook.com/hayleysgroup http://careers.hayleys.com




டாட்டா, லேலண்ட், ஹினோ மற்றும் கமின்ஸ் வாகன உரிமையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க என்ஜின் பழுதுபார்ப்பிற்காக வழங்கப்பட்ட

எமது அதிகபட்ச வேலைக் கூலி

| | |
|---|---|
| TATA | 44,000/- |
| LEYLAND | 47,000/- |
| Hino | 46,000/- |
| C | 52,000/- |

நாட்டிலேயே அதிகுறைந்த வேலைக் கூலி

மேற்குறிப்பிட்ட பழுதுபார்ப்பு மீண்டும் தேவைப்பட்டால் அல்லது ஓட்டத்தின்போது தேய்வு காரணமாக என்ஜினை கழற்ற நேர்ந்தால் 2 ஆண்டு காலத்தினுள் வேலைக் கூலி மீண்டும் அறவிடப்படமாட்டாது.

077 66 33 370

# கத்திக்குத்தில் வயோதிபர் படுகாயம்

துன்னாலைப் பகுதியில் கத்திக்குத்துக்கு உள்ளாகிப் படுகாயமடைந்த வயோதிபர் சிகிச்சைக்காகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

துன்னாலை தக்குச்சம்பாதிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த செ. செல்லத்தம்பி (வயது-55) என்பவரே படுகாயமடைந்து சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவராவார்.

இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் தலைமறைவாகிவிட்டதாகவும், அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(த-108)

## கண்ணீர் அஞ்சலி



**தோற்றம்: 23.03.1952**
**மறைவு: 09.06.2016**

செவிப்புலன் வலுவற்றோர்
புனர்வாழ்வு நிறுவனத்தின்
முன்னாள் உப தலைவர்
**வைத்தீஸ்வரன்**
அவர்களின் அன்பு மனைவி
**திருமதி சிவலோகநாயகி வைத்தீஸ்வரன்**

அவர்கள் பிரான்ஸ் நாட்டில் காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**16/2, சீனியர் ஒழுங்கை, கலட்டி, யாழ்ப்பாணம்.**

**செவிப்புலன் வலுவற்றோர் புனர் வாழ்வு நிறுவனம்**
ROOD

# அழிவுப் பாதையில்....

(46 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றங்கள், தொண்டு நிறுவனங்கள், கல்வி அமைப்பு, அரபு சிறுபான்மையினம், கடைசியாக இராணுவம் என்று உள்ளுக்குள்ளேயே எதிரிகளைக் கட்டமைக்கும் கட்சியாகிவிட்டது. மேற்குக் கரையை நிரந்தரமாக ஆக்கிரமிக்கும் தங்கள் திட்டத்துக்குக் குறுக்கே எவர் வந்தாலும் அவர்களை எதிரிகளாகக் கட்டமைக்கும் போக்கைக் கொண்டிருக்கிறது இந்த அரசு என்று ஹீப்ரூ பல்கலைக்கழகத்தின் மதததத்துவவாதி மோசே ஹால்பெர்ட்டால் கூறியிருக்கிறார். இது இஸ்ரேலில் ஏற்பட்டிருக்கும் மிகப் பெரிய மாற்றம். மிகக் கூர்மையாகக் கவனிக்கப்பட வேண்டியது. வெளியிலிருக்கும் எதிரிகள் தொடர்பில் காத்திரமான தீர்வைத் தருவதில் தோல்வியடைந்துவிட்ட "லிகுட்" கட்சி, தற்போது உள்ளுக்குள் இருக்கும் எதிரிகள் மீது கவனம் செலுத்துகிறது என்கிறார் ஹால்பெர்ட்டால். எல்லோரையும் எதிரிகளாக்கும் இந்தப் போக்கை முறியடிக்கவும், தார்மிக நெறிகளை நடைமுறைப்படுத்தவும் இராணுவத் தலைமை தற்போது முயற்சி செய்கிறது என்கிறார் அவர். ஆனால், பிரதமர் நெதன் யாஹு இதற்கு முற்றிலும் எதிராக நடந்து கொள்கிறார். இஸ்ரேலின் எதிர்காலம் குறித்த அக்கறை கொண்ட எல்லோருக்கும் இது ஒரு இருண்ட தருணம்தான்!

**ஆங்கில மூலம்: தி நியூயோர்க் டைம்ஸ்**

விற்பனைக்கு உண்டு
**JA 5902 Jappan Toyata 250**
ரக லொறி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 072 4089762

## மரண அறிவித்தல்



### சுப்பையா பரம்சோதி

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், இல-75, 8ஆம் பண்ணை கனகபுரம், கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா பரம்சோதி நேற்று (11.06.2016) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.75, கனகபுரம், கிளிநொச்சி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
(K 2016/75) (10,17)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின்
விஞ்ஞான ஆய்வு கூட உதவியாளர்
**சபாரட்ணம்அருட்செல்வன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவ னைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரி சங்கம்**
**யா/வேலணை மத்திய கல்லூரி,**
**வேலணை**

## மரண அறிவித்தல்

### செல்லையா கந்தையா



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் முரசு மோட்டையை வசிப்பிடமாகவும் தற்போது கொக்குவில் பொற்பதி வீதியில் வசித்து வந்தவருமான செல்லையா கந்தையா நேற்று (11.06.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா -மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-நல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் சந்தானலக்சுமியின் அன்புக் கணவரும் கலைச்செல்வி, திருச்செல்வி, அருட்செல்வி, உதயச்செல்வி (ஆசிரியை யாழ் மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் லோகபாலச் சந்திரன், சிவப்பிரகாஷ், ராஜ்குமார், சிவபுத்திரன் (ஆசிரியர் யா/ கோப்பாய் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பகலவன், தூயவன், வருணன், பிரணயா, ஜானவி,இலக்கியன், காவியன், வைஸ்ணவி, அக்ஷரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**64/4 D, பொற்பதி வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**


தகவல்:
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### குழந்தைவேலு குலேந்திரராஜன்

(உரிமையாளர், ராஜன் Body Builders)

பிறப்பு
23
.
11
.
1958



இறப்பு
09
.
06
.
2016

யாழ் சாவகச்சேரி கண்டுவில் வீதியைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானை சாரதா வீதியை வசிப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட குழந்தைவேலு குலேந்திரராஜன் கடந்த (09.06. 2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு-கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு-தங்கம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் வேதநாயகியின் (பேபி) அன்புக் கணவரும் கிஷோர்குமார் (பிரான்ஸ்), ஷோபிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் குணானந்தசீலன், கலாநிதி, கமலகுமாரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் வீரவாகுவின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான தங்கராஜா, ராஜேஸ்வரி, சிவபாலன் மற்றும் சரோஜா, மகேந்திரன், ஜெயராமநாதன், திருச்செல்வம், சகுந்தலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் நல்லையா, கனகரத்தினம் (கனகு-Garage-உரிமையாளர்), தவமணிதேவி, ஜெயந்தி, கலாநிதி (பட்டு-கனடா) ஆகியோரின் அன்புச் சகலனும் நிலக்ஷன், கோபிகா, தீபிகன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஜெயராஜன், ஜெயந்தி, ஜெயலதா (சுவிஸ்), சுஜாகர் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயகாந்த், ஷாலிகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் சங்கர்லால், மதன்லால் (கனடா), பிரேம்லால் , ரஜீவ்லால், கஜலக்ஷி, கிருஷாந்த் (கனடா), நவலாஜினி, டினோஜன், தவரூபன், காலஞ்சென்ற தவசுதன், தவசீலன், தவரூபி, தவசாந்தன், தனுசாந்தன், சியாமளா, பிரசாந்த் (கனடா), பிரதீபா (கனடா), பிரவீணா (கனடா), அமலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் வர்ணிக்கா, விகாசன், திவாஷினி ஹரிஷ், வருண், தேஜல், பிரஜன், பிரபன், அட்சயா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.06.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பின்னர் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2773 திகதி: 2016-06-11

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: **03 05 11 58 W**

போனஸ் இல.: **69**

புதன்கிழமை ஜக்பொட்: **ரூ. 10,000,000/-**

தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அழைப்பு மத்திய நிலையம்: 011 4 824 824

ஜாதா நிற டிக்கட்டுகள் 2016.06.15 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## கருமை தோற்றம் கொண்டவர்களுக்கு ஓர் அற்புதமான செய்தி (2Weeks Result)

ஆண், பெண் இருபாலாருக்கும் உகந்தது 2 வாரத்தில் நல்ல அழகான மேனியுடன் தோற்றமளிக்க France நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

**Herbal Whitening Cream**

Cream விலை 2500/-,5500/-

முகப்பரு, கண் கருவளையம், முகச்சுருக்கம், உதடு கருப்பு, முதுகு கழுத்து கருப்பு, கை கருப்பு மற்றும் முகம் தாடைகளிலுள்ள தேவையற்ற ரோமங்களை அகற்றும் கிறீம் முகம் . உடம்பு பகுதியில் உள்ள காய்கள் அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு.

ஆச்சரியம் கரும்புள்ளிகளை 10 நாட்களில் அகற்றும் Magic Peel எங்களிடம் உண்டு

எங்களிடம்

மேலும் உடல் எடை, மார்பு கூட்டும் குறைக்கும் குளிசை ,டொனிக், பால்மா, தலைமுடி வளரச் செய்யும் ஆயுள்வேத எண்ணெய் விற்பனைக்குண்டு.

077 210 6155

221, நாவலர் றோட்,
(பிறவுண் றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.

## திருமண சேவை - SMS

UK, German, Italy, Swiss, America, Canada, New zealand, Singapore, Malaysia, இலங்கை

அனைத்து இன, கிறிஸ்தவ, இந்து, மணமகன், மணமகள் நேரடி தொடர்பு விபரங்களை உங்கள் தொலைபேசிக்கு SMS மூலம் பெற எமது சேவையுடன் இணையுங்கள்

--- தரகர் பணம், அனுமதி கட்டணம் இங்கு இல்லை ---

REG இடைவெளி zy என type செய்து 77001 ற்கு SMS செய்யவும்.

Dialog வலையமைப்பின் ஊடாக இத்திருமண சேவை நடைபெறுவதால் நம்பகரமாக உங்கள் வாழ்க்கை துணையை தெரிவு செய்து கொள்ள முடியும்

## பதவி வெற்றிடம்

அச்சுவேலி கைத்தொழில்பேட்டையில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றுக்கு இயந்திர இயக்குநர்கள், உதவியாளர்கள் வேண்டப்படுகின்றனர். ஆர்வமும் முன் அனுபவமும் உள்ள இளைஞர்கள் தமது விண்ணப்பங்களினைக் கீழ்க் குறித்த முகவரிக்கு 20.06.2016 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல- 5104, C/O - உதயன்,
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல காட்சியறைகளுக்கான கணினி இயக்குநர்கள் தேவைப்படுகின்றனர். கணினித் துறையில் தகுதியும் ஆர்வமும் உடைய ஆண், பெண் இருபாலாரும் தமது விண்ணப்பங்களைக் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு 20.06.2016 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல- 5103, C/O - உதயன்.
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## Study in Germany




### Why Study In Germany?

* உலகின் 3வது பெரிய பொருளாதார நாட்டில் படிக்க ஓர் அரிய வாய்ப்பு!
* Bachelors / Master / Phd
* இலகு Visa நடைமுறைகள்
* குறைந்த பாடநெறி கட்டணம்
* குறைந்த வாழ்க்கைச்செலவு கட்டணம்
* வேலை செய்ய அனுமதி

2016 க்கான இறுதி வாய்ப்பு

iCS Foreign Education Services

Appointments 077 3013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B 1/1 Galle Road,Colombo - 06

## துயர் பகிர்கின்றோம்

எமது சங்கத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய பணிப்பாளர் சபை உறுப்பினருமான திரு. இ.லோகநாதன் **(V.V Ramanathan & Company (pvt).ltd)** அவர்களின் மனைவியான

**புவனேஸ்வரி லோகநாதன்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கம்**
**வடமாகாணம், யாழ்ப்பாணம்.**

## ஆங்கில வகுப்புக்கள்

ஆங்கில வகுப்புக்கள் இலகுவான முறையில் விரிவாகக் கற்பிக்கப்படும்.

077 239 5875

## AKSHAYA SCHOOL OF HOME SCIENCE

O/L, A/L மாணவிகள், இல்லத்தரசிகள் மற்றும் வெளிநாடு செல்வோருக்கான

அழகியற்கலை, தையற்கலை பயிற்சிகளை நவீன முறையில் கற்று மகிழுங்கள்

குறுகிய கால டிப்ளோமா சான்றிதழ் பயிற்சி நெறிகள்


★ பேசியல் (10) ★மேக்கப் (7) ★சாறி உடுத்தும் முறை (7)
★கெயாஸ்டைல் (20) ★இந்திய முறையிலான சாறி வுளவுஸ் (6)
★ பஞ்சாபி (4) அடிப்படையில் இருந்து தையல் பயிற்சிகள்
தலைமுடி அயனிங் சுருட்டுதல்

(J 2091)(10.17)

**077 314 9386** 221, நாவலர் றோட், யாழ்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 . 01 . 1932



உதிர்வு 26 . 05 . 2015


அமரர் திருமதி **வைத்திலிங்கம் சிவக்கொழுந்து**

அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

மீசாலை மேற்கு,
மீசாலை.

வைத்திலிங்கம்
குடும்பத்தினர்.


## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி கலைவாணி அருட்செல்வன்**
அவர்களின் அன்புக் கணவர்
**சபாரட்ணம்அருட்செல்வன்**
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர்,ஆசிரியர், நலன்புரிக் கழகம்**
**யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி**

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்: 23.03.1952
மறைவு: 09.06.2016

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் அங்கத்தவர்
**வைத்தீஸ்வரன்**
அவர்களின் அன்பு மனைவி
**திருமதி சிவலோகநாயகி வைத்தீஸ்வரன்**
அவர்கள் பிரான்ஸ் நாட்டில் காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

16/2, சீனியர் ஒழுங்கை,கலட்டி,
யாழ்ப்பாணம்.

**செவிப்புலன் வலுவற்றோர் புனர் வாழ்வு நிறுவனம் விளையாட்டுக் கழகம்,**
ROOD-SC

## USA GREEN CARD - 2017

அமெரிக்க கிறீன் கார்ட் விசா 2017இற்காக விண்ணப்பித்தவர்களில் அதிர்ஷ்டசாலிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பற்றிய விபரம் இம் மாதம் 3ஆம் திகதி வெளியாகியுள்ளது. கிறீன் கார்ட் விசாவுக்காக விண்ணப்பித்து அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவுசெய்யப்படுபவர்களால் பூர்த்தி செய்யப்படவேண்டிய விண்ணப்பபடிவத்தைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு 2003ஆம் வருடம் முதல் தொடர்ச்சியாக அமெரிக்க கிறீன் கார்ட் விசா லொத்தர் விண்ணப்பம் தொடர்பான சேவையை மிக வெற்றிகரமாக வழங்கிவரும் எமது நிறுவனத்தைச் சேர்ந்த அனுபவம் வாய்ந்த பிரதிநிதியின் ஆலோசனையைப் பெறுவதற்கு பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

எமது நிறுவனத்திற்கு கிளை அலுவலகமோ அல்லது பிரதிநிதிகளோ இலங்கையின் எந்த ஒரு பாகத்திலும் இல்லை என்பதை அறியத்தருகிறோம்.

**BRISTOL CYBER CAFE**
No. 8/3/4, Bristol Street, Colombo 01. Tel. 0112 393 919
Mobile : 077 4276579 www.bristolcc.biz

## தேவை

கட்டட நிர்மாணப்பணிகளை மேற்கொண்டு வரும் எமது நிறுவனத்திற்கு நன்கு அனுபவம் மிக்க தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் தேவை.

077 762 6241

## தேவை

கட்டட நிர்மாணப்பணிகளை மேற்கொண்டு வரும் எமது நிறுவனத்திற்கு உப ஒப்பந்த காரர்கள் மேசன், கூலி உடன் தேவை.

077 3614638, 077 4529890

## வீடு வாடகைக்கு தேவை

2பேர் கொண்ட குடும்பத்துக்கு நல்லூர் திருநெல்வேலி, கொக் குவில்,கோண்டாவில், கட்டப்பிராய் பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

077 4011204, 076 6582886

## விற்பனைக்கு

டாசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 434 1551

## வாடகைக்கு

பக்கோ ஏக்ஸ்காவேட்டர் வாடகைக்கு விடப்படும்.

துர்கா கிறேசர் புத்தூர்.
தொடர்பு : 077 526 2620

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ்.நகரிலுள்ள வைத்தியரின் வீட்டுக்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பெண்பிள்ளை தேவை.

077 766 7444

## காணி விற்பனைக்கு

* கே.கே.எஸ் வீதியில் 3ஆவது மைல் கல் கொக்குவில், சம்பியன்லேன் அருகில் நிலப்பரப்பு 08 காணி விற்பனைக்கு உண்டு.
* கொக்குவில் கிழக்கு தலையாழியில் (செல்வ மகால் திருமண மண்டபத்துக்கு முன்பாக) கே.கே.எஸ் வீதியிலிருந்து 150m தூரத்தில் நிலப்பரப்பு 3 (2துண்டுகள்)துண்டுகளாகவும் மொத்தமாக வும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
077 728 6061, 077 167 1174

## சுத்திகரிப்பு பணியாளர்கள் தேவை

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், வங்கிகள், விசேட இடங்களுக்கு சுத்திகரிப்புப் பணிகளைச் செய்வதற்கு 21-45 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் தேவை. யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:
077 903 7288, 077 497 5962

## Majestic Cineplex Jaffna

கார்கிள்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில் — CEYLON THEATRES




விசாரணை ☎ 021- 2227712

facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

# வெளிநாடுகளில் இருந்து வருவோராலேயே குடாவில் பெண்களுக்கு எதிரான வன்முறை

## பிமல் ரத்னாயக்க எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 12

வெளிநாடுகளிலிருந்து குடாநாட்டுக்கு விடுமுறைக்காகப் பலர் வருகின்றனர். அவர்களால் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் அதிகரித்துள்ளன.- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

வடக்கு – கிழக்கு நிலமைகள் தொடர்பாக சபை ஒத்தி வைப்புப் பிரேரணை மீது விவாதம் இடம்பெற்றது. இதன்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தெரிவித்துள்ளதாவது–

காணாமற் போனோருக்கான சான்றிதழ் வழங்கும் பிரேரணையை நாடாளுமன்றத்தில் முன்வைத்து அதனை நிறைவேற்ற அரசு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். வடக்கில் போரால் தமது உறவுகளை தொலைத்துத் தவிப்பவர்களின் சட்டப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஏதுவாக இது அமையும். அத்தோடு இவ்வாறானவர்களுக்கு நட்டஈடுகளை பெற்றுக் கொள்வதற்கும் உதவியாக அமையும். போரில் விடுதலைப் புலிகள் உயிரிழந்துள்ளனர். அவர்களது பெற்றோருக்கு அவர்களை நினைவு கூருவதற்கு உரிமையுண்டு. தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் என்று வடக்கு – கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் போரால் மக்கள் உயிரிழந்துள்ளனர். எனவே மே 19ஆம் திகதி இவர்கள் அனைவரும் தமது உயிரிழந்த உறவுகளை நினைவு கூருவதற்குப் பொதுவான நினைவுப் தூபி நிர்மாணிக்கப்பட வேண்டும்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் பலாத்காரமாக அத்துமீறி மீன் வளங்களைக் கொள்ளையடித்துச் செல்கின்றனர். ஆனால் இந்திய மீனவர்கள் பாகிஸ்தான் கடல் எல்லைக்குச் செல்வதில்லை. அவ்வாறு கடல் எல்லை தாண்டும் போது எச்சரிக்கைச் சமிக்ஞை ஏற்படுத்தப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் அணுவாயுதங்களுக்குப் பயந்து இந்தியா அங்கு சண்டித்தனம் காட்டுவதில்லை. ஆனால் இலங்கைக்குத் தான் சண்டித்தனம் காட்டுகிறார்கள்.

தற்போது விடுமுறைக்காக அதிகளவில் வெளிநாடுகளிலிருந்து குடாநாட்டுக்கு பெரும்பாலானோர் வருகின்றனர். வெளிநாடுகளிலிருந்து குடாநாட்டுக்கு விடுமுறைக்காக வருவோரால் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் அதிகரித்துள்ளன.


பாடசாலை மாணவிகளிடத்திலும் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இது தொடர்பில் கவனம் செலுத்தி தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் – என்றார்.

(ந-ஐ-5)

## மரண அறிவித்தல்கள்

### ஞானப்பிரகாசம் டேவிற்

(இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்)



தாவடியைப் பிறப்பிட மாகவும் இல. 22 மூளாய் ஒழுங்கை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் டேவிற் நேற்று (11.06.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஞானப்பிரகாசம் காலஞ்சென்ற சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாசிலாமணி-மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், பவானியின் (ஆசிரியர் பாசையூர், சென் அன்ரனிஸ் றோ.க.மகளிர் வித்தியாலயம்) அன்புக் கணவரும், அபிலாஸ், கரிஸ்மன் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையும், றஜித்தா, விஜித்தா, பாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், உதயகுமார், சாந்தகுமார், சுதாஜினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.06.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் வழிபாட்டுக்காக எடுத்துச் செல்லப் பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.22, மூளாய் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**

தகவல்: **மனைவி, பிள்ளைகள்.**

(C 21884)(10.17)

## மரண அறிவித்தல்கள்

### மாணிக்கம் நவரத்தினம்

(திருவருள் லொறி உரிமையாளர்)



முரசுமேடு, கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் ஊரெழுகிழக்கு, ஆனந்தகானத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் நவரத்தினம் 10.06.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜீவராணி அவர்களின் பாசமிகு கணவரும் நகுலேஸ்வரன் (NSP Fancy), நவயோன்சன்(லொறி உரிமையாளர்), நிறோஜன், நிறஞ்சன், சுபாசினி, ஜெனிபா ஆகியோரின் அன்பு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஊரெழு கிழக்கு, ஆனந்தகானம்.**

(J 2088)(14.17.18)

தகவல்: **குடும்பத்தினர்.**

**077 617 2445 / 077 191 6705**

## இனிப்பு உண்ட மாணவர் மோதல்: விளக்கம் கோருகிறார் செயலாளர்


யாழ்ப்பாணம், ஜூன் 12

இனிப்பு உட்கொண்ட பாட சாலை மாணவர்கள் கைகலப்பில் ஈடுபட்டுப் பாடசாலைச் சீருடையுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட விடயம் தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலை உள்ளடங் கும் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் அவ்வாறு விளக்கம் கேட்டுள்ளதாக வடக்கு மாகா ணக்கல்வி அமைச்சின் செய லாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

4 மாணவர்கள் சீருடையுடன் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர். அவர்கள் ஒருவகை இனிப் புப் பொருளை உட்கொண்ட பின்னரே அவ்வாறு கைகலப்பில் ஈடுபட்டதாகவும், அந்த வகை இனிப்புப் பொருளை உட்கொண்டிருந்த 2 மாணவிகளும் பாதிப்பை எதிர்கொண்டதாகவும், ஆனால் அவர்கள் பெற்றோரால் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே குறித்த விடயம் தொடர்பில் விளக்கம் கேட்டுள்ளதாகச் செயலாளர் மேலும் கூறினார். (து-4)



பிறப்பு 13 . 03 . 1935 — இறப்பு 08 . 06 . 2016

### தம்பிப்பிள்ளை சீவரத்தினம்

(முன்னாள் உரிமையாளர்-பரந்தன் ராஜன் றைஸ் மில், சங்கானை ஜீவன் றைஸ் மில், பரந்தன் பரமேஸ்வரி றைஸ் மில்)

யாழ் நுணாவிலைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வதிவிடமாகவும் லண்டன் Red Bride ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சீவரத்தினம் கடந்த (08.06.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-தங்கம்மா தம்ப தியரின் அன்பு புதல்வனும் காலஞ்சென்றவர்களான செம்பொற்சோதி-இராஜலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் பூமாதேவியின் அன்புக் கணவரும் சுசிகலா (லண்டன்), கோபிதாசன் (சங்கானை), ஆகியோ ரின் பாசமிகு தந்தையும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற இன்பநாதன் மற்றும் சத்தியசீலன் ஆகியோரின் சகோதரனும் நந்தகோபால் (நந்த னன்), இரஞ்சிதமலர் ஆகியோரின் மாமனும் இராசையா, கலாவதி, புஸ்பா, காலஞ்சென்றவர்களான குமாரகுலசிங்கம், தனபாலசிங்கம், குலேந்திரசிங்கம், மகேஸ்வரி, கருணலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் விக்னேஸ், ஸ்ரீராம், குணேஸ், லினேஸ், கஜனேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். அன்னாரின் அஞ்சலி நிகழ்வுகள் இன்று (12.06.2016) ஞாயிற்றுக்கிழமை பி. ப 2.00 மணியளவில் வல்லை வீதி சங்கானையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வல்லை வீதி, சங்கானை.**

தகவல்: **மகன், சகோதரன்.**



பிறப்பு 24 . 02 . 1923 — இறப்பு 09 . 06 . 2016

### செல்வி அன்னம்மா (இராசமணி) செல்லப்பா(உடுப்பிட்டி)

இலக்சுமிவாசா உடுப்பிட்டியைச் சேர்ந்த செல்வி அன்னம்மா (இராசமணி) செல்லப்பா கடந்த (09.06.2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் கிருஷ்ணரின் (நடராஜா- Retd RMP) உடன் பிறந்த சகோதரியும் கனடாவைச் சேர்ந்த குமுதினி-ஜெயராஜா, அனுஷியா-சாந்தராஜா, சுவிஸ்லாந்தைச் சேர்ந்த கிருஷ்ணவேணி-சிவயோகன் ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்றவர்களான அழகாம்பிகை-பொன்னையா, கந்தசாமி-செல்வராசா, நல்லம்மா-குமாரசாமி மற்றும் லண்டனைச் சேர்ந்த சிவயோகம்-ஜெயசிங் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.06.2016 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் மு. ப 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரும்பவாளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**புவனகிரி, உடுப்பிட்டி.**

தகவல்: **கந்தையா குமாரசாமி** (மைத்துனர்)

## 4,000 மில்லியன் ரூபா நிதியில் வடக்கில் நெல்சிப் திட்டங்கள்

### 2011ஆம் ஆண்டு முதல் தற்போது வரை

யாழ்ப்பாணம், ஜூன் 12

நெல்சிப் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் 4 ஆயிரத்து 527 மில்லியன் ரூபாவுக்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று நெல்சிப் திட்ட அலுவலகப் புள்ளி விவரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நெல்சிப் திட்டம் வடமாகாணத்தில் 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது முதல் 2015 ஆம் ஆண்டு வரைக்கும் 3 ஆயிரத்து 626 மில்லியன் ரூபாவுக்கான வேலைத் திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. நடப்பாண்டான இந்த வருடம் 2016 இல் 901 மில்லியன் ரூபாவுக்கான வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

2011ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான 5 ஆண்டு காலத்தில் செலவிடப்பட்ட 3 ஆயிரத்து 626 மில்லியன் ரூபாவில், வடக்கு மாகாணத்தின் சகல பிரதேசத்திலும் மொத்தமாக 369 வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அதேபோன்று நடப்பாண்டின் 901 மில்லியன் ரூபாவிலும் 102 வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் வடக்கின் 12 உள்ளூராட்சி மன்றங்களிலும் பணிகள் இடம்பெறுகின்றன.

வலி.வடக்கு , பருத்தித்துறை , காரைநகர், பளை, மாந்தை கிழக்கு துணுக்காய் ஆகியவற்றுடன் வவுனியா வடக்கு மற் றும் தெற்கு , மன்னார் , மாந்தை மேற்கு உள்ளிட்ட 12 உள்ளூராட்சி சபைகளின் அலுவலகங்களிலும் குறித்த பணிகள் நடைபெறுகின்றன.

இந்தப் பணிகளுக்காக கடந்த காலங்களில் ஒரு சில பொறியியலாளர்களே பணிகளில் இருந்த போதும், நடப்பாண்டில் மேலும் 5 பொறியியலாளர்கள் குறித்த திட்டங்களுக்காகப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஐ-101)

# வரி அறவீடுகளில் பெரும் மோசடி; விசாரிக்கக் கோருகிறார் ஹக்கீம்

கொழும்பு, ஜூன் 12

வரி அறவீடுகள் தொடர்பில் இறைவரித் திணைக்களத்தில் மிகப் பெரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளன. அவை தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் – இவ்வாறு அமைச்சர் ரவூப் ஹக்கீம் சபையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

1994 ஆம் ஆண்டு நானும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவும் ஒரே சமயத்திலேயே நாடாளுமன்றத்துக்கு வந்திருந்தோம். அதன் பின்னர் பல விடயங்களில் அவருடன் இணைந்து பணியாற்றியிருக்கின்றேன். அவ்வாறிருக்கையில் அரசில் உள்ள பிரதானமானவர்களை இலக்கு வைத்தே நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டு வரப்படுவதை நாம் கண்டு வந்திருக்கின்றோம்.

லக்ஸ்மன் கதிர்காமர் போன்றவர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்திருந்தார்கள். ஆனால் அதனால் எதனையும் சாதிக்கவில்லை. அதேநேரம் அந்த நபர்களும் தமது செயற்பாடுகளை நிறுத்தவுமில்லை. தற்போது நிதி அமைச்சருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. உண்மையிலேயே நாட்டின் பொருளாதாரத்துக்கு எதிராகவே இந்தப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கு கடந்தகால ஆட்சியாளர்களே காரணமாக இருக்கின்றனர். நாட்டின் வருமானத்தில் பெரிய செல்வாக்கைச் செலுத்தும் வரி பெறுகை, முறையாக முன்னெடுக்கப்படவில்லை. கடந்த பத்து ஆண்டுகளாக நாட்டின் வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் இறைவரித் திணைக்களம் முறையாகச் செயற்படவில்லை. அரசியல் தலையீடுகள் காணப்பட்டன. மோசடிகள் இடம்பெற்றுள்ளன. வரி அறவீடுகளை முறையாக மேற்கொள்ளாது பக்கச்சார்பாகச் செயற்பட்டார்கள்.

இவ்வாறு வினைத்திறன் அற்ற செயற்பாட்டின் காரணமாகத் தான் பொருளாதார ரீதியான பாதிப்பு ஏற்பட்டது. இறைவரித் திணைக்களத்தில் 4 பில்லியன் ரூபா மோசடி இடம்பெற்றது என்று கூறப்படுகின்றது. உண்மையிலேயே எனது தேடல்கள் ஆய்வுகளின் பிரகாரம் இறைவரித் திணைக்களத்தில் அதன் 6 மடங்கு தொகை மோசடியாக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த மோசடி தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு அனைவரும் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

தற்போது நாட்டின் வரி அறவீடு ஓரளவு முறையாக இடம்பெறுகின்றது. பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக வற் வரி அதிகரிக்கப்பட்டுள்ளபோதும் பொதுமக்களின் அத்தியாவசியப் பொருள்களுக்கு வற் வரி அதிகரிக்கப்படவில்லை. அதன் மூலமாக எதிர்காலத்தில் முன்னேற்றகரமான நிலைமைகள் ஏற்பட வாய்ப்பு உருவாகும்.

அதேவேளை, கடந்த காலத்தில் வரி தொடர்பான விடயங்களை ஆராய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது. ஆணைக்குழுவானது பரிந்துரைகளை வழங்கியுள்ள போதும் தற்போது வரையில் அவை கிடப்பில் போடப்பட்டுள்ளன. அவை சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படவேண்டும் – என்றார்.

(ற-ஐ-5)

## வெடித்த

கையளிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

சீனாவின் நொறிங்கோ நிறுவனம் இந்த வெடிபொருள்களைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு இணங்கியிருந்தது. அதுபற்றிய பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான பயணமும் இடம்பெற்றிருந்தது.

லங்கா லொஜிஸ்ரிக் அன்ட் ரெக்னொலொஜிஸ் நிறுவனத்தின் ஊடாக, 150 மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை விற்பதற்கான அமைச்சரவைப் பத்திரத்துக்குக் கடந்த ஏப்ரல் 7 ஆம் திகதி அமைச்சரவை அனுமதி அளித்திருந்தது. சீனாவுக்குத் திருப்பி விற்கப்படவிருந்த வெடிபொருள்கள் தீ விபத்தில் நாசமாகியதால், பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளன–என்றுள்ளது. (த-வ-5)

## சுமந்திரன்

னர் சுமந்திரன் அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை அரசு சார்பில், அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் காரியவசமும் பங்கேற்பார்.

அமெரிக்கக் காங்கிரஸின் கலந்துரையாடலில், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தின் தற்போதைய நிலமை குறித்தும் ஆராயப்படவுள்ளது.

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் புதிய அரசமைப்புத் தொடர்பிலும் பேசப்படவுள்ளது. இந்த இரண்டு விடயங்கள் தொடர்பிலும், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் காரியவசம் ஆகியோரிடம் அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர்கள் கேள்விகளை எழுப்பி, விடயங்களை அறிந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலுக்குச் செல்லும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், தெற்கு மற்றும் ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் நிசா பிஸ்வால் மற்றும் தேசிய பாதுகாப்புச் சபை உறுப்பினர்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-வ-5)

## இம்முறையும்

ஒரு சில வாரங்களில் மீளத் திரும்புவோம் என்ற எண்ணத்துடனேயே எங்கள் மண்ணிலிருந்து 1990ஆம் ஆண்டு புறப்பட்டோம். 26 வருடங்கள் ஏதிலிகளாக வாழவேண்டி வரும் என்று தெரிந்திருந்தால், உயிரே போயிருந்தாலும் எமது மண்ணை விட்டு வெளியேறியிருக்க மாட்டோம்.

நாம் எமது பரம்பரைச் சொத்துக்களைப் பாதுகாத்து வாழ்பவர்கள். எங்கள் பூர்வீக நிலம் இல்லாமல் நாம் எந்தளவு தூரம் வேதனைப்படுவோம் என்பதை தாங்கள் உணர்வீர்கள் என்று நம்புகின்றோம்.

1990 ஆம் ஆண்டுகளில் பலாலி விமான நிலையம் இயங்கியது. நாம் அங்கு இருந்தோம். அதனால் வசதியீனம் என்று நாங்களும் கூறியது இல்லை. பாதுகாப்பு இல்லை என்று கூறி எம்மை வெளியேற்றியதும் இல்லை.

எமது மண்ணின் வளம் உங்களுக்குத் தெரியும்.

எனவே எங்களைச் சொந்த மண்ணில் வாழ்வதற்கு அனுமதியளியுங்கள். நாங்கள் மீன்பிடியிலும், விவசாயத்திலும் சிறப்புடன் செயற்படுவோம். நாட்டுக்கும் வருமானத்தைப் பெற்றுத் தருவோம்.

நீங்கள் எங்கள் நலன்புரி நிலையத்துக்கு வந்தீர்கள். சொந்த மண்ணில் குடியமர்த்துவேன் என்று வாக்குறுதியளித்தீர்கள். இதனை வேத வாக்காக நம்பி கடந்த 6 மாதங்களாக எந்த எதிர்ப்புப் போராட்டமும் இன்றிக் காத்திருக்கிறோம். சில அதிகாரிகளின் பேச்சினால் ஏக்கமும் அடைகின்றோம்.

நாம் சொந்த மண் திரும்புவதற்காகத் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் முன்பாக உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தினோம். அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரான ரணில் எங்களுடன் வந்திருந்து போராட்டத்தில் பங்கெடுத்தார். தான் ஆட்சிக்கு வந்தால், எங்களைச் சொந்த இடத்தில் குடியமர்த்துவேன் என்றார்.

இந்த உறுதிமொழியை வழங்கிய ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும், நீங்கள் ஜனாதிபதியாகவும் இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எங்களின் காணிகள் விடுவிக்கப்படும் என்ற நம்பிக்கையில் காத்திருக்கின்றோம். நீங்கள் விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளீர்கள். அப்போது எங்கள் நிலம் முழுமையாக விடப்பட்டு விட்ட செய்தி எமக்குக் கிடைக்க வேண்டும்.

இந்த முறையும் நாம் ஏமாற்றப்பட்டால், வீதியில் இறங்கித் தொடர் போராட்டம் நடத்துவோம் – என்றுள்ளது. (த-வ-5)

## மகிந்த

அரசுக்கோ எதிரானது அல்ல என்றும், அது சிறி லங்கா சுதந்திரக் க்ட்சியைப் பரிசோதிப்பதற்கே எனவும் அமைச்சர் சஜித் மேலும் குறிப்பிட்டார். (த)

## திருமலையின்

ஆகியோரை முதலமைச்சரின் செயலகத்தில் சந்தித்து உரையாடினார். கிழக்கு மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தி குறித்துக் கலந்துரையாடவே தான் அங்கு பயணம் மேற்கொண்டார் என்று பிரதமர் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தித் தேவைகள் பற்றி நான் அறிந்துள்ளேன். இந்த மாகாணம் போரால் பாதிக்கப்பட்ட ஒரு மாகாணம் என்பதும் நான் அறிந்ததே. இங்குள்ள வேலையில்லாப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு முன்னோடி நடவடிக்கைக்காகவும் இங்கு வந்துள்ளேன். திருமலையில் பல வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்னும் பல ஆரம்பிக்கப்படவுள்ளன. பெரும்பாலும் இங்கு பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கவுள்ளோம்.

கிழக்கு மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தியைக் கட்டியெழுப்புவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும். இதற்கான சகல வளங்களும் திருகோணமலையில் உள்ளன. மிகப்பெரிய மகாவலி, யான் ஓயா போன்ற ஆறுகள் இங்குதான் சங்கமிக்கின்றன.

உலகில் மிக முக்கியமானதும் பிரசித்தி பெற்றதுமான இயற்கைத் துறைமுகம் இங்குதான் காணப்படுகின்றது. இதனை வைத்துப் புதிய விடயங்களை–புதிய திட்டங்களை நாம் இங்கு உருவாக்க வேண்டும். இனம், மொழி, சாதிவேறுபாடுகளுக்கு அப்பால் நாம் சிந்திக்க வேண்டும். இலங்கை, தமிழ், முஸ்லிம், சிங்களம் மற்றும் பறங்கியர் என்ற சமூக ஒன்றிணைவின் கேந்திர நிலையமாகப் பார்க்கப்படல் வேண்டும். இது ஒரு சமூகத்தின் தேசமல்ல. நமது தேசம்.

இங்கு நல்ல கல்வி, நல்ல காசு, நல்ல சுகாதாரம் அத்தோடு நல்ல மனப்பாங்கு இவை தான் இன்றுள்ள முக்கிய தேவை. நாம் இலங்கையை இந்தியத் தீபகற்பத்தின் முக்கிய கேந்திர நிலையமாக உருவாக்கவேண்டும். நாம் ஐந்து வருட அபிவிருத்தித் திட்டம் ஒன்றைத் தயாரித்து வருகின்றோம்.

அம்பாந்தோட்டையில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தை ஒருபுறம் அம்பாறைக்கும் மறுபுறம் இரத்தினபுரிக்கும் கொண்டு செல்லவுள்ளோம். இவை யாவும் 10 வருடகாலத்திட்ட அடிப்படையில் நடைபெறும். இவற்றுக்கான அனைத்து வேலைத்திட்டங்களும் நடைபெற்று வருகின்றன. இதன்படி இந்த அபிவிருத்திகள் இலங்கையின் சகல மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படும்.

இங்குள்ள இளைஞர், பெண்களின் வேலையில்லாப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்படவேண்டும். இவர்களின் பைகள் காசினால் நிரம்ப வேண்டும். அதற்கான வளங்கள் இங்கு நிறைந்து காணப்படுகின்றன. துறைமுக அபிவிருத்தியுடன் தானிய அபிவிருத்தியையும் மேற்கொள்ள வேண்டும். அம்பாறையில் இருந்து திருமலைக்கு அதி நவீன போக்குவரத்தை ஏற்படுத்துவதுடன் இங்குள்ள விமான நிலையத்தையும் அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களும் உள்ளன –என்றார். (த-4-40)

## இராணுவத்

இறுதிப்போரின் போதான தங்கள் அனுபவங்களை முழுமையாகப் பகிர்ந்து கொள்வதற்கு மிகவும் துன்பப்பட்டனர். அவர்களை நேர்காணல் செய்தவர்கள் கேள்வி கேட்கத் தொடங்கியதும், தாங்கள் பார்த்த பயங்கரமான காட்சிகளைத் தெரிவிக்கத் தொடங்கினர். இத்தகைய முயற்சியில் பங்கெடுப்பது மிகவும் துணிச்சலான ஒன்று. ஆரம்பத்தில் பலர் இத்தகையதொரு முயற்சி குறித்து நம்பிக்கையற்றுக் காணப்பட்டனர். இறுதியில் தங்கள் உணர்வுகள் பகிரப்பட்டமை குறித்து மகிழ்ச்சி வெளியிட்டனர்.

இவ்வாறு புறக்கணிக்கப்பட்ட - அலட்சியப்படுத்தப்பட்ட நிலையிலிருந்த மக்களுடன் கலந்தாலோசனை மேற்கொண்டதே அவர்களுக்குப் பெரும் நிம்மதியை வழங்கியுள்ளது.

போரின் இறுதித் தருணங்களில் பெரிய துயரங்களை அனுபவித்த பின்னர், வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ள இந்த மக்களால் பாதுகாப்பாகச் சாட்சியளிக்க முடியுமா என்பதே இலங்கையின் நிலைமாற்றுக்காலப் பொறிமுறைகளின் வெற்றியைத் தீர்மானிக்கும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

**தீர்வு அல்ல நோக்கம்**

எங்களது இந்த அறிக்கை மூலமாக வெளியான தகவல்கள், இலங்கையின் நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறைகள் உருவாக்கத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றன. சர்வதேச சமூகமும், இலங்கையும் உதவி வழங்கும் சமூகமும், போரின் இறுதித் தருணங்களில் மனித உரிமை மீறல்களைச் சந்தித்து வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளவர்களும் நீதிப் பொறிமுறைகளில் உள்வாங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

இலங்கையில் நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறைகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் தீர்வைக் காணும் நோக்கத்தின் அடிப்படையில் முன்னெடுக்கப்படவில்லை.

திருகோணமலை கடற்படைத் தளத்தில் காணப்பட்ட இரகசிய வதைமுகாம் குறித்து எங்கள் முந்தைய அறிக்கையில் குறிப்பிட்டிருந்தோம். பெயர்களையும் வெளியிட்டோம். ஆனால், இலங்கை அரசு எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இலங்கை அரசு இராணுவத்தைத் திருப்திப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே செயற்படுகின்றது.

**அரசமைப்பில்**
**மாற்றம் வேண்டும்**

பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்தாலோசனை மேற்கொள்ளாமையே பிரச்சினையாகக் காணப்படுகின்றது. போதியளவு ஏற்றுக் கொள்ளாமை மற்றும் முற்றாக மறுக்கும் சூழமைவு காணப்படும் நிலையில், நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறைகள் குறித்து கொள்கை எதுவும் இல்லாதநிலையே காணப்படுகின்றது.

இலங்கை அரசு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையிலும் ஏனைய உலக அரங்குகளிலும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை உறுதி செய்வதற்குச் சர்வதேச சமூகம் தனது செல்வாக்கைப் பயன்படுத்தவேண்டும்.

போர்க் குற்றங்களுக்குத் தண்டனை வழங்கும் வகையில் இலங்கையின் குற்றவியல் கோவையில் மாற்றங்களை செய்யப்படவேண்டும். அதேபோன்று அரசின் பொறுப்புக் கூறலை உறுதி செய்யும் வகையில் இலங்கையின் அரசமைப்பிலும் ஏற்பாடுகள் அவசியம்.

**மன்னிப்புக்**
**கோரவேண்டும்**
**மைத்திரிபால**

பாதிக்கப்பட்டவர்கள் கண்காணிக்கப்படுவதை நிறுத்துவது அவசியம். நம்பிக்கையை ஏற்படுத்தும் நடவடிக்கையாகவும் இதனை முன்னெடுக்கவேண்டும். அதேபோன்று வடக்கு - கிழக்கு இராணுவமயப்படுத்தப்படுவதைத் தடுத்து நிறுத்துவது அவசியம். நிலங்கள் உரிமையாளர்களிடம் வழங்கப்படவேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் நீக்க வேண்டும்.

எங்கள் அறிக்கையில் இடம்பெற்றுள்ள மக்களில் பெரும்பாலானவர்கள் விசாரணைகள் இடம்பெறவேண்டும் என விரும்புகின்றனர். பொது மன்னிப்பு மற்றும் போர் வெற்றிச் சின்னங்கள் எதனையும் அவர்கள் ஏற்கவில்லை. இலங்கை ஜனாதிபதி பகிரங்க மன்னிப்பு கேட்கவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் – என்றார். (த-வ-5)

(அறிக்கை தொடர்பான செய்தி 6ஆம் பக்கத்தில்)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 12

**மன்னார் கிரிக்கெட் சங்கத்தின் தொடர்**

மன்னார் கிரிக்கெட் சங்கம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில், அடம்பன் பிரதேச சபை மைதானத்தில் இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முத்தமிழ் அணியை எதிர்த்து யங் ஹென்றிஸ் அணி மோதவுள்ளது.

**சரஸ்வதி வி.க. தொடர்**

அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தால் நடத்தப்படும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய அணியை எதிர்த்து சென். மைக்கல் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து அன்னை அணி மோதவுள்ளது.

**யங்ஹென்றிஸ் வி.கழக தொடர்**

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முல்லைத்தீவு சென். யூட் அணியை எதிர்த்து கம்பர் மலை யங்கம்பன்ஸ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் சென்.லூசியா அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது.

**எவரெஸ்ட் வி.க. தொடர்**

எவரெஸ்ட் வி.கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆதிசக்தி அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து எல்லாளன் அணி மோதவுள்ளது.

**கழுகுகள் வி.க. தொடர்**

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து மன்னார் சென்.ஜோசப் அணி மோதவுள்ளது.

(ம-23-108)



# விம்பிள்டனில் நடால் விலகல் கையில் ஏற்பட்ட காயத்தால்

இந்த மாத இறுதிப்பகுதியில் நடைபெறவுள்ள விம்பிள்டன் ரென்னிஸ் தொடரிலிருந்து காயம் காரணமாக விலகுவதாக அறிவித்துள்ளார் நடால்.

சில தினங்களுக்கு முன்னர் முடிவடைந்த பிரான்ஸ்ரென்னிஸ்தொடரின் மூன்றாவது சுற்றுடன் விலகினார் நடால். கையில் ஏற்பட்ட காயமே நடால் வெளியேறக் காரணமாகச் சொல்லப்பட்டது. காயம் குணமடையாத நிலையில் அவர் விம்பிள்டன் தொடரிலிருந்தும் விலகுகிறார் என அறிவித்துள்ளார்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் தரப்படுத்தலில் முதலிடத்திலிருந்த நடால், ஜோகோவிக், பெடரர், முர்ரே ஆகியோரின் எழுச்சியில் தனது தரப்படுத்தலை இழந்திருந்தார். இதனால் கடந்த வருடம் ஐந்தாவது இடத்திலேயே அவரால் நீடித்திருக்க முடிந்தது. ஆனால் நடப்பு வருடத்தில் ஒரு சில கிண்ணங்களைக் கைப்பற்றியதன் மூலம் நடால் தனது பழைய போர்முக்குத் திரும்பிவிட்டார் என்று கருதப்பட்ட நிலையில் அவருக்கு ஏற்பட்ட காயம் மீண்டும் அவரைக் கட்டிப்போடும்படியாக அமைந்துள்ளது.

(ம)

# மெஸ்ஸி ஹற்றிக் கோல்; ஆர்ஜென்ரீனா காலிறுதியில்

கோபா அமெரிக்கா கால்பந்துத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் மெஸ்ஸியின் ஹற்றிக் கோலின் உதவியுடன் பனாமாவை 5:0 என பந்தாடியது ஆர்ஜென்ரீனா.

கீழ் முதுகுப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக இந்த ஆட்டத்தின் முதல் பாதிவரை மெஸ்ஸி களமிறங்கியிருக்கவில்லை. 18ஆவது நிமிடத்தில் டி மரியா அடித்த கோலின் உதவியால் 69 ஆவது நிமிடம் வரை 1:0 என்று ஆதிக்கத்திலிருந்தது ஆர்ஜென்ரீனா. பனாமா பதில் கோலைப் பதிவுசெய்தால் ஆட்டத்தில் எதுவும் நடக்கலாம் என்ற நிலை. 69ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி தான் அணிந்திருந்த பதில் வீரருக்கான மேலுடையைக் கழற்றி களமிறங்கத் தயாரானதும் மெஸ்ஸி... மெஸ்ஸி... என்ற கூக்குரல்கள் வானைப் பிளக்க ஆரம்பித்தன. கமராக்கள் மெஸ்ஸியை மொய்க்க 70ஆவது நிமிடத்தில் களமிறங்கினார் மெஸ்ஸி. கூடவே பனாமாவுக்கு ஆபத்தும் கள மிறங்கியது. மெஸ்ஸி களமிறங்கிய எட்டாவது நிமி டத்தில் அவரால் ஓர் கோல் பதிவானது.

87ஆவது, 89ஆவது அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்து ஹற்றிக் படைத்தார் மெஸ்ஸி. தற்போது ஆர்ஜென்ரீனா 4:0 என்று முன்னிலை வகித்தது. மரியாவால் மற்றொரு கோல் பதிவாக முடிவில் 5:0 என்ற கோல்களின் அடிப்படையில் பந்தாடப்பட்டது பனாமா.

(ம)



# ருமேனியாவை வீழ்த்தியது பிரான்ஸ்

யூரோ கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் ருமேனியாவை வீழ்த்தியது பிரான்ஸ். தொடர் பிரான்ஸில் நடைபெற்று வருவதால் ரசிகர்களின் ஆதரவு அந்த அணிக்கு மிகையாகவே இருந்தது. கோல் கணக்கு இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. 57ஆவது நிமிடத்தில் முதல்



கோலைப் பதிவுசெய்து பிரான்ஸின் ஆதிக்கத்தை ஆரம்பித்து வைத்தார் ஒலிவர். 65ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தது ருமேனியா. கிட்டத்தட்ட ஆட்டத்தின் இறுதிப்பகுதி வரை 1:1 என்ற நிலமையே பேணப்பட்டு வந்து 89ஆவது நிமிடத்தில் பிரான்ஸின் வெற்றிக் கோல் பதிவானது.

(ம)

# சென். அன்ரனிஸ் மகளிர் வித்தி. பளுதூக்கலில் சம்பியனானது



யாழ்ப்பாணம், ஜூன் 12

மாகாணமட்ட பளுதூக்கலில் பெண்கள் பிரிவில் சம்பியனானது பாசையூர்சென். அன்ரனிஸ் மகளிர் வித்தியாலயம்.

குறித்த போட்டிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் நடைபெற்றன. இதில் 17 வயதுப்பிரிவில் பாசையூர் சென். அன்ரனிஸ் மகளிர் வித்தியாலயம் கணிசமான பிரதிநிதித்துவம் பெற்றது. 44 கிலோ எடைப்பிரிவில் காயத்திரி 50 கிலோ பளுவைத் தூக்கி தங்கப்பதக்கத்தையும், 69 கிலோ எடைப்பிரிவில் சுகனியா 66 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும், 48 கிலோ எடைப்பிரிவில் கிருசாந்தினி 51 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும், 44 கிலோ எடைப்பிரிவில் ஆன் டியூலா 47 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், 69 கிலோ எடைப்பிரிவில் மேரி லக்சிகா 61 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், 48 கிலோ எடைப் பிரிவில் கிருசாளினி 45 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும், 58 கிலோ எடைப் பிரிவில் மேரி டிலானி 48 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும், கைப்பற்றினர். ஒட்டுமொத்தமாக மூன்று தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலம் என ஏழு பதக்கங்களுடன் பாசையூர் சென். அன்ரனிஸ் மகளிர் வித்தியாலயம் சம்பியனானது.

(ம-23)

# பாகிஸ்தான் அணி முதலிடம் பிடிக்கும்

## ஆர்தர் தெரிவிப்பு

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள மிக்கி ஆர்தர் மூன்று வகையான ஆட்டங்களிலும் பாகிஸ்தான் முதலிடம் பிடிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவியை நேற்றுத்தான் ஆர்தர் முறைப்படி ஏற்றுக்கொண்டார். இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எனது குறுகிய காலத் திட்டம், பாகிஸ்தான் அணியில் கிரிக்கெட் கலாசாரத்தை ஏற்படுத்துவது, அணியை மூன்று ஆட்ட வடிவங்களிலும் முதலிடத்துக்குக் கொண்டு வருவது எனது நீண்டகாலத்திட்டம். நிச்சயம் பாகிஸ்தான் அணியால் சாதிக்க முடியும். அந்த அணி முதலிடத்தை அடையக்கூடிய அணி. எனக்கு நம்பிக்கை உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

(ம)



# சண்டிலிப்பாய் இந்து - விக்ரோறியா
# கிண்ணத்துக்காக இன்று மோதல்



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி



விக்ரோறியாக் கல்லூரி அணி

யாழ்ப்பாணம், ஜூன் 12
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியும் கிண்ணத்துக்காக இன்று மல்லுக் கட்டுகின்றன.

குறித்த பிரிவின் அரையிறுதியாட்டங்கள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்றன. முதலாவது அரையிறுதியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 31:27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி மோதியது. இதில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி 32:09 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. இறுதியாட்டம் அதே மைதானத்தில் இன்று நடைபெறுகிறது. இறுதியாட்டத்துக்கு முன்னதாக நடைபெறும் மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதவுள்ளது. (ம-422)

# சரஸ்வதி யூனியன் இறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 12
பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட வலைப்பந்தாட்டத் தொடரில் 17வயதுப் பெண்கள் பிரிவில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் இறுதியாட்டத்தில் இன்று பலப்பரீட்சை செய்யவுள்ளன.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற முதலாவது அரையிறுதியில் வட இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி மோதியது. இதில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 33:08 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் 'கல்லூரி அணியை எதிர்த்து மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதியது. இதில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 20:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. அராலி சரஸ்வதி, தெல்லிப்பழை யூனியன் அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது. குறித்த வயதுப் பிரிவின் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் வட இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி இன்று பலப்பரீட்சை நடத்தவுள்ளது. (ம-422)


யூனியன், சுண்டிக்குழி மகளிர் அணிகளுக்கு இடையிலான அரையிறுதி ஆட்டத்தின் போது...

# பெண்கள் பிரிவு வலைப்பந்தாட்டம் சரஸ்வதி, யூனியன் இன்று மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 12
பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட வலைப்பந்தாட்டத்தில் 15 வயதுப்பெண்கள் பிரிவில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்று குறித்த அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. முதலாவது அரையிறுதியில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து வட இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 19:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வென்றது பெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து சுண்டிக்குழி மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 14:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இறுதியாட்டம் அதே மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளது. சுண்டிக்குழி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வட இந்து மகளிர் கல்லூரி அணி மோதவுள்ள மூன்றாம் இடத்துக்கான ஆட்டமும் இன்று நடைபெறவுள்ளது. (ம-422)

# ஆர்ப்பாட்டத்துக்குக் கண்டனம் மன்னார் மாவட்ட லீக் விடுத்தது

மன்னார், ஜூன் 12
மன்னார் மாவட்டக் கால்பந்தாட்ட லீக்குக்கு எதிராக சென். லூசியஸ் ஆதரவாளர்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்துக்கு மன்னார் மாவட்டக் கால்பந்தாட்ட லீக் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

லீக் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: இந்த மாதம் 2ஆம் திகதிநடத்தப்பட்ட ஆட்டமொன்றில் பள்ளிமுனை சென்.லூசியஸ் விளையாட்டுக் கழகம், விடத்தல்தீவு யுனைற்ரெட் விளையாட்டுக் கழகம் என்பன பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே லூசியஸின் ஆதரவாளர்கள் உதவி நடுவர் அமலனைத் தகாத வார்த்தைகளால் திட்டிக் கொண்டிருந்தனர். ஆட்டத்தின் நிறைவில் மைதானத்திலிருந்து நடுவர்கள் வெளியே வந்து கொண்டிருக்கையில் ஆதரவாளர்களும் விளையாட்டு வீரர்களும் நடுவர் அமலனைத் தள்ளிவிட்டு முதுகில் அடித்தனர். எல்லோரும் குவிந்து நின்று அடித்ததால் குற்றவாளிகள் அனைவரையும் அடையாளம் காணமுடியவில்லை. இருப்பினும் லூசியஸின் கோல் காப்பாளர் அடித்ததைக் கண்டு கொள்ளக் கூடியதாக இருந்தது. இது விளையாட்டுத் துறைக்கும் கால்பந்தாட்டத்திற்கும் பொருந்தாத மிக மோசமான செயலாகும்.

இதனையடுத்து அவசரமாகக் கூடிய எமது லீக்கின் நிர்வாக சபையானது கடுமையான தண்டனை வழங்கத் தீர்மானித்தாலும் வீரர்களின் எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டு குறைந்தபட்சத் தண்டனையாக 6 மாத காலத் தடையும் 30 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதிக்கப்பட்டது. நடுவரைத் தாக்கியதற்காகவும் அலுவலகத்தில் இருந்த நிர்வாகத்தினரை அவமதித்ததற்காகவும் கழகத்தின் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க லீக்கின் யாப்பின்படி முழு அதிகாரமுண்டு.

தங்களின் அநாகரிக செயலை மூடி மறைக்க நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை குறித்த கழகத்தினரும் ஆதரவாளர்களும் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தை வன்மையாகக் கண்டிப்பது மட்டுமல்லாமல் குறித்த விடயத்துக்கு அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்கவும் லீக் ஆயத்தமாகவுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-56)



# விக்னேஸ்வரா, ஞானமுருகன் வென்றன

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் விக்னேஸ்வரா, ஞானமுருகன் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நசரேத் அணியை எதிர்த்து விக்னேஸ்வரா அணி மோதியது. இதில் விக்னேஸ்வரா அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் ஞானமுருகன் அணியை எதிர்த்து ஞானகலா அணி மோதியது. இதில் ஞானமுருகன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# இலங்கை திடீர் தடுமாற்றம் இங்கிலாந்து முன்னிலையில்

இங்கிலாந்து, இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய மூன்றாம் நாளில் இலங்கையின் முதலாவது இன்னிங்ஸ் 288 ஓட்டங்களுடன் நிறைவுக்கு வந்ததுடன் இங்கிலாந்து இரண்டாவது இன்னிங்ஸுக்காக 109-4 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 416 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பரிஸ்ரௌவ் 167 ஓட்டங்களையும் குக் 85 ஓட்டங்களையும், வோக்ஸ் 66 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை சார்பாக கேரத் 4 இலக்குகளையும், லக்மல் 3 இலக்குகளையும், பிரதீப் 2 இலக்குகளையும், எரங்க ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.



பதிலுக்குக் களமிறங்கிய இலங்கைக்கு ஆரம்ப வீரர்களான கருணாரத்ன மற்றும் சில்வா சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்க அந்த அணி இரண்டாம் நாள் முடிவில் 162-1 என்றிருந்தது. சில்வா 79 ஓட்டங்களுடனும் மெண்டிஸ் 25 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். மேலதிகமாக ஓர் ஓட்டத்தைத்தானும் இருவராலும் பெற முடியவில்லை. சில்வாவை வீழ்த்தினார் புரோட், மெண்டிஸை வீழ்த்தினார் வோக்ஸ். ஸ்ரீபன் பின்னின் பந்துவீச்சுக்களும் தடுமாற்றத்தை தாராளமாக ஏற்படுத்தின. அவர் திரிமன்னேயை 17 ஓட்டங்களுடனும், சந்திமல்லை 19 ஓட்டங்களுடனும் வீழ்த்தினார். மத்தியூஸால் முடிந்தது மூன்று ஓட்டங்கள் மட்டுமே. மத்தியூஸின் இலக்குச் சரிக்கப்பட்டபோது இலங்கை 205-6 என்றிருந்தது. குசல் ஜெனித் பெரேரா, கேரத் இருவருக்கும் இடையில் 71 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்டன. இணைப்பாட்டத்தை குலைத்துச் சென்றார் கேரத். 42 ஓட்டங்களுடன் குசலும் வீழ்த்தப்பட 288 ஓட்டங்களில் சுருண்டது இலங்கை.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக பின், வோக்ஸ் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், அன்டர்சன், புரோட் இருவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

128 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது இங்கிலாந்து. களத்தடுப்பின் போது காயமடைந்ததால் குக்குக்கு பதிலாக கொம்டன் ஆரம்ப வீரராக இறங்கினார். கொம்டன், கேல்ஸ் இணை நம்பிக்கையான ஆரம்பத்தை வழங்கியது. கொம்டனை வீழ்த்தினார் எரங்க. 10 பந்துப்பரிமாற்றங்கள் முடிவடைந்தவுடன் பிரதீப்பின் பந்துவீச்சு வித்தை காட்ட ஆரம்பித்தது. 30 தொடக்கம் 45 டிகிரிகள் திரும் பல் தன்மையுடைய பந்துகளை சாதாரணமாக வீசினார் பிரதீப். ரூட், வின்ஸ் இருவரும் பிரதீப் வீசிய ஒரு பந்துப்பரிமாற்றத்தில் அடுத்தடுத்து போல்ட் முறையில் ஆட்டமிழந்தனர். கேல்ஸுடன் இணைந்தார் பரிஸ் ரௌவ். தடுமாற்றத்தில் இருந்து மீண்டது இங்கிலாந்து. அணியின் ஓட்டம் 101 ஆக இருந்தபோது பரிஸ் ரௌவும் பிரதீப்பால் போல்ட் செய்யப்பட்டார். பின், கேல்ஸ் இணை பிரிக்கப்பட முடி யாது போக நாள் முடிவில் இங்கிலாந்து 109-4 என்றுள்ளது. கேல்ஸ் 41 ஓட்டங்களுடனும், பின் 6 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

**வேலையாள்கள் தேவை**
யாழ்.நகரில் இயங்கும் புடைவை வியாபார ஸ்தாபனத்துக்கு வேலைக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றனர். விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும்.
127/18, யூபிலி பசார்
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 222 9470

**வீடியோ எடிட்டிங் வேலை**
அனைத்து மங்கள நிகழ்வுகளினதும் வீடியோக்கள் தரமான முறையில் எடிட்டிங் செய்து தரப்படும்.
(HD வீடியோக்கள் மட்டும்)
Creative Desk
146, Parameswara Junction,
Palaly Road, Thirunelvely
077 777 8529

**PERSONAL AND GROUP CLASSES TAMIL, ENGLISH MEDIUM**
GRADE-6 to O/L AND A/L
- MATHS
- SCIENCE
- ICT-O/L & A/L
- CIVIL TECHNOLOGY-A/L

Contact : 075 518 4773

**காசாளர் தேவை**
யாழ். நகரில் இயங்கிவரும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு கணக்கியல் அனுபவமுள்ள பிரதான காசாளர் (ஆண்) தேவை.
(சம்பளம் 30,000/=இற்கு மேல்)
உங்கள் சுயவிவரங்களையும், கல்வித் தகைமைச் சான்றிதழையும் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
விளம்பர இல. 5105
மே/பா உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(J 2098) (10.17)

**விற்பனையாகின்றது**
**O/L LITERATURE BOOKS**
(1). POETRY (2). PROSS (3). DRAMA (4). ACTION
(5). POETRY MODAL PAPER (6). BRINGING TONY HOME
(7). VENDER OF SWEETS (By: SARATH SILVA)
(8). STUDY GUIDE AND REVISION PART - I, II (By: LAKSHMI PERERA)
(9). POETRY (By: ANANDA PERIES)
அன்னை புத்தக சாலை - யாழ்ப்பாணம்.
021 222 9881
(C/21874)(10.17)

**Spoken English (160hrs)**
100% Practical Class
Indoor and Out door learning
On the spot training
7500/=
New batches start on: 11.06.2016 Weekend
9.00 Am/1.30Pm 13.06.2016 Weekdays

**Diploma In English** Reading, Writing, Listening and Speaking
New batches start on: 11.06.2016 Weekend
13.06.2016 Weekdays
(240hrs) 9.00 Am/1.30Pm
10,000/=

**Spoken Sinhala** 100% Speaking from the beginning
Alphabate writing and reading (160hrs)
New batches start on: 11.06.2016 Weekend
13.06.2016 Weekdays
8.30 Am/1.30Pm/3.30Pm
7500/=
ELAS
English Language Adventure School
Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
T.P: 021 221 2410, 076 697 3040

## ராகுலின் பதற்றமான சதத்தால் இந்தியா பதற்றமில்லாத வெற்றி

இந்தியா-சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் லோகேஸ் ராகுலின் சதம், பும்ராவின் பந்துவீச்சு என்பன கைகொடுக்க 9 இலக்குகளால் அபார வெற்றி பெற்றது இந்தியா.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டோனி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தார். சிம்பாப்வேயின் அதிரடி வீரர்களான மூர், சிப்கபா, மசகட்சா மூவரும் ஒற்றையிலக்கத்துடனும் பதின்ம எண்களுடனும் பவிலியன் திரும்ப அதிகம் நிதானிக்க ஆரம்பித்தது அந்த அணி. எர்வின், ரசா இணை சிறிது தாக்குப் பிடிக்க முனைப்புக்காட்டிய போதிலும் அதை அனுமதிக்கவில்லை சர்ண். 23 ஓட்டங்களுடன் ரசாவை வெளியேற்றினார் சரண். 21 ஓட்டங்களுடன் எர்வினை வெளியேற்றினார் அக்சர் பட்டேல். முன்னணி அணிகளையே புரட்டிப் போடும் பும்ராவின் வேகம் சிம்பாப்வேயிடத்தில் நன்கு எடுபட்டது. அவர் சிபன்டா, சிக்கும்புரா இருவரையும் பவிலியனுக்கு அனுப்ப 168 ஓட்டங்களில் சுருண்டது சிம்பாப்வே. அதிகபட்சமாக சிக்கும்புரா 41 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

பந்துவீச்சில் இந்தியாவின் சார்பாக பும்ரா 4 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்தியா, 11 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது நாயரைப் பறிகொடுத்தது. ஆனால் அதுவே அந்த அணியின் இறுதி இலக்குச் சரிவுமாக அமைந்தது. ராயிடு, ராகுல் மிகவும் நிதானமாக ஆரம்பித்து படிப்படியாக பதற்றத்தை இல்லாமல் செய்து அற்புதமான இணைப்பாட்டத்தை வெளிப்படுத்தினர். அறிமுக மற்றும் அனுபவம் இல்லாத வீரர்களுக்கான ஆட்டமல்ல அது. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்தனர். ராகுல் சதத்தை நெருங்கிக் கொண்டிருந்தார். ஆனால் வெற்றிக்குத் தேவைப்படும் ஓட்டங்கள் ராகுலின் சதத்துக்குத் தேவைப்படும் ஓட்டங்களையும்விடக் குறைவாகவே இருந்தன. 2 ஓட்டங்களைப் பெற்றால் இந்தியாவுக்கு வெற்றி. அப்போது ராகுல் 94 ஓட்டங்களுடன் இருந்தார். ஆட்டத்தில் முதலாவதும்



இறுதியானதுமான சிக்சரை அடித்து சதத்துடன் இந்தியாவை வெற்றிபெற வைத்தார். அவரே ஆட்ட நாயகனுமாக தெரிவானார்.

### 338 ஓட்டமற்ற பந்துகள்

இந்த ஆட்டத்தில் இரு இன்னிங்ஸ்களையும் சேர்த்து மொத்தமாக 554 பந்துகள் வீசப்பட்டன. இவற்றில் 338 பந்துகளுக்கு ஓட்டமெதுவும் பெறப்படவில்லை. இந்தியா 194 ஓட்டமற்ற பந்துகளையும் சிம்பாப்வே 144 ஓட்டமற்ற பந்துகளையும் வீசியிருந்தன. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.